T. 11734

உ
கடவுள் துணை.

# குவலயாநந்தம்.

எட்டயபுரம் ஸம்ஸ்தானாதிபதியாகிய
மஹாராஜ ராஜபூஜித மஹாராஜராஜஸ்ரீ
இராஜ ஜகத்வீர
ராமகுமார எட்டப்பமஹாராஜா ஐயனவர்கள்
வேண்டுகோளின்படி
ஷை ஸம்ஸ்தானம் ஸம்ஸ்கிருதவித்வான்
சங்கரநாராயண சாஸ்திரிகளவர்கள்
செய்த மொழிபெயர்ப்பும்
ஷை ஸம்ஸ்தானம் தமிழ் வித்வான்
முகவூர் - மீனாக்ஷிசுந்தரக் கவிராயரவர்கள்
சுலோகங்களின் மொழிபெயர்ப்புக்கிசைத்த செய்யுட்களும்
சென்னை பச்சையப்பன் காலீஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர்
திருமலை ஈச்சம்பாடி சதாவதானம்
ஸ்ரீநிவாஸாசாரியரவர்களாலும்
தமிழ் உபாத்தியாயர் ஆனூர்
சிங்காரவேலு முதலியாரவர்களாலும்
பார்வையிடப்பட்டு
ஷை ஸம்ஸ்தானாதிபதியாகிய
மஹாராஜ ராஜபூஜித மஹாராஜராஜஸ்ரீ
இராஜ ஜகத்வீரராம வேங்கடேசுவர
எட்டப்ப மஹாராஜா ஐயனவர்களின்
கனிஷ்டபிதாவும் யுவராஜாவுமாகிய
மஹாராஜ ராஜபூஜித மஹாராஜராஜஸ்ரீ
வேங்கடேசுவர எட்டுப்பாண்டியனவர்களால்
சென்னை
செங்கல்வராயநாயகரது ஆர்பனேஜ் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டன.
1895.

*Registered Copyright.*

# அலங்காரங்களின் பெயர்.


| | | | பக்கம். |
|---|---|---|---|
| க-வது | | உவமையணி (உபமாலங்காரம்). | க |
| உ | ,, | இயைபின்மையணி (அநந்வயாலங்காரம்). | ச |
| ங | ,, | புகழ்பொருளொப்பணி (உபமேயோபமா). | சா |
| ச | ,, | எதிர்நிலையணி (பிரதீபாலங்காரம்). | கூ |
| ரு | ,, | உருவகவணி (ரூபகாலங்காரம்). | கரு |
| சா | ,, | திரிபணி (பரிணாமாலங்காரம்). | உங |
| எ | ,, | பலபடப்புனைவணி (உல்லேகாலங்காரம்). | உச |
| அ | ,, | நினைப்பணி (ஸ்மிருதிமதலங்காரம்). | உசா |
| கூ | ,, | மயக்கவணி (பிராந்திமதலங்காரம்). | உஎ |
| ய | ,, | ஐயவணி (ஸந்தேகாலங்காரம்). | உஅ |
| கக | ,, | வெற்றொளிப்பணி (சுத்தாபஹ்நுதி). | உகூ |
| கஉ | ,, | தற்குறிப்பணி (உத்பிரேக்ஷாலங்காரம்). | ஙஎ |
| கங | ,, | உயர்வு நவிற்சியணி (அதிசயோக்தி). | சச |
| கச | ,, | ஒப்புமைக்கூட்டவணி (துல்யயோகிதா). | ருசா |
| கரு | ,, | விளக்கணி (தீபகாலங்காரம்). | சாய |
| கசா | ,, | பின்வருவிளக்கணி (ஆவர்த்திதீபகம்). | சாஉ |
| கஎ | ,, | எதிர்ப்பொருளுவமையணி (பிரதிவஸ்தூபமாலங்காரம்). | சாச |
| கஅ | ,, | எடுத்துக்காட்டுவமையணி (திருஷ்டாந்தாலங்காரம்). | சாஎ |
| ககூ | ,, | காட்சியணி (நிதர்சநாலங்காரம்). | சாஅ |
| உய | ,, | வேற்றுமையணி (வியதிரேகாலங்காரம்). | எரு |
| உக | ,, | உடனவிற்சியணி (ஸஹோக்தியலங்காரம்). | எஅ |
| உஉ | ,, | இன்மைநவிற்சியணி (விநோக்தி). | எகூ |
| உங | ,, | சுருங்கச்சொல்லலணி (ஸமாஸோக்தி). | அக |

பக்கம்.

உச-வது கருத்துடையணி (பரிகராலங்காரம்). அஎ
உரு ,, கருத்துடை யடைகொளியணி (பரிகராங்குராலங்காரம்). கூக
உசா ,, சிலேஷையணி (சிலேஷாலங்காரம்). கூஉ
உஎ ,, புனைவில்லிப் புகழ்ச்சியணி (அப்ரஸ்துதப்ரசம்ஸாலங்காரம்). கூசா
உஅ ,, புனைவுள்ளி விளைவணி (பிரஸ்துதாங்குராலங்காரம்). க0சா
உகூ ,, பிறிதினவிற்சியணி (பரியாயோக்தம்). ககக
௩0 ,, வஞ்சப்புகழ்ச்சியணி (வியாஜஸ்துதி). ககரு
௩க ,, வஞ்சப்பழிப்பணி (வியாஜ நிந்தா). கககூ
௩உ ,, எதிர்மறையணி (ஆக்ஷேபாலங்காரம்). கஉஉ
௩௩ ,, முரண்மேல் விளைவணி (விரோதாபாஸாலங்காரம்). கஉரு
௩ச ,, பிறிதாராய்ச்சியணி (விபாவனாலங்காரம்) கஉசா
௩ரு ,, காரணவாராய்ச்சியணி (விசேஷோக்தி). க௩க
௩சா ,, கூடாமையணி (அஸம்பவாலங்காரம்). க௩உ
௩எ ,, தொடர்பின்மையணி (அஸங்கதி). க௩௩
௩அ ,, தகுதியின்மையணி (விஷமாலங்காரம்). க௩எ
௩கூ ,, தகுதியணி (ஸமாலங்காரம்). கசச
ச0 ,, வியப்பணி (விசித்திராலங்காரம்). கசகூ
சக ,, பெருமையணி (அதிகாலங்காரம்). கரு0
சஉ ,, சிறுமையணி (அற்பாலங்காரம்). கருஉ
ச௩ ,, ஒன்றுக்கொன் றுதவியணி (அந்யோந்யாலங்காரம்). கரு௩
சச ,, சிறப்புநிலையணி (விசேஷாலங்காரம்). கருச
சரு ,, மற்றதற்காக்கலணி (வியாகாதம்). கருஎ
சசா ,, காரணமாலையணி (காரணமாலா). கருகூ
சஎ ,, ஒற்றைமணிமாலையணி (ஏகாவளி). கசா0
சஅ ,, மாலைவிளக்கணி (மாலாதீபகாலங்காரம்). கசாக

பக்கம்.

சகூ-வது மேன்மேலுயர்ச்சியணி (ஸாரம்). கசாஉ
ரு0 ,, நிரல்நிறையணி (யதாஸங்கியாலங்காரம்). கசாச
ருக ,, முறையிற்படர்ச்சியணி (பரியாயம்). கசாரு
ருஉ ,, மாற்றுநிலையணி (பரிவிர்த்தியலங்காரம்). கசாஅ
ருங ,, ஒழித்துக்காட்டணி (பரிஸங்கியா). கசாகூ
ருச ,, உறழ்ச்சியணி (விகல்பாலங்காரம்). கஎ0
ருரு ,, கூட்டவணி (ஸமுச்சயாலங்காரம்). கஎக
ருசா ,, வினைநுதல்விளக்கணி (காரகதீபகம்). கஎங
ருஎ ,, எளிதின்முடிவணி (ஸமாதியலங்காரம்). கஎச
ருஅ ,, விறல்கோளணி (பிரத்தியநீகாலங்காரம்). கஎரு
ருகூ ,, தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணி (காவியார்த்தாபத்தியலங்காரம்). கஎசா
சா0 ,, தொடர்நிலைச்செய்யுட் குறிப்பணி (காவியலிங்காலங்காரம்). கஎஅ
சாக ,, வேற்றுப்பொருள்வைப்பணி (அர்த்தாந்தரந்யாஸாலங்காரம்). கஅச
சாஉ ,, மலர்ச்சியணி (விகஸ்வராலங்காரம்). ககூ0
சாங ,, கற்றோர்நவிற்சியணி (பிரௌடோக்தி). ககூஉ
சாச ,, பேருய்த்துணர்வணி (ஸம்பாவனை). ககூங
சாரு ,, பொய்த்தற்குறிப்பணி (மித்தியாத்தியவஸிதியலங்காரம்). ககூச
சாசா ,, வளப்புநிலையணி (லளிதாலங்காரம்). ககூரு
சாஎ ,, இன்பவணி (பிரஹர்ஷணாலங்காரம்). ககூகூ
சாஅ ,, துன்பவணி (விஷாதநாலங்காரம்). உ0உ
சாகூ ,, அகமலர்ச்சியணி (உல்லாஸாலங்காரம்). உ0ங
எ0 ,, இகழ்ச்சியணி (அவஞ்ஞாலங்காரம்). உ0சா
எக ,, வேண்டலணி (அநுஞ்யாலங்காரம்) உ0எ
எஉ ,, இலேசவணி (லேசாலங்காரம்). உ0கூ
எங ,, குறிநிலையணி (முத்திராலங்காரம்). உகங
எச ,, இரத்தினமாலையணி (இரத்நாவளி). உகச

| | | | பக்கம். |
|---|---|---|---|
| எரு-வது | | பிறிதின்குணம்பெறலணி (தத்குணம்). | உகசா |
| எசா | ,, | தொல்லுருப்பெறலணி (பூர்வரூபம்). | உகஎ |
| எஎ | ,, | பிறிதின்குணப்பேறின்மையணி (அதத்குணாலங்காரம்). | உககூ |
| எஅ | ,, | தன்குணமிகையணி (அநுகுணாலங்காரம்) | உஉக |
| எகூ | ,, | மறைவணி (மீலிதாலங்காரம்). | உஉஉ |
| அ0 | ,, | பொதுமையணி (ஸாமானியாலங்காரம்). | உஉ௩ |
| அக | ,, | மறையாமையணி (உன்மீலிதாலங்காரம்) | உஉரு |
| அஉ | ,, | சிறப்பணி (விசேஷகாலங்காரம்). | உஉரு |
| அ௩ | ,, | இறையணி (உத்தராலங்காரம்). | உஉஎ |
| அச | ,, | நுட்பவணி (ஸூக்ஷ்மாலங்காரம்). | உஉகூ |
| அரு | ,, | கரவுவெளிப்படுப்பணி (பிஹிதம்). | உ௩0 |
| அசா | ,, | வஞ்சநவிற்சியணி (வியாஜோக்தி). | உ௩க |
| அஎ | ,, | குறிப்புநவிற்சியணி (கூடோக்தி). | உ௩ச |
| அஅ | ,, | வெளிப்படைநவிற்சியணி (விவிருதோக்தியலங்காரம்). | உ௩ரு |
| அகூ | ,, | உத்தியணி (யுக்தியலங்காரம்). | உ௩எ |
| கூ0 | ,, | உலகவழக்குநவிற்சியணி (லோகோக்தி) | உ௩அ |
| கூக | ,, | வல்லோர்நவிற்சியணி (சேகோக்தி). | உ௩கூ |
| கூஉ | ,, | மடங்குதனவிற்சியணி (வக்கிரோக்தி). | உச0 |
| கூ௩ | ,, | தன்மைநவிற்சியணி (ஸ்வபாவோக்தி). | உச௩ |
| கூச | ,, | நிகழ்வினவிற்சியணி (பாவிகாலங்காரம்) | உச௩ |
| கூரு | ,, | வீறுகோளணி (உதாத்தாலங்காரம்). | உசச |
| கூசா | ,, | மிகுதிநவிற்சியணி (அத்தியுக்தி). | உசரு |
| கூஎ | ,, | பிரிநிலைநவிற்சியணி (நிருக்தியலங்காரம்) | உசஎ |
| கூஅ | ,, | விலக்கணி (பிரதிஷேதாலங்காரம்). | உசஅ |
| கூகூ | ,, | விதியணி (விதியலங்காரம்). | உசகூ |
| க00 | ,, | ஹேதுவணி (ஹேத்வலங்காரம்). | உரு0 |
| க0க | ,, | சுவையணி (ரஸவதலங்காரம்). | உருச |
| க0உ | ,, | கருத்தணி (ப்ரேயோலங்காரம்). | உருசா |

பக்கம்.

க௦௩-வது வன்மையணி (ஊர்ஜஸ்வி அலங்காரம்). உ௫அ
க௦௪ ,, சேர்க்கையணி (ஸமாஹிதாலங்காரம்). உ௫௯
க௦௫ ,, பாவகத்தோற்றவணி (பாவோதயம்). உ௬௦
க௦௬ ,, பாவகச்சேர்க்கையணி (பாவஸந்தி). உ௬௦
க௦௭ ,, பாவகக்கலவையணி (பாவசபளம்). உ௬௧
க௦அ ,, காக்ஷிப்பிரமாணவணி (ப்ரத்யக்ஷப்ரமாணாலங்காரம்). உ௬உ
க௦௯ ,, அநுமானப்பிரமாணவணி (அநுமானப்ரமாணாலங்காரம்). உ௬௩
கக௦ ,, ஒப்புப்பிரமாணவணி (உபமானப்ரமாணாலங்காரம்). உ௬௫
ககக ,, சொற்பிரமாணவணி (சப்தப்ரமாணம்). உ௬௬
ககஉ ,, பொருட்பேற்றுப்பிரமாணவணி (அர்த்தாபத்தியலங்காரம்). உ௭௦
கக௩ ,, நுகர்ச்சியின்மையணி (அநுபலப்தி). உ௭க
கக௪ ,, பிறப்புப்பிரமாணவணி (ஸம்பவம்). உ௭க
கக௫ ,, எடுத்துக்காட்டுப்பிரமாணவணி (ஐதிஹ்யாலங்காரம்). உ௭௩
கக௬ ,, சேர்வையணி (ஸம்ஸ்ருஷ்டி). உ௭௪
கக௭ ,, உறுப்புறுப்பிக்கலவையணி (அங்காங்கிபாவஸங்கராலங்காரம்). உ௭௬
ககஅ ,, இரண்டு முக்கியமாகவிளங்குங்கலவையணி (ஸமப்ராதாந்யஸங்கரம்). உ௭அ
கக௯ ,, ஐயக்கலவையணி (ஸந்தேஹஸங்கராலங்காரம்). உஅஉ
கஉ௦ ,, ஒரேசொல்லையணுகிவிளங்குங் கலவையணி (ஏகவாசகாநுப்ரவேசஸங்கராலங்காரம்). உஅ௫

குமரன்றுணை.

# சாத்துகவிகள்.

## கடிகை - சுப்பிரமணியப்புலவரவர்களியற்றிய

இருபத்தெண்சீரடி யாசிரியவிருத்தம்.

பூமேவுமிளசைசமஸ்தானமதிலரசு
புரியுமனுமுறையின்விதியான்
புரியுமெண்மடவாரெண்வகையுறுப்பினிலகம்
பூரித்துமருவுநிதியான்
புவிமதிக்குந்திருமாரெட்டமருதுரைகரம்
பூடணவென்னச்சொருதியான்
புகழுறுமவளர்வேங்கடேசுரெட்டமன்னும்
புலவர்குருநிகருமதியான்

வீமேவுநகர்கடிதிருமரன்மேனுமமைய
வெற்பிலுறைமுனிவர்கேட்க
விரும்பியுரையெண்முதலிலக்கணத்திருநிமே
வியவணிபொருளோமுன்னோர்
வியந்தியற்கவியாலமைத்தனர்கள்வடநூலின்
மிகுபேதமதனிலறிய
மேவாததாலதன்பேதமிதின்மேவவே
விளம்புதியெனப்புகலவே

தூமேவுவடகலையினெல்லாருஞ்சருதியின்
சொல்லையுமுணர்ந்தநேமன்
தொழுகுலம்விளங்குசநகரசாஸ்திரியெனவே
துலங்குந்தழீஇயநாமன்
துணிவாயிலக்கணவிலக்கியஞ்சந்திரிகை
தோன்றுவடநூலின்வழியாந்

துதிமருவுதமிழ்னான்மொழிபெயர்த்துதவவிரு
சுவையுமதனோடுமருவ
வாமேவுமவ்வழியதாத்தமிழ்வழங்கெல்லை
யதிலுறப்பலகவிகளா
லறிஞர்சபைகேட்கவும்வேண்டுபயனடையவு
மணிநூலையிளசையூநா
ரதனிலவ்வளாயனுளேவலகாரணமாக
வமைகுவலயானந்தமா
வணிகொண்முகவூரன்மீனாட்சிசுந்தரகவிரா
ஜன்புறப பாடினனரோ.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பரம்பரனாக்கினையான்முன்வடநூலாந்
தாய்வயிற்றுற்பவித்தவைந்து
பாவையர்கட்கிளையாளாப்பார்ப்பவர்கட
கலங்காரப்பாவையாகி
வரம்புகடவாதுறைபோமங்கைதனை
முன்புபலர்வழுக்கடர
வளர்கவியாஞசிலபணியிட்டவைவிசித்தா
ரியாருமவள்வருணபேரு
நிரம்பவுணர்வதற்கரிதாநின்றனள்சங்
கரசாஸ்திரிநியதியாச்செய்
நிகழுமொழிபெயர்ப்பாலப்பேதம்யா
வருமறியநிதமீசன்னருள்
சிரம்பரவுமுகவூர்வாழ்மீனாட்சி
சுந்தரமால்திரும்பச்செய்யுட்
டிகழணிபூட்டிளசைநகர்குமாரெட்டேந்
திரற்குமணஞ்செய்வித்தானே.

## எட்டீசுரக்குருக்கள் அவர்களியற்றிய

### நேரிசையாசிரியப்பா.

சீர்திகழ்கயிலையஞ்செழுங்கிரியதனி
லேர்திகழுமையவளினியகண்களிப்பத்
தினந்தினம்பிரமனாதியரடிபரவுந்
தனந்தனவெனநடித்தருள்செயும்பரமன்
மந்தமாருதந்திகழ்மலயமாமுனிவற்
கந்தநானுரைத்தவருந்தமிழ்ப்பரவும்
எல்லையுறுமறையைந்திலக்கணத்தணிமையப்
பலவகையியலாய்ப்பகர்ந்தனர்பலரும்
அவற்றுடபேதமற்றறிந்திடலரிதால்
நவிற்றும்பேதநாடவெளிதா
விளங்கிடும்வடநூல்விதிப்படிமேன்மை
வளர்ந்திடுந்தமிழால்வழுத்துகவெனவே
அமரர்தம்முலகினுமதிவளங்கெழுமிக்
கமலவாவிகளுங்காமர்பூஞ்சோலையும
மாடமாளிகைகளும்மாமணிசிகரமும
கூடகோபுரமுங்குலவுறுமிளசையில
அரியணைமீதிலவிர்மதிக்குடைகவிழ்ந்
தரியலர்குழுமித்தாழ்ந்துபரவப
பொன்னிறமருவிப்புனைதவிராழி
மன்னுமாதவனென்மகிழ்ந்தினிதிருந்தே
கார்த்திகேயனங்கமுருகுமாமலைவாழ்
மூர்த்திதாளிணைமலர்முடியினிற்சூடிக்
கிளர்ந்திடுஞ்செல்வமுங்கீர்த்தியுந்தழைய
வளர்ந்துமன்னுயிர்கண்மகிழ்வுறவிவ்வுலக
மண்டலமுழுதுமனுநெறிகாக்கும்
எண்டிசைபுகழ்குமாரெட்டமநயாதிபதி
அன்னவன்பின்னுறவவதரித்திராகவன்

பின்னவாக்கிணையாப்பிறங்கிடுபுனிதன்
சங்கமுத்தமிழ்ப்பயிற் றழைவுறவளர்க்கும்
எங்கண்மால்வேங்கடேசுரெட்டேந்திரன்
பணித்தருள் வண்ணம்பரவியவடநூற்
கணிபபருங்கடற்கரைகடந்தமுதறிவினன்
சங்கரநாராயணசாஸ்திரியென்று
மங்களவேதியன்வடநூலுரைவழி
புவமையாதியாயுறுமணியிலக்கணம்
நவிலிலக்கியமொடுநாடகசந்திரிகையைத்
தெற்றெனத்தமிழிற்செய்புலவருங்க
குற்றமகலக்குறிப்பிறழாது
பல்கலைவாணரும்பயின்றுகமகிழ
நலகவித்துறைமுதனவில்பலசெய்யுளாற்
குவலயாநந்தமாங்குவலயாநந்தம்
நவரசமுடனேநலங்கெழீஇக்குலவப்
பாடியிவ்விசையம்பதிவேத்தவையின்
நாடொறும்புகழுநன்கரங்கேற்றினன்
முகவூரொன்றுமூதாதன்னில
ஸ்ரீசமகிழ்வாகவைறுதினம்வாழும்
தாருடையாய்முத்தமிழ்ணா
ரிருடசிசுந்தரமெய்ந்நாவலனே.

# முகவுரை.

உலகத்தில் வழங்குங் கல்விகளனைத்து மிலக்கண வமைதியின் வழங்கலழகுடைத்து. அவற்றுட் செந்தமிழ்க்கிலக்கணம் எழுத்துசொற்பொருள் யாப்பணியெனவைவகைத்து. அவ்வைந்தனுளிறுதியிற் கூறிய அணியிலக்கணம், "மாடக்குச்சித்திரமும் மாநகர்க்குக்கோபுரமும் ஆடமைத்தோணல்லார்க் கணியும்போல்" இயற்கையின் விளங்குஞ் சொற்பொருளியைந்த யாப்பிற்குப் பன்னூலாராய்ச்சியுடையார் மனமகிழ்விக்கத்தக்க பலசதுரப்பாட்டானணிபெறச் செய்வதுபற்றி யணியிலக்கணமெனக் காரணக்குறிபெற்றது.

இவ்வணி யிலக்கணம் வடநூற்கடலுண்மிக விரிவாகவும் பற்பல சாதுரியமாகவும் தண்டியாசிரியர் முதலிய சான்றோரா லியற்றப்பட்டிருக்கின்றது. அஃதெம்முறையானே கவிசொலவிரும்பிய கவிகட்குச் சொன்னெறி சான்ற நன்னெறித்து. அத்தண்டியலங்காரத்தினைத் தமிழ் நூலாசிரியரும் மொழிபெயர்த்து வழங்குவாராயினர். அவ்வணி சொல்லணியெனவும் பொருளணியெனவு மிருவகையாகவிருக்கின்றது.

அவற்றுள் பொருளணியை வடநூலிற் சிறந்த மகாகவியாகிய காளிதாஸர் உவமையணிமுதல ஏதுவணியீறாக நூறணிகள்விளங்க இலக்கண விலக்கியமமைந்த சுலோ

கங்களாக வியற்றிச் சந்திராலோகமெனப் பெயரிட்டனர். அந்நூலுக்குப், பெயர்பெற்ற மகாவித்வான் அப்பையதீக்ஷித ருரையிட்டு ஆங்காங்குற்ற பல சுலோகங்களை யுதாரணங்களாகக் காட்டியும், அவற்றி னின்றியமையா வலங்காரங்களை வாக்கியரூபமாகத் தெரிவித்தும், நூற்றுக்குமே லூற்றுக இரஸவதலங்காரமுதல் ஏகவாசகாநுப்பிரவேசஸங்கராலங்காரமீறுக இருபதணிகளைச் சேர்த்தும், குவலயாநந்த மெனப்பெயருள்ள வோர் நூலாக முடித்தனர். அஃதேனைய வணிநூல்களினு மெளிதினுணர்ந்து அம்முறை கவிகூற மிகச்சாதனமாக விருக்கின்றது.

இவ்வகைச் சிறப்புற்ற வக்குவலயாநந்தத்தின் பொருட்களைப் பல்காலாய்ந்து வொல்காப்புகழுற்றவர்களும் "தாமின்புறுவ துலகின்புறக்கண்டு காமுறுவர்கற்றறிந்தார்" என்றபடி யப்பொருள்களைச செந்தமிழ் நாவலருங் கூட்டுண விருப்புற்றவர்களும் திருநெல்வேலி ஜில்லாவைச்சார்ந்த எட்டயபுரம் ஸம்ஸ்தானாதிபதிகளுமாகிய மஹாராஜ ராஜபூஜித மஹாராஜராஜஸ்ரீ இராஜ ஜகத்வீர ராமகுமார எட்டப்பமஹாராஜா ஐயனவர்கள் தங்கள் ஸம்ஸ்தான ஸபையிற் பண்டிதசிகாமணிகளாக விளங்கி வல்லீபரிணய சம்புபிரபந்தத்தை யியற்றிக் கவிகேஸரியென்ற பெயர்பெற்ற பிரம்மஸ்ரீ ஸ்வாமிதீக்ஷிதரவர்களின் மாணாக்கருந் தங்கள் ஸம்ஸ்தான ஸம்ஸ்கிருத பண்டிதருமாகிய சங்கரநாராயண சாஸ்திரிகளைக்கொண்டு சென்ற 1889௵த்திற் றெளிவுறத் தமிழின் மொழிபெயர்ப்பித்துந் தங்கள் ஸம்ஸ்தானந் தமிழ்வித்வான் முகவூர் - மீனாக்ஷிசுந்தரக கவிராயரவர்களாற் சுலோகங்களின் மொழிபெயர்ப்

புகளைச் செய்யுட்களாகவமைப்பித்தும் அவ்விதம் முற்றுப்பெற்றவணிநூலைத் தங்கள் சபையிலுள்ள வடநூற் றென்னூற் புலவர்களுடன் குழுமியப்பயின்று வந்தனர்.

இத் தென்னூற் குவலயாநந்தத்தைக் குவலயமெங்கும் விளங்கச் செய்ய விருப்புற்றவர்களும், விற்பன்னர்களும், கற்பனைக்கடல்களு மிரஸிக சிகாமணிகளும் மேற்படி ஸம்ஸ்தாநாதிபதிகளாகிய மஹாராஜ ராஜபூஜித மஹாராஜராஜஸ்ரீ இராஜ ஜகத்வீரராம வேங்கடேசுவர எட்டப்பமஹாராஜாஐயனவர்களின் கனிஷ்டபிதாக்களும் யுவராஜா அவர்களுமாகிய மஹாராஜ ராஜபூஜித மஹாராஜராஜஸ்ரீ வேஙகடேசுவர எட்டுப்பாண்டியனவர்கள் இப்பொருளணிநூலைச் சென்னை பச்சையப்பன் காலீஜ் என்னுங்கலாசாலை ஸமஸ்கிருதபண்டிதரவர்களாகிய திருமலை ஈச்சம்பாடி சதாவதானம் ஸ்ரீமத் உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்களாலுந் தமிழ உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ ஆனூர் சிங்காரவேலு முதலியாரவர்களாலும் பரிசோதிப்பித்து 1895-ஆண்டிற் சென்னை செங்கலவராய நாயகரது ஆரபனேஜ் அச்சுக்கூடத்தி லச்சிடுவித்தனர்.

இந்நூல் எட்டயபுரம் ஸம்ஸ்தானத்தினின்று வெளிப்பட்டமை தோன்ற மேற்படி ஸம்ஸ்தானம் மஹாராஜா அவர்களை யொவ்வொரு கட்டளைக்கலித்துறைகடோறு முன்னிலையாக வைத்திருக்கின்றது.

சிலேஷை முதலிய சிற்சிலவிடங்களிற் செய்யுட்களமைதலுக்கேற்பச் சுலோகப்பொருள்கள் சில பேதப்பட்டிருக்கின்றன.

# முகவுரை.

மேற்கூறிய மஹாராஜா அவர்களாதரணையிலுள்ள சுப்பிரமணியஸ்தலமாகிய கழுகுமலையையும், விஷ்ணு ஸ்தலமாகிய சாத்தூரையு மாங்காங்கு குறிப்பித்திருக்கிறது.

இஃது புதிய மொழிபெயர்ப்பாகவும் முதற்பதிப்பாகவுமிருத்தலா லேதேனும் வழுஉக்களுளவாயின் அவற்றைச் சீர்திருத்திச் செயற்பால முறையைத் தெரிவிக்கினிரண்டாம்பதிப்பிற் றிருத்தியச்சிடுவதுட னப்பண்டிதர்களுக்கு நன்றியும் பாராட்டப்படும்.

உ

குமரன்றுணை.

# குவலயாநந்தம்.

## தேவிவணக்கம்.

கட்டளைக்கலித்துறை.

பொன்னு ருலகத் தரிவையர் வாசனைப் பூங்குழலின்
மன்னு மதுரப் புதுத்தே னருந்திசை வண்டினங்குறு
தென்றுக ணின்றமை யம்பிகை பாதச் செழுங்கமல
மென்னாளு மேதுணை யாமொ ரதும்பாரிறை வேணுதற்கே.

நூல்.

## க-வது உவமையணி.

(உபமாலங்காரம்.)

செய்யுள்.

இருபொரு ளுக்குத் தகுமொப் புமைவெளி யிட்டிலங்க
வருவ துவமை யணியாம் புகழுயர் வானதியில
மருவின தோதிமம் போலென் னிலக்கியம வந்ததுசீர்த்
திருவள ரெட்ட புரம்வாழ் குமாரெட்ட சீதரனே. (க)

எங்ஙனம், உவமானோபமேயங்களின் ஒப்புமை காவ்ய ரஸத்தில் பண்பட்டாரிதயத்தை மகிழ்விக்கத்தக்க படி வெளிப்படையாக விளங்குகின்றதோ அது உவமை யணியாம். இதற்குப் புகழென்பதுமுதல் உதாரணம். ஓதிமம்-உவமானம். புகழ்-உவமேயம். போலென்றுரு

சொல உவமையுருபு. வானதியின் மருவுதல்-பொதுத் தன்மை. இந்நான்கும் விரிந்தமையால் விரியுவமையணி. இதனை வடநூலார் பூர்ணோபமாலங்காரமென்பர்.

வெண்பா.

இந்துவிடத் தைசசிவன்போ லேகுணங்குற் றத்தினொ
னங்தெளிவா னேன்கிரக ணம்புரிந்து—முந்தினதைச்
சேகரங்கொண் டேவிளங்கச செய்துகடை யுற்றதையம்
மாகளத்து ளேயடக்கு வான.

(குவலயாநந்தம்) இதில் சிவன் உவமானம். தெளிவா னேன் உவமேயம். போல் உவமையுருபு. இந்துவையும் விடத்தையும்போன்ற, குணத்தையுங் குற்றத்தையுங் கிரக ணம்புரிதல் பொதுத்தன்மை. இவைகளி லுவமானமாகிய சிவனிடத்தில, இந்து விடஙகளின் கிரகணம்புரிதலாவது செய்கையாம். அவற்றுளு மிந்துவைச் சேகரங்கொண டேவிளக்கலென்பது, முடியிலிருத்திப பிரகாசிக்கச செய் தலாம். விடத்தைக் களததுளடககலென்பது, கண்டத் தினுள ளிருத்துதலாம். உவமேயமாகிய தெளிவானே னிடத்தில், குணங்குற்றங்களின் கிரகணம் புரிதல் உண ர்சசியாம். அவற்றுள்ளுங் குணத்தை முடிகொண்டே விளக்கலென்பது, சிரக்கம்பத்தாற் கொண்டாடி விளங்கச செய்தலாம். குற்றத்தைக் களத்துளடக்குத லென்பது, கண்டத்தி னின்றும் வெளிவிடாமையாம். இவ்வகை உவமான உவமேயங்களுக்கு ஒரு தன்மையாயினும் பொதுவாக விணங்காவிடினும், விம்பப்பிரதிவிம்ப பாவத் தினுல் இந்து விடமென்பவற்றிற்கும் குணங் குற்ற மென் பவறறிறகும அபேதமெனக்கொள்வதானுலு, செய்கை யுணாசசி யென்பவற்றிற்குக் கிரகணம் புரிதலென்னுஞ் சொலலொற்றுமை யிருப்பதானும், முடியிலிருத்திப் பிர காசிககச செய்தல் சிரககம்பத்தாற் கொண்டாடி விளங்

கச்செய்த லென்பவைகளுக்குச் சேகரங்கொண்டே விளக்கலென்னுஞ் சொல்லொற்றுமை யிருப்பதானும், களத்தினுள்ளிருத்துதல் கண்டத்தினின்றும் வெளிவிடாமை யென்பவற்றிற்குக், களத்துளே யடக்கு வானென்னுஞ் சொல்லொற்றுமை யிருப்பதானு, மிது அபேதாத்தியவசாய சாதாரண தர்மமேயாம் (அதாவது இயற்கையில் வெவ்வேறாய் விளங்கினும், கவியின் கொள்கையால் அபேதமாய்க் கிரகிக்கப்படும் தன்மைகள்) எனக்கொள்க. விம்பப் பிரதிவிம்ப பாவமாவது எற்றேல், உவமையணிக்கு ஆதாரமாயுள்ள தன்மை உவமான உவமேயங்களுக்குப் பொதுவானதொன்றிராமல், உவமானத்தில் வேறும் உவமேயத்தில வேறுமாயிருக்கினும், அந்தத் தன்மைகளுக்கு ஒன்றோடொன்றுள்ள வொற்றுமையால் அபேதத்தைக்கொண்டு மேற்சொன்ன தன்மைகளை வெவ்வேறாகப் பிரயோகிப்பதாம். இங்கு, விருப்புறச்செய்வதும வெறுப்புறச் செய்வதுமாகிய பொதுத்தன்மைகளால முறையே இந்து குணம் என்பவைகளையும், விடம் குற்றம் என்பவைகளையும், அபேதமாகவெண்ணி இவை காரணமாகச் சிவனுக்குந் தெளிவாறேனுக்கும ஒப்புமை கூறியதென்க.

---

## தொகையுவமையணி.

(லுப்தோபமாலங்காரம்.)

செய்யுள்.

வாயும் பொதுமை யுவமை யுருபுவ மானமுவ
மேயமொன் றும்பல வுங்குறைந் தாற்றொகை மேவுவமை
நேய மதிமுக ராமுகி மின்பொ லிறத்துமெய்ய
ளேயுங் கயற்கண்ணி யென்ன வுதாரண மெட்டமனே. (உ)

(கு-ம்.) பொதுத்தன்மை முதலிய நான்கனுளொன்றேனும் பலவேனும் மறைந்துவரிற் றொகையுவமையணி

யாம். இதனைவடநூலார் லுப்தோபமாலங்காரமென்பர். இதற்கு "மதிநிகராமுகி" யென்பதுமுதல் உதாரணம். மதிநிகராமுகி யென்பது பொதுத்தன்மைத் தொகை. அஃது "காந்தியாலமதிநிகராமுகி" யென விரிக்கப் பெறுவதாலிங்ஙனங் காந்தியெனும் பொதுத்தன்மையுமைப்போனது குறிப்பாற் பிறந்தது. "மின்பொன்னிறத்து மெய்யள்" என்பது "உவமையுருபிலதுவமைத் தொகையே" என்னுஞ் சூத்திரத்தான் உவமை யுருபுத்தொகை. அது மின்போலும் பொன்னிறத்து மெய்யளென விரிக்கப் பெறுவதாலிங்ஙனம் போலுமென்னுஞ்சொல் தொகுக்கப் பட்டது. "கயற்கண்ணி" யென்பது பொதுமை யுவமை யுருபுத்தொகை. அது கயல்போற் பிறழுங் கண்ணி யென விரிக்கப் பெறுவதா லிங்ஙனம் மேற் காட்டிய சூத்திரத்தா லுவமையுருபும், உமைப்போனது குறிப்பாற் பொதுத் தன்மையும் பெறப்பட்டனவெனக் கொள்க.

---

## உ-வது இயைபின்மையணி.

(அநந்வயாலங்காரம்.)

செய்யுள்.

உவமான மாயு முவமேய மாயு மொருபொருளே
எவண்மே வலாயின தோவது வேயியைபின்மையணி
இவண்மா மதிமதி போற்காந்தி மானென் றிலக்கியந்தேர்
தவமே விளைசைக் குமாரெட்ட னுமென் றயாநிதியே. ௩

எங்ஙனம், ஒரேபொருள் உவமானமாகவு முவமேயமாகவும் வர்ணிக்கப்படுகிறதோ, அது இயைபின்மை யணியாம். இதனை வடநூலா ரநந்வயாலங்கார மென்பர்.

---

(சந்திரிகை.) உவமையணி யுரைத்த துணையானே, யது காரணமாகத் தோன்றிய வணிகளுக்குட்பொருந்திய

வர்ணிக்கப்படுமதற்கு அதனோடு ஒப்புமைத்தொடர்பின்மையா லிப்பெயர்பெற்றதாமென்க. தொடர்பிலாப் பொருளை வருணிப்பது ஒப்பான வேறு பொருளில்லையென்பதை விளக்குதற் பொருட்டாமென்க. மதி மதி

---

வொப்புமையுள்ள புகழ்பொருளொப்புமை யணியைக் கூறுது, ஒப்புமை பொருந்தாத வியைபின்மையணியை முற்படக் கூறிய தென்னையெனின்? மூன்றாவதொப்புமைப் பொருளொன்றில்லை யென்னு மணியினு, மிரண்டாவதொப்புமைப் பொருளொன்றில்லை யென்னவருஞ் சிறப்புப்பற்றியென்க. ஒரேபொருளுவமானமாகவு முவமேயமாகவும் வருத லியைபின்மையணியென்றால்,

உரைபோலப் புத்தி புத்திபோ லொழுக்கம்
மருவொழுக்கம்போற் புகழாமால்.

என்னும் ரசனோவமை யணியிலும், புத்தி யென்னுமோர் பொருளுக் குவமானத் தன்மையு முவமேயத் தன்மையு மிருத்தலானிதுவு மியைபின்மையணி யாமேயெனின், அற்றன்று-இயைபின்மையணி, ஒருபொருளுக்கொருபொருளால் நிரூபணஞ் செய்யப்படு முவமானத் தன்மை யுவமேயத் தன்மைகளால் விளங்குகிறது. ரசனோவமையணியிற் புத்தி யென்னும் பொருளுக்கு உரையென்னும் பொருளா லுவமேயத்தன்மையு, மொழுக்கமென்னும் பொருளா லுவமானத் தன்மையுங் கிடைத்தவென்க. ஒரு பொருளுக் கொரேபொருளா லுவமானத் தன்மையு முவமேயத்தன்மையும் நிரூபணஞ்செய்வதியைபின்மையணி யென்றால், "அந்தரம்போ லம்புதமு மம்புதம்போலந்தரமும்" என்னும் புகழ்பொருளொப்பணியில், அந்தரமாகிய வொருபொருளுக்கு அம்புதமாகிய வொரேபொருளால் நிரூபணஞ்செய்யப்படு முவமானத் தன்மையு முவமேயத்தன்மையு மிருத்தலால், இதுவு

போற் காந்திமானுமெனிற் சந்திரனுக்கு வேறு ஒப்பான பொருளில்லையெனப் பெற்றதென்க.

செய்யுள்.

(கு-ம்) பூமி மேல்வெளி யும்வெளி போன்றது
பூமி சூழ்கட லுங்கடல் போன்றது
ராம ராவண ரானவர் போருமே
ராம ராவணப் போர்நிக ரானதே.

முன்காட்டிய வுதாரணத்திற் காந்தி யென்னும் பொதுத்தன்மை விரிந்தது. இவ்வுதாரணத்திற் காட்டிய வெளி முதலியவைகளில் விசாலம் முதலிய பொதுத் தன்மைக டொக்குவந்தன. இதுவே யிவற்றுள் பேத மென்க.

---

## ௩-வது புகழ்பொருளொப்பணி.

(உபமேயோபமாலங்காரம்.)

செய்யுள்.

இருபொரு ளுக்குவ மானேவ மேயத் தியல்புதனைப்
பரியாய மாக்கிற் புகழ்பொரு ளொப்பணி பாரதற்குப்
பொருள்போலறநிறை யும்மறம்போலப் பொருணிறையுந்
தனைமீதென் றேத லுதாரணந் தென்னிள சைத்தலனே.

---

மிசையின்மையணியாமே யெனின், இசையின்மையணி யில் ஒருபொருளேயெனச் சொல்லிய பிரிநிலே யேகா ரத்தால், ஒருபொருளுக்கு அப்பொருளாலே ஒப்புமை நிரூபிக்கப்படுமெனவும், புகழ்பொருளொப்பணி அவ் வாறு வாராதெனவுங்கொள்க.

இரண்டு பொருள்களுக் குவமானோபமேயத் தன்மைகளை யெதிர்படமாறிக்கூறல் புகழ்பொருளொப்பணியாம். இதனை வடநூலார் உவமேயோபமாலங்காரமென்பர். மூன்றாவ தொப்பதொன்றில்லை யென்பதை விளக்குதல் பயனும். பொருளறங்களுக்கு ளொன்றோடு மற்றொன்றுக் கொப்புமையுரைத்தபோதே, அதற்கு மற்

---

(ச-கை.) இவ்வணியில் இரண்டு பொருள்களுக்கு இரண்டு வாகியங்களாற்றனித்தனியுவமானத் தன்மையும் உவமேயத் தன்மையும் கூறப்பட்டன. அவற்றுள் முதலில்வந்த வாக்கியத்தில் பொருள் உவமானம். அறம் உவமேயம். இதறகெதிர்படவந்த விரண்டாவது வாக்கியத்தில் அறம் உவமானம். பொருள் உவமேயமென்க. இவ்வணிக ளையபின்மையணியோடு வேற்றுமை தோன்ற விருபொருளுக்கெனவும்; தாறபரியத்தாலிருபொருள்களுக் குவமானத் தன்மையு முவமேயத் தன்மையும் விளங்கும்,

வான்மீனு மாம்பலும் வகையொப்ப வாழ்வனபார்
தேன்மீனொப்பாம்விழித் தேமொழியே.

என்னும் உபயவிச்ராந்த சாதிருசியோவமாலங்காரத்தோடு (அதாவது மதியும் முகமும் ஒப்பென்பதுபோல் உவமையுருபு உவமான உவமேயங்க ளிரண்டனுள் ஒன்றைப்பற்றாது இரண்டற்கும் பொதுவாயிருப்பது) வேற்றுமைதோன்ற வாக்கியபேதமென்னும் பொருள்படுமாறு பரியாயமாக்கிலெனவும்; கூறியதாமென்க. அற்றேல் (செ-ள்.) "உரைபோலப்புத்தி புத்திபும்போலொழுக்க மருவொழுக்கம்போற் புகழாமால்" என்னும் ரசனோவமையிற், புத்தி ஒழுக்கமென்னு மிரண்டு பொருள்களுக் குவமானத்தன்மையு முவமேயத்தன்மையு மிருப்பதாலிதுவும்புகழ்பொருளொப்பணியின்பாற படுமேயெனின்,

றொன்றுடனொப்புமையானது தாற்பரியத்தாற் கிடைக்கினு, மதை வாசகத்தாற்பகர்தன் மூன்றாவதொப்புப் பொருளில்லையெனப் பெறுமாறு காண்க.

செய்யுள்.

(கு-ம்.) அந்தரம்போ லம்புதமு மம்புதம்போ லந்தரமுஞ்
சந்திரன்போ லஞ்சமுமஞ் சம்போலச்—சந்திரனும்
வெள்ளாம்பல்போன்மீனுமீன்போல்வெள்ளாம்பலுமுண்
டுள்ளாம்பல் முத்துடையா யோர்.

முன்னையுதாரணத்தில் நிறையுமென்ற பொதுத் தன்மை விரிந்தது. இவ்வுதாரணங்களிற் களங்கமின்மை முதலிய பொதுத்தன்மைகள் தொக்கு வந்தனவாம். தலைவனிடம் பொருளறங்களினிறைவையும், சரற்காலத்திலாகாயம் நீர்முதலியவையின் களங்கமின்மை முதலியவைகளையும், தற்காலத்தில் வர்ணிக்கவேண்டுமாதலாலிவ் விரண்டுதாரணங்களினும் வர்ணிக்கவேண்டு மிரண்டு பொருள்களுக்கே யுவமானோபமேயத்தன்மையைக் கூறலாயிற்று. இவ்வாறன்றியும் வர்ணியாவர்ணியங்களுக்கு மிவ்வணி வருமெனக் கொள்க. அஃதுவருமாறு.

---

அற்றன்று; இரண்டு பொருள்களுக்கென்ற துணையானே ஒன்றுக்கொன் றுவமானோபமேயத்தன்மை யிருக்கவேண்டுமெனக் கிடைத்ததாலென்க. இவ்வாறொன்றுக்கொன்றெனக் கொள்ளாக்காற், பரியாயமாக்கிலென்பதே யியைபின்மையணியை விலக்கிவிடுமாதலா லிரண்டு பொருள்களுக்கெனச் சொற்றது, வாளாகூறியதேயா மென்க. இன்னுமிவ்வணியை, உவமை யெதிர்நிலையணியென்றாவது, இரண்டுவமையணி யென்றாவது, கூறுவாமெனினிவ்வணியிற் பரியாயமாக்குஞ் சிறப்பிருத்தலால் அவ்வாறு கூறலாகாதெனக்கொள்க.

செய்யுள்.

கலைகம்போ லிக்கரியிக் கரிபோலக் கல்லகநாடு
சொல்லருமுன் னதமாகித் துலங்குமலை யருவியொப்பத்
தொல்லுலகி லமர்புரியித் தும்பிமதப் பெருக்குமிதன்
வல்லமதப் பெருக்கொப்ப மலையருவி யும்மிகுமே.

இக்கவியில் உன்னதமும் மிகுதலும் பொதுத் தன்மை. இக்கரி, இத்தும்பி, எனவந்த சுட்டுகள், தற்காலத்து வருணிக்கவேண்டும்பொருள்தந்தாவளமென்பதைத் தந்தவென்க.

## ௪-வது எதிர்நிலையணி.

(பிரதீபாலங்காரம்.)

செய்யுள்.

வழங்குவமானத்தி னுக்குவமேயத்தன் மைவிளம்பில்
ஒழுங்குறு நாமமெதிர்நிலை கண்போ லுளதுகஞ்சம்
எழுஞ்சசி யானனம் போலுள தென்ப திலகஇயங்காண்
டொழும்பலவேந்தனைக் காக்குங் குமாரெட்ட சுந்தரனே.

பிரசித்தமான வுவமானத்திற்கு எதிராக வுவமேயத் தன்மை கூறுதல எதிர்நிலையணியாம். இதனை வடநூலார் பிரதீபாலங்கார மென்பர்.

---

(ச-ரை.) உவமானோவமேயத்தன்மை யுரைப்போனது குறிப்பாய் விளங்குதலால், முகமுதலியவைகளுக்கும் உவமானத்தன்மை பொருந்துமாதலான் ஈண்டு முவமையணியேயாகலாமென்ற சங்கையை நிவர்த்திக்கும் பொருட்டு, வழங்குவமானத்திற் கெதிராக வுவமேயத் தன்மை கூறுதலென்றதென்க. அஃதாவது, இயல்பாகவே யுவமேயத்தினும் சிறப்புற்ற வுவமானத்திற்குக் குறைவுதோன்ற உவமேயத் தன்மையும், உவமேயத்

செய்யுள்.

கனகமலை முலையாயுஞ் விழியொப் பான
காந்தியுறு குவளைபய முழுகிற் றுன்று
நனமருவு கதிரையநு சரித்த சோம
னவமுகிலான் மறைந்தனனுன் னடையை நாணு
மனுசரித்த நடைகொளனம் போன துன்றெப்
பானவையான் மயல்சிறிதாற் றுவமென் றாலு
மினியகட வுளுக்கதுவும் பொறுக்க வில்லை
யெதுவேனுஞ் சொல்லுவையா னென்செய் வேனே.

இவ்வுதாரணத்திற் காந்திமுதலிய பொதுத்தன்மைகள் விரிந்தன.

---

## இரண்டாமெதிர்நிலையணி.

செய்யுள்.

உவமான மாமுவ மேயத்தி னுற்புக ழும்பொருளுக்
கவமான மோதி லிரண்டா மெதிர்நிலை யாமுகமே
யிவர்காந் தியாலுனைப் போன்மதி யுண்டெனக் கேன்கருவ
நவில்வாயென் றேந்த விலக்கிய மெட்ட நகர்க்கரசே. (௬)

---

திற்குச் சிறப்புத்தோன்ற உவமானத்தன்மையும் கூறுதலாம். (மூன்றுவதைந்தாவ தெதிர்நிலையணிகட் கொத்திருக்கும்பொருட் டிங்ஙனம் இவ்வாறு விரித்ததெனக் கொள்க.)

(ச-கை.) உவமானத்தினும் உவமேயத்திற்கு மேன்மைதோன்றுகின்ற வியதிரேகாலங்காரத்துக்கு மிவ்வணிக்கும் பேதமியாதேல், அவ்வணியில் உவமான உவமேயங்களின் ஒற்றுமைக்குரிய குணதர்மம்வேறும் சிறப்பிற்குரிய குணதர்மம் வேறுமாகும். இவ்வணியில் ஒற்றுமைக்குரிய குணதர்மத்தானே சிறப்பென்றுமுணர்க.

(கு-ம்.) உவமேயம் உவமானமாகிச் சிறப்புறும், உலகவழக்கில் உவமானமாக வேறுபட்டிருக்கும் ஒரு பொருளை உவமேயமாகச்செய்கிற வளவினுஞ்சகியா நிலையிலிருப்புழியதற்குப் பிரசித்த உவமானமாகிய உவமேயத்தால் இழிவு கூறுதல் இரண்டாமெதிர்நிலையணியாம். முதலாவதெதிர்நிலையணியினு மிதிற் குறைவுதோன்றக் கூறும் விசேடமே பேதமெனக்கொள்க.

செய்யுள்.

கண்ணினா லேனதி கருவங் கொள்கிறா
யெண்ணிய திசைதொறு மிலஞ்சி நீதிலின்
வண்ணமாங் குவளையும் வதியுங் கோகிலப்
பண்ணமை யமுதெனப் பகரும் பாவையே.

(கு-ம்.) முந்திய வுதாரணத்திற் காந்தியென்னும் பொதுத்தன்மை விரிந்தது. இதிற் பொதுத்தன்மை தொக்கது என்க.

---

## மூன்றாமெதிர்நிலையணி.

செய்யுள்.

புகழுவ மேயத்தி னாலுவ மானப் பொருட்குநிந்தை
பகருவ மேலது மூன்றா மெதிர்நிலை பாசகர
நிகழுனக் கேனாக் கிரத்தாற் செருக்குளை நேர்ந்தமின்னார்
மிகவுள ரென்ப திலக்கியஞ் சந்திர வெற்புளனே. (எ)

(கு-ம்.) நிகரிலாச் சிறப்புற்றமையா லோரிடத்தினுந் தானுவமானமாதலை ஏற்றுக்கொள்ளாத வுவமானப் பொருளுக்குப் புகழப்படுமுவமேயப் பொருளுளதாகக் கூறியமாத்திரத்தினால் இகழ்ச்சி தோன்றுவது இரண்டாமெதிர்நிலையணிக்கு மாறுபடவரு மூன்றாமெதிர்நிலையணியாமென்க.

செய்யுள்.

கயமான கடன்மீது வருநீல மகவொயி கனுமாலமே
பயமீய வருவாரு ளொருநா னுனதமான பரனேயென
நியமாக வளர்மா கருவமேவி மகிழ்ழேனு னிகராகவே
சுயமானகுணவீனர்சொனுவாசகமனேகதொகைமேவுமே.

---

## நான்காமெதிர்நிலையணி.

செய்யுள்.

புனைவுளி யோடுவ மானத்தி னுக்கொப் புமையிலெனி
லனைவரு நான்கா மெதிர்நிலை யாமென்ப ரம்புயநின்
வனைமுகம் போல்மின் னுளதெனில் வீணவ வாதமலர்ப்
பொனையனை யென்ன வுதாரண மெட்ட புரத்தரசே.(அ)

(கு-ம்.) பிரசித்த உவமானத்தினைத் தன்னினுஞ் சிறந்த வர்ணியத்திற்கு வுவமேயமாகக் கூறுதன்மாத்திரையும் பொருந்தாதென்கை நான்காமெதிர்நிலையணியாம். இது முன்னையமூன்றினுஞ் சிறப்புற்றது. இங்ஙனம் வீணவவாத மென்றமையால் ஒப்புமையிலலையெனக்கிடைத்தது.

வெண்பா.

பங்கயவி லோசனத்திர் பாரிடையான் சொல்வதுகே
ளுங்கலையோ னும்முகத்துக் கொப்பாகத்—தங்குமறு
வெள்ளளவு மில்லாரா லென்றுமியம் பப்படுவான்
றள்ளுதலில்லாநிச் சயம்.

---

(ச-கை.) இவர்முகத்தைப், பார்த்தற்கமையாதவே றுலகத்திலிருக்கின்றவர்களதற்கு மதியை யொப்பாகச் சொல்லினு மெதிரிலிரண்டையும் பார்க்கும் பாருலகத்தா ரொப்பாகக் கூறுவது பொய்யாதலா லவர்களை யுறி வெள்ளளவு மில்லாதாரொன்றுர். அதனால் மதியொப்புமைப்பொருளன்றென்பது பெற்றும்.

## ஐந்தாமெதிர்நிலையணி.

செய்யுள்.

பயனின்மை யையுவ மானத்தி னுக்குப் பகர்நிலைந்தா
மியசொ லெதிர்நிலை பெண்முகங் காணக் கிடைத்தவர்க்கே
யியன்மதி யாற்பய னென்மரை யாற்பய னென்னெனவோ
தியதிங் குதாரணந் தேரெட் டயபுர சீதரனே. (ரு)

(கு-ம்.) உவமானத்தாற் கிடைக்கும்பயனுவமேயத் தாற் கிடைப்பதா லுவமானத்தாற் பயனின்றென் றிகழ்ச்சி தோன்றக்கூற லைந்தாமெதிர்நிலையணியாம்.

செய்யுள்.

பொருசி லைகொடை நளன்பிர தாபமும் புகழும்
பெருக லாலிவர் மிகையெனப் பிரமனுங் கெண்ண
மருவு போதெலாம் விலக்குருண் டலகுறி வாள்சே
ரிருக நிர்க்குமூர் கோளெனுங் கைதவத் திடுவான்.

(கு-ம்.) தண்டியாசிரியர் முதலியோர் இயைபின்மை யணி, புகழ்பொருளொப்பணி, யெதிர்நிலையணி, யென்ற

---

(ச-கை.) இங்ஙனம் நான்காவது ஐந்தாவ தெதிர் நிலையணிகளி லொப்புமையில்லையென்றே யுரைப்பதால் முன்னைய மூன்றுமே உவமையணியின்பாற் படுமென் பதே தண்டியாசிரியர் கருத்தாம். அதனையு மாரா யுங்கா லுவமையணியின் முக்கியமாகப் பொதுத்தன்மை யாற் சிறப்புத் தோன்றுதலாலும், எதிர்நிலையணியிற் பொதுத்தன்மையாதாரமாக வுவமானவிகழ்ச்சியாற் சிறப் புத்தோன்றுதலாலும், அம்மூன்றெதிர்நிலையணியு முவ மையணியி லடங்காவென்க. இயைபின்மையணியினும் புகழ்பொருளொப்பணியினு மிரண்டாவது மூன்றுவ

மூன்றும், உவமையணியின்பிரிவுகளாகவேயிருத்தலானவ் வணியின்பாற் படுமெனவும், வாமனுசாரியர் முதலியோர் ஐந்தாமெதிர்நிலையணியை, யுவமானத்தை வீணென்று சொல்லு மெதிர்மறை யணியின்பாற் படுமெனவுஞ், சொல்லுப.

---

தொப்புமைப் பொருளில்லையென்பதைக் காட்டுஞ்சிறப் பிருத்தலானவை பொதுத்தன்மையான் மாத்திரம் சிறப் புத்தோன்று முவமையணியி லடங்காவென்க. இவ்வா றன்றி யொப்புமை தோன்றுதலாலே இயைபின்மையணி முதலிய மூன்றணிகளு முவமையணியின்பாற் படுமே யன்றி வேறன்றெனத் தண்டியாசிரியர் முதலியோருரைத் தாராலெனின் (செய்யுள்)

சத்தியொடுலாவண்யந்தககம்பீரமுங்கொண்
டத்திக் கொப்பா யுடன்மிக்காம்.

என்னும் வேற்றுமை யணியையு முவமையணி யிலடக்காது வேறுபிரித்துக் கூறியது குற்றமன்றே வென்பார்க்கு வேற்றுமையணியிற் பொதுத்தன்மை யிருக் கினு மதனேடிரண்டிலொன்றுக்குச் சிறப்பிருத்தலால் வேறுபிரித்தோதினரெனி லிவ்வணிகளுக்கு மவ்வாறே யொவ்வொரு பேதமுண்மையால் வேறுபிரித்துக் கூறினு ரென்க. இவ்வைந்தாமெதிர்நிலையணியில் உவமானத் திற்குப் பயனின்றென்பதாகிய விகழ்ச்சியிருப்பமையால், ஐந்தாமெதிர்நிலையணியை யெதிர்மறையணி யென்று வாமனுசாரியர் முதலியோர் கூறுவது பொருந்தாத தேயாம்.

---

## ரு-வது உருவகவணி.

(ரூபகாலங்காரம்.)

செய்யுள்.

ஒற்றுமை யாலதன் செய்கையி னுலுவ மேயமதிற்
பற்றுவ மானத்தை யாரோபித் தாலிரு பான்மையுட
னுற்றி டுருவகந் தான்மிகை யுங்குறை யும்மிரண்டு
மற்றதுஞ் சேர்ந்திட வாருரு மென்ப ரறிஞர்களே. (கo)

ஒற்றுமையுருவகத்துக்குதாரணம்.

சிந்தைக் கிசைவெட் டமகேள் நிறைமதி சேர்ந்துசிவ
னிந்தப் புவியின் றளிக்கு மெனலு மிவனுதற்கண்
சந்தித் திடாத சிவனென லும்பொருந் தார்புரந்தீ
யுந்தப் புரியிவன் முன்னோ னெனலுமு தாரணமே.

அதன் செய்கை யுருவகத்துக்குதாரணம்.

மறுவார் மதிக்குயர் வாயிவ் வதன மதிவிளங்கப்
பெறுமே யெனலுமிக் கற்புமின் வாரிப் பிறப்பின்மறுப்
பொறியே யெனலு மிவண்முக சோமனிற் புந்திமகிழ்
வுறலாலச் சோமனி னென்னே யெனலு முதாரணமே.

(கு-ம்.) உவமேயமாகிய முகமுதலியவைகளி னுவ மானமாகிய தாமரை முதலியவைகளை யாரோபித்து (அதாவது துணிமுதலியவற்றிற்குச் சாயமுதலியவற்றால் தன்னிறம்போகச் சாயப்பொருள்களினிறம் உண்டாகுவதுபோல் உவமேயத்திற்கு உவமானத்தின் குணங்கள் முழுதுமேற்றுவதனு லுவமானமுவமேய மிரண்டையு மொன்றாக) சிறப்புத்தோன்றக் கூறல் உருவகவணியாம். இதனை வடநூலார் ரூபகாலங்காரமென்பர். இஃது உவமேயத்திலுவமானத்தினொற்றுமையை (அபேதம்) ஆரோபித்தலாலும் சிலவிடங்களில் ஒற்றுமையின்றி யதன்செய்

கையை (தத்தர்மம்) ஆரோபித்தலாலும் ஒற்றுமையுரு வகம் (அபேதரூபகம்) எனவும், அதன் செய்கையுருவகம் (தாத்ரூப்யரூபகம்) எனவும், இரண்டு வகையாம். அவ் விரண்டினையும் உவமானத்தின் மிகை - குறை - இரண்டு மின்மை, ஆகிய மூவகையால் உறழ அறுவகையாம். அவ ற்றுளொற்றுமையுருவக மூன்றினுக்கும் "சிந்தைக்கிசை" யென்னுங் கவியில முறையே யுதாரணங்களும், அதன் செய்கையுருவக மூன்றினுக்கும் "மறுவார்மதிக்கு" என் னுங்கவியில் நிரலே யுதாரணங்களும், கூறப்பட்டன. "நிறைமதிசேர்ந்திச் சிவனிந்தப் புவியின்றளிக்கும்" என் னுமிடத்தில் நிறைமதிபொருந்தி யுலகத்தைக் காக்கின்று னென்றமையால், முன் சிவனுகவிருக்கும்போது குறை மதிபொருந்திக் காத்ததினுமிப்போது நிறைந்த புத்தி பொருந்திக் காக்கின்றுனென்பச் சிலேடையால் மிகுதி தோன்றுதலால், மிகையொற்றுமையுருவகம். "இவனுதற் கண்சந்தித்திடாதசிவ"னென்னுமிடத்தில் நுதற்கண்சந்தி த்திடாதவென்றமையான், சிவற்கு முந்தியநிலைமையினு மிந்நிலைமையினு தற்கணில்லாக் குறைவு தோன்றுவதாற் குறையொற்றுமை யுருவகம். "பொருந்தார்புரந் தீயுந்தப் புரியிவன்முன்னேன்"என்னுமிடத்திற் பகைவருரிலக்கினி யைசசெலுத்தியவ னென்றமையால், அச்செய்கையுள்ள வப்பிறப்பினு மிப்பிறப்பின் மிகையுங் குறைவுந் தோன்று மையா லிரண்டுமி லொற்றுமையுருவகம். "மறுவார் மதி க்குயர்வாயிவ்வதனமதிவிளங்கப் பெறுமே" யென்னுமி டத்தில், மறுவார மதி இவ்வதனமதி யென்றமையால் ஒற் றுமையின்மையும், பிரசித்தமதியினும் வதனமதிக்குக் கள ங்கமின்மையாகியவுயர்வு தோன்றுதலு மிருத்தலால் மி கையதன்செய்கையுருவகம். "இக்கற்புமின் வாரிப்பிறப் பின் மறுபொறியே." என்னுமிடத்தில் வேறுபொறியெ ன்றமையா லொற்றுமை யின்மையும், வாரிப்பிறப்பில் பொறியென்றமையால் பிரசித்த திருமகளினு மித்திரும

களுக்குக குறைவு தோன்றுதலு மிருத்தலாற் குறை யதன் செய்கையுருவகம். "இவள் முகசோமனிற் புந்தி மகிழ்வுறலாலச் சோமனினென்னே" என்னுமிடத்தில இவண்முக சோமனச் சோமனென்றமையா லொற்றுமை தோன்றுமையானும், பிரசித்த சோமனினு முகசோம னுக்கு மிகை குறை கூறுமையானும், இரண்டுமிலதன் செய்கையுருவகம் என்க.

செய்யுள்.

நிவந்திடுநீ வருங்காலிவ் வாரியென்றோ
நடுங்குவது நிருப முன்சே
துவும்வகுத்திட் டவனெனவுங் கடைதல்புரிந்
தவனெனவுந் தோன்றிற் றேபாா
எவணுறுகண் டத்திலுமே நினக்குவச
மாகாதா ரின்மை தன்னைக்
கவினுறுசெந் திருவுனேயிப போதகலா
திருப்பதனைக் கண்டுந் தானே.

(கு-ம்.) இங்ஙனம் சேதுவகுத்தல, கடைதலென் னுஞ்செயல்களை நீ செய்தவனென்று, அச்செயல்களைச் செய்ததிருமாலுடன், புகழப்படு மரசனுக்கு ஒற்றுமை கூறி, சேதுவகுத்தற்கேதுவாகிய வேறு கண்டங்களிற பகையுள்ளமையும், தனம்புரிதற்கு ஏதுவாகிய இலக்கு மி யில்லாமையுங் கொண்டிருந்த திருமாலவதாரத்தினும், இவ்வவதாரத்தில் எக்கண்டங்களிலும் பகைவரிலலாமை யும், இலக்குமி பிரியாமையுமாகிய மேன்மை கூறியதனுன் மிகையொற்றுமையுருவகமெனப்படும்.

செய்யுள்.

பாகமறை யோன்மின்னுர் பாலுநிதிப் பாலுமிரண்
டாகப் பிராந்தி யமைத்தனனம்—மோகத்தில்
மிக்கவெறுப் புற்றவன்பூ மிக்க ணரவுருக்கொள்
தக்கமுத லாம்பரா தன்.

இங்ஙனம் "தக்கமுதலாம் பரநாதன்" என்றமையால் விருப்பமில்லாதானுக்குப் பிரசித்த சிவபெருமானோடு ஒற்றுமையும், நரவுருவென்றமையால் தேவவடிவமில்லை யென்னுங்குறைவும், தோன்றுதலாற் குறையொற்றுமை யுருவகம்.

நேரிசையொத்தாழிசைக்கலிப்பா.

மதியொளியாற்பிரகாசமாவிளங்குமணற்குன்று
வதிசரயுமணலிடைக்குமாரசித்தரிருவருக்கு
முதிர்தருக்கவிளையாட்டுவெகுநேரமுண்டதுவே.

இது தரவு.

அன்னவரிலேயொருவன்கைடவனுகியவசுரன்
முன்னியவெம்போரினிடைமுன்மடிந்தானென்றுரைத்தான்
மற்றொருவன்பாதகத்தின்வடிவெடுத்தகஞ்சனென்போன்
செற்றிடுவெம்போரிடைமுன்றீர்ந்தனனென்றேயுரைத்தான்
அதனுண்மையாகினதையந்தநீயுரைத்திடுவாய்
முதலிவர்களிலெவனுன்னுலிறந்துமுடிந்தவனே.

இவை மூன்றுந் தாழிசை.

அதனுல்

இது தனிச்சொல்.

ஐயுறவெனகுமகன்றிடவேண்டும்
பொய்யுறவில்லாப்புகழைச்
செய்யுறுமிருநிதிச்செல்வத்தோனே.

இது சுரிதகம்.

இங்ஙனம், அந்தநீயென்று கைடவனையுங் கஞ்சனை யுங் கொன்ற திருமாலுடனொற்றுமையைக் காட்டி, யவ் வரசனைநோக்கிக் கைடவன் கஞ்ச னிவர்களினிறப்பின் முன் பின்னைக்கேட்டமையா லவ்வொற்றுமை யுறுதிப்

பட்டதாலும், திருமாலவதாரத்தினு மிவ்வவதாரத்தில் மிகை குறை தோற்றுமையாலு, மிரண்டுமிலொற்றுமை யுருவக மென்க.

செய்யுள்.

அரிய கனமூ டாமதியே யாவி யகன்று தமயந்தி
பெரிய மனநம் மிடத்துவரப் பெறுமென் றிருந்தா யோமரணத்
துரிய மனஞ்சந் திரனிடத்தி லுறுமென் மறையை நளமுகசந்
திரனுக் காக்கி மதப்புலவன் றெளிவா யெனக்குத் தெரிக்கின்றான்.

தமயந்தி செய்யுஞ் சந்திரோபாலம்பத்தில், மரண காலத்தில் மனஞ் சந்திரனிடத்திற் செல்லுமென்ற சுருதி யின் றாற்பரியத்தைப் பிரசித்த சந்திரனிடம், மறுத்து நள முக சந்திரனுக்காக்கிச் சொல்வதிற், பிரசித்த சந்திர னிலும் நளமுகசந்திரனுக்குச் சுருதியின் றாற்பரியத் துக்கு விடயமாகுமேன்மை யிருப்பதான் மிகையதன் செய்கையுருவகம்.

செய்யுள்.

நாயகவி யாசரொரு நான்முகமில் வேறுவிதி
தூயவிரு பாணிகொடு மாய்மவுலி—ஆயகனல்
மீறியிடு பாலவிழி மேவுதலி லாதசிவ
னீறுமரு வாதமறை யீர்.

இங்ஙனம் வேறுவிதியென்று விசேடங் கொடுத் தமையாலிந்த மூன்றிடத்துமதன் செய்கைமாத்திரமாரோ பிக்கப்பட்டது. இவற்றுள் நான்குமுக முதலியவைக ளில்லாக்குறை தோன்றினமையாற் குறையதன் செய்கை யுருவகம். இதை வாமனாசாரிய ரொருகுணம் குறைந்து மற்றைக் குணமுழுது மொத்திருக்குமிடம், விசேஷோக் தியலங்காரம் என்று தாஞ்சொல்லிய விலக்கணப்படியதற் குதாரணங் காட்டினாரென்க.

செய்யுள்.

கமலமலர்க் கவினைமறுக் காதுளதோ
களிப்புவிழி கட்கி யாதோ
கமலைமக ளுக்குயர்வு காணுமந்தக்
கணத்திலளிக் காதோ பெண்ணே
கமநின்முகக் கலைநிதியம் வேறுமொரு
கலைநிதியென் கனந் தோன்றும்
கமழ்சுதையாக் கண்ணதெனக் கருவமுண்டேற்
கனிவாயிற் கனியு மிங்கே.

இங்ஙனம் வேறுமொருகலைநிதியென்றமையாற், பிரசித்த கலைநிதியினும் வதனகலைநிதிக்கு வேற்றுமைகாட்டி வதனகலைநிதிக்குப் பிரசித்த கலைநிதியினது செய்கையைக் கூறியதனாலும், மிகை குறை தோன்றாமையாலுமிரண்டுமில தன் செய்கை யுருவகமென்க.

---

(ச-கை.) இவ்வாறு, உருவகவணி யறுவகையாக வந்தமையன்றியும், சாவயவம் - நிரவயவம் - பரம்பரிதம் - என்று மூவகையுமாம். அவற்றுள் சமஸ்தவஸ்து விஷயமெனவும், ஏகதேசவிவர்த்தி யெனவும் சாவயவ உருவக மிரண்டுவிதமாம். நிரவயவ உருவகமும், கேவலமெனவும், மாலாவெனவு மிரண்டுவிதமாம. பரம்பரித உருவகம், கேவலசிலுஷ்டமெனவும், மாலா சிலுஷ்டமெனவும், கேவலஅசிலுஷ்டமெனவும் மாலாஅசிலுஷ்டமெனவும் நான்குவிதமாம. அவை வருமாறு.

செய்யுள்.

சந்திரிகைப் பூதியின்வெண் ணிறம்படைத்து
முடிவெலும்பு தரித்துந் தோற்று
விந்தைசெயல் விரும்பியுந்நீ வென்றிலிரும்
தொன்பிறுக்கு மேவிய செல்வாள்

(ச-கை.)

இந்தவிராத் திரியெனுங்கா பாலிகையோர்
சந்திரனே யெனுங் கபாலச
சந்தமணிச் சிமிழின்மறு வெனுங்கைதவச
சித்துமையுந் தரித்துத் தானே.

இக்கவியிற் பிரதானவிராத்திரியின்கண், காபாலிகை மாதை யாரோபித்த லிருப்பதாலும், அதன் அவயவமாக விருக்கும் நிலவு முதலியவைகளில் காபாலிகையி னவயவ மாயுள்ள விபூதி முதலியவைகளை யாரோபித்தலிருப்ப தானுமிது, சாவயவரூபகத்தில் சமஸ்தவஸ்து விஷயம் என்க.

செய்யுள்.

வண்டரளம் போற்குடச மாமலாபோ லாம்புயனிற்
தண்டிவலே வானடந சாலையிடைக—கண்டதொரு
மின்னாலின்புட் பாஞ்சலியின் மிக்கவிளக் கம்புரியும
அன்னதுபா ரன்னநடை யாய்.

இக்கவியிற் பிரதானமான வாக்கியத்தாற், செய்யப் படு நடநசாலையி னாரோபத்திற்கவயவமான மின்னலிற் பெண்ணை யாரோபித்தல் சொல்லப்படாமல, கருத்தா லேற்படுவதாலும், ஏகதேசமான வாகாயத்தில் வசனத் தால ஆரோபமிருத்தலாலும், இது ஏகதேசவிவர்த்திரூப கம் என்க.

செய்யுள்.

பிணையெனு விசையிற் சடமசை வறச்செய்
பெற்றியாற் கேட்டிருக் கினுமே
துணைவியி னிடநா யகன்வர லாற்றைச
சொல்ச்சொலிக் கேட்கவை ந்திடலா

(௪-வது.)

அணைமனத் தென்றும் விளங்கலாற் புதுமை
யாமயற் கொடியினை யனங்கன்
இணையிலா மகள்பா லம்புதான் விடுத்தே
யிறையவா வளர்த்திடு வானே.

இங்ஙனமயற்கொடி யென்றமையாற், கேவலநிரவய வந் தோன்றிற்று.

செய்யுள்.

மனத்தையனு வகலாத மாதுருடா மணிவனப்பி
னதியாயு மதிமை சேர்யெள
வனத்தினுவப் பாகியும் விநோத மாக
வருவசனங் களுக்குவித்தை யாயுமின்பந்
தனகதிருப்பா கியும்பிரகா சத்தின் மேன்மை
தருசெயகை யாகியும்வே தங்களாய்ந்தோன்
கனப்படைப்பின் வடிவாயு மிருந்து மேயங்
கசன்கணையா கவுமெளியேன் கண்ணுற்றளே.

இக்கவியில் மாலாநிரவயவந் தோன்றிற்று.

செய்யுள்.

எந்தவுல கத்தினுமே யிங்கிதமாங் காந்தியுற
வந்திடுநீ யேகிளைக்கு வாய்த்தமுத்துச்—சந்தமணி
யென்றுநினைச சொல்லாதா ரெங்குமிலை வேற்கரத்துக்
கந்தனென வுந்திகழ்வா கா.

இங்ஙனஞ் சிலேடையாகிற கிளையென்னும் பதத்தால் சுற்றத்தில் வேணுவை யாரோபித்தலானும், அரசனிடத்தில் முத்துமணியி னாரோபமிருத்தலானும், இது கேவலசிலுஷ்டபாரம்பரிதம். மற்றைய வுதாரணமனைத்து மிவ்வாறு கண்டுகொள்க.

## ௬-வது திரிபணி.

(பரிணாமாலங்காரம்.)

செய்யுள்.

செப்புவ மான முவமேய மாகத் திரிந்துதொழி
லைப்பய னுக்கொ ளவந்தாற் றிரிபணி யாகுமதிக்
கப்பெறு கண்ணி தெளிவாம் விழிப்பங் கயத்திற்கண்டாள
இப்பொழுதென்ப திலக்கியந்தேர்தென் னிளசைமன்னே.

எங்ஙனம் ஆரோபிக்கப்படு முவமானம் ப்ரகிருதகாரியத்திற்குபயோகமாக நிவந்தனை செய்யப்பட்டு, இயல்பிற்றனக்கு அக்காரியத்திலுபயோகப்படுந் தன்மையில்லாமையா லுவமேயமாகத்திரிந்து அக்காரியத்தி லுபயோகப்படுகிறதோ, அது திரிபணியாம். இதனை வடநூலார் பரிணாமாலங்கார மென்பர். "விழிப்பங்கயத்திற் கண்டாளென்னு" முதாரணத்திற் (பங்கயத்திற்கே சிறப்பிருத்தலாற் காணுதலென்னுந் தொழிலிற் பங்கயமேயுபயோகமாக நிவந்தனை செய்யப்பட்டதேயன்றிக் கண்ணக்காரியத்திற் பொருந்தவில்லை) பங்கயத்திற் கியல்பிற் பார்க்குந்தொழி லில்லாமையால் விழியுருக்கொண்டு திரிந்ததென்க.

செய்யுள்.

சீதையிலக குவனொடிரா கவன்பூத
நாதன்முடித் தெரிய லாந்தே
வாதிநதி கடந்துமரக கலனுமக்
குகற்கிலக்கு வன்பா லுள்ள
வோதருமன் பொத்திடுமன் பினையோடக்
கூலியதா வுபகா ரஞ்செய்
தேதகைவேட் டரிவையர்கொஞ் சந்தொடரச
சென்றனன்சித் திரகூ டத்தே.

இங்ஙன மாரோபணஞ் செய்யப்படு மோடக்கூலி இலக்குவனிடத்திருக்கு மன்புபோன்ற வன்பாகத்திரிந்து மரக்கலனாகிய குகனுக்குச்செய்யு முபகாரமென்னுங் காரியத்தி லுபயோகப்பட்டது. இராகவனது அநுக்கிரகத்தின் வேண்டுதலையன்றிக் கூலியை யிச்சித்தலில்லா ஓடக குகனுக்கு, அக்கூலி யன்புருக்கொண்டன்றித் தன்னுருவி லுபயோகப்படமாட்டாது.

---

## எ-வது பலபடப்புனைவணி.

(உலலேகாலங்காரம்.)

செய்யுள்.

எடுத்தோன் றினைப்பலர் பல்வித மாக வியம்பல்பல
படப்புனை வாமன்னன் மின்னார் மதனென்னப் பற்றலர்கள்
மிடற்சம னென்ன விரவோர் தருவென்ன மின்றுவனென்
றிடப்பெறு கின்ற திலக்கிய மாகுநல் லெட்டமனே.(கஉ)

எங்ஙனம் பலவிதமான தன்மைகளினையுள்ள வொருபொருள், அந்தந்தத் தன்மைசம்பந்த வேதுவின் பேதத்தினாற் பலராற் பல்விதங்கூறப்படுகிறதோ அஃது பலபடப்புனைவணியாம். இதனை வடநூலார் உல்லேகாலங்காரமென்பர். அதற்கு "மன்னனென்பது" முதலுதாரணம். இங்ஙனமன்ன னொருவனே அதிகவழகுதங்கியிருத்தலால் மின்னார்கள் மதனெனவும், மிகப்பராக்கிரமமிருத்தலாற் பகைவர்கள் சமனெனவும், கொடுத்தலாலிரவோர் கற்பகத்தருவெனவும், விளங்கினா னென்றமையால், இது பலபடப்புனைவணியாம். மின்னார் முதலியவர்கள் மன்னனை மதன் முதலியவர்களாகக் கூறுவதற்கு - ஆவல் - பயம் - பொருள்பெறுகை - ஆகியவை நிரலே காரணங்களாகின்றமை காண்க.

செய்யுள்.

கண்ணன் விருத்தையரற் கைமலேகாத் தானென்றும்
வண்ணத் தருணிகளால் மாமணாசெய்—பண்ணலென்றம்
வாலேயரா லப்போது வாய்வடிவ னென்றமகிழ்ந்
தேலவுரை பேசவுற்ற னிங்கு.

இங்ஙனம் கண்ணனொருவனே, இல்லறக் கடலி னின்றும் பயமடைந்து கடக்க விரும்பு முதிராந்த வய துள்ளமடந்தையர்கள், கராவாற்பிடிக்கப்பட்டு வருந்திய தந்தாவளத்தைக்காத்தவ னிவனெனவும், தருணிகள், இலக்குமிதேவியை மகிழச்செய்கின்ற நல்ல யௌவன புருட னிவனெனவும், வாலேயர்கள், அக்காலத்துள்ள வேடத்தைககண்டிவ் வேடங்கொண்ட விவனேற்புருட னெனவுங் கூறவிளங்கினானென்பதில், பலவித வுலவேக மிருப்பமையா லிதுவு மவ்வணியேயாம். முன்காட்டிய வுதாரணத்திலோர் அரசனிடத்தில் மன்மதன் முதலிய வர்களை யாரோபித்துக் கூறுவது மிவ்வுதாரணத்திலாரோ பமின்றிக் கூறுவதும் பேதமாமென்க.

---

## இதுவுமேலேயவணி.

செய்யுள்.

ஒன்றைப் பலவித மாகப் பலவிட யத்திலொரு
வன்றெரித் தாலு மதுவே யிவன்குரு வாக்கில்வில்லின்
குன்ற விலாப்பய மீவோ னருச்சுனன் கூர்புகழி
லென்ற வுதாரணந் தேர்கருங் கோட்டை யிறையவனே.()

இங்ஙனங் காட்டிய வுதாரணத்தி லொரேபுருடனு லரசன், வாக்குவிடயத்திற் குருவென்றும், வில்விடயத் திற் பயமீவோனென்றும், கீர்த்திவிடயத்தி லருச்சுன னென்றுங், கூறப்பட்டான். இவ்விடத்திற் சிலேடை

யாகக் குருவென்பதற்கு மேலோனென்றும், வியாழனென்றும்; பயமீவோனென்பதற்குப் பயத்தைக் கொடுப்போனென்றும், கங்காபுத்திரனென்றும்; அருச்சுனனென்பதற்கு சுத்தனென்றும், பார்த்தனென்று மிருபொருள் வருமாறுணர்க.

செய்யுள்.

தனங்களிற் பெருத்தது மருங்குலிற் சிறுத்துந்
    தாரையில் நீண்டுறு மெலவி
கனமதி லகன்று மிதழ்களிற் செவந்துங்
    கவினுறு கருணை விசாலி
அனகக பாலி தன்பெரு நிதிய
    பானசங் கரியுமை யடியேன்
மனமெனு மிடத்துப பவவினை யனைத்து
    மாறிட வந்துதோற் றுகவே.

முந்திய வுதாரணத்திற் பலவிடயங்களிற் சிலேடையாகவு மியமனந் தனிமையாகவுமுள்ள பேதமுணர்க.

---

## ௮-வது நினைப்பணி. ௯-வது மயக்கவணி.

(ஸ்மிருதிமதலங்காரம்.) (பிராந்திமதலங்காரம்.)

## ௧௦-வது ஐயவணி.

(சந்தேகாலங்காரம்.)

செய்யுள்.

நினைவு மயக்கமு மையமு மொப்புமை யால்நிகழி
லனையவை யுண்மு னினைப்பணி நாப்பண் மயக்கவணி
பினையொரு மைய வணியென மூன்றுக்கும் பேருணர்வாய்
புனையு மருட பதியாங் குமாரொட்ட பூபதியே. (௫௮)

உதாரணம்.

சந்த மரைகண்ட வென்மனம் பெண்வ தனநினைந்து
மிந்த மதப்புழு வண்டின் முகமரை யென்றுணரு
மந்த முகமரை போமதி போதெளி வாகவிலை
முந்துமெனக்கெனலகாட்டாம் நினைப்பின மயமென்றிறக்குமே.

எங்ஙனம், ஒருபொருளைக் கண்டவுட னொப்புமை யான் மற்றொருபொருளி னினைவுண்டாகிறதோ அங்ஙனம் நினைப்பணியாம். எங்ஙனம், ஒருபொருளில், ஒப்புமையால் வேறு பொருளென்ற மயக்க முண்டாகின்றதோ அங்ஙனம் மயக்கவணியாம். எங்ஙனமொருபொருள், ஒப்புமையால் வெவ்வேறு பொருளாகலாமென்று சந்தேகிக்கப்படுகிறதோ அங்ஙனம் ஐயவணியாம். இவைகளை வடநூலார் முறையே ஸ்மிருதிமதலங்காரமென்றும் பிராந்திமதலங்காரமென்றுஞ் சந்தேகாலங்காரமென்றுங் கூறுப. "சந்தமரைகண்ட வென்மனம் பெண்வதன நினைக்கும்" என்பதிற் றாமரைக்கு முகத்திற்கு மொப்புமையிருப்பமையாற் றாமரையைக்கண்டவுட னாயகியினுடைய முகநினை வுண்டானது. "இந்த மதப்புழுவண்டின்முகமரை யென் றுணரும்" என்பதில் முகத்தினொப்புமையால வண்டிற் குத் தாமரையென்று மயக்கமுற்றது. "அந்த முகமரை போமதிபோ தெளிவாகவிலை முந்துமெனக்கு" என் பதில் முகத்தி லொப்புமையாற் றாமரையோ சந்திரனோ வெனச் சந்தேகமுற்றது.

செய்யுள்.

வானவர் தமக்கும் வியப்பினை யளித்து
மலர்ந்திடு வனசங் கையேந்தி
மானவிந் திரைபோ றனக்கெதி ருறவே
மன்புனற் றுறையி னின்றோ

லானவோர் தெரிவை தனைவிழி நோக்கி
யாழ்ந்தவா றிதியிடை மதனங்
தாளியற் றினைதை நினைந்தனன் கமலத்
தண்ணருட் கண்முகுந் தனுமே.

நினைப்பணிக்கு, முன்காட்டிய வுதாரணத்தி லொப்பு பான பொருளுக்கே நினைவு கூறலாயிற்று. இங்ஙனம் பெண்ணுக்கொப்பான விலக்குமியினினைவுமூலமாக வவ ளுற்பத்திக்குக் காரணமாகிய சமுத்திரமதனத்தினினைவு கூறலாயிற்று. முற்காட்டிய வுதாரணத்தினுமிது பேதப் படவந்ததென்க.

வெண்பா.

வண்டுபூ சம்புவென் மால்மருவிப் பைங்கிளியின்
றுண்டமதில் வீழ்கிறதந் தோவதுவுங்—கண்டநவ்வ
லின்கனியென் றேமயக்க மேய்ந்ததனை யுங்கவர
நன்குவிருப் பங்கொளுமன் று.

முன்காட்டிய வுதாரணத்திலொன்றுக்கு மயக்கமுண் டானது. இங்கு இரண்டிற்கும் ஒன்றுக்கொன்றில் மயக்க முண்டானது பேதமெனக்கொள்க.

செய்யுள்.

கனகம் வாங்கிடு காலை வணங்கியு
மனது தீர்ந்தபின் னேமியா வாகியும்
இனமிருந்திடு மீனர் துலாவுக்குச
சினவ ரோபெரி யாரோ தெரிந்திலேன்.

முன் உதாரணத்திற் சந்தேகிக்கப்பட்ட பொருள் கள் உலகபிரசித்தமானவை. இவ்வுதாரணத்திற் கவியி னாற் கற்பிக்கப்பட்டவையெனக் கொள்க.

## கக-வது வெற்றொழிப்பணி.

(சுத்தாபந்நுதியலங்காரம்.)

செய்யுள்.

மறுதரு மந்தனை யாரோபித் தமநிட மாம்பொருளில்
உறுதரு மத்தை மறைத்தா லதுவெற் றொழிப்பணியாம்
பெறுமிது திங்க ளிலைவே றெதெனிற் பொருவிணைநி
இறைவெண் மனையொன் றுதாரணந் தேர் மிளசைமன்னே.()

புகழக்கூடியபொருளில், ஒப்பான வேறுபொருளின் றருமத்தை யாரோபிக்கும்பொருட் டதன் இயற்கைத் தருமத்தையும். கவிகளிலு லுத்பிரேக்ஷிக்கப்படுந் தருமங்களையும் மறைப்பது வெற்றொழிப்பணியாம். இதை வடநூலார் சுத்தாபந்நுதியென்பர். இதற்கு, "அறியப பெறுமிது திங்க" ளென்பதும், அடியில்வரும் "இந்திர நீலத் துடைபடு" மென்பதும், நிரலே உதாரணங்கள். இங்ஙன "மறியப்பெறுமிது திங்களிலை" யென்னுமிடத்துத் திங்களென்னும் பொருளி லொப்பான வெண்டாமரையின் றருமத்தை யாரோபித்தற்கு மதியிலியல்பாகப் பொருந்திய தருமத்தின் மறைவு திங்களிலையென்றதாற் கிடைத்தது.

செய்யுள்.

இந்திர நீலத் துடைபடு துணிபோ
லிந்துவிற் றெரிந்திடு கறுப்பைப்
பங்கமா மறுவென் பார்சிலர் மானென்
பார்சிலர் படியுடைப் பரவை
தந்திடு சேறென் பார்சிலர் புடவிச
சாயையென் பார்சில ரதைரா
வந்துவாய்க் கொளும்பே ரிருள்செறி வுற்று
வயிற்றிடை யமைந்ததென் பேனே.

இங்ஙனம் ஒப்பான விருளின் றருமாரோபத்தைப் பயனாகக்கொண்டு கவியினுலுத்பிரேக்ஷிக்கப்படு மிறு முதலியவையின் றருமத்தின் மறைவு சிலர்சிலவொன்றமையால் விளங்கியது.

---

## கஉ-வது காரணவொளிப்பணி.

(ஹேதுவபந்நுதியலங்காரம்.)

செய்யுள்.

முற்கூ றியவொளிப் பேருவி னேடு முடிந்திடில
திப்கா ரணவொளிப் பெய்பே ருறும்வெம்மை செய்திடலால்
அற்கோதை சோமனன் றென்றிர வாகையி னன்றுவரி
யிற்கூர் வடவையென் றுளென் றிலகிய மெட்டமனே.()

முற்கூறியபடி வேறுதருமத்தி ஞரோபத்தின்பொருட்டு ஒருபொருளி லநணியல்லான தருமத்தையாவது, கவியினு லுத்பிரேக்ஷிக்கப்படுந் தருமத்தையாவது, காரணங்கூறி மறைப்பது காரணவொளிப்பணியாம். இதை வடநூலார் ஹேதுவபந்நுதி யென்பர். இதற்கு "வெம்மைசெய்திடலா" லென்பது முதலுதாரணம். இங்ஙனம் சந்திரனிடத்து வடவையின்றருமத்தை யாரோபித்தற்கு, வெம்மையைச் செய்யுமென்னுங்காரணங்கூறி யியல்பான சசியின் தருமமும், இரவாகையாலென்னுங் காரணங் கூறிக் கவியினு லுத்பிரேக்ஷிக்கப்படும் இரவியின் தருமமு, மறைக்கப்பட்டன. அம்மறைவு "மதியுமன்று" "என்றுமன்" றென்றமையால் விளங்கிற்று.

செய்யுள்.

மந்தரவெற் படியுறுக லுரிஞுதலாற்
பெற்றிடுபுண் வடுவு மேவி
இந்துநடு விளங்குமதைப் புவியின்சாயை
யென்றுமக லாதிருக்கு மிரலேயொன்று

மந்தமுய லென்றுமொழி வதுமிகவு
மறிவிலர் சொல்லா மவைகரு
வந்துறுபழ் றனுவளவா யினுமுளதோ
வெண்புலவீர் மதிக்குங் காலே.

இங்ஙனஞ் சந்திரனிடத்துற்ற களங்கத்தில் புண்வடு வின் றருமாரோபத்திற்காகப் புவியின் சாயை, முதலியவை களின் றருமம் மறைக்கப்பட்டது. இது அறிவிலர்சொல் லென்றமையால் விளங்கிற்றென்க.

## ௧௩-வது வேறுபாட்டொளிப்பணி.

(பரியஸ்தாபந்நுதியலங்காரம்.)

செய்யுள்.

ஒருபொரு ளின்றரு மந்தனை யவ்விடத் தேமொழிந்து
மருவதை வேறொன்றி லாரோபஞ் செய்ய வரிலதன்பே
ரரும்வேறு பாட்டொளிப் பாஙகாடடுந் திங்களி தன்றுமற்றே
துளையெனிற் பெண்முகந் திங்க ளெனலெட்ட வாரசே.()

ஒருபொருளின் றருமத்தை யதன்கண் மறைத்து வேறுபொருளி லாரோபிப்பது வேறுபாட்டொளிப்பணி யாம். இதை வடநூலார் பரியஸ்தாபந்நுதியென்பர். இதற்குத் "திங்களிதன்றுமற்" றென்பது முதலுதாரணம். இங்ஙன மதியீதன்றென்ற மதியினிடத்திருக்கும் தருமத் தின்மறைவு புகழக்கூடிய பெண்முகத்திற் றிங்களின் றரு மாரோபத்தைப் பயனாகக்கொண்டிருக்கின்றது.

செய்யுள்.

கடலுதவ வருமால காலம்விட மலதிருவே
விடமிதனில் மாறுபட மேதினியோர் நினைக்கின்றார்
மிடலரனு ரதைமாந்தி விழித்துவைககின் றாரவனைத்
தொடவுடனே மிகமயங்கித் தூங்குகிறார் திருநெடுமால்.

ஆலகாலத்தின் றருமம், அதையுண்ட சிவபெருமான் விழித்துவக்கின்றரென்ற காரணத்தால் அதனிடம் மறைக்கப்பட்டு, திருவைச்சேர்ந்த திருமால் மயங்கித் தூங்குகிறரென்ற. காரணத்தாற்றிருவினிடத்தி லாரோபிக்கப்பட்டிருக்கிறது. இதிற் காரணங் கூறப்பட்டதால் முந்திய வுதாரணத்தினும் பேதமெனவறிக. இவ்வணியு முந்திய பேதத்தைப்போ லேதுவுடன்கூடியும் ஏதுவில்லாமலும் வருமெனக்காண்க.

---

## ௧௪-வது மயக்கவொளிப்பணி.

(பிராந்தாபந்நுதியலங்காரம்.)

செய்யுள்.

உள்ள துணைத்தொரு வர்க்குறு சங்கை யொழித்திடுதல்
விள்ளு மயக்க வொழிப்பாம் பனிப்பொரு வெப்பினைநான்
கொள்ள வருமென வுஞ்சுர மோவெனக் கூறுஞ்சகீ
தள்ளதை வேளென் னிலககியந் தேரிள சைத்தலனே. ()

ஒருவனுக்கு நேர்ந்த சந்தேகத்தை உண்மையைக் கூறிவிலக்குவது மயக்கவொளிப்பணியாம். இதை வடநூலார் பிராந்தாபந்நுதியென்பர். இதற்குப் "பனிப்பொ" டென்பது முதலுதாரணம். இங்ஙனங் கம்பத்துடன் தாபத்தைச்செய்யுமென்று தனக்கு நேர்ந்த மன்மதவிகாரத்தைக் கூறும் நாயகியின் வசனத்தைக்கேட்டுச் சுரமுமச்செய்கைசெய்யுமாதலாற் சுரமோவென வையமுற்றபாங்கிகையம் நீங்கும்பொருட்டு அந்நாயகி சுரமல்ல, வேளிவ்வண்ணஞ் செய்கிறனென வுண்மைகூறியதென்க.

செய்யுள்.

ஓபட் டணக்காரா வோங்குதலுண் டாகியிரண்
டேபக் கமும்வா லிருககுமிது—தாபிப்பா

யென்னெருமை யென்றவவ னின்றும்பற் குட்டியிது
துன்னு துதிக்கைவா லன்று.

யானைக்குட்டியைக்கண் டிருபக்கத்திலும் வாலுள்ள
வுயர்ந்தவி னொரு எருமையென நிச்சயித்து மயக்கங்
கொண்ட வோரறிவில்லானுக் கம்மயக்கம் நீங்கும்பொ
ருட்டு, நாகரிக (பட்டணத்திலுள்ளா) னொருவனி னெரு
மையல்ல, யானைக்குட்டி, யிது வாலல்ல, துதிக்கை
யெனவுண்மைகூறி மயக்கத்தை விலக்கினான். முந்திய
வுதாரணத்தி லையமான மயக்கமென்றும், இவ்வுதார
ணத்தில் நிச்சயமான மயக்கமென்றும், கொள்க.

ஒருவனுக்கு மயக்கமுண்டாகாமலிருக்க மயக்கமுண்
டானதாகத் தீர்மானித்து அதை விலக்குவது மிவ்வணி
யேயாம். இதை வடநூலார் கற்பிதபிராந்தாபந்நுதியென்
பர் இதற்கு உதாரணம்,

செய்யுள்.

இதுசடையு மலபினிய குழல்பிட்டு
தனில்விடமு மிலைகத் தூரி
அதிகமண முறுதலையில் மதியுமல
மலரணிமெ யதினீ றன்று
பதிவிரக மதின்மருவு தவளநிற
மடமதன புழுமை யாகி
வதிபுரச மரனெனவு மயர்வணுகி
யெனையடிக்க வருகின் றுயே.

இங்ஙன மன்மதனுக்குப் பின்னற்குழல் முதலியவை
களிற் சடைமுதலியவைகளென்ற பிராந்தி யுண்டாகாம
லிருக்க, அவ்விதமுண்டானதாகக் கற்பித்து அட மதனே
இது சடையல்ல பின்னலாகச்செய்த கூந்தலெனக்கூறி
யோர் விரகமடந்தையதைவிலக்கினாள், இங்ஙனஞ் சடை

யல்ல பின்னலாகச்செய்த கூந்தலென் றுண்மையை யுரைத்தமையால் தண்டியாசிரிய ரிதனை யுண்மை நவிற்சி யுவமை (தத்வாக்கியானவுவமை) அணி யென்பர்.

---

## வல்லோரொளிப்பணி.

(சேகாபந்நுதியலங்காரம்.)

செய்யுள்.

மன்னு மொருவன்சந் தேகித்த தோர்ந்துண்மை யைமறைத்தல்
தன்னைவல் லோரொளிப் பென்பார் புலம்பியென் றாட்பற்றலுண்
டென்னவு நாயக னோவென் றவளுக் கெழிற் றலைவி
பொன்னின்சிலம்பென் னிலக்கியந்தேறொட்ட பூபதியே.()

தான் சொல்லியசொல் வேறொருவராற் கேட்கப் படின் தனது வசனத்திற்கு வேறுபொருளைக் கற்பித்து மெய்யைமறைத்தல் வல்லோரொளிப்பணியாம். இதை வடநூலார் சேகாபந்நுதி யென்பர். இதற்குப் "புலம்பி யென்று" என்பது முதலுதாரணம். இங்ஙனம் நாயகி தனது நேயமான பாங்கியிடத்திற் புலம்பிக்கொண்டென் காலைப்பற்றுதலுண்டென்று தனது நாயகனது செய்கை யைச்சொல்ல வசசொல்லைகேட்ட மற்றொரு பாங்கி நாயகனோவெனச் சங்கைகொண்டு கேட்டதற்கு அதை மறைக்கும்பொருட்டுச் சிலம்புக்கும் புலம்பிப் பாதங்களைப் பற்றுந்தொழிலிருத்தலாற் சிலம்பெனக்கூறி யுண்மையை மறைத்தாள் என்க.

செய்யுள்.

சித்தென் பயிற்றலிதழ்ச் செவ்வடுமெய் யிற்புளகம்
புத்திடவுஞ் செய்யுமென்ற போதுநக—ரேதநுகன்
இன்பமுறச் சேர்ந்தானோ வென்றசகி யன்றன்று
துன்பனிகா லத்துறுகாற் று.

இங்ஙனம் பாங்கியுடன் சித்காரத்தைப் பயிற்ற லதரத்தின் வடுவைத்தல் புளகமுண்டாக்கல் செய்யுமென்று தனது நாயகன் செய்கையைச் சொல்ல வச்சொல்லைக் கேட்ட மற்றொரு பெண் நாகரிகபுருஷன் கலவிசெய்ததாரோவென்று ஐயமுறவு மதை மறைக்கும் பொருட்டுப் பனிக்காற்றுக்குமச்செய்கை இருத்தலாற் பனிக்காற்றெனக்கூறி நாயகியுண்மையை மறைத்தாள் இவ்விரண்டுதாரணங்களிலும் சொல்லைமாற்றாமல் வேறு பொருளின் சேர்க்கையாலுண்மைப்பொருளின் மறைவு கூறப்பட்டதென்க.

வசனத்திறுதிச் சொல்லுருவினை மாற்றியு முண்மையை மறைப்பது வருமாறு.

செய்யுள்.

பொன்னுரு னது விழியை நினைப்
புற்றே யரிவை புன்குழலிற்
றொன்றார் திருக்கு மென துயமா
திரநின் கழிப்பில் விலையா னேன்
என்றுக் கனவிற் புலம்புவகேட்
டெழுந்து சினக்கும் ராதையினால
முன்னே யதட்டப் பட்டவடகம்
மூன்று முறைமால புரக்குகவே.

இங்ஙன மற்றப்பெண்களை நினைத்தமையால் மிகவுங் கோபங்கொண்ட இராதையினால் அதட்டப்பட்ட கண்ணன் பொன்றுள் நீலா மாதிரம் என்னு மிம்மூன்று பெயர்களுக்கு முன்னிலை யண்மைவிளியாகக்கூறிய சொற்களை இராதையி னிடமாகவே யமைத்துண்மையை மறைத்த துணர்க. இம்மூன் றுதாரணங்களினும் வேறு விஷயம் கூறிநினைத்த விஷயத்தை மறைத்தல் விளக்கப்பட்டது.

ஒரேவிஷயத்திலும் நிலைமையை மாற்றலா லுண்மைக் கருத்தைமறைத்தலு மிவ்வணியேயாம். அவை வருமாறு.

செய்யுள்.

தூர்த்தைபதி யுஞ்சகியாத் தோன்றினதால் சோரபதி
சேர்த்தசெய லோதும்போ தேபதியைப்— பார்த்துமுணர்ந்
தேசகியப் போதுவிழித் தேனென்முற் றுக்கினளிவ்
வாசகிமார் பால்வெறுப்பு வை.

இங்ஙனம் தன்னுடன் சயனித்துக்கொண்டிருக்கும் நாயகனைப் பாங்கியென நினைந்து அவனிடஞ் சோரநாயகனது வரலாற்றைக் கூறும்பொழுது பின்பு நாயகனென்றுதெரிந்து, சகியே இவ்விதமிருக்கும்பொழுதே விழித்துகொண்டேனென்று, சோரநாயகனது வரலாறாகிய வொரே விஷயம, சொப்பன நிலைமையால் மறைக்கப்பட்டது.

## கைதவவொளிப்பணி.

(கைதவாபந்நுதியலங்காரம.)

செய்யுள்.

கைதவ மேமுத லாகிய வாசகங் காட்டிமறை
வெய்த வுரைகளி லதுகை தவவொளிப் பின்றலைவி
மைதவழ் நோக்கமென் கைதவத் தால்மதன் வாளிவரும்
ஏதுற வென்ன வுதாரண மெட்ட நகர்ககரசே. (௨0)

கைதவமுதலிய சொற்களைக்கூறி யுவமேயதருமத்தை மறைத்தல் கைதவ வொளிப்பணியாம். இதை வடநூலார் கைதவாபந்நுதி யென்பர். இதற்கு "இன்றலைவி" யென்பது முதலுதாரணம். இங்ஙனம் பொயயென்பதை விளக்குங்கைதவமென்னும் சொல்லா னுயகியினோகத்திலதன் செய்கையைமறைத்து வாளியின் தன்மையை யாரோபித்திருக்கின்றது.

செய்யுள்.

நீரொன்றுசெ லோய்கானிடை நீள்நண்பகல் வெயிலால்
வாரொன்றியா சூடுண்டவண் வதிதாருகள் கிளையின்
சாரொன்றெரி சிகையென்றகை தவமேகொடு நாவைக்
காரொன்றிட நீள்செய்திர வுறுமேயிது காணாய்.

இங்ஙனம் கைதவபதத்தா லக்காட்டுத்தீயின் சிகையி லதின்றருமத்தை மறைத்து நாவின்றன்மை யாரோபிக்கப் பட்டது.

## கஉ-வது தற்குறிப்பணி.

(உத்பிரேக்ஷாலங்காரம்.)

செய்யுள்.

ஒன்றும் பொருளைமற் றோர்பொரு ளாகவு ளேதுபயன்
இன்றவை யேது பயனாக யூகித்த லேதற்குறிப்
பென்றும் புலத்தி னவைமுன் விரிதொகை யென்றுபின்னு
நின்றவையுண்மையின்மையென்றுமாறு நிகழ்த்துவரே. ()

செய்யுள்.

சக்கரப் பேட்டின் மயற்றீப் புகைக்குழு வாத்தமத்தைப்
புக்க நினைவுறு மற்பூசு கின்றது போலங்கத்தை
மிக்கவிண் மையைப்பெய் கின்றது போலுறு மேயுன்மென்கால்
இக்குவில் வைக்கு மதனுற் செவந்த திதுநிசமே.

செய்யுள்.

விதுநின் முகவொளிப் பெட்பால் மறையோடு மேயிகலு
மிதுநிசங் கொங்கையை யேந்தப்பொன் னுண்களி னுலிடைவீக்
குதலுற்ற தோநின் பதமோ டுரிமை கொளம்மைநீர்
பதிநோன்பதோவென்றுதாரணந்தேரொட்டபாண்டியனே.

ஒன்றிலிருக்குந் தருமத்திறேற்றுமைக் காரணத் தால் மற்றொன்றை யதுவாகயூகித்தல் தற்குறிப்பணியாம்.

இதை வடநூலா ருத்பிரேக்ஷாலங்கார மென்பர். அது பொருள்விஷயமெனவும், ஹேதுவிஷயமெனவும், பயன் விஷயமெனவு மூவகைப்படும். அவற்றுள் முதலாவது, ஒருபொருளை மற்றொருபொருளாக வூகித்தல் பொருட்டற்குறிப்பணி யென்றும், இரண்டாவதே தேதுவல்லதை ஹேதுவாகவூகித்த லேதுத்தற்குறிப்பணி யென்றும், மூன்றாவது பயனல்லதைப் பயனாக வூகித்தல் பயன்றற்குறிப்பணி யென்றும் பெயர்பெறும். இவற்றுள் முன்னதாகியபொருட்டற்குறிப்புப் புலத்தின் விரிவாலுந் தொகையாலு மிருவகைப்படும். மற்றிரண்டும் புலத்தி னுண்மையாலு மின்மையாலு மிருவகைப்படும். இவ்வா றறுவகைப்பட்டவைக்குச் "சக்கரப்பேட்டி" னென்ற பாட்டினும், "விது நின்முகவொளி" யென்ற பாட்டினும் நிரலே யுதாரணங்கள் காட்டப்பட்டன. அவைகளிற் "சக்கரப்பேட்டின் மயற்றீப் புகைக்குழுவாந் தமத்தைப்புக்க நினைவுறு" மென்னுமிடத்தில் கருமை, கண்களை மறைத்தல் முதலிய தொக்கியிருக்குந் தருமத்தினொற்றுமைக காரணத்தால் எல்லாத்திசைகளிலும் புதிதாகச் சேவலை விட்டுப் பிரிந்த சககரவாகப்பேடுக ளெல்லாவற்றி னிருதயத்தில் விருத்தியடைகிற மயற்றீயினது புகைககம்மலாக மாலையி லெங்கும் பரவியிருக்கு மிருளை யூகித்திருப்பமையா லிது விரிபுலப்பொருட்டற் குறிப்பு, இதில் தமமென்னும் புலம் விரிந்திருக்கின்றது. "அழ்பூசுகின்றதுபோ லங்கத்தைமிகக விண்மையைப் பெய்கின்றதுபோலுறுமே" யென்னுமிடத்தி லற்செருக்கை ஆகாயமுதற் பூமிவரையி லெல்லாப் பொருள்களையு மிகக்கருமையாகச செய்வ தென்னுங் காரணத்தா லிருள் செய்கிற பூசுதலாக யூகித்தலும் விண்செய்கிற மைப்பெய்தலாக வூகித்தலு மிருந்தலாலிவை தொகைப்புலப்பொருட்டற்குறிபபு. இதி லிருளின் செருககைக் கூறுமையாற் செருக்கென்னும் விஷயந் தொக்கியிருக்கின்றது. இங்ஙனம் வியாபிக்க

லெனுந் தருமவொற்றுமையாகிற காரணத்தா லிருளைப் பூசுகின்றதென்ற வினையின்பேரில் வந்த விகுதியின்பொருளாகிய கர்த்தாவாகவும், பூமிவரையில் நெருங்கியகறுப்பின் வியாபித்தலென்னுங் காரணத்தா லாகாயத்தைப் பெய்கின்றதென்ற வினையின்பேரில் விளங்கிய விகுதியின் பொருளாகிய கர்த்தாவாகவு முத்பிரேக்ஷித்து இவ்விரண்டிடங்களிலும், அல் - என்றும், விண் - என்றும் விஷயம் விரிந்திருப்பமையா லிதுவும் விரிபொருட்டற்குறிபபே யாயிருக்கத் தொகைப்புலப்பொருட்டற் குறிப்பெனும் பிரிவேதெனிற் கூறுவாம். பூசுகின்றது பெய்கின்றது என்ற விரண்டு வினைகளின்பேரிற்றோன்றிய விகுதிகளாற் கர்த்தா சொல்லப்பட்டிருந்தாலும், அக்கர்த்தா வினைக்குளடங்கியவன்றி அவை முக்கியமாகாவாம். வினையின் முதனிலையாகிய செய்கையே முக்கியமாதலா லதற்குளடங்கிய விகுதியின்பொருளான கர்த்தா உத்பிரேக்ஷித்தலாஞ்செய்கையால் மற்றொரு பொருளோடு ஸம்பந்தப் படமாட்டாதென்றும், இருளின் வியாபித்தல் விஷயமேயல்ல இருள் விஷயமல்லவென்றும், ஆராய்ந்து தொகைப் புலப்பொருட்டற்குறிப் பென்றதெனவறிக. இவ்வாறே தண்டியாசிரியருஞ் செய்கைக்குளடங்கிய விகுதிப்பொருளாகிய கர்த்தாவை உவமையணியி லுவமானப்பொருளாகக்கொள்ளக்கூடாதென்றார். அன்றியும் சிலர் அல் விண் என்ற இவ்விரண்டினையும் தர்மிகளென்றும், பூசுதலும் பெய்தலும் அவற்றின் பொருள்களான தர்மங்களென்றும், வருமிவற்றைத் தருமதற்குறிப்பென்று முரைக்கின்றனர். அவர்கள் மதத்திற் பொருட்டற்குறிப்பில் தருமித்தற் குறிப்பென்றுந் தருமத்தற் குறிப்பென்று மிரண்டுவித முண்டெனக் கொள்க. "உன்மென்காலிக்குவில்வைக்கு மதனுற் செவந்தநிது நிசமே" என்னுமிடத்தில் மெல்லிய தாளிலிருக்கு மியல்பான செவப்புககியல்பிற் பூமியில் வைத்தல் காரணமல்லாதிருந்து மதைக் காரணமாக வூகித்

திருப்பமையாலும் பூமியில்வைத்த லுண்மையாகையாலு முண்மைப்புலவேதுக்தற்குறிப்பு. "விது நின்முகவொளிப் பெட்பால்மனாயொடுமேயிகலு மிதுநிசம்" என்னுமிடத் திற் சந்திரனுக்குந் தாமரைக்குமுள்ள வியல்பான விரோ தத்தில் நாயகியின் முகவொளிபெறுதல் காரணமல்லா திருந்து மதைககாரணமாகச் சொல்வதாலுஞ் சுபாவத் தின் நாயகியின் முகவொளி வேண்டுதலென்னும் புலமின் மையாலு மின்மைப்புலவேதுத்தற்குறிப்பு. "கொங்கை யையேந்தப் பொன்ஞண்களின்ஞ் லிடைவீக்குதலுற்றதோ" வென்னுமிடத்தி லிடையியல்பாகவே கொங்கைகளை யேந் துகிறதேயல்லது பொன்ஞண்களாக வாரோபிக்கப்பட்ட வுதரமடிப்புகளின் வன்மையினலல்லவென்றும், இடை யில் விளங்குகிற பொன்ஞண்கட்டுக்குக் கொங்கையை யேந்துவது பயனல்லாதிருக்க வதை யதின்பயனுகக கூறு வதாலும், கொங்கையையேந்துதலென்னும் பயனுகிய புல னுண்மையாகையாலு முண்மைப்புலப் பயன்றற்குறிப்பு. "நின்பதமொ டுரிமைகொள மனாநீர்பதிநோன்பதோ," வென்னுமிடத்தில் தாமரையினது இயல்பான நீரில்வசித்த லென்னுந் தொழிலுக்கு நாயகியின் பாதத்தோடு உரிமை கொள்ளுதல் பயனல்லாதிருந்து மதையதற்குப் பயனுகக் கூறியதாலு மியல்பின் நாயகியின் பாதத்தோ டொற்றுமை கொள்வதென்னும் பயனுகிய புலமின்மையாலுமின்மைப் புலப்பயன்றற்குறிப்பு. இவ்வணிகளுக்கு நிரலே வேறு தாரணங்கள் வருமாறு.

செய்யுள்.

மலரா திரண்டாம் பிறைபோல
வளைந்து மிகவே செவந் திருக்கும்
பலவாம் புரசம் போதுகளப்
போதே வசந்த பருவ மெனு

நலமாங் கொழுந னொடுபுணர்ச்சி
நடத்தி யிருக்கும் பழுவ மெனுங்
குலநா யகிபா லியைந்த நகக்
குறிகள் போலும் விளங்கிடு மால.

வளைவு செவப்பாகிய விரண்டு தர்மங்களினொற்றுமைக் காரணத்தாற் புரசம்போதுகளை யக்காலையிற் செய்த நகக்குறிகளாக வூகிப்பதாலும், புரசம்போதென்னும் புலம்விரிந்திருப்பமையாலும், விரிபுலப்பொருட்டற்குறிப்பணி. முந்திய வுதாரணத்திற் காரணமாகிய தர்மவொற்றுமை தொக்கிருந்ததென்றும், இங்ஙனம் வளைவு செவப்பாகிய தர்மவொற்றுமைக் காரணம் விரிந்திருக்கிறதென்றும் பேதங்காண்க. போலென்ப துவமையுருபெனப் பிரசித்தமாதலால் "அம்பூசுகின்றதுபோ லங்கத்தை மிக்க விண் மையைப்பெய்கின்றது போலுமுமே" யென்னுமிடத்திற் பூசுகின்றது பெய்கின்றது என்ற வினையினிடத்து விளங்கிய விகுதியாற் சொல்லப்படுங் கர்த்தா தொழிலுக்குளடங்கி முக்கியமாகாமையா லுவமானமாக வாராதிருக்கினும், இவ்வுதாரணத்தில் நகக்குறிகள்போலுமென்னுமிடத்திலிருக்கும் போலென்றதை யுவமையுருபாகவைத்துப் புரசமலர்கள் நகக்குறிகள்போல விளங்குகின்றனவென் றுவமையணியாகவே சொல்வோமெனில், உத்தரங்கூறுவாம். உவமையி லெவ்விடத்திலேனுமிருக்கும் நகக்குறிகளோடொப்புமை சொல்லக்கூடு மாகையா லிங்ஙனம் வசந்தபருவமென்னும் நல்ல கொழுநனோடு புணர்ச்சி நடத்தியிருக்கும் பழுவமென்னுங் குலநாயகியினது என்றவிசேஷணம் வேண்டுவதின்றாம். அவ்விதச சிறப்பு, புரசம்போதுகளை நகக்குறிகளாக வூகிக்குந்தாற்பரியத்தைக் கொடுக்கச் செய்வித்ததென்க. அவ்விதங் கருதாவிடி லவ்விசேஷணம் பயனின்றாமே! தூரத்தில் வருகின்றவனை யிவன் தேவதத்தன்போல விளங்குகின்றா

னென்னுமிடத்தில் போலென்னும் சொல் உத்பிரேக்ஷையிலும் வருவதாலீண்டும் அவ்வாறேவந்ததெனக் காண்க.

செய்யுள்.

வாரி வெண்டிரை முகங்களால் வருநுரை யென்னும்
வாரி யைந்தசந் துரைத்திடு வளமையே போலும்
வாரி யங்கதைத் திசைகளா மாதரைக் கரத்தால்
வாரி சத்தினை வாட்டுவோன் வனைவதே மானும்.

இங்ஙனந் திரைமுகங்களா னுரையி னெழுதுக்குதலைச் சந்தன முரைத்தலாகவும் சமுத்திரத்தினின்றெழுந்த சந்திரனது கரங்கள் முன்னம்பரவையிற் பரவிப் பின்பு திக்குகளில் வியாபிப்பதை அதனாற் செய்யப்படும் பூசுதலாக வுமுத்பிரேக்ஷித்திருக்கின்றது. இங்ஙனம், கடற்கண் சந்தனம்போல் வெண்மையாக நுரை திரள்வதும், அதிற்பொருந்தின சந்திரகிரணங்களின் சம்பந்தத்தால் திசைகள் வெண்மையாதலும், தருமவொற்றுமைக் காரணங்களாம். நுரையி னெழுதுக்குதலுங் கிரணங்களின் வியாபித்தலுமாகிய இரண்டு புலன்களுந் தொக்கி ருப்பமையாற் றொகைப்புலப் பொருட்டற்குறிப்பணி. இங்ஙனம் வசனத்திற் சொல்லப்பட்ட சமுத்திரஞ் சந்திரனென்னும் பொருள்களுக்கே அவைகளாற் செய்யப் படுமுரைத்தல் பூசுதலென்ற தருமங்களி னுத்பிரேக்ஷையென்று சொல்லுகின்ற அலங்காரஸர்வஸ்வகாராதிகளின் மதத்தில் முந்திய வுதாரணத்திலோர் தர்மியில் மற்றொரு தர்மியினபேத முத்பிரேக்ஷித்ததென்று மிங்ஙனம் தருமியிற் றருமசம்பந்தத்தை யுத்பிரேக்ஷித்ததென்றும் பேதமுணர்க.

செய்யுள்.

அந்த வேற்கரத் ததிபதி யனலியு மிரவில்
இந்து வானதும் பகலினி லின்மையாற் போலும்

எந்த வேலையு முதித்திடு மெழிற்பிர தாபமு
சந்த மாம்புக ழிரண்டையுந் தனித்தனி படைத்தான்.

இங்ஙனம், அரசன் பிரதாபத்தையும் புகழையு முற்பத்தி செய்ததற் கிரவிசிரவி யில்லாமையும் பகலிற் சந்திரனில்லாமையுங் காரணமுன்றி யிருந்தும் அதற்கு, அதை யேதுவாக வூகித்தலானு மிராப்பகல்களிற் பானுமதிகளினில்லாமை யென்னும் விடயமுண்மையிருத்தலானும் இது உண்மைப் புலனேதுத்தற்குறிப்பணி.

செய்யுள்.

ஆதவன்ற னுயிரங்கோ வானவையோ டுங்கூடப்
பூதலத்தோரா னோக்கனுமப் போதேகொண்—டேதினாயிற்
சென்றுபுக்கான் போனுமத னூற்றெரிய வில்லையிஃ
தன்றியிலே யேதிமிரத் தால்.

இங்ஙனமிரவிற் கண்டெரியாமைக்குச சூரியன் பூதலத்தோரது விழிகளை யபகரித்தல் காரணமல்லாதிருந்து மதையதற்குக் காரணமாகக கூறுவதானுஞ் சூரியன் கண்களை யபகரிப்பதென்னும் புலனியல்பிலின்மையானு மின்மைப்புலவேதுத்தற்குறிப்பணி.

செய்யுள்.

பெரியமதி தனைப்பெறுதாய்ப் பெருக்குமதி கரித்திடத்தன்
னுரியகதிர் மணிக்காந்தச சிலையினினு முயர்சேவல்
பிரிவுறுசக் கிரவாகப் பெடைநயனத் தினுநிரம்ப
விரிபுனலை விளைக்கின்ற மௌனச்சங்கை மிகுந்ததுவே.

இங்ஙனஞ், சந்திரகாந்த மணிகளினுஞ் சக்கிரவாகப் பேடுகளின் விழிகளினுந் தண்ணீரைப் பெருகசசெய்வதற்கு மதியினாற் செய்யப்படும் வாரிதியின் பெருக்குப் பயனல்லாதிருந்துமதை யதற்குப்பயனாகக் கூறியதாலும் அப்பயனாகிய புலமுண்மையாலு மிது உண்மைப்புலப்பயன் றற்குறிப்பணி.

செய்யுள்.

இரவி தன்றிருத் தேரிலி டும்பழம்
புரவி மாற்றிப் தெற்குப் போனுயர்
பரிக ளூற்பவம் பண்ணும் வடதிசைக்
கருமை யாம்பிர யாணஞ் செய்தானரோ

இங்ஙனம், உத்தராயணத்தில் சூரியனுடைய வட திசைபபிரயாணமென்னுந் தொழிலுக் கிரதத்திற் கட்டியிருக்கும் பழம் பரிகளை மாற்றுவது பயனல்லாதிருந்து மதையதற்குப் பயனாகக் கூறுதலாலும் 'பழம் பரிகளை மாற்றுதலென்னும புலமின்மையாலுமிது இன்மைப் புலத் தற்குறிப்பணி. தற்குறிப்பணியில் "நினைக்கின்றேன் போற்றுணிவு நிச்சயமுண்மைச்சொ லனைத்தவை யெல்லாமுருபேயாம்." என்பதனு னினைக்கின்றேன் முதலிய சொற்களுருபாவருமெனக் கொள்க. இவைகளின்றியும் வந்த "உன் கீர்த்தி முவுலகுமுற்றுயர் வுற்றும்பர்நதி மன்பிரவேசங்கொண்டும் புமா" என்னுமிடத்திலுருபுந் தொகைத் தற்குறிப்பெனக்கொள்க.

---

## கரு-வது உயர்வு நவிற்சியணி.

(அதிசயோக்தியலங்காரம்.)

---

## உருவகவுயர்வு நவிற்சியணி.

(ரூபகாதிசயோக்தியலங்காரம்.)

செய்யுள்.

வயமுவ மேய மதைமொழி யாதுவ மானமதை
நயமுறச சொல்லி யதைக்காட் டிடிலன் னதுருவக
வுயர்வு நவிற்சி யிருகு வளையினின் றெண்கணையு
தயமுறு மென்ன விலக்கியந் தேரினை சைத்துனையே.

முகம் முதலிய உவமேயப்பொருள்களைத் தத்தம்பதத் தால கூறாது சந்திரன் முதலிய வுவமானப் பொருள் களைச் சொல்லுகின்ற பதங்களைக்கூறி யவைகளாற்கொள் ளுத லுருவகவுயர்வு நவிற்சியணி. இதை வடநூலார் ரூபகாதிசயோக்தி யலங்காரமென்பர். இதற்கு "இரு குவளை யென்பது" முதலுதாரணம். இங்ஙனம், குவளை மலரெனும் சொல்லால் கண்ணும், கணைகளெனும் சொல் லால் பார்வைகளும் கொள்ளப்படுதலால் கண்குவளையும் பார்வை சரமுமாக நினைக்கப்பட்டன.

செய்யுள்.

அந்தரத்தோர் வாவிவிளங் கிடும்தின்மேற்
பொற்படிபா லமைவ தாய
விந்திரநீ லத்தியற்றோ ரடிப்பாதை
யிருக்குமதற் கெதிரே புண்யர்
வந்தடைவர் சந்தின்மறை விடமுளவாய்
விளங்குமிரு மலையுண் டாங்கே
பந்தமுற்றோர்க் கமுதகரன் சனிதானத்
தேயமிர்தம் பலிக்குந் தானே.

இங்ஙனம், அந்தர முதலான வுவமானப்பொருள் களா லிடை முதலிய வுவமேயப்பொருள்கள் கொள்ளப் படுகின்றன. இவ்வணியி லுருவகமென்ற விசேஷணங் கொடுத்திருப்பமையா லுருவகவணியிலிருக்குஞ் சிறப்புக ளெல்லாமிதினும் வருமெனக் காண்க. அதனால் ஒற்றுமை யுருவகவுயர்வு நவிற்சியணி என்றும், அதன்செய்கை யுருவகவுயர்வு நவிற்சியணி யென்று மிரண்டு விதமாம். அதிலு மிகை குறை இரண்டின்மை யென்ற பிரிவுகளுமாங் காங்காராய்ந்து கொள்க. அவற்று ளிரண்டின்மை யொற் றுமை யுருவகவுயர்வு நவிற்சியே யிவ்விரண்டுதாரணங் களிலு முண்மையுணர்க.

செய்யுள்.

புண்ணியதெள் ளமுதுணவைப் புசிக்கவுத்தி யானமதி
னண்ணுசகோ ரமுநணுக நலவெணில விரிப்பதுமா
யண்ணலிலா முயலதுமா யமரிவிதுக் ககனமிலாக்
கண்ணெதுமே யிடம்விழியே விச்சிறிது கருதுகவே. ()

இங்ஙனம, முயலன்றியிருக்குமிம்மதி யெது என்னமையால் பிரசித்தமான மதியினும் வேறென்பது. முயலென்னுங் களங்க வொழிவான் மேன்மையுங் கிடைத்தமையால மிகையதன் செய்கை யுருவகவுயர்வு நவிற்சியணி யெனக்கொள்க. இதனை வடநூலார் அதிக தாத்ருப்ய ரூபகாதிசயோக்தி யென்பர். இவ்வாறு மற்றைய பேதங்களும் கண்டுணர்க.

---

## ஒழிப்புயர்வுநவிற்சியணி.

(ஸாபன்னவாதிசயோக்தியலங்காரம்.)

செய்யுள்.

நுவற்சி பெறுமுன் னயதொழிப போடு நுவலவரி
லுவப்புறு செந்தமி ழோரிடு நாம மொழிப்புயர்வு
நவிற்சிமன் னுவி லமுதா மருளர் மதிக்கணதைய
பவிக்குமென் பாரொன் றிலக்கிய மெட்டம பாண்டியனே. ()

முன் காட்டியவணியே யொழிப்புடன் வருமாகிலது ஒழிப்புயர்வு நவிற்சியணி. இதை வடநூலார் ஸாபன்னவாதிசயோக்தி என்பர். இதற்கு "நின்சொல்லிலென்பது" முதலுதாரணம். இங்ஙனம் அரசனது சொல்லிலிருக்கு மினிமையே அமிர்தமெனப் புகழ்ச்சி செய்து அது மதியிடத்திலில்லையென வொழித்திருப்பமையா லொழிப்பணியையுமுள்ளாக்கிக் கொண்டதெனக் கொள்க.

செய்யுள்.

மதுதரளம் பவளமவை கருகருநடு
விருக்குமலர் மதுவு மென்று
முதுவசனத் தினைவாளாச் சுமந்திடுமவ்
விரண்டுகரு முழுவாள் வட்ட
மதியிடங்கொண் டனவலையா விலையதுவும்
வளைமுடியில் வாய்ந்து தோன்று
முதயகிரி யருகிலிலை யிவைக்கவளை
யறிந்திலர்வே றுரைப்பர் மாதோ.

இங்ஙனம், முத்துமுதலிய வுவமானப்பொருள்களாற் பல முதலிய வுவமேயப்பொருள்களைக் கொண்டமையாலு மதரத்துளிருக்கு மினிமையை யமுதெனவே கூறி மல ரிடத்திலில்லையென் றொழித்தமையாலு மிதுவு மவ்வணி யேயாம. அலங்கார ஸர்வஸ்வகாரர் பொருட்டற்குறிப் பணியு மொழிப்பணியுடன் வருமெனக் கூறினர் அது வருமாறு.

செய்யுள்.

இப்பிரா னனையீர் புனலிடை விளையாட்
டியற்றுகால் திமிங்கிலத் தினுக்குத்
தப்பிரீக் குழலனான் றல்குலை மறைகத்
தனையகல் மாதரை நோக்கி
அப்பிரா னின்று தூங்கிசெய் நுரையி
னவையெனுங் கைதவத் தாலே
சிப்பிரா நதிதா னகைபுரிந் திடல்போற்
றிகழ்ந்திடு கின்றதைப் பாரப்பீர.

இங்ஙனம், நுரைக கூட்டமென்னுங் கைதவத்தா லென்பதால் நுரைக்கூட்டத்தை யொழித்தன்னதைச் சிப் பிராந்தியி னகைத்தலாக வுத்பிரேக்ஷித்திருப்பமையால் கைதவ வொழிப்பணி யுடன் கூடிய விரிபுலப்பொருட்

டற்குறிப்பணி என்க. முன்காட்டிய வொழிப்பணியுடன் கூடிய வுருவகவுயர்வு நவிற்சியணியி னுதாரணங்களுக்கு மிவ்வுதாரணத்திற்கும் பிரிவுபாதே லவற்றின் முதலா வதுதாரணத்திலரசன் வாக்கிலிருக்கு மினிமையேயமுது. மதியினிடத்திருப்ப தமுதல்ல வென்றமையாலு மிரண் டாவதுதாரணத்தி லதரத்துளிருக்கு மினிமையே தேன் மலரிலிருப்பது தேனல்ல வென்றமையாலும் வேறுபாட டொழிப்பணியுடன் கூடியிருக்கின்றனவேயாம். இவ்வுதா ரணத்திற் கைதவ வொழிப்பணி, உடன் கூடியிருக்கின்ற தெனக்கொள்க. தற்குறிப்பணியும் வேறுபாட்டொளிப் பணியுடன் கூடிவரும், அது வருமாறு.

செய்யுள்.

அதிகச் செவப்பா விதுதானே
 விம்பமாக நினைக் கின்றேன்
இதனுக கோட்டம் விம்பமென்ப
 தினிதா விளங்கிற் றிவ்விரண்டி
னதுவி சேடந் தனையிதயத்
 தறியா திருக்கு மானிடர்க்கவ்
விதமா னவையின் பேரிடத்து
 மிகவு மயக்க முண்டதுவே.

இங்ஙனம், இதுதானே கொவ்வைக்கனி யென்னு மிடத்தி லிருக்குந் தேற்றேகாரத்தாற் கொவ்வைக்கனியின் றன்மையை யதில்மறைத்தன்னதைச் செவப்பாகிய தரும வொற்றுமை யென்னுங் காரணத்தாலிதழி லுத்பிரேக்ஷித் திருக்கின்றமையா லிது வேறுபாட்டொழிப் பணியுடன் கூடிய விரிபுலப்பொருட்டற்குறிப்பணியாம். வேறு பாட்டொழிப்பணியுடன் கூடிய வேதுதற்குறிப்பணிக்கு முன்காட்டிய அவ்வணியிலுதாகரித்த (ஆதவன்றன்னையிரு ங்கோ) என்னுங் கவியே உதாரணமாம், அங்ஙனந் திமி ரத்திற் கண்டெரியாமைக்குக் காரணமாந் தன்மையை

மறைத்து அதை யிரவியாற் சனங்களினயனங்களபகரிக்கப் பட்டமையிலும்பிரேக்ஷித்திருக்கின்றது. பான் றற்குறிப் பணியும் வேறுபாட்டொளிபபணியுடன் கூடி வருமாறு.

செய்யுள்.

பானுவின்வெம் புகையமப் பாலுவினை யப்பதுமம்
ஆனவையை வாட்டிடத்த டாகமதிற்—போனதன்றி
தோய்ந்திடுதற் கன்றுநிசந் துன்றுமத மாத்தோயில்
வாய்ந்தபய னில்லையல்ல வா.

இங்ஙனம், யானை தடாகத்திற் பிரவேசித்தலுக்குப பயனுந் தன்மையைத் தோய்தலி லொழித்துப் பதும வாட்டுதலி லாரோபித்திருக்கின்றது. இவ்விதமொன்றைப் பற்றி யொன்று கூறிய பெருநாமதலாலிங்ஙனம பிறுத்தினும்.

---

## பிரிநிலையுயர்வு நவிற்சியணி.

(பேதகாதிசயோக்தியலங்காரம்.)

செய்யுள்.

இதுவே றெனவும் பிரித்து வருணித் திடலபலர்க்குப
பொதுவா கியதரு மங்களை யாகிற் புகலும்பெயர்
அதுபிரிநிலை யுயர்வு நவிற்சியெட் டாவவன்றன்
இதயகம் பிரம் பலமிவ்வே றென்ப திலகதியமே. (உச)

பலரிடத்திருக்குங் கம்பீர முதலிய தருமங்களினும் வர்ணிககப் படுகிறவனிடத்துள்ள அவற்றின் மேன்மை தோன்றுவதற்காக விது வேறென்று பிரித்துச்சொல்வது பிரிநிலையுயர்வு நவிற்சியணி. இதை வடநூலார் பேதகாதிசயோக்தியென்பர். இதற்"கொட்டாவவன்றனிதயகம்பீர"

மென்பது முதலுதாரணம். இங்ஙன மற்ற வரசர்களிடத்தி லிருக்குங் கம்பீரம் பலம் இவைகளைப் பார்க்கினும் வர்ணிக்கப்படு மரசனிடத்திலிருக்கின்ற கம்பீரத்திற்கும் பலத்திற்கு மேன்மை தோன்றும்பொருட்டிவ்வேறென் றுரைக்கலாயிற்று.

செய்யுள்.

இச்சுந் தரச்செல்வ மேவேறுரு சாதுரிய
மெச்சுந் தரதோ ரணிவேறு—மச்சலசப்
போதாம நொந்தவிழிப் பூவைபடைப் பெண்கணற்குச்
சாதா ரணமலவே தான்.

இங்ஙனம், மற்றப் பெண்களிடத்திலிருக்குஞ் சுந்தரஞ் சாதுரிய மிவைகளினு மிப்பொழுது வர்ணிக்கப்படும் பெண்ணிடத்திலிருக்கின்ற சுந்தரஞ் சாதுரியங்களுக்கு மேன்மை கூறும்பொருட்டு வேறென்று கூறலாயிற்று.

இங்ஙன "மெண்கணற்குச் சாதாரணமலவே" யென்றமையான் மற்றப் பெண்களின் படைப்பினு மிப்பெண்ணின் படைப்பு மேலெனப்பெற்றதென்க.

---

## தொடர்புயர்வு நவிற்சியணி.

(சம்பந்தாதிசயோக்தியலங்காரம்.)

இயைபின் றியதை யியைபு படுத்தி யிசைத்தறொடர்
புயர்வு நவிற்சியிம் மாநகர் மாடத் துறுசிரமொள்,
ளியவிது மண்டலத் தைத்தொடு மென்ப திலக்கியஞ்சீர்
பயிலெட் டயபுரம் வாழுங் குமாரெட்ட பாண்டியனே. ()

சம்பந்தமில்லாதிருக்கும் பொருளைச் சம்பந்தப்படுத்திக்கூறுவது தொடர்புயர்வு நவிற்சியணி. இதை வட

னலார் சம்பந்தாதிசயோக்தி யென்பர். இதற்கு "இம்மாநகர்மாடத்துறுசிர" மென்பது முதலுதாரணம். இங்ஙன மாடத்தின் சிரங்கள் விதுமண்டலத்திற் சம்பந்தப்படா திருந்தும் மிகவுயரமுள்ளவையென்னும் புகழ்ச்சி தோன்றும்பொருட்டு அவை யதிற் சம்பந்தப்பட்டிருப்பன வாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றமை யுணர்க. "மாடத்தின் சிரமிந்து மண்டலத்தைத் தொடுவது போலு" மென்று போலென்னுஞ்சொற் கூறப்பட்டிருக்கி னுத்பிரேக்ஷை யாக விளங்குதலாற் போல் முதலிய சொற்களில்லாதிருக்குமிடத்திற் கம்யோத்ப்ரேக்ஷை யாகுமாதலாலிவ்வுதாரணத்திலச் சொலில்லாமையாற் கம்யோத்ப்ரேக்ஷையாகக் கூறலாமே அவ்வாறு கூறுமிடில், "உய்கிரந்தி மூவுலகு முற்றுமயர்வுற்று மன் பிரவேசங்கொளும் பூமா." என்னு மிடத்தில் மட்டிற் கம்யோத்ப்ரேக்ஷையாவதேனெனில் இவ்வித நியதி மற்ற வணிகட்கு விஷயமல்லாதிருக்கில் வருமெனக்கொள்க. அவ்வாறு கொள்ளாக்கால் "முகம் மதி யிது நிஜ" மென்னுமிடத்திலு மிது நிஜமென்னுஞ் சொல்லில்லாவிடில் கம்யோத்ப்ரேக்ஷையாகிவிடு மன்றோ? ஆதலால் மாடத்தின் சிர மிந்துமண்டலத்தைத் தொடுமென்னுமிடத்திற் சம்பந்தமில்லாதிருப்பதைச் சம பந்தப் படுத்திக்கூறுவது சிறப்பிருத்தலாற் கம்யோத்ப்ரேக்ஷையாகாதென்க. உய் கிரந்தியென்னுங் கவியில், அயர்வுறுதலென்னு மேதுவிலுத்ப்ரேக்ஷை தொகையா யிருக்கின்றதே யன்றி வாதியுறுதலென்பதிலின்றெனக் கொள்க.

செய்யுள்.

பிரதாப ருத்ரகெம் பீரனதி யிசைக
தரலாற் பகல்முற்று தற்காங்—கரணைக
கக்குவடு சின்னுளிற் காணுமற் போமெனவே
சக்காப்பே டேகளிக்குந் தான்.

இங்ஙனம் சக்கரபேடுக்குச் சூரியனுடைய அஸ்தமன காரணமாகிய மகாமேரு காணுமற் போவதா லுண்டாகிய வெப்பின் சம்பந்த மில்லாதிருந்து மதைச் சம்பந்தப்படுத்திக் கூறியிருக்கின்றது.

---

## தொடர்பிலுயர்வு நவிற்சியணி.

(அசம்பந்தாதிசயோக்தியலங்காரம்.)

செய்யுள்.

ஆடரும் பணையுள் பணைத்தபணை பிணைநிமைமது
தொடர்பி லுயர்வு நவிற்சி வளவெனத் தோன்றலினி
படைத் தருக்களை யாம்விரும். போமதி பாவெனவோ
திடமரு கின்ற திலக்கிய மெட்ட நகேந்திரனே. (௨௯)

சம்பந்த மிருக்கும்பொருளுக்குச் சம்பந்தமின்மை கூறுவது தொடர்பிலுயர்வுநவிற்சியணி. இதை வடநூலார் அசம்பந்தாதிசயோக்தியலங்கார மென்பர். "வளவெனத்தோன்ற" லென்பது முதாரணம். இங்ஙனமைந்தருக்களை விரும்புதலின் சம்பந்தமின்மை கூறியிருக்கின்றது.

செய்யுள்.

கூர்விருத்தியுங் கொண்டுளோ
யாதவாககமலைக்குநின்
மார்பிடத்திடமவாய்ந்திடா
தோவிரகுருபபோந்துளாய்.

இங்ஙனம் விருத்தியடைகின்ற கொங்கைகளுக்கு மார்பினிடங் கொள்ளுதலின் சம்பந்த மிருந்துமதைச் சம்பந்தப்படுத்தாமல் வாய்ந்திடாதென்றே கூறியதுணர்க.

---

# முறையினுயர்வு நவிற்சியணி.

(அக்ரமாதிசயோக்தியலங்காரம்.)

செய்யுள்.

உறைகா ரணமொடு காரிய மோர்பொழு தேயுறுதல்
முறையி னுயர்வு நவிற்சி நிவம்பு முனைவா குழாம்
இறைவ வொரோசம யத்துமண் ணுறியினையுற்றவென்
றறைவ திலக்கியங் காண்பாய் குமாரொட்ட ஞமண்ணலே.

காரணமுங் காரியமு மொரோ காலத்துண்டாகின்றதாக வருணித்தல் முறையினுயர்வு நவிற்சியணி. இதை வடநூலார் அக்ரமாதிசயோக்தி யென்பர். நிவம்பு என்பது முதலுதாரணம். இங்ஙனம் அம்பு மண்ணுறியைச் சம்பந்தப்பட்ட போதே பகைவர் மண்ணுறியைச் சேர்ந்ததாக வேறுதுகாரியங்களொன்று யுண்டாதல் கூறப்பட்டது.

செய்யுள்.

நலமீர மன்னவன்றன் வாட்பொ னுறை
விடுபொழுதே நண்ண லாரும்
பலவாம்பொன் னுறைவிடுத்தா ரதுகம்ப
முறுபொழுதே பரவன் னேரும்
வலமாறிக் கம்பமுற்று ரதுபொறையை
விடுபொழுதே வணங்க லாரு
நிலமாகும் பொறைவிடுத்தா ரந்திகழும்
வந்திகளா நீர்மை யோரே.

இங்ஙனம் ஹம்மீரமன்னவனது வாள் பொன்னுறையை விடுதல் முதலிய காரணமுஞ் சத்துருக்கள் பொன்னுறையை விடுதல் முதலிய காரியமு மொரோ வேளையி லுண்டாயிருக்கின்றன.

தின்புசெயவண் டினம்விரும்பு மிருகோட் டும்ப
விடுமுமதப் பெருக்கின்மண மெழுந்து வீசும்
பின்பினிய பாற்கடலி னமுத னாவும்
பெருந்திரைபோல் விளங்குபிர தாப ருத்திர
னன்புநிறைந் திடுபார்வை யவர்கள் மீதி
லகலாது வீழ்ந்திடுங்கொண் டாடத் தானே.

இங்ஙனம் பிரதாப ருத்திரனது பார்வையினாலுண்டாகும், கவிஞரின் முன்றிலிடத்து யானைகளினிருத்தலென்னுங் காரியமுண்டாகி யதன் காரணமாகிய வவ்வரசனது பார்வை பின்னுண்டாயிற்று. இம்மூன்றுயர்வு நவிற்சியணிகளுங் காரிய விரைவைக்காட்டுகின்றன.

---

## கசு-வது ஒப்புமைக்கூட்டவணி.

(துல்யயோகிதாலங்காரம்.)

இனமாம் புனைவுளிக் கேனும் புனைவிலிக் கேனுமுறு
வனவாந் தருமத்தி னொற்றுமை யேய்வொப் புமைக்குழுவே
உனுமா மதியின் மனைதூர்த் தையர்முக முட்குவவாம்
எனலே வருணியந் தொப்புமைக கூட்டத் திலக்கியமே ()

வல்லிநின் மெய்மென்மை நோக்கு மளவி லெவர்மனதில்
மல்லிகை யிந்து கலேவான்மூ வன்மை யெனமதிப்ப
தில்லை யெனல வருணியத் தொப்புமைக் கூட்டத்திற்கே
புல்லு மிலக்கியஞ் செங்கோல்கொ ளெட்ட புரிமன்னனே.

பலவர்ணியப்பொருள்களுக்கேனும் பலவவர்ணியப் பொருள்களுக்கேனு மொப்பான தருமத்தினால் முடிவு கூறுவது ஒப்புமைக்குழுவணி. இதை வடநூலார் துல்யயோகிதாலங்கார மென்பர். இதில் "மனைதூர்த்தையரொ"ன்பது முதல்வர்ணியத்தொப்புமைக்கூட்டவணிக்கும்

"வல்லியி னின்றெம்மென்மை" யென்பது முதல் அவர்ணியத் தொப்புமைக்கூட்டவணிக்கு நிரலே யுதாரணங்களாம். இங்ஙன மொற்றுமையான தருமந்தொழிலாகவேனுங் குணமாகவேனு மிருக்கும். முந்திய வுதாரணத்தில் வருணிக்கத்தக்கவைகளான மனைகளுக்கும் வெளியிற்றெரியக் கூடாதென்று வெறுத்துக்கொண்ட துர்க்கையின் முகங்களுக்குஞ் சந்திரோதயகாலத்தி லுண்டாகத்தக்க உட்குவதென்னுந் தொழிலாந் தருமவொற்றுமை யிருக்கின்றதென்க.

உ-வது உதாரணத்தில் நாயகியினது தேக சௌந்தரிய வர்ணனையில் அவயவங்களான மல்லிகை, இந்துகலை, வாழை யிவைகளுக்கு வன்மையென்னுங் குணமாகிய தருமவொற்றுமை கூறப்பட்டது.

செவ்விதழை மேவிச் செவப்பா டலம்பூத்து
நவமிசு நண்பகலோ ருல்விளங்கி—யிவ்விருந்தி
யுற்றனகோ டைக்காலத் துப்பவப கற்போதுஞ்
சுற்றுபுனற் புடகரப்போ தும்.

இங்ஙனங் கோடைக்காலத்து வருணனையி லக்காலத்தில் வாணிகத்தக்க பகற்போதுக்கும் புடகரப்போதுக்கும் விருத்தியடைதலென்னுந் தொழிலாகிய தருமவொற்றுமை விளங்குகின்றது.

செய்யுள்.

மாதங்க சந்தின முதிக்கனையுந் திக்கமைய
வாய்ந்திட டாலு முரிவன்மை மேவலா
லோதங்க சத்தி னயமே யிருந்திறு
மோர ரம்பையுஞ் சிதவா மேவலால
வேதங்க சத்தி யலைந்து கனைந்திட
வேயி லேயொளித் தாமெறு பாசந்தி

வேதங் கத்தி விரியா டொடைக்குநே
ரின்மை யாவெளி யிட்டழி பட்டவே.

இங்ஙனம் பார்வதி தேவியினது தொடைகளின் வர்ணனையில் அவயவங்களாகிய யானைத்துதிக்கைகளுக்கு மரம்பைகளுக்கு முவமானப்பொருளாதலின்றி வெளிப்படுதலென்ற குணமாகிய தருமமொற்றுமை யிருக்கின்றது.

செய்யுள்.

உறவரிடத்தும பகைவரிடத்து மொரோவித மருசெய்
திறத்தை யுரைப்பது மவ்வணி யேதுதிக கின்றவருஞ்
செறுநரு மாசு வணுற நீசெய்வை செலவமெனப்
பெறுவ துதாரணந் தேவா பினாகைப் பிரபலனே.

மித்திரர்களிடத்துஞ் சத்துருக்களிடத்து மொரே விதமான செய்கையைக் கூறுவது மவ்வணியே. இதற்குத் "துதிக்கின்றவ" ரென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் துதிக்கின்றவரிடத்துஞ் செறுநரிடத்து மாசுவணுற செய்தலென்னுமொரே தொழிலைச் செய்தமை காண்க.

செய்யுள்.

நிம்பமெறி வானுக்கும நெய்யொடுதேன் பெய்வானுக்
கும்பரிம ளம்பெரிது கொண்டசந்தோ—டும்பூவாற்
பூசித்தார்க் குங்கசப்பு.

இங்ஙனம், வெட்டுகின்றவனுக்கும், நெய்யொடு தேனைப்பெய்கின்றவனுக்குஞ் சந்தனம் பரிமளப்போதுகொண்டு பூசித்தவனுக்கும் வேம்பு, கசப்பென்றுரோவிதங் கூறப்பட்டதாம். முந்தியவுதாரணந் துதியாகவுமிவ்வுதாரணம் நிந்தையாகவு மிருக்கின்றது. இந்தப்பிரிவு ஸரஸ்வதிகண்டாபரணத்திற் சொல்லப்பட்டது.

செய்யுள்.

பொருளொன்றை மேன்மைப் பொருள்க ளுடன்புகுத் திப்புகல
வருவது மவ்வணி மன்ன நமனும் வருணனுடன்
திருநிதிமானரி நீயு முலகைத் தினம்புரந்து
மருவுகின் றீரெவ் விலக்கியந் தேரொட்ட மாமன்னனே.

வருணிக்கத்தக்க வோர்பொருளை மேன்மையான பொருள்களுடன் சேர்த்துக்கூறுவதுமவ்வணியே. இதற்கு "நமன்" என்பதுமுத லுதாரணம். இங்ஙனம் வர்ணிக்கத் தக்கவரசனை நமன்முதலிய விமையோர்களோடு சேர்த்துக் கூறினமைகாண்க.

செய்யுள்.

மாலிகாகண் ணார்கலப்பு மாகமின்னற் காந்தியுமே
லானகன முற்றிருப்ப வாயினுமே—தாமிரண்டு
மாத்திரையும் நிற்க வரா.

இங்ஙன மாலிகாகண்ணார் கலவி, மின்னற்காந்தியுட னென்று சேர்த்துக்கூறப்பட்டது. முந்தியவுதாரணத்திற் றுதியாகவு மிவ்வுதாரணத்தினிந்தையாகவு மிருக்கின்றது. இப்பிரிவு காவியாதரிசமென்ற பிரபந்தத்திற் காண்பிக்கப் பட்டது, சிலரிப்பிரிவினை.

செய்யுள்.

ஒற்றுமை தோன்றுதற் கோர்பொரு ளான துறுபெயரை
மற்றும் பிரசித்த மாகும் பொருள்க ளுடன்வகுக்கப்
பெற்றது சித்தி யணிவேந்த நீயிப் பெரும்படையா
லுற்ற கடற்புன லான்மேன்மை யென்ப துதாரணமே.

என்று ஜயதேவர்கூறிய லக்ஷணப படிக்குச் சித்தி யணி யென்று கூறுவதுமுண்டு. மற்றுஞ் சிலரிதை விளக் கணி யென்றன ரென்க.

---

## ௧௫-வது விளக்கணி.

(தீபகாலங்காரம்.)

செய்யுள்.

உன்னும் புணையுமைய கும்புனே வில்லிக்கு மோர்தருமத்
தின்முடி வாதல் விளக்கணி சீற்றத் திபமதத்தால்
மின்னு மரசு பிரதாபத் தாலென விள்ளுதலே
மன்னு முதாரணந் தேர்க குமாரெட்ட மாமன்னனே. ()

வருணியங்களுக்கு மவருணியங்களுக்கு மோர் தருமத்தினொற்றுமை கூறிமுடித்தல் விளக்கணி. இதை வடநூலார் தீபகா லங்கார மென்பர். இதற்கு "சீற்றத்திபமதத்தா" லென்பதுமுதலுதாரணம். இங்ஙனம் அவருணியமான யானைக்கும் வருணியமான வரசனுக்கு மின்னுதலென்னுந் தொழிலாகிய ஒரேதருமத்தின் முடிவு கூறப்பட்டிருக்கின்றது.

செய்யுள்.

கருவியிற் றேய்த்த மணிபடை யுழுத
கனவடு வுளசந் ரங்கி
அருமத முற்றி யிளைத்தமா சரம்போ
தமைந்துகாயந் திடுமணற் குன்ற
மருநதி யிளமைக் கலைமதி கலவி
வயினுறச் சோரிளங் குமரி
பெருநிதி யிரப்போர்க் களித்தமன் குறைவு
பெற்றுமேல் விளங்கிடு மாதோ.

இங்ஙனம் வருணியமான மன்னனுக்கும் அவருணியங்களான மணிமுதலியவைகளுக்குமேல் விளங்குத லென்னுந் தொழிலாகிய தருமத்தி னொற்றுமை கூறப்பட்டிருக்கின்றது. மேன்மாடத்தில் வைககப்பட்ட தீபம் இரதவீதிக்குமுபகார மாகுதல்போல் வருணியத்தி லிருக்கின்ற வொப்பான தருமம் அவருணியங்களுக்கு முபகாரப்படுவதாலிது விளக்கணி யெனப் பேர்பெற்றது.

செய்யுள்.

பொன்னி றைந்து பொலிவுற
மின்னு பூமியை வீரனும்
உன்னு சேவக னுங்கவி
மன்னு வந்தடை வார்களே.

இக்கவியில் வருணியங்களுக்கும் அவருணியங்களுக்குந் தருமத்தின் ஸம்பந்த மொரேவேளையிற் றோன்றுகிறதே? "சிற்றத்திப மதத்தா" லென்னுமுதாரணத்தில் முதலாவது அவருணியத்திற்றருமம் ஸம்பந்தப்படுகிறதே? யென்றுலங்ஙன மியல்பாக வருணியத்தைப் பிரதான மாகக் கொண்டு வந்த தரும மவர்ணியத்திலும் ஸம்பந்தப்படுவதா லத்தருமத்திற்கு வருணியத்திற் ஸம்பந்தங் கெடாதிருப்பமைகாண்க. மேன் மாடத்திற்கு மிரதவீதிக்கு மொரே வேளையி லுபகார மானாலுந் தீபத்தின் முககிய ஸம்பந்த மேன்மாடத் திற்கேயல்ல திரத வீதிக் கல்லாமையும், மருமகனுக்காக்கிய உணவை முதலில் அதிதிகளுக் குபயோகப்படுத்தினு மவர்களுக்காகச சமைத்ததல்லாமையும் போலத் தரும முதலாவ தவருணியத்திற் ஸம்பந்தப்பட்டாலு மொரே வேளையில் வருணியத்திலு மவருணியத்திலும் ஸம்பந்தப் பட்டாலு மத்தருமத்திற்கும் வருணியத்திற்கு மிருக்கும் பொருத்தம் நீங்காமை காண்க. ஒப்புமைக்கூட்ட வணியி லொன்று வருணிய மென்ற சிறப்பில்லாமையா லெல்லாவற்றையும் பிரதானமாக் கொண்டே தருமங் கூறப் பட்டதா மென்க. ஒப்புமைக் கூட்டவணியிலு மிவ்வணியிலு முவமை யணி யுள்ளடங்கியிருப்பது ஸமானமாக விருந்தாலு மிவ்வணியில் அவர்ணிய முவமான மென்றும் வருணிய முவமேய மென்று மவ்வணியி லுமைப்போனது குறிப்பா லுவமான உவமேய பாவத்தின் விளக்க மென்றும் பேதமுணர்க.

## ௰௬-வது பின்வருவிளக்கணி.

(ஆவர்த்திதீபகாலங்காரம்.)

செய்யுள்.

முனமார் விளக்கணி மேவு தரும முடிவுதனித்
தனியே வரிற்பின் வருவிளக் காமது தானுஞ்சொலாற்
கனிவா கியபொரு ளாலவ் விரண்டுங் கதுவுதலா
லினிமூன் றெனவரு மெட்ட புரம்வள ரிந்திரனே. (௬௮)

பொருவின்மை மேக நிரையும் வருடம் புரியுமிந்த
இரவும் வருடம் புரியுங் கதம்பமு மேயலரும்
மருமல் லிகையு மலருஞ் சிகியு மதிப்புறுஞ்சீர்
தருசா தகமு மதிப்புறு மென்ப துதாரணமே. (௬௯)

விளக்கணியில் விளங்குந் தருமத்தி னொற்றுமையை ஆங்காங்குத் திரும்பக் கூறல் பின்வரு விளக்கணி. இதை வடநூலாராவர்த்திதீபகாலங்காரமென்பர். இஃது பொருள்வேற்றுமை யுள்ள ஒரே வசனத்தைத் திரும்பக் கூறுவதாலும் வசன வேற்றுமை யுள்ள ஒரே பொருளைத்திரும்பக் கூறுவதாலு மொரே பொருளுள்ள ஒரேவசனத்தைத்திரும்பக் கூறுவதாலு மூவகைப்படும். இவைகளுக்குப் "பொருவில்மை மேக நிறையும் வருட" மென்னுங் கவியில் நிரலே யுதாரணங்கள் வந்தன. இதிற் பொருவில்மை மேக நிறையும் வருடம் புரியு மிந்த விரவும் வருடம்புரியுமென்னுமிடத்திற் பொருள் வேற்றுமை யிருந்தாலும் வருடம் புரியு மென்ற ஒரே சொற்றிரும்பப் பிரயோகித் திருப்பதாலிது சொற்பின்வரும் விளக்கணி. "கதம்பமுமேயலரும் மரு மல்லிகையு மலரும்" என்னு மிடத்தில் அலரும் மலரு மென்ற சொல்வேற்றுமை யிருந்தாலும் பொருளைத்திரும்பக் கூறுவதாலிது பொருட்பின் வரும் விளக்கணி. "சிகியு மதிப்புறுஞ் சீர்தரு சாதகமு மதிப்புறு" மென்னு மிடத்

தில் மதித்த லென்னு மொரே பொருளுடன், கூடியமதிப் புறு மென்ற சொல்லைத் திரும்பப் பிரயோகித் திருப்பமை யாலிவ் விரண்டும் பின்வரும் விளக்கணி. இவைக ளுக்கு ப்பிறலே வேறுதாரணங்கள்.

செய்யுள்.

கயத்துவளை யா நுமறு கவர்ந்திடுகம் சிறிக்குழுவை
மயக்கழுத்து மேற்கெடுக்கு மாறியற்றி யிடுங்கரபங
கயத்துவளை யாநுறுமின் காண்டுசளு டவர்மனத்தை
மயக்கழுந்து மேற்கெடுக்கு மாறியற்றி யிடுமம்மா.

இங்ஙனம் பொருள்வேற்றுமையுள்ள மயக்கழுத்து மேற்கெடுக்குமாறியற்றி யிடுமென்ற வொரே சொற்றிரு ம்பக் கூறப்பட்டிருக்கின்றது.

செய்யுள்.

கருமேக தாரைகளைசா தகங்களுக்கு நெடுங்காலம்
வருதாக மதைமுழுதும் போக்கினவே மடவார்கண்
டருநீரின் றுளைகளா டவாதமது வெறிடத்து
வெருவாத பிரையாண ருசியதனை விலக்கினவே.

இங்ஙனம் போக்கினவென்றும் விலக்கினவென்றுஞ் சொல வேற்றுமையிருந்தாலும் ஓரேபொருள் திரும்பக் கூறப்பட்டிருக்கின்றது.

செய்யுள்.

சுந்தரமின் னேயுன் சுமுகமத னற்பொருத
சந்திரவிம் பங்கந் தராதனில்—வந்துமறை
கின்றதர விந்தங் கிளர்பிரவா கப்புனலிற்
றுன்ற மறைகின் றது.

இங்ஙன மொரேபொருளுள்ள மறைகின்ற தென்ற சொல் திரும்பக் கூறப்பட்டிருக்கிறது. விளக்கணியில்வரு ணியாவருணியங்களுக்குத் தருமத்தினொற்றுமை முடிவிரு

ப்பதுபோ லிவ்வணியிலில்லாமல் வருணியங்களுக்குமட்டு மிருந்தாலு மொன்றினது தரும மற்றொன்றுக்கும் ஸம்பந்தப்படுகிற தென்பதை மாத்திரம் வைத்திதற்குப் பின்வரு விளக்கணி யெனப்பெயர் கூறலாயிற்று.

---

## கஎ-வது தொடர்முற்றுவமையணி.

(பிரதிவஸ்தூபமாலங்காரம்.)

செய்யுள்.

இருவாக் கியக்குத் தருமத்தி னொற்றுமை பேமுடிக்க
வருவ தனித்தனி யேற்றொடர் முற்றுவ மைய்யிரவி
தருதாபத் தாலுற் றிலங்குந் திறலிகொள் சாபத்தினால்
மருவ மினுமென் றிலக்கியங் காணொட்ட மாமன்னனே. ( )

உவமானோபமேயங்களாகவிருக்கிற விரண்டுவாக்கியங்களில் ஒரேதருமத்தைத்தனித்தனியாக வெவ்வேறுசொற்களால் கூறிமுடிப்பது தொடர் முற்றுவமையணி. இதை வடநூலார் பிரதிவஸ்தூப மாலங்கார மென்பர். ஒவ்வொருவாக்கியத்திலும் ஸாதாரணதருமம் இருப்பதனாலிவ்வணி இப்பெயர்பெற்றது. இதற்கு "இரவிதருதாப" மென்பது முதலுதாரணம். இங்ஙனம் இரவிதருதாபத்தினாலுற்றிலங்கு மென்றவுவமான வாக்கியத்திலுந்திறலி கொள் சாபத்தினால் மருவமினுமென்ற உவமேயவாக்கியத்திலும் பிரகாசித்தலென்ற வொரேதருமம் இலங்கு மென்றும், மின்னுமென்றுந் தனித்தனிகூறி முடிக்கப்பட்டிருக்கிறதென்க.

செய்யுள்.

நல்லபண்பி னார்திரமா நல்லொழுக்கச் சற்குணமே
யல்லன் மதியா லவியாது—புல்லும்
கதிர்மணியின் றீபவொளி காற்றி னசியாது
மதிநுதற் போலுமட வாய்.

இங்ஙனம் உவமானோபமேயவாக்கியங்களில் கேடிலாமையாகிற வொரேதருமம் அவியாது நசியாது என்று தனித்தனி கூறலாயிற்று.

செய்யுள்.

பரம்பொருளேயொத்தமுதப் பெருக்காய்ப் பதுமலர்ப்பூட்
கரங்களிலே புருஷருமனக் காருணியமேல் விதேவனென்
றுரங்கொளவே விரும்புவன்றே நறுபரவித் தழும்பிருக்க
கரம்பெறுபவன் டருநீின்முன்னிதனை நோக்காதே.

"பரம்பொருளே யொத்தென்ற" உவமேயவாக்கியத்தி லிருப்பில்லாமை தருமமென்றும் *"நேருறுபரவித்தழும்பிருக்க"வென்ற வுவமானவாக்கியத்தில் நோக்காமை தருமமென்றும் தருமபேத மிருப்பதாகத் தோன்றினும் இயல்பிரண்டிலும் விறக்கூடிய நோக்கத்தி னின்மைகூறுவது பொருந்தாமையா லிங்ஙனம் நோக்கா தென்றதற்கு இருகையேயாயும் நோக்காதென்றும் பொருள் கொண்டிருப்பில்லாமையே தருமமாக வைத்து தருமவொற்றுமையிருக்கின்றதென்க. பொருட்பின்வருநிலையணியில் வருணியங்களுக்கெனு மவருணியங்களுக்கு மொப்பான தருமந் தனித்தனி கூறப்படுகிறதென்று பேதமாமென்க. அன்றியு மவ்வணியின் முதலுஞ் தருமந்தா னொற்றுமையாயதென்று மிவ்வணியி லவ்வாறு வருமென்றுங் கொள்க. அந்தாவருமாறு.

செய்யுள்.

பரச விந்துவான் கவிசொலுரு சிரமம் படமே
பிரச விந்துவா விந்துவா மேயாமிக் திகிவான்
பரச விந்துவு மெநஞ்சடைய பெண்மையுங் கருவின்
சரச விந்துவாயு வந்தியுந் தானுநி யாவோ.

இங்ஙனம் "பரச விந்துவா"வென்பது முதலிருக்கும் உபமேயவாக்கியத்திலதிகல்கருமமாகவும் "பிரசவித்துறு"

வென்பது முதலுள்ள வுவமானவாக்கியத்தி லறிவில்லா மை தருமமாகவு மிருக்கினு மிவ்வணியேயாம். அவ்வாறு மி னுவமான உவமேயவாக்கியங்களுககு வெவ்வேறு தரும மிருத்தலா லிவ்வாக்கியங்களுக் குவமானோவமேய மாவிருக்குந் தன்மை யெவ்வாறெனில் வித்துவான் கவி சொல்லுஞ் சிரமத்தை யத்தொழிலுள்ளவனறிவா னென் றமையாற் கிடைத்த் வவித்துவானறியமாட்டா னென் றதை யுவமேயமாக வைத்து வந்தி பிரஸவ வேதனை யறி யாளென்பதை உவமானமாக வைத்தாவது வந்தி பிரஸவ வேதனையையறியா ளென்பதாற் கிடைத்த பிரசவித்தவள் அவ்வேதனையை யறிவாளென்பதை யுவமானமாக வைத்து வித்துவானது கவி சொல்லுஞ் சிரமத்தை யத்தொழி லுள்ளவனே யறிவா னென்றதையே யுவமேயமாக வைத் தாவது தரும வொற்றுமையுண் டெனக்கொள்க.

செய்யுள்.

மாந்தரிடம் பண்பிருக்கு மாகிலவை யுந்தணியே
தாந்துலங்கு நானமதிற் றங்குமணம்—போந்துபல
ராணைபுரிந் தேதடையிட் டாலுமடங் காதுமணிப்
பூணையுடை யாயிதைநம் பு.

இங்ஙனம் "மாந்தரிடம்பண்பிருக்கு" மென்ற உவமே யவாக்கியத்தில் பண்பினியற்கைத் துலக்கந் தருமமாக வும் "நானமதிற்றங்குமண" மென்றது முதலுள்ளவுவமான வாக்கியத்தி லாணையாற் றடைபடாதிருத்தல் தருமமாகவு மிருந்தாலு மிவ்வணியே யாம். முந்திய வுதாரணத்தி லிருந்ததுபோ லுவமானோவமேய வாக்கியங்களாற் கிடை த்த பொருள்களை வைத்து இந்த விரண்டு வாக்கியங்களு க் குவமானோவமேயமா யிருக்குந் தன்மையைப் பிரித் தறிந்து கொள்க.

## ௧௮-வது எடுத்துக்காட்டுவமையணி.

(திருஷ்டாந்தாலங்காரம்.)

ஈட்டிரு வாக்கிய வெவ்வே றுதரும மென்பவற்று
ளூட்டுவிம் பப்பி ரதிவிம்ப பாவமுற லேயெடுத்துக்
காட்டுவ மையர சேபுக ழோன்மதி யேகதிரோ
ஞட்டி லென் றேத லிலக்கிய மெட்ட நகர்க்கரசே.

உவமான உவமேய வாக்கியங்களினது வெவ்வேறு ன தருமங்களை விம்பப் பிரதி விம்ப பாவமாக வுரைத்த லெடுத்துக் காட்டுவமையணி. இதை வடநூலார் திருஷ் டாந்தலங்கார மென்பர். இதற்கு "அரசே" யென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் புகழுக்குங் கதிருக்கும் விம்பப் பிரதி விம்ப பாவ மென்க.

செய்யுள்.

பலவரச ரிருந்தாலு மிவ்வரச னுற்படி,நா
னலவரச தாவிருக்கின் றதுநாளோன் பான்மூன்றும்
குலவுறுமற் றயமீனுங் குருமுதற்கோள் களுமிருந்து
முலவிரவுங் காந்தியதா வுமதியா மொன்றனே.

இங்ஙனம் நலலவரசதா விருத்தலுங் காந்தியைப் பொருந்துதலும் விம்பப்பிரதி விம்ப பாவமா விருக்கின் றது.

செய்யுள்.

பலகவிஞர் நாமகளின் சித்தியுற்று ளுங்குருவின் பாற்றுன்பாரிக்
குலவுமுரா ரிக்கவிஞ னேவாணி சாரமறி குவளுநாகர்
நலகடலைக் கடக்கினுமன் னதினுழம் பிலத்துவரை ணுகுமிக்க
வலனுறுதே கம்படைத்த மந்திரவெற் பறிந்தவா வலமையோரே.

இங்ஙன முவமானுவமேய வாக்கியங்களுக்குஅறி வென்னு மொரேதருமத்தைத் தனித்தனிகூறி முடித்திரு

பமையாற் றொடர்முற்றுவமையணி யாமெனி லவ்வா றன்றாம். உவமானமாகிய மந்திரகிரி யம்பிணையானதா லதற்கறிவென்பது பொருந்தாது. மந்திரகிரி யறிந்ததென்ப தற்குமந்திரகிரி சமுத்திரத்தில் பாதாளம்வரை மூழ்கிற் றென்றபொருள்படவருந்தருமத்தி லொற்றுமையில்லை யாதலா லிதுவு மெடுத்துக்காட்டுவமையணி யெனக்காண்க. சொற்பின்வருநிலைக்கணியி னுதாரணத்திலு மிவ்வுதா ரணத்திற்கும் பிரிவியாதேல் அதில் வருணியங்களுக்கே தருமவொற்றுமை யிருக்கின்றதென்று. இதில் வருணியா வருணியங்களிருக்குந் தருமவொற்றுமை யிருக்கின்றதென் றுணர்க. முரணுள்ள தருமத்தானு மிவ்வணிவருமென்ப தற்குதாரணம்.

செய்யுள்.

மன்னியுட சீற்றைநம் மாற்றலரெல லாமிறந்தா
ரென்வே றுரைவேண்டு மென்றனைத்ய—நன்மனையி
னுச்சி யெதுவரையு முள்ளோ மதுவரைமே
விசருவ ரிக்குமுவா மே.

இங்ஙனங் கோபம்கொள்ளல் அதனுற்சந்துருக்கள் மடிதல் இவ்விரண்டு தருமங்களுக்கு மிரவி யுதயாசலசி கரத்திற்குவராமை யதுவரையிருளிருத்தல் என்று முரணான தருமங்களுக்கும் விம்பப்பிரதி விம்பபாவமிருக்கின் றமைகாண்க.

---

## ௧௯—வது காட்சியணி.

(நிதர்சநாலங்காரம்.)

சொற்றொடர்ப்பாலிருவாக்கியங்களிற் றோன்றுபொருட்
கொற்றுமை யென்பதி னாரோபங் காட்சி யுயர்வளற்குச
சற்குணம் யாதது. வாமதிக் குக்கறை தானிலதா
முறிட லென்ப திலசிய மெட்டநல் லூரரசே.

உவமானோபமேயங்களாயிருக்கிற விரண்டு வாக்கியங்களின் பொருள்களை யொன்றாக ஆரோபிப்பது காட்சியணி. இதைவடநூலார்நிதர்சனாலங்காரமென்பர். இதற்கு "உயர் வள" லென்பதுமுதலுதாரணம். இங்ஙனமுயர்ந்த வள்ளற்குற்றிடு சற்குணமென்ற வுவமேயவாக்கியப்பொருளுக்கு மதிக்குங்களங்கமற்றமை யென்ற வுவமானவாக்கிய பொருளுக்கும யாது அது என்ற சொற்களா லொற்றுமை யாரோபிக்கப்பட்டிருக்கின்றது.

செய்யுள்.

அறிவிலா மூர்க்கன் றனையனு சரித்தல் டாதவ வாரணி யமதி
லழுக்கையுற் றிடுத லாவியி லுடலை யடுகுறும் படியுடைத் திடுதல்
செறிபுன லறுபா றதிலர விந்தத் தினையா ரோபமே புரிதல்
திணந்தினை முவறா நிலந்தனில் வருடஞ் செய்குச ஞயறு வாலை
நெறியுறத் திருத்தல் முழுச்செவி டாமனிதனது செவியினிமந் திரத்தி
னிகழுப தேசம் புரிகுதல் குருடாய்ச் சேர்பவ னனைத் தெதிரே
உறுநிழ லாடி காட்டுத லெனவே யுளங்கொடு சற்சன சங்கத்
தொடுங்கித மிருந்தே செவியுணுங் கிருந்தே யுறிலது பவவினை மருந்தே

இங்ஙன மறிவில்லா மூர்க்கனை யனுசரித்த லென்ற வுவமேயவாக்கியப் பொருளுக்கு மாரணியத்தி லழுகை யுற்றிடுதல முதலிய வுவமானவாக்கியப் பொருளுக்கும் யாது அது என்ற சொற்களால் ஒற்றுமை யாரோப்பிககப் பட்டிருக்கின்றது.

## இரண்டாவது-காட்சியணி.

(பதார்த்தவிர்த்தி நிதர்சனாலங்காரம்.)

நேரும் பதப்பொருள் ளாரோ பமுமுன் னிகழ்த்துவதாந்
தாரும் புனைமென் முலையா யுனதிரு தாளையுநீ
ராருங் குவளை மலர்க்காந் தியினை யடைந்ததென்ப
தோரு மிலக்கியம் வாழேட் டயபுர வுத்தமனே.

உவமானோவமேயங்களாவிருக்கு மிரண்டு சொற்பொருள்களுக்கொற்றுமை யாரோபித்தல் பதப் பொருட் காட்சியணியாம. இதை வடநூலார பதார்த்த விர்தநிதர்சனையென்பர். இதற்கு "உனதிருதாரையு" மென்பது முதலுதாரணம். இங்ஙன முவமேயமாகிய தாரையென்ற கண்களிற் குவளைப்போதின் காந்தி யென்ற பதத்தின் பொருளாரோப்பிக்கப்பட்டிருக்கின்றது.

செய்யுள்.

காமமுற்ற காலையே கவுடநாட்டு மாதர்தந்
தாமநற் கபோலமார தவளவிட்டம் யாதது
நாமமிட்ட பேர்முனே நணுக்குமீச சமாதுணர்
ஆமதிற் குலாவுநீ யதனை நோககு வாய்மினே.

முந்தியவுதாரணத்தி லுவமேயத்தி லுவமான தருமமாரோபிக்கப்பட்டது. இவ்வுதாரணத்திற் கவுடநாட்டு மாதர் கபோலமாகிய வுவமேயததிலிருககும் வெண்மை யென்னுந் தருமம் காஜ-ூரபபூவினுட் பராகங்களாகிய உவமானத்தில் யாது - அது என்ற சொற்களா லாரோபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டிடங்களிலுமொருபொருளிலிருக்குந் தருமம் மற்றொருபொருளிற் சேராதாகையா லத்தருமத்திற் கொப்பான தரும வொற்றுமையிருக்கின்ற தென்றறிக. இவ்வுதாரணங்களி லியல்பாககிடைத்தவாரோபத்தை - யாது - அது - என்ற சொற்கள் விளக்கினுமிவைகள் இன்றியும் வருமெனக கொள்க. இப்பதப்பொருட் காட்சியணியைஜயதேவர் லளிதோபமையென்றார். காமமுற்றகாலை யென்ற செய்யுளை முன்னூலார் வாக்கியப் பொருட்காட்சியணிக் குதாரணங் காட்டினரேனும் விம்பப் பிரதி விம்ப பாவமாக விருக்கின்ற பொருளிலுள்ள தருமங்களுக் கொற்றுமை யாரோபித்தல் வாக்கியப் பொருட்காட்சியணி யென்று முவமானோவமே

யங்களுக்கு ளொன்றின் றருமத்தை மற்றொன்றி லாரோ பித்தல் பதப்பொருட் காட்சியணி யென்றும தீர்மா னித்துக் காமமுற்றகாலை யென்ற கவியை யிங்ஙனம் பதப்பொருட்காட்சியணிக் குதாரணங் காட்டின தென்க.

செய்யுள்.

பரம்பரநீ யெமதுவிருப பந்தருவோ
னுவிருக்கப பகர்மறறொனை
இரந்திடுகோ லஙகொடுசே வித்திடுநாந்
தேனுவர சிருக்கும்போது
முரந்தரும்பிற் காலுதையா லனுகவொட்டா
வொட்டக்குட் டியையுற்றேபால்
நிரந்தரமுங் கறந்திடவே விரும்பினவ
ரிதுபொயல நிமலவாழ்வே.

கடலினைக்கரத்தாற்கடந்
திடவிருப்பமைந்திட்டவா
மிடலுன்னற்குணவேலையைப்
புடவியிற்புகழ்ந்தார்மனே.

இவ்விரண்டுதாரணங்களும் வெவ்வேறு வாகியங் களா முடியாவிட்டாலும் விம்பப் பிரதி விம்ப பாவமா யிருக்கும் பொருள்களுடன் கூடிய தருமங்களுக்கு ஒற்று மையாரோப மிருப்பமையாலுஞ் "சொற்றி. டொப்பான விருவாககிய" மென்ற விலககணத்திலிருககு மிருவாக் கியங்களிற் றொன்று பொருளென்றதற்கு விம்பப் பிரதி பிம்பபாவமுள்ளபொருளுடன் கூடிய வருணியாவருணிய தருமங்களுக் கெனத்தாற்பரியங்கொண்டமையாலும் வாக் கியப் பொருட்காட்சியணியேயாம். இவ்வாறு கூறினமை யால

செய்யுள்.

மாந்த ருக்கு மதிபதி சேவைநாக
காந்து வாள்முனை நககல் சிங்கப்புலல்
போந்த பேட்டுப் புயங்க முகமுகப்
பாந்த ளிக்குழந் தாயமா ராயினை.

இதிலும் வருணியாவருணிய விருத்தாந்தங்களா லொருபதிந்தாற் கூறப்பட்டிருக்கிறவைகளை விம்பப்பிரதி விம்பமாகவிருக்கும் பொருள்களுடன் கூடிய விவகாரமா யிருத்தலால் வாக்கியப் பொருட்காட்சி யணியேயாம். ஆயின் உருவகவணிக்கு மிவ்வணிக்குமே பிரிவியாதெனில் உருவகத்தில் விம்பப்பிரதி விம்பபாவத்தை யடைந்திருக்கிற பொருள்களுடன் கூடாது, முகம் சந்திரன் முதலியவைகளுக்கொற்றுமை யாரோபித்தலென்றும், இதில விம்பப்பிரதி விம்பபாவத்தை யடைந்திருக்கிற பொருள்களுடன்கூடிய தருமங்களுக் கொற்றுமை யாரோபித்த லென்றும் பிரிவு காண்க.

செய்யுள்.

மீனியெனு மாவலியை மேலடாக்கும் போதுயர்வுற்
றுளுமறை யோனு தனமனக்கு-நாளதண்ட
மென்றுசொல வேயிருந்த தெம்பெருமான் பாததண்டம்
நன்றுமகிழ் விக்கு நமை.

விசிஷ்ட உருவக வுதாரணமான இந்தக கவியால் நாளமானது மறையோனுதனமனை யென்றதற்கிணங்கச் சொல்லுஞ்சிறப்புக்கு வந்தமையாலும் வள்ளற்குச்சற்குணமென்ற வுதாரணத்தில் வள்ளலுக்கு முவாமதிக்குமானந்தத்தைச் செய்தலென்னும் பொதுத்தன்மையிருப்பதால் விம்பப்பிரதி விம்பபாவம்வருவதுபோ லிங்ஙனமும் பாதத்திற்கும் நாளத்திற்கு மஹோந்நதத்வாரர்மையாலும் பாததண்டம் நாளதண்டமெனபவைகளு விம்பபிரதி விம்ப

பாவமடைந்திருக்கும் பொருள்களுடன் கூடுந் தன்மையில்லாமைகண்டு காட்சியணி யாகாதெனக் கொள்க. உவமானோவமேயங்களுடைய விசேஷணங்களி லொன்று க்கொன் றொப்புமையால் விம்பபிரதி விம்பபாவமாயிருக்கின்றது.

செய்யுள்.

சந்திரிகைப பூதியின்வெண் ணிறம்படைந்து
முடிவெலும்பு தரித்துந் தோற்றி
விந்தைசெயல விரும்பியுந்தீ யொன்றிலிருந்
தொன்றினுக்கு மேவிரசெல்வான்
இந்தவிராத் திரியெனுங்கா பாலிகையோடு
சந்திரனெனுங்க பாலச்
சந்தமணிச் சிமிழிலமரு மெருங்கைத்தாச்
சித்துமையுந் தரித்துந் தானே.

இந்த ஸாவயவ வுருவக வுதாரணத்தி லெவ்வாறு வருமெனில், அங்ஙனம் உவமானோவ மேயங்களுக்குந் தத்தம் விசேஷணங்களுக்கும் தனித்தனியே யொற்றுமையினுரோபமே யல்லது சந்திரிகைமுதலியவைகளுடன் கூடிய இராத்திரியாகிற வுவமேயத்திற்கும் பூதிமுதலியவைகளுடன் கூடிய காபாலியாகிற வுவமானத்திற்குஞ் சேர்க்கையா லொற்றுமையாரோபித்தலன்று மாதலால் விம்பப்பிரதி விம்பபாவமாக விருக்கும் பொருள்களுடன் கூடிய தருமங்களுக் கொற்றுமை யாரோபித்தல் வாக்கியப்பொருட் காட்சியணியென்று முவமானோவ மேயங்களி லொன்றி லொன்றின் றருமத்தை யாரோபிப்பது பதப்பொருட் காட்சியணியென்று முன்காட்டிய தீர்மானத்தைக்கொண்டே "மாந்தருக்கு மகிபதி" யென்ற செய்யுளில் வாக்கியப்பொருட்காட்சியணி யென்றே விதிக்கப்பட்டது. விம்பப்பிரதி விம்பமாக விருக்கும் பொருள்களுடன் கூடிய தருமங்களுக் கொற்றுமை யாரோபித்தல் வாக்கியப்

பொருட்காட்சியணி யென்று கொள்ளாமலிலக்கணத்திற் கூறியபடியே வொப்பான விரண்டுவாக்கியங்களின் பொருள்களுக் கொற்றுமை யாரோபித்த லவ்வணி யென்று கொண்டவர் "மாந்தருக்கு மதிபதி" யென்ற செய்யுளிற் பதப்பொருட்காட்சியணி யென்றார்.

---

## தீங்குப்பொருட்காட்சியணி.

(அஸதர்த்த நிதர்சனலங்காரம்.)

## நற்பொருட்காட்சியணி.

(ஸதர்த்த நிதர்சனலங்காரம்.)

செய்யுள்.

தீப்பய னுவது நற்பய னுவது செய்கையினால்
வாய்ப்பொடு காணப் புரிவது மவ்வணி மாநிலவின்
கோப்பகை யோனசி வானென்று காட்டமங் குல்கலையோன்
பூப்புறுங் காலநசி கின்றதென் காட்டுமுன் போந்ததற்றே.

தக்க நிதிப்பய னன்பாக குதவுத ருனென்றறி
விக்க விரவி வருபொழு தேபொன் விளக்கின்றனன்
அக்க மலத்திலென் காட்டும்பின் சொன்னதற் காம்புகழெண்
டிக்கு நாடாத்திடுஞ் செங்கோற் குமாரெட்ட சிதரனே.

ஒருவன் றன்னிடத்திலிருக்குஞ் செய்கையால் மற்றவருக்குத் தீங்கான பயனையாவது நன்மையான பயனையாவதறிவிப்பது மவ்வணியே. இதற்கு "மாநிலவின் கோப்பகை" யென்பதுமுதற் றீங்குப பயனினறிவிப்புக்குந் "தக்க நிதி" யென்பது முதல் நன்மைப் பயனினறிவிப்புக்கும் நிரலே யுதாரணங்கள். இவற்றுள் முந்திய வுதாரணத்திற் கலையோன் பூப்புறுங்கால் நசிகின்ற மங்குல் அத்தொழிலால் மாநிலவின் கோப்பகையோன் நசிப்பானென்பதைப் பிறருக்குத் திருஷ்டாந்தமாகக் காண்பிக்கின்றது.

## நற்பொருட்காட்சியணி.

இது தீங்குப்பொருட்காட்சியணியாம். இதை வடநூலார் அஸதர்த்த நிதர்சனை யென்பர். இரண்டாவதுதாரணத்தி லிரவிதா னுதிக்கும்போதே கமலங்களுக்கழகை விளைவிக்கின்ற தொழிலாற் றனக நிதிப்பய னன்பர்களுக் கொடுத்த லேயென்று தெரிவிக்கிறானென்னு மிதுநற்பொருட்காட்சியணியாம். இதை வடநூலார் ஸதர்த்தநிதர்சனை யென்பர்.

செய்யுள்.

அற்பன் மேன்மை யுற்றுவிளை யாட்டா சக்கீழ் விழ்வனெனுஞ்
சொற்புகலு நின்றது வாய்விண் டிலங்கு பொருப்பி னதுசிகரத்
திற்பரவி யுற் றிருந் திடுநீர்த் திவலைக் குழுமென் சிறுகாலாற்
பொற்பின் மடந்தாய் பாரசைவு பொருந்திக் கீழ்வீழ் கின்றதுவே.

இங்ஙனம் பொருப்பினது சிகரத்திற் பரவி யிருந்த நீர்த்திவலைக்குழு, மெல்லிய காற்றினாலசைவுற்று கீழே வீழ்கின்றதாகி யற்பனுக்கு மேன்மையா மிடத்திற் செல்லுதல்கீழே வீழ்வதற்கேதுவென்ற தீங்குப் பொருளை விளக்குகின்றது.

செய்யுள்.

இல்லறத்தோர் சாதுக்கட் கின்னதிதி பூசையினை
எல்லைசெய வேண்டுமென வேயுணர்த்தும்—நல்லுதய
மாமலைதன் பாலே வருமிரவி யைக்கொளுஞ்சூ
டாமணித்தா னத்தினிலேட் டா.

இங்ஙனம் தன்னிடத்துக்கு வருமிரவியைச் சூடாமணி வைக்குமிடத்திற் றாங்குகின்ற உதயகிரி, அறசெய்கையா மில்லறத்தோர் சாதுக்களை யதிதி பூசை செய்து கொண்டாட வேண்டுமென்ற நல்ல பயனை விளக்குகின்றது. இங்ஙனஞ் சிலர், வாக்கியப்பொருட்காட்சியணியிலும் பதப்பொருட்காட்சியணியிலும் பொருள்களினியைபில்லை யென்றும் மூன்றாவது காட்சியணியிற் பொரு

ளினிமை யிருக்கிறதென்றுங் கூறி, யவற்றுள் முதலாவது வாக்கியப்பொருட்காட்சியணியி லிரண்டு வாக்கியங்களிற் பொருள்களொன்றாகாம லொப்புமையில் முடிகிறதென்றும் இரண்டாவது பதப்பொருட்காட்சியணியி லொரே தருமம் மற்றொருபொருளி லுண்டாகாமையா லதுவு மொப்புமையில் முடிகிறதென்று மூன்றாவது தீப்பொருள் நற்பொருட்காட்சியணியிற் றன்னிடத்திலிருக்குந் தொழிலாற் பிறருக்குந் தீப்பயனையாவது நற்பயனையாவது அறிவித்த லுளதாகியே வொப்புமைகொண்டதெனக் கூறுகிறார். கனற்புத்தி பிள்ளைகளைப் படிக்கச் செய்கின்றதென்பதுபோ லுதயகிரி நற்பொருளை அறியச்செய்கின்றதென்னு மிடத்திற பிறவினை யெனக்காண்க. அது படிக்கின்றவர்களுக்குக் குளிரைநீக்கிப் படிப்பிலாவலுண்டாக்குவதுபோ லிம்மலை தானுவமானமாகி மற்றவர்களுக்குத் தன்னைப்போற் பெரியோராகவோச் சிரத்தினை கொண்டாடவேண்டுமென்ற புத்தியை யுண்டுபண்ணுகின்றதென்க.

---

## உ௦-வது வேற்றுமையணி.

(வியதிரேகாலங்காரம்.)

ஒப்பா மொழியுவ மானுவ மேயத்தி னொன்றினைப்பே
திப்பா மெனிலது வேற்றுமை மேலர் சிகரியைப்போற்
றப்பா துயரினு மெல்லிய ரென்ப துதாரணமா
மெப்பாவ லோரும் புகழெட் டயபுரத் திந்திரனே. (சகூ)

ஒப்பாக வருணித்த வுவமானுவமேயப் பொருள்களுக்கு ளொன்றைப் பேதப்படுத்தி வருணிப்பது வேற்றுமையணி. இதை வடநூலார் வியதிரேகாலங்காரமென்பர். இதற்கு "மேலர் சிகரியைப்போ"லென்பதுமுதலுதாரணம். இங்ஙனம் மேலரென்றவுவமேயப்பொருளையும்

சிகரியென்ற வுவமானப்பொருளையு முயாதலென்ற குணத்திறலொப்பாக வருணித்துப் பின் புவமேயமாகிய மேலருக்கு மெல்லிய மெய்யை யுடைத்தாயிருக்கருந் தன்மையைப் பிரித்துக் கூறியிருப்பமையா லிதுவுமெயஞ் சிறந்த வேற்றுமையணி.

செய்யுள்.

தங்குகற்ப கத்தின் றளிரினுமுன் பாணியினுக
கிங்குகொடை வள்ளா லெதுசிறப்பே—அங்கணது
கன்னநின்று மேவுமலங் காரப் படுத்துமிது
கன்னனின்றுந் தாழவருங் காண்.

இங்ஙனமுங் கன்னனின்று மேவியலங்காரப்படுத்து நின்ற வுவமானமாகிய கற்பகத்தளிரினும் புகழக் கூடிய வரசனது உவமேயமாகிறகைக்குக் கனனனைத்தாழச் செய்யுமென்ற சிறப்பிருக்கின்றது முந்தியவுதாரணத்தி லுவமானேயமேயத்தி னுடையுந் தன்மையாகிற வுயர்ச்சி யிரிந்திருக்கிறதென்று மிங்ஙனந் சிவப்பு மேன்மை முதலிய வொப்புத்தன்மை தொகைநிருகின்ற தறிக.

செய்யுள்.

எனதுநேய மேபுகிதா யிருக்குந்தளிரி னிராகிநீ
எழினுயமிமேம் படுகுணத்தி னிராகிநானுஞ் சிலிமுகங்கள்
வனமாருனது பாலடைய வருகின்றனவென் பாலினுமா
மதன்விலெழுந்து சிலிமுகங்கள் வருகின்றனவு யகிபதத்தின்
இனமாமிதியுன் றனக்குமுவப் பினையேகொடுக்கு மெனக்குமவ்வா
றேயுற்றதுநம் மிருவருக்கு மெல்லாம்பார்க்கி லேசம்மாத்
தினமுமிருந்த தானும் திகழுமசோக மேநீநான்
செய்யமுகம்நான் கினைப்பெறுவே தியனற்சோகமானேனே.

இங்ஙனம் இராகியாக விருப்பது முதலாகிய வொப்புத்தன்மை யுவமானமாகிய வசோகத்திற்கும் முவமேயமாகிய விரகபுருடனுக்கும் பொதுவாயிருந்தாலும் சோக

மில்லாமை யென்றுந் தாற்பரியங்கொண்ட வசோகமென்னும் பெயருள்ள வுவமானமாகிய தருவைப் பார்க்கினு முவமேயமாகிய விரகனுக்குச் சோகமுற்றிருக்கிற தென்ற குறைவு தோன்றுவதா லிதுவுவமேயக் குறைவான வேற்றுமையணி.

செய்யுள்.

மிகக்கிட மேவியிட் வேபிடிக்குங் கைப்பிடியும்
தக்கதென்னும் பொன்னுறைமேற் றங்கிருப்பும்-புக்கியல்பாச்
சேர்கறுப்புங் கொள்வஞ்சத் திற்குமொரு வஞ்சனுக்குஞ்
சாரிறுதி யக்கரப்பே தம்.

இங்ஙன முவமானோவமேயமாகிய வஞ்சத்திற்கும் வஞ்சனுக்குந் திடமாகிய கைப்பிடி முதலிய வொப்புமை யிருந்தாலு மிறுதியக்கரத்தைப் பேதமாக வுரைத்திருக்கின்றது. உவமானமாகிய வஞ்சத்தைப்பார்க்கினு முவமேயமாகிய வஞ்சனுக்கு மிகை குறைதோன்றுமையால் இஃது இரண்டிமில் வேற்றுமையணி.

---

## உக-வது உடனவிற்சியணி.

(ஸஹோக்தியலங்காரம்.)

உணர்ந்தோருவக்க வுடனிகழ் வோத லுடனவிற்சி
வணஞ்சேரும் வேந்தன் புகழ்திக் குறுமரு வாரொடெனல்
இணங்கு முதாரணஞ் சோமத் தலைவி ருதின்கழல்வங்
கணங்கொள் பதாம்புய துங்க குமாரெட்ட காவலனே.

பன்னூலாராய்ச்சியுள்ளவர்களின் மனமகிழும்படி வுடனிகழ்வதை வருணித்தலுடனவிற்சியணியாம். இதை வடநூலார் ஸஹோக்தியலங்காரமெனபர். இதற்கு "வணஞ்சேரும் வேந்த"னென்பதுமுதலுதாரண மிங்ஙனம் வேந்த

னது புகழ். சத்துருக்களோடு திக்குகளிற் சென்றது என்றமையாற் சத்துருக்களும் புறங்காட்டித் திக்குகளிலோடினார் புகழுந்திக்குகளில் வியாபித்ததென்ற சிறப்புத் தோன்றுகின்றதென்க.

செய்யுள்.

மரங்களினடியிலவைநிழல்சிரமம்வாய்ந்தபோனடந்தேமவழிச்செல்
வாரோடுமிசைந்து வந்திருந்தனநீள் வாவிநீர்த் தண்மையுந்தாபம்
திரமுறப்பொருந்த லுற்றதுபோலச் சேலின மொடுபுனலடியிற்
சென்றதோராழி யிரதனும்வெம்மை சேர்ந்தவன் போற்பலவாகுஞ்
சரங்களினெடுந்தண் புனலினையருந்துதலையுறுகின்றனன்றுயிலுந்
தழைவுறுவருத்த மடைந்ததுபோலத் தலைவிய ரொடுமறைவீட்டுள்
விரைவுறப்புகுந்த திந்தநண்பகலாம்வேளையி லெனதொருமகளும்
வெஞ்சுரநோய்கொள் ளுஞ்சுரம்போக மிஞ்சுர மெங்ஙனமுறுமே.

இங்ஙனம் நிழல் முதலியவைகளுக்கு வழிச்செல்வோர் முதலியவைகளோடு கற்றோர் மனமகிழத்தக்க வுடனிகழ்ச்சி வருணிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விலக்கணத்தி லுணர்ந்தோருக்கவென்ற விசேஷணங் கொடுத்திருப்பமையால் இவரோடு சமுத்திரக்கரையில் விளையாடுவா யென்னுமிடத்தில் உடனிகழ்ச்சி யிருந்தாலுங் கற்றோரை மகிழ்விக்குஞ் சிறப்பில்லாமையா லிவ்வணியாகாதென்க.

---

## உஉ-வது இன்மைநவிற்சியணி.

(விநோக்தியலங்காரம்.)

எதுமொன் றிலாமை யதனாற் புனைவுளிக் கேகுறைவு
கதுவ வுரைக்கி லின்மை நவிற்சியிக் கல்வியுயர்
வதுதா னெனினும் வணக்க நிதிய மருவிலதேல்
அதுமேலன் றென்ன லுதாரணந் தென்னிள சைச்சரசே.

ஏதேனுங் கிஞ்சித்தில்லாமையால் வருணியத்திற்குக் குறைவு தோன்றச் சொல்வது இன்மைநவிற்சியணி. இதை வடநூலார் விநோக்தியலங்கார மென்பர். இதற்குக் "கல்வி" என்பதுமுத லுதாரணம். மிங்ஙனங் கல்வி மேன்மையாயினும் வணக்க நிதியமில்லாவிடில மேன்மையன்றெனக்கல்விக்குக் குறைவு கூறலாயிற்று.

செய்யுள்.

எவனி ராகவற் பார்க்கிலனோ விரா
கவனு மேவனைப் பார்க்கிலனோ வவன்
புவனி மீதுநிந் திக்கப் பொருந்துவன்
அவனைத் தன்னுளும் நிந்திகக லாகுமே.

இங்ஙனம் வருணிக்கத்தக்கவோர் மானிடனுக் கிராகவ தரிசனமென்பது ஒன்றில்லாமையாற் குறைவு கூறலாயிற்று.

இதுவுமதுசவி.

புனைவுளி யேதுமொன் றில்லாமை யூனுயர் வைப்பொருந்தம்
அனையது மவ்வணி மன்னவை நின்னவை கோளறை வோன்
றனையடை யாமையின் மிக்கொளி யாமென் னுதாரணந்தேர்
வனைவுறு சந்திர காவியி டால்கொண்ட மன்னவனே.

ஏதேனுங் கிஞ்சித்தில்லாமையால் வருணியப்பொருள் மேன்மையடைவதும் இன்மைநவிற்சியணியாம். இதற்கு "மன்னவ" வென்றதுமுத லுதாரணம். இங்ஙன மன்னவ நின்ஸபை கோட்சொல்லுகிறவர்களில்லாமையால் விளக்கமுற்றது என்றமையால் வருணிக்கத்தக்க ஸபைக்கு மேன்மை கூறலாயிற்று.

செய்யுள்.

அதிக சினம் நீங்கினவ ளாந்திருவி-
லுருவமையிவ் வரிவை சோமன்
உதயமுற வுந்தமமோ டியவிரவு
போலுமிரா வொளிர்தீ யின்மி

குதிபெறுவெம் புகையகல்சு வாலையது
 போலுமிடி கோடு கீழ்வீழ்
வதின்முழுதுங் கலங்கியபின்
 றெளியாகீரதிபோலும்வதிகின்றுளே.

இங்ஙனம் உவமேயமாகிய பெண் மோகமில்லாமையாலு முவமானமாகிய இரவு முதலியவைக ளிருள்முதலிய வொவ்வொன்றில்லாமையாலும் விளக்கமுற்றிருக்கின்றமை தோன்றிற்று.

---

## உரு-வது சுருங்கச்சொல்லலணி.

(ஸமாஸோக்தியலங்காரம்.)

ஒரு மடைமொழி யொற்றுமை யாற்புனை வுள்ளிவிவ
காரம் புனைவிலி யின்விவ காரத்தைக் காட்டிலதன்
பேருஞ் சுருங்கச் சொலல்காட் டிசைப்பினி ராகியுமா
யேனைந் திரிமுகங் கொஞ்சுஞ் சசியென லெட்டம்னே.

எங்ஙனம் வருணிக்கவேண்டிய விவகாரத்தை வருணிக்கும்போது அதின் விசேஷணங்களி னொற்றுமையின் பலத்தால் அவருணியமாகிய விவகாரந்தோன்றுகின்றதோ அங்ஙனஞ் சுருங்கச்சொல்லலணி. வருணியாவருணியங்களானவிவகாரங்களைச் சுருக்கமாகக் கூறுவதாலிஃதிப் பேர்பெற்றது. இதை வடநூலார் ஸமாஸோக்தியலங்காரமென்பர். இதற்கு "இராகி" யென்பதுமுதலுதாரணம். இங்ஙனஞ் சந்திரனுக்குக்குணதிசையினது முதற்பாகத்தின்ஸம்பந்தமாகிய வுதயத்தை வருணிப்பதில் முகமென்றசொல்லுக்கு முதற்பாகமென்றும் வதனமென்றும் பொருள் சொல்லத்தக்கதாயிருப்புமையாலு மிராகியென்றசொல்லுக்குச் சிவப்பை யுடையானென்றும் காதலையுடையானென்றும் பொருள் கொள்வதாலும் கொஞ்சுமென்பதற்கு ஸம்பந்தப் படுகிறானென்றும் முகக்கிறானென்றும்

பொருள் கொள்வதாலுஞ் சசியென்னும் பதத்திருக்கும் ஆண்பாலாலோர்புருடனெனக் கிடைத்தமையாலும் ஐந் திரியென்னு மிடத்தில் விளங்குகிற பெண்பால் விகுதியா லிந்திரனைச் சேர்ந்த வோர் பெண்ணென்று கிடைத்தமை யாலும் அவருணியமான அன்னியமடந்தையிட மாவலு ள்ள வோர் காமுகனது விவகாரந்தோன்றுகின்றது.

செய்யுள்.

கந்துகமே நீயிந்தச் சுந்தரியான்
மிகக்கனக் கொங்கைகளாடக்
குந்தளமா டப்புறந்தார்ப் பந்திகற்றி
யாடவண்ண குந்தோடாடச்
சந்தமுக மனைவேர்வைத்துளியாடக்
கையடிசந்ததங்கொண்டாட
வந்துயிர்ப்பு மேலாடப் பெட்பொடனு
குற்றதனல் வாழ்வுற் றுயே.

இங்ஙனம் கந்துகத்தின் விவகாரத்தை வருணிப்பதிற் கொங்கைகளிஞ்ட்ட முதலாகிய தொழிலொற்றுமை யிருப்பமையால் விபரீதப்புணர்ச்சி செய்கின்ற தலைவியின் விவகாரந் தோன்றுகிறது. முந்திய வுதாரணத்தில் விசே ஷணங்கள் சிலேஷையாகவிருக்க வொற்றுமை தோன்று கிறதென்று மிவ்வுதாரணத்திற் சிலேஷையன்றிப்பொது வாயிருக்க வொற்றுமை தோன்றுகிறதென்றும் பிரிவு காண்க. இவ்வணி விசேடணங்களினொற்றுமையன்றி முற் றிய வருணிய விவகாரத்தி னொற்றுமையாலும் அவருணி யவிவகாரந் தோன்ற வருமென்பதற்குதாரணம்.

செய்யுள்.

முன்னதிரி னீரோட்ட மெவனுறுமவ்
வண்புளின மோவுண் டிங்காள்
மன்னுதரு வாற்கலக்க மாய்ச்செறிவா
யிருந்தவிட மாறிற் றய்யா

வ்ன்னவெகு நாட்குமுனஞ் சாணிவனம்
வேறெனினே வுறுவே ருறு
பன்னுபருப் பதத்திருப்பவ் வனமென்றே
நல்லுறுதி பண்ணுந் தானே.

இங்ஙனம் வன வருணனையி லதற் கொப்பான தன் மக்கள் செல்வமுதலிய வைகளின் குறைவு நிறைவுகளின் மாறுதலை யுடைய நகர முதலியவைகளின் விவகாரந் தோன்றுகிறது. இங்ஙனம் வருணியாவருணியங்களுக்குப் பொதுவாகிய விசேடணங்களின் பலத்தினலாவது விவகாரத்தி னொற்றுமையினலாவது அவருணிய விவகாரத்தைத் தோன்றச் செய்தல் வருணியமான விசேடியத்திலொற்றுமை யாரோபித்தற்காம். எந்த விடயத்திலாவது வருணியத்திற் சம்பந்தப் படாதிருக்கும் விவகாரங் கவிகளால் வருணிக்கக் கூடியதாக நேராமையாலென்க. இவ்வணியில் வருணியமான விவகாரத்தி லவருணியமான விவகாரத்தை ஒற்றுமை தோன்ற ஆரோபித்தலே மனமகிழ்ச்சிக்குக் காரணம். முகம் சந்திர னென்னுமிடத்து முகத்தில் சந்திரனது தன்மையை ஆரோபித்தற்குக் காரணமாகச் சந்திரனென்றசொற் சேர்க்கை யிருப்பதுபோற் "சசியிராகியுமா யேனாந்திரிமுகம் கொஞ்சு" மென்ற சுருங்கச் சொல்லலணியிற் சந்திரனிடத்திற் சோரநாயகனின் றன்மையை. யாரோபிப்பதற்குக் காரணமாகச் சோரநாயகனென்ற சொற் சேர்க்கை யில்லாமையா லுருவகணியில் வருணியத்தி லவருணியத்தைச் சொரூபமாக வாரோபிப்பதுபோ லிவ்வணியிலில்லை யென்க.

செய்யுள்.

புயன்மி னேத்திரத் தாற்பர புருடனைத் தேடி
முயலு வாள்முக மிரவினி னேக்கிமுன் னைப்
பயமோ டிம்மதி யுமிழ்ந்தன மோவெனப் பரிவு
தயமி குந்துதா னேலமே புரிதனிச் சயமே.

இந்த வேகதேச விவர்த்திருபகத்தில் வருணியமான புயலி லவருணியமான வோர் புருடனது தன்மையை ஆரோபித்தற்குக் குறிப்பாயிருக்கும் பார்த்தற் குபயோகமாகும் பொருட்டாக் கண்களையே முக்கியமாகக் கொள்ளத்தக்க மின்னேத்திரத்தாலென்ற சொற் சேர்க்கை யிருப்பதுபோலு மிங்ஙனமில்லை. அவ்வணியில் மின்னும் விழியாலென்ற சொல்லானது தொக்கியிருக்கின்றது ஓர் புருடனின் றன்மையைப் புயலி லாரோபிக்கவேண்டு மெனக் குறிப்பிடுகின்றது ஏகதேச ரூபகத்துக குதாரணமாகிய "புயன்மினேத்திர"மென்ற செய்யுளில் வருணியத்திற்கே உரித்தான நோக்கியென்ற சொல்லிருப்பதுபோலும் "நிவந்திடு நீவருங்கா" லென்ற வுருவக வுதாரணத்தில் வருணியத்திற்கே யுரித்தான சேதுவை வகுத்திட்டவன் கடைதல் புரிந்தவனென்ற விசேடணச் சொற்களிருப்பது போலு மிங்ஙனமில்லை. சிலேடையான விசேடணங்களாலாவது பொதுவான் விசேடணங்களாலாவது துலங்குகின்ற வருணியா வருணிய விவகாரங்களுககுளவருணிய விவகாரமானது மினேத்திரத்தாலென்னு மிடத்தில் விழி முக்கியமாயிருப்பதுபோல முக்கியமாக இல்லை. "நி வந்திடு நீ வருங்கா" லென்ற செய்யுளில் வருணியத்தைச் சொல்லாதிருக்கினு முரித்தான சேதுவை வகுத்திட்டவன் கடைதலைப் புரிந்தவ னென்ற விசேடணங்களால் அவருணியத்தின் சொரூபமாரோபித்தலிருப்பதுபோலு மவருணிய விவகாரத்தை யறியக்கூடிய அவருணியத்திற்கே யுரித்தான விசேடணங்களுமில்லை யாதலால் வருணிய விவகாரத்தின் விசேடண ஒற்றுமையாற் கிடைத்த அவருணிய விவகாரத்தை வருணிய விவகாரத்திலாரோபிப்பதே யிவ்வணியில் மனமகிழ்ச்சிக்குக்காரண மென்க. தனித்தனியாகக் கூறிய விசேடணங்கள்போலப் பொதுவாகவாவது சிலேடையாகவாவது இருக்கும் விசேடணங்களின் பலத்தினாற் கிடைத்த வருணி

யாவருணிய விவகாரங்கள் நேரில் விசேடியத்தோடு சம்பந்தப்படுவதா லிரண்டு விவகாரமு முக்கியமாகவே யிருக்கின்றன. அவ்வாறிருந்தாலும வருணிய விவகாரஞ் சம்பந்தப்படுவதற்காக வருணியத்தி லவருணியத்தின் சொரூபமாரோபித்தலே அங்கீகரிககத்தக்கதன்று. வருணியமான சந்திர விசேடியத்தில் அவருணிய விவகாரத்தின் சேர்க்கை யெவ்வாறு நேராதோ வவ்வாறே அவருணிய விசேடியமான சோரநாயகனிடத்தில் வருணிய விவகாரத்தின் சம்பந்த நேராது. ஆதலால் முக்கியமாயிருக்கும் வருணியா வருணிய விவகார மிரண்டனுள் ஒன்றி லொன்றி னாரோபித்தலே முககியமாக அங்கீகரிக்க வேண்டுவதாற் சொற்களாற் கூறப்பட்டிருக்கும் வருணிய விவகாரத்தி லவருணிய விவகாரத்தை யாரோபித்தலே யுசிதமென்க. இங்ஙனம் வருணியத்திற் சிலேடையாகவாவது பொதுவாகவாவது இருககிற விசேடணங்களாற் கிடைத்த ஆவலுடன் முகத்தை முகக்கிறானென்ற அவருணிய விவகாரத்தினாரோபித்தலே மனமகிழ்ச்சிக்குக் காரணமென்று தீர்மானிக்கப்பட்டிருப்பமையாலும் விசேடணங்களி னொற்றுமையா லுண்டுபண்ணப்பட்ட காமுகன் முதலிய வந்தந்தத்தருமிகளைக் கருதி ஆரோபத்தினபேக்ஷித்த லில்லாமையாலும் விசேடணங்களி னொற்றுமையா லந்தந்தத்தருமிகளான வவருணியங்கள் தொகையாக விளங்குகிறது சுருங்கச் சொல்லலணி யென்ற தாத்பரியமுள்ள

செய்யுள்.

புனைவழி மேவடைச் சொல்லொற் றுமைபிற் புனைவிலியா
நினைவது மேமறை வாகி விளங்கி நிகழ்த்தவரில்
வனையும் பெயர்சுருங் கச்சொல் லென்று வருத்தனனு
லனைவருந் தேர்வித்தி யாநாத னென்னு மருங்கவியே.

என்ற இலக்கணம் எவ்வாறு சம்பந்தப்படுமென்றா லோ அதற்குக் கூறுவாம். அவருணியமான விவகாரத்தை யந்தந்தத்தருமிகளைக் கருதிச் சொரூபமாரோபித்தல் மனமகிழ்விப்புக்குக காரணமாகமாட்டாது. அவருணியமான காமுகன் முதலியவர்களின் சம்பந்தத்திலறியப்படுகிற வவருணிய விவகாரத்தி னாரோபித்தலே காரணமாம். அந்தந்தத்தருமியாகக் கருதுவதில் விசேடணங்களுக்குச் சாமர்த்தியமில்லை. ஆதலாற் சிலேடை முதலியவைகளின் சாமர்த்தியத்தினாற் சொரூபமாக விசேடண பதங்களாலுண்டுபண்ணப்பட்ட முகம் கொஞ்சுதல் முதலியவைகளா லந்தச் சம்பந்தமுள்ள காமுகன் முதலியவர்களின் றோற்றமுண்டானதின் பின்பு அக்காமுகன் செய்த முகமுகத்தலென்ற அறிவுண்டாகின்றது. உலகத்திலோர் மன்னவனது குதிரையைச் சொரூபமாகக கண்டவுடனம் மன்னவனது நினை வுண்டாகிப் பின்பிக் குதிரையம் மன்னவனது என்ற ஞானமியல்பாக வுண்டாகின்ற தன்றோ? அவ்வாறே இங்ஙனமும் விசேடணங்களினொற்றுமையாற் காமுகன் முதலியவர்களி னினைவுண்டாகிப் பின்பவனுடைய தென்ற ஞானம் உதிக்கின்றது. ஆதலால் பொதுவான விசேடணங்களிருக்கு மிடத்தி லவருணிய விவகாரத்தை ஆரோபிப்பது போலவே சிலேடையான விசேடணங்களிருக்கு மிடத்திலுமவருணியமான விவகாரத்துக்காரோபமென்றே முன்னூலாரின் முடிபென்க. சொரூபமாகக் கந்துகத்திற் சுந்தரியின்னனுகுதலிருப்பமையாலுமஃதாரோபிக்க வேண்டுவதில்லாமையாலும் ஆட்டமுள்ள கொங்கைகள் முதலியவைகளுடன் கூடிய சுந்தரியின் னனுகுதலே காமுக சம்பந்தமுள்ளதாக வைத்து ஆரோபிக்கவேண்டிய திருப்பதாலுஞ் சாதுருசியத்தினாலவருணிய விவகாரந்தோன்றுகின்ற சுருங்கச் சொல்லலணியிற் சொற்பொருளில்லாமலிருக்கு மவருணிய விவகாரத்தை யந்தந்தத்தருமிகளைக் கருதி ஆரோபிப்பதற்கிடமி

ல்லாமையா லவருணிய விவகாரமாகவே யாரோபிக்கவே ண்டிய திருப்பதாலு மற்று முதாரணங்களிலு மவருணிய விவகாரத்தையே யாரோபிப்பதுசிதமென்க. முன்னோரி லக்கணமு மிக்கருத்தையே கொண்டதென்று ஊகிக்கவே ண்டுமென்க.

## உ௪-வது கருத்துடையணி.

(பரிகராலங்காரம்.)

செய்யுள்.

கொண்டவி சேடணத் திற்புனை தற்கனு கூலக்கருத்
துண்டெனி னுமும் புகல்வ துகருத் துடையடையென்
றண்டு மமுத கரமுடி நாதன கற்றுகநம்
எண்டெறு தாபத்தை யென்ன விலகிய மெட்டமனே.

எங்ஙனம் விசேடணம் வருணிக்கிற தாற்பரியத்துக்க நுகூலமான கருத்தைக் கொண்டிருக்கின்றதோ வங்ஙனங் கருத்துடையணியாம். இதை வடநூலார் பரிகராலங்கார மென்ப ரிதற்கு அமுதகர முடிநாத னென்பது முதலுதா ரணம். இங்ஙனஞ் சிவபெருமானுக்கு அமுதகர முடிநாத னென்ற விசேடணங் கொடுத்திருப்பமையாலது அவருக் குத் தாபத்தை நீக்குவதில் விசேடமான சாமர்த்திய மி ருக்கின்ற வபிப்பிராயத்தை விளக்கிற்று.

செய்யுள்.

ஏவா சவநான மலர்ப்பாணத் தினனாய்
வசந்த னென்பவனை
யோவா நேச மாகவுங்கொண் டுனது
பிரசா தப்பெருக்கால்
கோவாம் பினாக பாணியெனக் குறிக்கு
மரற்கும் பலங்குறைப்பே

ஞவா வெனக்குப் பதித்திடத்தக் கவரா
மற்றை யருந்தானே.

இங்ஙனம் பரமசிவனுக்குக் கொடுத்த பிநாகபாணி என்ற விசேடணமு மன்மதனுக்குக் கொடுத்த மலர்ப்பாணத்தோ னென்ற விசேடணமு மவ்விருவர்களுடைய அதி பலத்தையும் பலக்குறைவையும் விளக்கிற்று.

செய்யுள்.

எல்லா வசுதத விருப்பா யுபசார
நல்லாப் புரிந்ததைவி ஞக்குவதாய்ப்—பொல்லாத
வீவதுமாய் வந்தகெட்ட மெய்விடய மாய்மூடர்
பாவம் புரிவரலர் பாழ்.

இங்ஙனஞ் சரீரத்துக்குக் கொடுத்த விசேடணங்களதற்கு மிகுதியான குறைவை யுண்டுபண்ணிக் காப்பாற்றத்தக்கதன்றென்ற கருத்தை விளக்குகின்றன.

செய்யுள்.

வன்றிறலோ யாமொருமைப் படுமறையைப்
பிரிக்கவிலை வன்மீ கத்தி
னின்றும்வெளி யுதிக்கவிலை யச்சுதனுந்
திப்பிறப்பி னோர வில்லை
நன்றுறுமா பாடியமு மியற்றவிலை
பெருங்கதையு நவில விலலை
வென்றிமக வான்குருவா கவுமிலையுன்
குணம்புகழ்ந்தெவ் விதஞ் சொல்வேனே.

இங்ஙனம் மறையைப்பிரிக்கவில்லை யென்றது முதலிய விசேடணங்கள் தன்னிடத்தில் வேதவியாசர் முதலியவர்களாற் செய்யக்கூடிய செய்கையைச் செய்ய வன்மையில்லை யென்ற வபிப்பிராயத்துடன் கூடிய நான் வியாசர் முதலியவர்களல்ல வென்ற வபிப்பிராயத்தைக்

கொண்டிருக்கின்றன. இங்ஙனமுந்திய விரண்டுதாரணங்களி லொவ்வொரு விசேஷண மபிப்பிராயமுள்ளதாக விருக்கின்றது. பிந்திய விரண்டுதாரணங்களிற்பல விசேஷணங்களபிப்பிராய முள்ளவைகளாக விருக்கின்றன. அதிலு முதலாவதுதாரணத்தி லெல்லா விசேஷணங்களு மொரேயபிப்பிராயங்கொண்டவைகளு மொவ்வொரு சொற்களாகவு மிருக்கின்றன. இரண்டாவதுதாரணத்தில் வெவ்வேறன வபிப்பிராயமுள்ளனவாகவும் வாக்கிய ரூபங்களாகவு மிருக்கின்றன. இவ்வுதாரணங்களில் வெங்கியமான பொருளிருந்த போதிலும தொனியென்ற விவகாரமில்லை. பரமசிவனுக்குத் தாபத்தை நீக்குவதிலும், மன்மதன் பிறகுபாணியான பரமசிவனது தைரியத்தைக் குறைத்து விட்டானென்றால் மற்றும் வில்லாளிகளைப் பங்கஞ் செய்வதில் என்ன சொல்லவேண்டு மென்பதிலும், சரீரத்தைக் காக்கும் பொருட்டாய்ப் பாவஞ் செய்கின்றவர்களுக்கு மூடத்தன்மையைக் கற்பிப்பதிலும், புகழக்கூடிய வரசன் குணத்தை வருணிப்பதிற் றனக்குப் பலமில்லாமலிருப்பதிலும் விசேஷணங்கள் கூர்த்த முண்மைத் தாற்பரியத்தாலுபயோகப்படுவதைப்பற்றி யிவ்வணி யிப்பேர்பெற்றது. இங்ஙனம் சிலர் பயனில்லாத விசேஷணங்களைச் சொல்வதில் அபுஷ்டார்த்த தோஷமென்றும் பயனுள்ள விசேஷணத்தைச் சொல்வதி லவ்வித தோஷமில்லையென்றும் நிச்சயித்துப் பயனுள்ள வனேக விசேஷணங்களைச் சொல்வதி லோர் விசித்திர மிருப்பதா லவ்வண்ணம் பல விசேஷணங்களைச் சொல்லுமிடத்தி லிவ்வணியாமே யல்லது பயனுள்ளவொரு விசேஷணத்தைச் சொல்லுமளவில தோஷ மில்லாமலிருப்பதைத் தவிர இவ்வலங்காரமென்று சொல்லக் கூடாதென்றார். இதனுண்மையாயுங்காற் பயனுள்ளவனேக விசேஷணங்களைச் சொல்லுமிடத்திற்றானிவ்வணி யென்ற நிர்மான மில்லை. சிலேஷையமக முதலிய விடங்களில் பயனில்லாமலிருக்கிற விசேஷணங்களைச் சொன்னபோதி

லும் அவ்வித தோஷமில்லை என்றங்கீகரிக்கப்பட்டிருப்ப மையா லவ்விடங்களி லொரு விசேஷணம் பயனுள்ளதா யிருந்த போதிலும் மனமகிழ்விக்கு மாதலால் இவ்வணி யே யாகின்றது காண்க.

செய்யுள்.

வாய்ப்புறுதன் தெய்வம்விடுத் தேவேறு வணங்குபவன்
பூப்பினுறு தேவிழப்பு மறப்பாவம் பொருந்துவனுங்
காப்பதலைத் தேவுண்டையார் காப்பதலை யெனவருவோ
னுப்பிறங்கு மகவானைத் தேவாக்கி னுரலவே.

இங்ஙனம் இந்திரனைப் பூசைசெய்யத் தொடங்கிய நந்தன் முதலியவர்களை நோக்கிக் கண்ணன் சொல்லிய கோவர்த்தனகிரியே நம்மைப் புரக்குந்தெய்வ மதையே நாம்பூசிக்கவேண்டும்; நம்மைப் புரக்காமலிருக்கிற இந்திர னைப்பூசிக்க வேண்டுவதில்லை என்ற வாக்கியத்திற் கோ வர்த்தன கிரியினது "கா" என்றவிசேஷணமிப்பருவதம் வ னத்தையும் அருவிகளையும் கந்தமூலபலங்களையுந் திரணங் களையுங் கொண்டிருப்பமையால் நம்மையும் நமது பசுக் களையும் காக்கின்றது என்ற அபிப்பிராயத்தைக் கொண் டிருக்கிறது. இவ்வண்ண மிங்ஙன மநுகூலமான கருத் துள்ள வொருவிசேஷண மிருக்குமிடத்திலு மனமகிழ்ச்சி யுண்டாவதா லிவ்வணியாகத் தீர்மானிப்பமையால் மற்று மமுதகரமுடி நாதனென்ற பயனுள்ளவொரு விசேஷண மிருக்கு மிடத்திலு மிவ்வணியென்னத் தடைபடாதென்க. அல்லாமலு மொரேபதத்தினுல் வருணியமான பொரு ளைப் பொருந்தும்படி செய்கிற தொடர்நிலைச் செய்யுட் குறியென்ற அணியை யெல்லாரு மங்கீகரித்திருப்பமை யால் இங்ஙனமும் அவ்வாறே யலங்காரமாக ஒப்புக்கொ ள்வது உசிதமென்க.

## ௨௫-வது கருத்துடை யடைகொளியணி.

(பரிகராங்குராலங்காரம்.)

செய்யுள்.

நடைகொள் விசேஷியந் தானே புனைந்து நவிலுவதற்
குடையநு கூலக் கருத்தோ டிலது கருத் துடைய
அடைகொளி மாலென் சதுர்ப்புய னற்பொரு ளானவையின்
கொடையுள னென்ன விலகுவ தெட்டம கோளரியே.

எங்ஙனம் வருணிக்கக் கூடிய தாற்பரியத்துக் கநு கூலமான கருத்துள்ள விசேஷியம் விளங்குகின்றதோ அங்ஙனம் கருத்துடை யடைகொளியணியாம். இதை வட நூலார் பரிகராங்கு ராலங்காரமென்பர். இதற்கு மாலென் பதுமுத லுதாரணம். அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நால்வகைப் பொருள்களையும் கொடுக்கின்றவர் திருமாலாகிய சதுர்ப்புய னென்றமையால் நால்வகைப் பொருள்களைக் கொடுப்பதற்குரிய நான்குகைகளுள்ளவ ரென்ற அநுகூலக்கருத்துள்ள விசேஷியம் விளங்குகின்ற தென்க.

செய்யுள்.

கூர்த்தவேல சேஷனின் குணத்தையே வருக்கவும
கார்த்தவீரி யார்ச்சுன னெழுத்துவேலை காணவும்
பார்த்தல்காரி மேவவும் பருககவல்ல ரிவ்விதத்
தார்த்தசீர்க் குணங்களெங்ஙன் யானுமெங்ஙனண்ணலே.

இங்ஙனம் அரசனது நற்குணங்களின் மேன்மையை வருணிக்கவு மெழுதவும் பார்க்கவு முரித்தாயிருக்கு மாயிரமுகங்களையு மாயிரங் கைகளையு மாயிர நயனங்களையுங் கொண்ட வாதிசேஷன் கார்த்தவீரி யார்ச்சுன னிந்திர னிம்மூவரையு மந்தந்தத் தொழில்களுக்கு விசேஷியமா

கக் கொண்டமை யுணர்க. முந்தியவுதாரணத்தில் நாற்புய னென்னும் விசேஷியத்தொகை வெளிப்படையாயு மிங்ஙன மாயிரமெனனுந் தொகையடை விசேஷியம் மறைந்தும் வருவதுணர்க.

---

## ௨௯-வது சிலேஷையணி.

(சிலேஷாலங்காரம்.)

செய்யுள்.

தெரியும் பலபொருட் சொற்களின் சேர்க்கை சிலேஷையது
வருணிய மேய வருணிய மேயிரு மையெனவாம்
மருவி வருமலை யம்புவி யேந்திய மாதவன்காண்
ஒருகுளக் கண்ணா புரக்குக மென்ப தொன்றிற்குமே.

அமுது விரவி யுழையா ரலரொப் புறுநகமுத்
தமியென்ப தொன்றிற்கு மம்பி னதிபதி தானிசையை
யுமிழுங் கறையுறு மென்பதொன் றிற்கு முதாரணமாஞ்
சிமிழ்முலை யார்மத னென்னுங் குமாரெட்ட சீதரனே.

எங்ஙனம் பல பொருள்களுள்ள சொற்களின் சேர்க்கை விளங்குகின்றதோ வங்ஙனஞ் சிலேஷையணியாம். அது வருணியச்சிலேஷை யென்று மவருணியச்சிலேஷை யென்று மிருமைச்சிலேஷை யென்றும் மூன்றுவகையாம். இதை வடநூலார் சிலேஷாலங்கார மென்பர். இம்மூவகைச்சிலேஷைக்கும் வருமலை யென்பதுமுதல் நிரலேயுதாரணங்கள். அவற்றுள் "வருமலை யம்புவி யேந்திய மாதவன் காண்" என்பதில் வருணிக்கப்படுஞ் சிவபெருமானுக்குந் திருமாலுக்குஞ் சிலேஷைவந்தமையும் "அமுது விரவியுழையாரல ரொப்பு றுநகமுத்தமி" யென்னும் நாயகிமுக வருணனையில அவருணியங்களாகிய தாமரைக்குஞ் சந்திரனுக்குஞ் சிலேஷை வந்தமையும் "அம்பி

ஷதிபதிதானிசையை யுமிழுங்கறை யுறு" மென்பதிலிருக்கும் அம்பின்தாக்குதலாற் பெருகிய குருதிப்பெருக்குள்ள படைத்தலைவனது வருணனையில் அவருணியமாகிய சமுத்திரத்து சிலேஷையாக வந்தமையுங் காண்க.

செய்யுள்.

எழும ராப்பட வாட்டம் பிடித்துமே
வழுவை யுங்கொன்ற மானையுங் கொன்றிடத்
தொழும்ப ரதனுக் கண்ணனு மாத்துலங்
கொழுங் குறும்புயற் கன்புள ருய்வரோ.

இங்ஙனம் வருணிக்கத்தக்க இராமனுக்குங் கிருஷ்ணனுக்குஞ் சிலேஷைவந்தமை காண்க.

வெண்பா.

பொன்னம்பா வைக்குநிகர் பூங்கொடியே வில்வேடன்
முன்னம்பா யப்பயமு மூழ்கிக்கான்—மன்னுதலாம்
வாயு மிருகஞ் சமானமே வித்திகழும்
பாயுனது கண்ணினுக்குப் பா".

இங்ஙனம் நாயகியின் விழிவருணனையி லுவமானங்களாகிய மானுக்குந் தாமரைக்கும்வந்த வவருணியசிலேஷை காண்க.

செய்யுள்.

அரியனை யுதய மேறியுங் காந்தி
மானென வாகியு மிராகம்
விரியுமண் டலத்தோ ளுகியும் விளங்கு
நிலமன்மெல் லியகரங் களினூற்
பெரியதா மலக மடங்கலு மனத்திற்
பெறுமகிழ் வினைவிளைத் திடுவான்
தரியல ருளமு முருககுமின் சுவைசெந்
தமிழமு தூறுநா வலரே.

இங்ஙன மிரவிற் சந்திரோதய வருணனையில் அவருணியமான அப்பொழுது முடிபுனைந்த அரசன், சிலேஷை யாக வந்தமைகாண்க. இருமைசிலேஷை யுதாரணத்தில் விளங்குகின்ற வவருணியப்பொருளை யந்தந்தச் சொற்களின்சக்தியாற் றோன்றுகின்ற குறிப்பென்று முன்னோர்கள் கூறுகின்றார். அதில் வருணியாவருணியக் கருத்தினாலுண்டாகிய வுவமையணியைக் குறிப்பாகக் கூறவேண்டுமென்பது கருத்தே யல்லது அவருணியப் பொருளைக் குறிப்பாகக் கூறவேண்டு மென்பதல்ல. சொற்களின் சக்தியினால் விளங்குகின்ற வவருணியப் பொருளையு மந்தந்தசொற்பொருளாகவே கூறவேண்டுவது முக்கியமாதலாலதைக்குறிப்பெனக் கூறுவது உசிதமல்ல. ஆனால் அந்தந்த வரலாற்றின் பலத்தினால் வருணிக்கவேண்டிய பொருள் சீக்கிரமாகப் புத்தியிலுதித்ததின் பின்பு நிலமன் கர முதலிய சொற்களின் பலத்தினால் அவருணியப் பொருள் விளங்குகிறது. சொற்களின் சக்தியால் விளங்குகின்ற இதைக்குறிப்பெனக் கூறுவிட்டாலும் வருணியமான பொருள் தோன்றியபின்பு அவருணியப் பொருள் விளங்குவதால் மறைபொருட் சிலேஷையாமோ வெனில்.

செய்யுள்.

மருங்கினி லுறப்ப யோதரந் தூங்கல்
மருவியு மேகநீ ரூறல்
அரும்பியுங் கடமே வளைந்துபல் லிடத்தி
லாம்வலி மேவியுங் கனமே
பொருந்தியுங் கூடற் கருமையா கியுங்கட்
புலமறி யாமலு மூடி
இருஞ்சய மடுத்து முதிர்வுறு சார
லிசைந்திடு மலையிது மாலே.

சிவன்கொணில வாரியன்வந் திடுமுனஞ்சூ ரியகாந்த
மவிந்தகனலினைக்கொண்ட திருள்வீக்க மடைந்ததுமே

னிவந்திடுநோக் கழுந்திமிரத் தாழ்கேடு நேர்ந்ததுகாண்
குவிந்தமுலை மலைகுலுங்க நடஞ்செய்மடக் கொடியிடையே

இச்சுருங்கச சொல்லணியி னுதாரணங்களில் மறை பொருட்சிலேடை யிருப்பதுபோ லரியணையென்னுங் கவி யில் வந்த இருமைச்சிலேடை யுதாரணத்திலும் மறை பொருட் சிலேடையாகக் கொளினும் பொருந்துமெனக் கொள்க. மருங்கினிலுற வென்னுங் கவியில அவ்வேளைக் குரியபொருள் விரைவாகப புத்தியிற்றோன்றிய பின்பு சிலேடையான விசேஷணங்களி னொற்றுமையால் முதிர் ந்த வயதுள்ள வேசைமாதின் வரலாறும் சிவன்கொணி லவாரிய னென்னுங் கவியி லவ்வேளைக்குரிய சந்திரோ தய விவகாரம் தோன்றியபின்பு வைத்தியனது விவகார முந் தோன்றுவதால் அவ்விரண்டிடங்களிலுஞ் சுருங்கச் சொல்லலணியும் செமமொழிச சிலேடையு மிருக்கின்ற தென்பது யாவருக்கு முடன்பாடேயாமென்க. இவ்வா றே மறைபொருட சிலேடையுள்ள விடங்களிற் குறிப் பெனக் கொள்ளற்க.

செய்யுள்.

வலங்கொளுந் துவாரகைக் குமாரரரி வையருடனே
துலங்கிடுகோ லமுந்திரத்து வசங்கொடுமேற் றோற்றுகையும்
இலங்குதனிக் கற்பணியு மெழில்நிலவு மடிவயிறும்
அலங்கொளுமேல் மாளிகையி லகலாது வதிகுவரால்.

இங்ஙனங் கோலமுதலிய விசேஷணங்கள் மாடத் திற்கு நேரிற்பொருந்துவதுபோல் அரிவையர்க்கு நேரிற் பொருந்தாமை யானும் அவைகளைப் பொருத்தற்குரிய போல் முதலிய சொல்.

செய்யுள்.

உறும்பலகு கப்படையுற் றாதையின்றோற் றத்தாற்
பெறுமலைவு காணப் பிறங்கித்—திறமாம்

இராகவ னரிலக்வ னையிசை வாலி
பராவுறுவான் மீதிசொலொப்பாம்.

என்னும் ஆக்ஷிப்தசிலேஷைக் குதாரணமாமிக்கவிப்பி விருப்பதுபோலில்லாமையானுமவ்விசேஷணங்கள் அரிவையரிடம் பொருந்து முன்னமுடனென்னும் வேற்றுமையுருபாலுடனிகழ்ச்சியன்றி யொப்புமைத் தோற்றம் பெறுமையானுமவ்விசேஷணங்களிலிருக்கும் பொருட்சிறப்பாலே அவை யரிவையரிடத்திலும் பொருந்துகின்றனவெனக் கொள்ளுதலானு மறைபொருட்சிலேஷையென்க இச்சிலேஷையும் விசேஷணங்களிலரிவையரிடம் பொருந்தியபின் றோன்று முவமையணிக்கங்கமாகின்றமைகாண்க. இவ்வாறு மூவகையாகப்பிரிந்த சிலேஷை செம்மொழிச்சிலேஷை பிரிமொழிச்சிலேஷையென விருவகைப்படும். அவற்றுள் - முன்னையது கான் - பயோதர - முதலியவென்றும், பின்னையது - வருமலையம்புலி - படவாட்டம் பிடித்து முதலியவென்றுங் கொள்க. இங்ஙனம் பிரிமொழிசசிலேஷையைச் சொலலணி யென்றும் செம்மொழிச்சிலேஷையைப் பொருளணியென்றுஞ் சிலரிரண்டையுஞ் சொல்லணி யென்றுங் கூறுவாருமுளர். இவ்விரண்டும் பொருளணியென்பதே யாசிரியர் கருத்து. இன்னு மிதன்விரிவை சசித்திரமீமாம்ஸையிற் கண்டு கொள்க.

---

## உஎ-வது புனைவில்லிப் புகழ்ச்சியணி.

(அப்ரஸ்துத ப்ரசம்ஸாலங்காரம்.)

செய்யுள்

அவ்வரு ணியவர லாற்றால் வருணியத் தாம்வரலா
றிவரி லதுபுனை வில்லிப் புகழ்ச்சி யிலங்குகரி
யவனையல் லார்க ணிரவாத சாதக மானதுபுள்
ளளவையினு மேலென் றிசைத்த விலக்கிய மெட்டமனே.

எங்ஙனம் அவருணிய விவகாரத்தின் வருணனையால் வருணியவிவகார மறியப்படுகின்றதோ வங்ஙனம் புனைவில்லிப்புகழ்ச்சியணி. இதை வடநூலார் அப்பிரஸ்துதப்பிரசம்ஸாலங்காரமென்பர். அவருணிய விவகாரத்தின் வருணனையால் வருணியவிவகாரத்தினறிதலும் வருணியாவருணியங்களுக் கொருவித ஸம்பந்த மிருப்பதா லுண்டாகின்றது. அச்சம்பந்தமும் ஸாதிருசியமாகவும் பொதுச்சிறப்பின் தன்மையாகவும் காரிய காரணத் தன்மையாகவும் வரும். அவற்றுட் பொதுச்சிறப்பான தன்மையிற் பொதுவாற் சிறப்பினறிதலும் சிறப்பாற் பொதுவினறிதலு மென விருவகைப்படும். காரியகாரணத்தன்மையிலும் காரியத்தாற் காரணத்தினறிதலும் காரணத்தாற் காரியத்தினறிதலு மென விருவகைப்படும்-ஸாதிருசியத்தினாற் ஸாதிருசியந் தோன்றுவ தொன்றும்-ஆக இபபுனைவில்லிப் புகழ்சசி ஐவகைப்படுகின்றது. இவ்வாறே இப்பிரிவை முன்னூலாருங்கூறினார்.

செய்யுள்.

காரியங் காரண மேனும் பொதுச்சிறப் பேனுங்கவி
தேரும் வருணிய மாங்கண்மற் றென்றினைச செப்புவதா
லோரும் வருணிய மொப்புடை யாகமற் றேரொபபுமை
சார வுரைத்தலி னுலிவ் வணியுமைந் தாய்வருமே.

இவ்வைந்து பிரிவுகளுக்குட் ஸாதிருசியத்தினாற் கிடைத்த பிரிவுக "கிலங்குங்கரியவ"னென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் அவருணியமான சாதகப்புள்ளினது வரலாற்றால் வருணியமாகிய புல்லியர்களிடத்தி லிரப்பதில் நாணமுற்ற வோர் மானியினுடைய வரலாறு ஸாதிருசியத்தினால் அறியப்படுகின்றது.

செய்யுள்.

நாய்ப்பிடர்த் தலையிற் பொய்ம்மயிரப பந்தி
நன்குறக் கட்டியு மதனை

வாய்ப்புறு சீயக் குகையிடை வதிய
வைக்கினு மும்மதம் பெருகப்
பூப்புறு களிநல் யானைமத் தகத்தைப்
போழ்ந்திடு மாவன்மிக கூர்ங்கட்
டிப்படு மடங்கற் றெனியையெங்ஙனமே
செய்திடு மறிகுவை மகவே.

இங்ஙனம் அவருணியமாகிய நாயினதுநிந்தையால் வர்ணியமாயுள்ள பொய்வேடமுதலியவைகளால் வித்து வானுகப் பாவகஞ்செய்கின்ற வோா மூர்க்கனது விவகாரம் ஸாதிருசியமாகத் தோன்றுகிறது.

செய்யுள்.

உள்ளங் குழலுற் றுறவெளியிற் கண்டகங்கள்
கொள்ளுமரைத் தண்டின் குணஙக ளெங்ஙன்
றேற்றுபங்க மேயடையா து.

இங்ஙனந் தாமரைத்தண்டினது வரலாற்றைக் கூறியதால் வெளியிலனேக துர்ஜனர்களால் வியாபிக்கப்பட்டு மகத்தில் ஸஹோதரர் புத்திரர் முதலியவர்களாற் கலகம் செய்யப்பட்டு மிருக்கிற வோா மானிடனது வரலாறு தோன்றுகின்றது. இம்மூன்றுதாரணங்களுக்குள் முதலாவ துதாரணத்தில், துதியானஸாதிருசிய வரலாறு தோன்றுகிறதென்று, மிரண்டாவ துதாரணத்தில் நிந்தையான ஸாதிருசிய வரலாறு தோன்றுகிறதென்றும், மூன்று முதாரணத்திற் றனிகுணமான ஸாதிருசிய வரலாறு தோன்றுகிறதென்றும் பிரிவு காண்க.

செய்யுள்.

அழுக்காறு மருவிச்சத் துருவினைகத் தேபகைமை
யொழுக்காநின் றெவரொளிதா நினைக்கின்று ரவருலர்ந்த
குழுக்கானற் சருகினிடைக் கொழுங்கனலே யேகொளுத்தி
முழுககாற்று வந்தடிக்க முன்சயனிக் கின்றுரே.

இது பொதுவாகிய விவகாரத்தாற் சிறப்பாகிய வரலாறு தோன்றுவதற் குதாரணம். இங்ஙன முன்னமே பொருமையோடு கூடியிருக்குஞ் சிசுபாலனிடத்து ருக்மணியை அபகரித்தல் முதலியவற்றால் விரோதத்தை விர்த்தி செய்திருக்குங் கண்ண னவனை யெளிதாகநினைப்பது உசிதமல்ல வென்று வர்ணிக்க வேண்டியதிருக்க வவ்வாறன்றிச் சத்துருக்களிடம் விரோதத்தை விர்த்திசெய்து எளிதாக நினைப்பவர்களென்ற பொதுவிவகாரம் வருணிக்கப்பட்டிருக்கின்றது.

செய்யுள்.

ஆற்று பலவித நேயமென் றுடகத்
தேற்ற மாற்றுரைக் குப்புற மேயெமா
சாற்று சோதனை செயுரை கலொன்று
தோற்ற மேவி யிருந்தது தோன்றலே.

இதுவுமது. இங்ஙன மொருவனைப் பார்த்து நீ யெனது முன்னிலையி லநுகூலத்தைச செய்வது போற் புறத்திலு மநுகூலஞ் செய்வாயாகில் நீயே யெனக்கு மேன்மையான சிநேகனென்ற சிறப்பைக் கூறவேண்டியதற்கு நேயமென்னுஞ் சுவர்ணத்தை மாற்றுக்காணப் புறமாகிய உரைகல்லிருக்கின்ற தென்ற பொதுவிவகாரம் கூறப்பட்டிருக்கின்றது.

செய்யுள்.

மடியில் மான்கொண் மதியம் மிருகத்தாற்
கடிக ளங்கமுற் றுன்மிரு கங்களை
அடிக ளால்வெலுங் கேசரி யானது
படிமி ருகப தியென் றுரைக்கவே.

இது சிறப்பாற் பொதுவிவகாரந் தோன்றுவதற் குதாரணம். இங்ஙனங் கண்ணனிடத்திற் பலராமன் சொல்லிய வசனத்தில் மெல்லிய தொழில் மேன்மைபெறுது கொ

டுமைத் தொழிலே மேன்மை பெறுமென்ற பொதுவான விவகாரம் அவருணியமும் சிறப்புமாக விருக்கிற சந்திர விவகாரத்தாலுஞ் சிங்க விவகாரத்தாலு விளங்கிற்று. இவ்வாறே பெருங்கதை முதலிய காவியத்திற் பொதுவாற் சிறப்புத் தோன்றுமிடங்களி லிவ்வணியைக் காண்க.

செய்யுள்.

நிசமறையோ ரூற்றமயந் தியின்வதன
மியற்றுதற்கு நேடிச சாரா
மிசமதுதொட் டெடுத்திடப்பட் டதுபோல
நாப்பணிடை மிளிரா துவாரம்
வசமுறுவ தாயுமதிற் றேன்றுவெளி
யின்மிகுமை வாய்வ தாயும்
சசியதுமண் டலங்காணத் திகழும்வள
நிறைநிடதந் தழைக்க வந்தோய்.

இஃது காரணத்தினுற் காரியந் தோன்றுவதற் குதாரணம். இங்ஙனந் தமயந்தியின் வதனத்தை யுண்டுபண்ணும்பொருட்டாய் அதற்குக்காரணமாகச் சந்திரனது மத்தியிலிருக்கும் ஸாரமான அம்சத்தி னபகரித்ததலே வர்ணித்ததா லெல்லாப் பெண்களின் முகத்தைப் பார்க்கினுந் தமயந்தியின்முக மதிக ஸௌந்தரிய முள்ளதென்ற காரியம் விளங்கிற்று.

செய்யுள்.

வருமாதந் தொறும்பேத முறுநி லாக்கள்
மதிக்கும் பரம பதங்கொண் டாடலுற்று
மருவிய சரீர மழிவுறுங் காலத்து
வாய்த்திடு மேலாம் பதவியதி லேயிச்சை
பெருகினவை யாகவுமே யுரிமை யாகிப்
பிறங்குமது வதனமதில் விடங்க மென்னும்
பரவுறுபுண் ணியக்குழுவை நிறுத்தி விட்டுப்
பரிதியின்பாற் செலுந்துவரைப் பதிவந் தோரே.

இதுவுமது. இங்ஙனஞ் சந்திரர்கள் தமது பேரழகாகிய புண்ணியத்தை வைத்தலெனுங் காரணத்தால் திருமாலுடைய முகம் அநேககோடி சந்திரருக் கொப்பான பேரழகைக் கொண்டிருக்கிற தென்ற வருணியமான காரியம் விளங்குகின்றது. சந்திரனொருவனாக விருந்தாலு மொவ்வொரு மாதத்திலுங் கலைகளினிறைவு குறைவுள்ளமை பற்றி யந்தந்தக்காலத்தில் வெவ்வேறா வுண்டாகிறானென்றாரோபித் திருக்கின்றது. ஆதலால் காலமநாதியாக விருப்பதைப்பற்றி யநேககோடி சந்திரனென்று கூறலாயிற்று. அச்சந்திரர்களுக்கு உம்பரமபதங் கொண்டால் என்ற சிலேஷையாற் றிருமாலின் சரணத்தை ஸேவித்தலாரோபிக்கப்பட்டது. தேகம் நசிக்குங் காலையிற் புண்ணியத்தாற் பரமபதத்தைச் சேருவதும் அக்காலையிற் றனக்கிஷ்டமானவ ரிடத்துத் தனது புண்ணியக் கூட்டத்தை வைப்பதும் பின்பு சூரியமண்டலத்திற் செல்வதும் வேதத்திற் பிரசித்தமென்க. இவ்வாறே சந்திரர்களுக்கு மேனிக் குறைவு வரத்தகக் வமாவாசை காலத்திற் சூரியமண்டலத்திற் செல்வதிருப்பமையால் அதற்கு முன்ன மவர்கள் வனப்பென்னும் புண்ணியக் கூட்டத்தைத் தமக்கு இஷ்டமாக விருக்கின்ற பகவானது முகத்தில் வைத்ததாக வுத்பிரேக்ஷித்திருக்கிறது. மோக்ஷத்தை அடைகின்றவர்களுக்குப் பலவிஷ்டர்க ளிருப்பார்களாதலா லந்தந்த விஷ்டர்களிடத்து மவர்களுடைய புண்ணியங் கொஞ்சங் கொஞ்சமாக ஸம்பந்தப்படும். இங்ஙன மெல்லாச் சந்திரர்களுக்கும் பகவானுடைய முகம் ஒன்றையே யிஷ்டமாகக் கூறுவதால் மற்றுமுகங்களைப் பார்க்கினு மது மிக்கவனப்புள்ள தென்பது மநேககோடி சந்திரர்களுக் கொப்பான தென்பதும் நன்றாய் விளங்குகின்றது. ஆனால் வேதத்திற் சூரியமண்டலத்தைக் கடந்ததின் பின்பு விரஜை யென்னும் நதியைக் கடப்பதற்கு முன் மோக்ஷத்தை யடைகின்றவர்களின் புண்ணிய பாவங்கள் தத்தஞ் சிநேகர்

களையுஞ் சத்துருக்களையுஞ் சேருகின்றன வென்று சொல்லி யிருக்கின்றது. அவ்வாறிருந்தாலும் பாவங்கள் முதலியவைகளின் விலக்கமின்றிச் சூரியஜோதியிற் செல்வதரிதென்பதைப் பற்றி யந்தவேதத்துக்குச் சூரியமண்டலத்திற் பிரவேசிப்பதற்கு முன்னமே பாவமுதலியவைகள் விலகிவிடுமென்ற அர்த்தங் கொள்ள வேண்டுமென்பதைத் தீர்மானித் திங்ஙனம் வனப் பென்னும் புண்ணியக் குழுவை யிஷ்டமான பகவானது முகத்தில் வைத்து விட்டுச்சூரியமண்டலத்திற் செல்லுகிறார்களென் றுரைக்கலாயிற்று.

செய்யுள்.

நாதனே நினது திருவடிக் காட்டு
நறும்பெரும் புனலொடு மந்தப்
பாதமா ருகிர்க்காந் தியின்சிறு வணுக்கள்
பரவையிற் சென்றுபின் கடைந்த
போதவை யனைத்து மொருங்குறத் திரண்டு
பொழிகதிர் முழுமதி யுருவம்
ஆதலுற் றெழுந்த வென்றுமா தவரு
மலங்கரித் தினிதுபோற் றுவரே.

இஃது காரியத்தின் வருணனையால வருணியமாகிய காரணந் தோன்றுவதற்குதாரணம். இங்ஙனம் பகவானது திருவடித்தாமரைகளில் ஸம்பந்தப்பட்டுப் பெருகிய நதியிற் செம்பஞ்சுக்குழம்பு போற்பற்றிச் சமுத்திரத்துச் சென்ற பகவானது நகக்காந்தியின் சிறுவணுக்கள் சமுத்திரத்தைக் கடையுங்காலையிற்றிரண்டு சந்திரனென்ற பெயரைக்கொண்டு விளங்குகின்றன. என்றமையாற் காரியமாகிய சந்திரனுடைய வுற்பத்திக்குக்காரணமாகிய பகவானது நகக்காந்தியின் மேன்மை விளங்குகின்றது.

செய்யுள்.

இந்த மாதுநடை யந்த மேதெரியி
லின்று ருகருவ மேயனஞ்
சந்த மோரில்மௌ னங்கு லாவுவிர
தங்கெ டாதுசெயு மேகுயில்
கந்த மேல்மிருது கண்டு மாலதிக
லென்று மாமிகவு மோதலென்
அந்த மாமகளு மின்ற ஞதப
மறிந்து காவியுடை சூழ்வளே.

இதுவுமது, இங்ஙனம் நாயகியினது நடை முதலிய வற்றின் மேன்மையான வழகை வருணிக்கவேண்டிய தற் கவ்வழகின் பார்வைக் காரணத்தினுலுண்டாகத்தகக அன்ன முதலியவைகளின் கருவம் நீங்குதலாகிய காரியங் கள் கூறப்பட்டன. முந்திய வுதாரணத்திற் பொருளின் காரியமாகவும் இங்ஙனம் அந்தப் பொருட்பார்வையின் காரியமாகவுமிருக்கின்றது.

செய்யுள்.

வாமிருக நெஞ்சிடைநாண் வாய்ந்திடுமோ கிற்கவரி
மாமிருகம் வெற்பிறைக்கு மாரிமென்மை—யாமினிய
குந்தளத்தின் பந்திகண்டு கொண்டுதன்வான் மேல்விருப்பை
யுந்தளவே யூகக முறும்.

இவ்வுதாரணத்திலும் பார்வதியினது கூந்தலாகிய பொருட்பார்வையினுலுண்டாகின்ற கவரி மிருகந்தன் வால்மேல் விருப்பம் நீக்குமென்னுங்காரியம் விளங்கு கின்றது. முந்திய வுதாரணத்தில் மூன்ருவது பாதத்திற் புகழக்கூடிய நாயகியின் அங்க மேன்மையைக் கண்டதினுல் மாலதியிற் கடினத்தன்மை யென்ற காரியமுண்டாகவில் லை. அந்நாயகியைத் தொட்டநுபவிப்போருக்கே மாலதிக டினத்தன்மையுள்ளதென்ற நினைவுண்டாகின்றது. இவ்வா

று நாயகியின் றேகமிருதுத்தன்மையைக்கண்டதினுலுண்டாகும் மாலதிவன்மையுளதென்ற நினைவாகிய காரியத்தைக் கூறியதாலிது காரியத்தாற் காரணம் விளங்குகின்ற விவ்வணிக்குதாரணமாக வருவது கெடவில்லை. இவ்விதமே யவருணியத்தொபபுமைக் கூட்டத்தணிக்குதாரணித்த "வல்லிகின்மெ"யென்ற செய்யுளிலும் நாயகி மெய்ம்மென்மையை நோக்குதலுண்டாகு மல்லிகை முதலியவை வன்மையுள்ள வென்ற நினைவானகாரியம் விளங்குகின்றது. முன்னேரும் பொருள் காரியமாவருமிடம்போல் நினைவு காரியமாவருமிடத்திலு மிவ்வணியே யென்முர். உண்மையாகப்பார்க்குமளவி லிவ்வணியில் வருணியாவருணியங்களுக் கைந்து பிரிவுள்ள ஸம்பந்தமன்றியும் வேறு ஸம்பந்தமுங் காணப்படுவதா லைந்துவித மென வரையறுத்தது கூடாமையாயிருக்கின்றது.

செய்யுள்.

திரிவிததா பத்தினுககு மருந்தாய்ச
சுவாசமெனுஞ் சிறுகா லாறப
தருமகலுன் குறுநகையி னின்றெருநாற்
சூழலிற்போய்ச் சார்ந்து கூடி
மருவியசெண் டவைபோலிம் மதிககரங்க
ளுலகமிசை வயங்கு கின்ற
பெருவிரத விசயனுக்கங் கொருவிரத
நடத்தியருள் பெய்யுங் கோவே.

இங்ஙனம் அவருணியங்களாகிய சந்திரகிரணங்களைப் பகவானது குறுநகையர்கிற தானியங்களின் செண்டுகளாக வருணித்தமையாற் பகவானது குறுநகை யந்தக் கிரணங்களினு மிக்க மேன்மைதங்கியதென்ற விசேஷம் விளங்கிற்று. இங்ஙனங் காரியகாரண பாவமுதலிய ஸம்பந்தமின்றிக் கூடவே யுற்பத்தியாகிறதான ஸம்பந்தத்தையே கொள்ளவேண்டியதாக விருக்கின்றது. இவ்வாறே யுவமா

னுவமேயமாக விருந்தாலுங் கவியினற் காரியகாரண பாவமாகக்கூறப்பட்டு விளங்கும் "இந்தமாநுநடை" "வாமிருகநெஞ்சிடை" யென்னுங் கவிகளிலு மிவ்வணி யுபமானுவமேயபாவ ஸம்பந்தமுள்ளதாக விளங்குகிறது.

செய்யுள்.

வந்தகா ரிந்தியே யென்னகாண் சொற்றிடுவிர்
மகிமைபெறு கும்பரே நான்
வாரிதிய னென்பகைவர் தம்பெயரை யெவ்விதம்
வருத்தனைகொல் நருமதையு நான்
முந்தெனது பகையாளி யின்பெயரை யெவ்வித
மொழிந்திடவு நீர்குறித் தீர்
மூன்றுமத் தன்மையா மென்னினி யிவ்வித
முழுநகரு நிறத்தையோ சம்
பந்தமுறு தன்மை நிமித்தமெது மாளவ
பருந்தேய மாதரார் தம்
பரிவுற வணிந்தவரு சலம்விரவு நாயகர்
பற்றியிட லாலி விதமி
ருந்தகரு நிறமுமரு வினவர்த மக்கெனே
குறைவந்து தோன்றினது போ
குந்தலா மெனுந்தேய மதுபராந் திடுவேந்து
கோபமனு மேவினே னோ.

இங்ஙன மாளவதேசத்துப பெண்சமுத்திரையா லுறை யின் காரணத்தை யென்னே குறைவந்ததென்று கேட்க, அவர்களுடைய ஆடவர்களின் மரணத்தைக் கூறுகுந் தளதேசத்தரசன் கோபமனு மேவினனென்ற காரணத் தைக் கூறியிருப்பமையாற் காரணத்தாற் காரியம் விளங்கு மிவ்வணியும் மாளவதேசத்தரசனைக்குறித்துக் குந்தளதே சத்தரசன் படை யெடுத்தானே வெற்றியடைந்தானே வெனக்கேட்க அடைந்தானென்பதைக் கூறுது அக்காரணத்தினுற் சமுத்திரத்திற்கும் காளிந்திக்குமா நோக்கி வி

ஞவிடையான காரியங்கூறப்பட்டிருப்பதாற் காரியத்தாற் காரணம் விளங்கும் இவ்வணியு மிச்செய்யுளிலிருக்கின்றது. இவற்றுள் முந்தியதில் விஞச்சொல்லால் விளங்குகிறதென்றும் பிந்தியதில் விஞத்தொகையால் விளங்குகிறதென்றுங் கொள்க.

---

## உஅ-வது புனைவுள்ளி விளைவணி.

(பிரஸ்துதாங்குராலங்காரம்.)

செய்யுள்.

சொல்லோர் வருணியத் தாலோர் வருணியந் தோன்றியிடில்
எல்லோருஞ் சொல்புனை வுள்ளி விளைவுவண் டேமலிகை
மல்லோ டிருக்கமுட் சூழ்தா ழையிலென் வருமெனலை
வல்லோ ருதாரண மென்பார் குமாரெட்ட மாமன்னனே.

எங்ஙனம் வருணியமாகிய வோர் வரலாற்றை வருணிக்குங் காலையில் மற்றொரு வருணியமாகிய இஷ்டமான வரலாறு விளங்குகிறதோ வங்ஙனம் புனைவுள்ளி விளைவணியாம். இதை வடநூலார் பிரஸ்துதாங்குராலங்காரமென்பர். இதற்கு "வண்டேமலிகை" யென்பதுமுதலுதாரணம். இங்ஙனம் பிரியநாயகனேடு பூங்காவில் விளையாடுகின்ற வோர் பெண்வண்டைநோக்கி யிவ்வண்ணங் கூறுகிருளென்று சொல்லால் விளங்கிய வண்டின் வியவஹாரம் வருணியமாயிற்று. இதனுற் சுகமாகக் கலவி செய்ய வுசிதமான நாயகி இருக்க வக்காலையிற் சோரநாயகியிடங் கலவி செய்ய வெத்தனிக்கும் வருணியமான நாயகனது நிந்தையான வியவஹாரமும் விளங்குகின்றது. ஆனலிங்ஙனமறிவில்லாமலிருக்கும் வண்டை முன்னிலையாகச்செய்வது உசிதமல்லாமையால் வருணியமாகிய நாயகனது வியவஹாரந்தோன்றும்பொருட்டு அவ்வருணியமான இவ்வண்டின் வியவஹாரங் கூறப்பட்டிருக்கிறதென

வைத் திதுவும் புனைவில்லிப் புகழ்ச்சியணியே யென்ஞு லோ அவ்வாறன்ஞும் பேதமையா லறிவில்லாமலிருக்கும் பொருள்களையு முன்னிலையாக்கி யுரைப்ப துலகவியல்பா யிருக்கின்றது. அஃது வருமாறு.

செய்யுள்.

அம்மநீயார் யானருந்தே வாற்கே டுண்டு
விம்முசா கோடகங்காண் மிக்கதொரு வெறுப்பால்
இம்மொழிவிண் டாய்தெளிந்தே னெனிப் படியுரைத்தாய்
வெம்மையுறு மிக்கணிடப் பாலோரால் மேவுமதைச்
செம்மைவழிச் செல்வரெல்லாச் சீராலு மேயடுப்பார்
சும்மையத ரிடையிருந்துந் தோற்றெனிழல் வந்தவர்கட்
கம்மையுத வுஞ்செயலின் ஞூல்.

இங்ஙனம் சரத்திற்குமசரத்திற்கும் வினுவிடையிரு ப்பதுபோலறிவுள்ள பொருளுககு மறிவில்லாமலிருககும் பொருளுக்கும் வினுவிடையிருப்பதில் யாதொருகுறைவு மில்லை யென்க.

செய்யுள்.

தும்பியே நீதோயத் தோலாத பூங்கொடியிற்
பம்பியசஞ் சலமனத்தைச் செலுத்தியுவப் பாயிளமை
யும்பொருந்திப் பூவாமை யுறுநவமா லதியரும்பில்
வம்புறுவீ ணுகவுமேன் விருப்பமதை வைக்கின்ஞுய்.

இங்ஙன முத்தியானத்திற் சஞ்சரிக்கின்ற தும்பியி னது நிந்தை தும்பியே யென்ற முன்னிலையால் வருணிய மென்றறியலாயிற்று. இதுவுங்கலவிக்குசிதமான பெண்க ளிருக்குங்காலையிற் பேதையாகிய கன்னிகையைக் கலவி செய்ய வருத்தப்படுத்துகின்ற வொருகாமுகன் கேட்குங் காலையில் நாயகிசொல்லும் வசனமானதா லக்காமுகனது நிந்தையும் வருணியமாகவே விளங்குகிறது.

செய்யுள்.

ஓதிமத்தின் றுண்டமதாற் கிழிகொளிரு
மரையரும்பைப் புயங்கொண் டேந்தி
யெதிகழ்வுற் றிருக்குமிப்பங் கயவாவி
யாண்குயிலுற் றினிதா யுண்ட
பேதகவல லரிவையுறு மாங்கொம்பென்
றிருளையர்க்குச் செப்பக் கேட்ட
மாதுகலை யால்முலையுங் கரமதனாற்
றிருவாயும் மறைத்திட் டாளே.

இங்ஙன மிப்பங்கயவாவி யென்று சுட்டிச் சொல்வதாற் பங்கயவாவியின் வரலாறு வருணியமாகத் தோன்றுகிறது. மற்றொரு வருணியமாகிய நாயகியின் வரலாறுங் கவி வசனத்தினாலே கூறப்பட்டது. புனைவில்லிப் புகழ்ச்சியணியிற் சொல்லாற் கூறியிருக்கும் பொருள் அவருணியமாக விருப்பதா லஃது வருணிக்க வேண்டிய தாற்பரியத்தி னறிவிப்பின்றி முடியாதாகையா லதின் றோற்றங் குறிப்பாகாதென்றும் அலங்கார மென்றும் அங்கீகரித்தாலு மிங்ஙனஞ் சொல்லாற் கூறியிருக்கும் பொருள் வருணியமா யிருப்பதால் வேறொரு பொருளி னறிவிப்பின்றியே அது முடிந்துவிடுவதா லவ்விவகாரத்தின் சாதுரியத்தால் மற்றொரு வருணிய வியவஹாரந் தோன்றுகின்ற முந்தியவுதாரண மிரண்டினும் குறிப்பேயன்றி யலங்காரமில்லை யென்றுரைத்தார் லோசனகாரர். இதினுண்மை யாராய்ந்து இது அலங்காரமே யல்லது குறிப்பல்லவென்று சித்திர மீமாம்ஸையில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. மூன்றாவதுதாரணத்தி லிவ்வணி யென்பதில் யாதொரு ஸந்தேகமுமில்லை. இவ்வாறே தொனிகிர்த்தென்றவரும் லக்ஷணங் கூறினார். அஃதாவது.

செய்யுள்.

சொற்பொரு ளின்பலத் தால்வரு விக்கத் துலங்குறி
பிற்கொள் பொருள்கவிச் சொல்லாலே வண்வெளி பெற்றிடவே
உற்பவ மாகி வருமோ வவனு முறையிவணி
முற்படு மன்றிக் குறிப்பி லுருதிதை முன்னுகவே.

இவ்வுதாரணங்கள் ஸாதிரிசிய நிபந்தனையினற் கிடைத்தவைகள் வேறே ஸம்பந்தத்தி னிபந்தனையுள்ள விரிந்தும் தொகயியு மிருக்கும் பொருள்களிரண்டும் வருணியங்களாகவே யிருப்பதற் குதாரணம் வருமாறு.

செய்யுள்.

நேத்திரங்கா ணல்லொரிரா நேர்ந்ததுதப் பாதுவிழித்
தாக்திரங்கொண் டேயிருப்பி ராங்குமரு—காத்துலங்க
வுங்களுக்கொப் பாகி யுறுமொருசி னேகனுமே
அங்குரங்கொள் வானவசி யம்.

இங்ஙனஞ் சிவஸாரூப்பியம்போலவே அதினேகதே சமாக இருக்கும் நெற்றிக கண்ணும் சிவராத்திரி மகிமையாற் கிடைக்கத்தக்க தாதலால் வருணியமா யிருககிறது. அதனுல் சிவனது ஸாரூப்பியமானவருணிய மறியப்படுகிறது. இங்ஙனம் ஏகதேசி யேகதேச பாவத்தா லோர் வருணியத்தைக கூறியவுடன் மற்றொரு வருணியம் விளங்குகிற துணாக.

செய்யுள்.

பிரபலகுந் தளபார விருட்குழலாற
சிறைபுரியப் பெருமிளஞ்செம்
பருதியதின் கிரணமெனப் பிறங்குசிந்தூ
ரத்திலகம் பதிந்துமின்வத்
திரவனப்பின் பெருக்கதனுக் கியற்றுமறு
காலெனவுந் தேசுற்றோங்கி
மருவுறுமு ரோமவகிர் மார்க்கமெனக
காக்குகவெம் மையினுந்தானே.

இங்ஙனம், புகழத்தக்க வுரோமவகிர் மார்க்கத்தை முகத்திலிருக்கும் வனப்பின் பெருக்குக்கு மறுகாலாக வுதபிரேக்ஷித் திருப்பமையாற் பரிபூரணதடாகத்தில் மறு கால் செல்கின்றதெனி லவ்விடத்திற் றண்ணீரி னடங் காமை தோன்றுவதுபோல் முகத்திலடங்காத வதிகஸௌ ந்தரியத்தின் சிறப்புத் தோன்றுகிறது. அதுவும் வருணிய மேயல்ல தவருணியமல்ல வென்க.

செய்யுள்.

உறுபபுறு வனசத தணடணி வணடி
னுறுகுவைக் கதிரன நாசி
இறுத்தமுத் தெழுசு வாசுமுற் றரிநீ
லத்திய லிசைந்தது தனமேற்
பொருத்தபைம் பனித மோர்கணந் தீப்பொ
லிவணிகி னகரத் திடுநீர்
நிறுத்துலே யதிற்கா யிரும்பின்வீழ் புனலே
நேரவற் றினவிவட் கரசே.

இங்ஙனம் நாயகியின் பொறுக்கத்தகாத விரகதாபத் தை வெளிப்படுத்தும் பொருட்டுத் தாமரைத்தண்டு கறுப்படைவது முதலிய விரகதாப காரியங்களையும் வரு ணியங்களாகவே கூறியிருக்கின்றது. இதனால் வருணிய மான வதிகவிரகதாபந் தொகையாக விளங்குகிறது. எங் ஙனம் காரியத்தினு லறியப்படும் காரணத்தின் விளக்கம் செய்யுளிற் கூறப்பட்டிருக்கிறதோ வங்ஙன மதுமானமே யல்லது இவ்வணியன்றும். அது வருமாறு.

செய்யுள்.

கனத்திடு தனமு நிதம்பமு மவனே
கதுவலால் வாடியு மருங்கு
மனத்தினுஞ் சிறிதா யிருத்தலாற் பொருந்தா
மையுமுற வவண்பசு மையுமாய்

வனத்தடங் கரத்தை மாற்றிவைத் திடலால்
மாறுபா டுறுமரை யிலையின்
இனத்தமை விரிப்பு நாயகிவிரக
தாபமீ தெனவியம் பிடுமே.

இங்ஙனந் தாமரையிலையினு லுண்டுபண்ணப்பட்ட சயனத்தின் வாடுதலாகிய காரியத்தினுல் விளங்கும் நாயகியின் விரகதாபரூபகாரணம் நாயகி விரகதாபமீதென வியம்பிடுமே யென்று கவியில் வெளிப்பட வுரைத்திருக்கின்றது.

---

## உகூ-வது பிறிதினவிற்சியணி.

(பரியாயோகதாலங்காரம்)

செய்யுள்.

கருது பொருருக் குறித்தாம் விதத்தின்றிக காட்டல்மற்றை
ஒருவிதத் தென்னிற் பிறிதி னவிற்சி யிராகுவினோர்
அரிவை முலைவறி தாப்புரிந் தார்க்கன்பு செய்வமெனை
வருவ துதாரண மெட்டம பாண்டிய மாமன்னனே. ()

எங்ஙனம் வருணிக்கவேண்டும் பொருள் அதற்குரித்தான சொல்லாற் கூறப்படாது மனமகிழ்விக்கும்படி மற்றொரு விதத்தாற் கூறப்படுகிறதோ வங்ஙனம் பிறிதினவிற்சியணி. இதை வடநூலார் பரியாயோக்தாலங்கார மென்பர். இதற்கு இராகு வென்பது முதலுதாரணம் இங்ஙனம் மகாவிஷ்ணுவை ஸ்வரூபமாகத் தெரியக்கூடிய சொல்லாற் கூறும விராகுவினோரரிவை முலையைப் பயனில்லாமற் செய்தவரென்று வேறுவிதமான ரூபத்தாற் கொள்ள வருணித்திருக்கின்றது.

செய்யுள்.

எவர்கா லுலகத் தினைப்பார்க்கு மோவன்
னவர்யா ரதுபதமின் னம்பார்க்—குவதிலையோ

அந்தவிரு வோரு மளவிடுவ ரல்லருன்பால்
வந்தகல்வி யைக்குருதே வா.

இங்ஙனங் கௌதம முனிவனையும் பதஞ்சலி முனிவரையும் வெளிப்படையான வசசொற்களாற் கூறாது வேறுவிதத்தாற் கூறியிருக்கின்றது.

செய்யுள்.

மிருது வாலுயர் வாகைவீச செருக்கைவிட் டிந்த
இருப தங்களை யிகடும் பாரிலெத் தூரம்
பெருக வைப்பதற் குவந்தது தயவுனுப் பிறந்து
வருநின் னுள்ளமா வாவிது துயருனை வரனே.

இங்ஙன மெவ்வளவு தூரத்திற்போக விரும்புகிறீ ரென்பதை யவ்வாறு கூறாமல் வேறுவிதமாகக் கூறியிருக்கின்றது.

செய்யுள்

எவருக்கு வியாசர்முன்னோர் பரிக்கார
ரோவுதல மென்ற லோகம்
மாவணிப்பெட டகமோவான் பூங்காவோ
வரிமுதலெண் வராக ளாடைக்
காவலரோ சித்தசன்சந் தனமரமோ
பரவையொரு கணைக்கூ டோவத்
தேவசக்ர வர்த்தியெனுங் கடவுளுக்குத்
திடவணக்கஞ் செய்கு வேனே.

இங்ஙனம் சிவபெருமானுக்கு வேதங்கள் பரிகள் ஆபரணங்க ளுரகங்களென்பன முதலியவைகளைத் தத்தம் பதத்தால் வெளியிட்டுரையாது வியாஸர் முதலியவர்கள் பரிக்காரர்க ளென்பது முதலியவைகளால் வெளிப்படுத்தி யிருக்கின்றது. இங்ஙனம் அலங்கார ஸர்வஸ்வகாரரு மிவ்விலக்கணப்படியே கருதத்தக்க பொருளை வேறு விதமாகக் கூறுவது இவ்வணி யென்றே யுரைத்தார்.

செய்யுள்.

சக்கரவே கத்தடியாந் தண்டனையா லேராகு
தக்கமனை யின்கலவிச சார்பெறுமுள்—ளக்களிப்பே
இன்றிவந னஞ்சுவைத்த லெல்லாமிருக் கப்புரிந்தோரா
நன்றுதினங் காக்க நமை.

என்று முன்னோர் சொல்லிய வுதாரணத்தி லிராகு மடந்தையின் கலவியிலுள்ள குறைவாகிற காரியத்தை வருணித்ததா லிராகுவின் சிரச்சேதத்தை யடைந்ததென்ற கருதக்கூடிய காரணம் அறியப்படுகின்றது என்றும் இதனாற் கருதப்பட்டதை வேறு விதமாகக்கூறுவதிவ்வணியென்ற விலக்கணத்திற்குக் குறையென்றும் கருதப்பட்டதைக் காரியமுகமாகத் தெரிந்துகொள்வ திவ்வணியென்று இலக்கணத்தில் சேர்த்துரைக்க வேண்டுமென்றுங் கூறினரென்க. அன்றியும் லோசனகிருத்தென்பவரும்

செய்யுள்.

வேறு விதமா கிடவே விளம்புவது
தேறும் பிறிதினவிற் சி.

என்று முன்னுரைத்த விலக்கணம் போலவே யிலக்கணத்தையுரைத் துதாரணத்திற் சொல்லாற் கூறியிருக்குங் காரியத்தாற் காரணந் தொகையாக விளங்கும்படி காண்பித்திலக்கணத்தை வன்மையாக விலக்கியத்தி லாரோபித்தார். இவரிலக்கணத்தை வேறுவிதமாகவு மிலக்கியத்தை வேறுவிதமாகவுங்கூறி யிலக்கணத்தை யிலக்கியத்தி லாரோபிப்பதற்கு மிகுதியான சிரமத்தை யடைந்ததற்குக் காரணம் யாதோ? கருதத்தக்க பொருளை வேறு விதமாக அறியும்படிக்கு இருக்குமுதாரணங்கள் பலவிதங்களா யிருக்கின்றன. "சக்கரவேகத்தடியா" லென்ற முன்னோருரைத்த செய்யுளிலுங் காரிய காரணபாவத்தைக் கருதாமலே யிலக்கணத்தைச் சரியானபடி யாரோ

பிப்பதற்கு இடமாகக் கருதத்தக்க பொருள் வேறு விதமாகத் தோன்றுவதற்குக் குறைவில்லை. அதிவிராகுவரிவையின் கலவிக்குறைவாகிற வருணியத்தா விராகுவின் சிரம் சேதத்தை யடைந்தது என்றவருணியம விளங்குகிறது என்ற விஷயத்திற் பிரஸ்துதாங்குராலங்காரமாக விருந்தாலு மிராகு வரிவையின் கலவிக்குக் குறைவையுண்டுபண்ணினவரென்ற வேறுவிதத்தால் ஸ்வரூபமாகப் பகவானறியப்படுகிறா னென்றும் பிறிதினவிற்சியணிக்குங் குறைவில்லை.

செய்யுள்.

கருதிய தைக்கப டத்தான் முடித்திடக் காணிலதும்
பிரிதி னவிற்சிசெல் கின்றனன் மாங்கொம் பினைத்தெரிய
விருவிரு மிங்கிரு மென்ப துதாரண மென்னையுமோர்
பொருளென வேயருள் செய்யுங்கு மாரொட்ட பூபதியே.

தான் எண்ணிய காரியத்தை யோர் கபடத்தால் முடிப்பதும் அவ்வணியே. இதற்கு "செல்கின்றன" னென்பது முதலுதாரணம். இங்ஙனம் பாஙகி நாயகியை நாயகனோடு சேர்ப்பித்துத் தான் மாங்கொம்பைப்பார்க்கப்போவதாகக் கபடம் செய்தவ்விருவருங் கலவிசெய்ய வேண்டுமென்னுந் தன திஷ்டத்தை முடித்தாள்.

செய்யுள்.

இராதா யடிமடிம றைத்திடுமென் கந்துகத்தை
நீதாவென் றோதியவ ணீவியினைத் தொட்டவிழ்க்குங்
கண்ணனமக் கேமகிழ்செய் க.

முந்திய வுதாரணத்தில் பிறருக்கு ஸௌக்கியமான இஷ்டமுடித்தலென்று மிங்ஙனங் கந்துகத்தைத் தேடுகிற கபடத்தால் நீவியைத் தொட்டவிழ்ப்பதினு லுண்டாகிய தன்னுடைய இஷ்டத்தை முடித்த லென்னும் பிரிவு காண்க.

## ௯௦-வது வஞ்சப்புகழ்ச்சியணி.

(வியாஜஸ்துதியலங்காரம்)

செய்யுள்.

நிந்தையி னூற்றுதி யுந்துதி யானிந்தை யும்பணிக்க
வந்திடில் வஞ்சப் புகழ்ச்சியிப் பாவரை வானதியே
யுந்துவை சொற்க மறிவுனக் கேதென் னுதாரணந்தான்
முந்துறு நிந்தையிற் றோன்றுந் துதிக்கு மொழிந்தனரே.

இன்றூதி யேயிநி னுஞ்செய வேண்டலென் னெற்கு நன்று
நன்றேயெற் காசசென்று பெற்றனை பல்வி னகத்தின்வடு
என்றோ துதாரண நிந்தை துதியி லிருப்பதற்காம்
அன்றோர் கடலி லணைசெய் குமாரெட்ட னுமண்ணவே.

எங்ஙனம் நிந்தையாற் றுதியுந் துதியால் நிந்தை யும் விளங்குகிறதோ அங்ஙனம் வஞ்சப்புகழ்ச்சியணி. இதை வடநூலார் வியாஜஸ்துதி யலங்காரமென்பர். இவற் றுள் "இப்பாவரை" யென்பது முதல் நிந்தையாற்றுதி தோன்றுவதற்கும் "இன்றூதியே யிநினு" மென்பது முதற் றுதியா னிந்தை தோன்றுவதற்கும் நிரலேயுதாரணங்கள். முந்திய வுதாரணத்திற் கங்கையே யுனக்கு அறிவேது என்ற நிந்தையால் புண்ணியஞ் செய்தவர்களைப் போற் பாவஞ் செய்தவர்களையும் சுவர்க்கத்திலிருக்கச் செய்கிறா யென்றதுதி விளங்குகிறது. இரண்டாவ துதாரணத்தில் தூதியை நோக்கி யென்னிமித்தம் பற்களாலும் நகங்க ளாலு முண்டாகிய வடுவைக்கொண்டாயினி யென்ன செய்யவேண்டும் என்று நாயகி சொல்லிய துதிவசனத் தாற் றூதியின் செய்கைக்கு விரோதமாக வந்நாயகனது புணர்ச்சியைச் செய்ய நீ போனவளே யல்லது எனக்குத் தூதாகப்போனவ ளல்லளென்று நிந்தை விளங்குகிறது.

செய்யுள்.

மன்னவனே போரின் வலத்தாற் கருவமுனக்
கென்னநீ யோர்குதிரை யேறினையேல்—நின்னைத்
தொழுத வுருச்சத் துருவா னவரும்
எழுவரிய மாவே றுவார்.

சிவன்மெய்யொரு பாதிதிரு மாலுமொரு
பாதியுமைத் தேவி கொள்ள
அவனுலகி லாமையினுற் கங்கைகட
லேச்சசிவிண் ணதனைச் சேட
னுவல்பிலத்தை யனைத்துமுனா் தன்மையெங்கு
மிறையெனமன் னுதலாந் தன்மை
தவமியற்று நின்னையிரந் திடுதன்மை
யென்னையடைந் தனபூ மானே.

இங்ஙன முந்தியவுதாரணத்தில் "எழுவரியமா" வென்ற சிலேஷையாற் கிடைத்த நிந்தையா லரசன் குதிரையை யேறினவுடன் பகைவர்களிறந்து சுவர்க்கத்தை யடைவதற்காக அரியமாவிற் செல்கிறார்களென்ற துதி தோன்றுகிறது. இரண்டாவ துதாரணத்தி லரசனெல்லாந் தெரிந்தவன் புவனத்துக்கு நாயகனென்ற துதியா லிரப்போனது துன்பத்தையும் கல்விச்சிறப்பையு மறிந்தும் கிஞ்சித்தேனுங் கொடுத்துக் காக்கின்று னில்லையென்ற நிந்தை தோன்றுகிறது. இவ்வுதாரணங்களி லொரேவிஷயமான நிந்தையாலுந் துதியாலும் அவ்விஷயமான துதியும் நிந்தையும் தோன்றுகின்றது. வேறுவிஷயமான நிந்தையால் வேறுவிஷயமான துதி தோன்றுவது மிவ்வணியே.

செய்யுள்.

வானரநீ யாரிரகு ராமபதி
யரண்மனையில் மன்னிக்கூவி
யானதுபெற் றெழுமோலைக் காரன்முனிங்
குற்றிலங்கைக் கனல் கொளுத்திப்

போனகவி யநுமனெங்குற் ருனரக்கன்
சேயவனாற் பொரக்கட் டுண்டு
மானமழிந் தானெனவா நரர்விலக்கி
யடிக்க வெங்கோ மருவினனே.

இங்ஙன மாருதியின் நிந்தையால் மற்றும் வானரர்களின் றுதி தோன்றுகின்றது துதியினல் நிந்தைதோன்றுவதற் குதாரணம்

செய்யுள்.

தனமுடையர் வதனமடிக் கடிபார்க்கி
லாய்தரும்பொய் தானுஞ் சொல்லாய்
அனவர்செருக் குரைகேட்கி லாய்விருப்பா
லவரிடம்போ யலையாய் நல்ல
தெனவருபைம் புலுமுரிய போதருந்தித்
துயிலுறுகா லெல்லாந் தூங்கித்
தினமகிழ்கின் றுயிதற்கே யெத்தவமெவ்
விடத்திருந்து செய்தாய் மானே.

இங்ஙனம் மானின் றுதியா லரசனை ஸேவித்துக் கிலேசமடைந்த தன்னுடைய நிந்தை விளங்குகின்றது. இது புனைவில்லிப் புகழ்ச்சியின் ஓர் பிரிவென் றலங்கார ஸர்வஸ்வகாரருரைக்கின்றார். அவர்மதத்தில் ஸாதிருசியமாகவரும் புனைவில்லிப்புகழ்ச்சி முரணனை தர்மத்தாலும் வருமென்றறிக. அஃது வருமாறு.

செய்யுள்.

செங்கழுநீர்ப் பூவினிடைச் சேர்ந்துசுக மாககுளிர்ச்சி
பொங்குமெக்காற் றின்குவளை போற்கருமை—யங்கமுள
இராமனையே தானு ரணியமதிற் சேர்ந்ததுவோ
ஆமதுவே மேன்மை யது.

இங்ஙனம் ஸ்ரீராகவனை ஸம்பந்தித்த காற்றே மேன்மை தங்கியதென்று அவருணியத்தைத்துதித்ததால் நான் மேன்மை தங்கியவனல்லவென்ற வருணியமான பொருள் விளங்குகின்றது. தண்டியாசிரியர் இவ்வாறிருப்பதே புனைவில்விப்புகழ்ச்சியென்றுங் காரியகாரணமாயிருப்ப தவ்வணி யல்லவென்று முறைகின்றார்.

செய்யுள்.

பிரகர ணத்துக் குரிமையில் லாமையைப் பேசிபிட
வருவது மேபுனை வில்விப் புகழ்சசி வனத்தின்மற்றோர்
அருகணை யாது முயலாது புற்புன லார்ந்துயுமென்
றொருமன்ன னுற்றுய ருற்றோன் பிணையியல் போதினனே.

உண்மையினுராயுங்கா லிங்ஙனம் வஞ்சப்புகழ்ச்சியென்றுரைப்பதே யுசிதம். துதியினால் நிந்தை தோன்றுகிறதென்னுஞ் சிறப்புப் புனைவில்விப்புகழ்ச்சியினு மிதிலிருக்கின்றது. இவ்வாறில்லாவிடிற் பிரசித்தமான வஞ்சப்புகழ்ச்சி யுதாரணங்களிலும் அவருணியங்களாகிய நிந்தை துதி யிவைகளால் வருணியங்களாகிய துதியும் நிந்தையு மறியப்படுகின்றனவென்று வஞ்சப்புகழ்ச்சி முழுமையும் புனைவில்விப்புகழ்ச்சியே யாகும். இவ்விதமே யொன்றின் றுதியால் மற்றொன்றின்றுதி தோன்றுவதும் வஞ்சப்புகழ்ச்சியணியே.

செய்யுள்.

ஒண்டொடியே யிச்சுகக்குஞ் சுன்னதரம் போற்சிவப்புக்
கொண்டவிம்பத் தின்கனியைக் கொத்துமிதற்—கண்டுமெந்த
வெற்பினிடை யெப்பெயரை மேவறத்தை யெத்தனைநாள்
அற்பொடிது செய்ததுசொல் லாய்.

இங்ஙனங் கிளிகுஞ்சின்றுதியால் நாயகியினதரத்தின்றுதி விளங்குகின்றது.

## ௩க-வது வஞ்சப்பழிப்பணி.

(வியாஜ நிந்தாலங்காரம்.)

செய்யுள்.

தனிநிந் தையானிந் தையேவ ருவதுவஞ் சப்பழிப்பாம்
உனதோர் சிரமடடும் யாராமுன் னரிந்தன ரேறுவவனே
யினமல வாவெள ளுறவேண்டி நான்முக னேயெனச்சொல்
வனவே யிலக்கியந் தேரெட்ட மாநகர் மன்னவனே. ()

எங்ஙனம் ஓர் நிந்தையால் மற்றொரு நிந்தை விளங்குகின்றதோ அங்ஙனம் வஞ்சப்பழிப்பணி. இதை வடநூலார் வியாஜநிந்தாலங்கார மென்பர். இதற்கு "உனதோர்சிர" மென்பது முதல் உதாரணம். இங்ஙனஞ் சிவபெருமானது நிந்தையாற் றுக்கத்துக் கிருப்பிடமாகிய ஸம்ஸாரக் கடலில் விழச்செய்த நான்முகனது நிந்தை விளங்குகின்றது.

செய்யுள்.

காகமே கத்துகநீ கத்துமுன்மே லென்னகுற்றங்
கோகிலமோ டென்னையுமே சூதமதூர—மாகியதோர்
மாவினிடைச் சேர்த்திடுநால் வத்திரத்தோன் றன்னையல
வாவிகழ வேண்டி வது.

ஒன்றின் றுதியால மற்றொன்றின் றுதி தோன்றுகின்ற ஐந்தாவது வஞ்சப்புகழ்ச்சி யணிக்கெதிரா யிருக்கின்ற திவ்வணி. இங்ஙனங் காக்கையையுங் கோகிலத்தையுந் தேமாமரத்திற் சோத்து வைத்த நான்முகனது நிந்தையால் வித்துவானையு மவித்துவானையும் ஸபையிற் சேர்த்துவைத்த வரசனது நிந்தை விளங்குகின்றது. ஆயின் ஒன்றின்றுதியால் மற்றொன்றின் றுதியும் ஒன்றி

னிந்தையால் மற்றொன்றி னிந்தையுந் தோன்றுமிடத்தில் வஞ்சப்புகழ்ச்சி வஞ்சப்பழிப்பணிகளாக வொப்புக்கொளளும் விஷயத்தில் ஸ்துதியாகவும் நிந்தையாகவு மிருக்கும் புனைவிலவிப் புகழ்ச்சியு மிவைகளுக்குள்ளே யடங்கிவிடுவதா லதையவ்வணி யென்று கூறவேண்டா மெனின்லோ, அவருணிய வியவஹாரத்தால் ஸ்துதியாகவாவது நிந்தையாகவாவது இருக்கும் வருணியவியவஹாரந் தோன்றுகின்ற "உள்ளங்குழலும் றுறவெளியிற் கண்டகங்கள்" என்பது முதலிய உதாரணங்களிற் பயனையடைந்த ஸாதிருசிய நிபந்தனையான புனைவில்லிப் புகழ்ச்சியும் வஞ்சப்புகழ்ச்சியும் வஞ்சப்பழிப்பு மியங்ஙனம் வருவதிலுந் தடையில்லை. ஆனால் "காகமே கத்துக நீ" யென்னுஞ் செய்யுளில் நான்முகனது நிந்தையாலு மதற்கு மூலமாகிய காகத்தினிந்தையாலு மிகவறிவுள்ள வோரரசனது நிந்தையு மவனால் வித்துவானுக கொப்பாக மரியாதை செய்யபபட்ட மூடனது நிந்தையும் விளங்குகிறதென்று ஸாதிருசிய நிபந்தனையான புனைவில்லிப் புகழ்சசி யிருக்கின்றது. அவ்வாறிருந்தாலும் வஞ்சப் பழிப்புமூலமாக முதலாவது விளஙகும் புனைவில்லிப் புகழ்ச்சியை அங்ஙனம் நீககக்கூடாதுதான். வஞ்சப்பழிப்பு மூலமாகத் துலங்கும் வஞ்சப் பழிப்பாகிய புனைவிலவிப் புகழ்ச்சி யென்றே யொருவித மனமகிழ்ச்சியிருப்பதைப்பற்றி அவ்வாறே அங்கீகரிக்கவேண்டும். இவ்வாறே வஞ்சப்புகழ்ச்சி மூலமான வஞ்சப்புகழ்ச்சியா யிருக்கும் புனைவில்லிப் புகழ்ச்சியுங் காணப்படுகின்றது. அஃதெவ்வாறு வருமேல்

செய்யுள்.

சதுர்முகன் படைக்குங் காலமு கென்னுந்
தனச்செல வையுங்கரு தாது
முதிர்கவ லையுந்தா னடைந்தது மன்றி
மூள்பரி வுறுபல சனத்தின்

இதயமா குலமாஞ் சுரத்திலை யுறவு
மியற்றினு னிந்தவே ளையுந்தற்
குதவுரி யவனில லாதுமே டைந்தா
ளுவளையேன் படைத்தன வயனே.

இங்ஙன மவருணியமாகிய பெண்ணினுடைய படைப்பின் வருசனை நிந்தையாலு மப்பெண்ணினது வருசனை நிந்தையாலுந் தோற்றுகின்ற வவளது மேன்மையான அழகின் ஸ்துதியானது வருணிக்கத்தக்க கவிதையினுடைய படைப்பின் வருசனை நிந்தையாலும் அக்கவிதையின் வருசனை நிந்தையாலுந் தோன்றுகின்ற பதம் பொருள் இவைகளிலிருக்கு மதிக வருசனையை விளக்கச் செய்கிறது. இச் செய்யுளிற் சொல்லால் விளங்கும் பொருளுக்கதிகமான இனிமை இல்லை. எவ்வளவி லாசையில்லாம லிருப்பவன் இப்பெண்ணைக் குறித்திவ்விதம் பலவாறு கூறுவது சிங்கார ரஸத்திற்குக் குறைவு. அவனுக்கு இவ்விஷயங்களின் முயற்சியே யுண்டாக மாட்டாது. ஆசையுள்ளவ னிவ்வாறு கூறினுனென்றாலோ, அதிலும் பழு யென்பதும் தன்னை எந்த நாயகிக்குஞ் சரியான நாயகனாக நினைப்பது இயல்பானதால் நமக்குரியவளில்லாது கெட்டாளென்பது முசிதமல்ல. ஆதலால் அதில அவ்விதமிருந்தாலு மதனுல் விளங்கும் வருணியமாகிய கவிதையின் விஷயமான தாற்பரியத்திற் பெருமிதிப்பேறு மியையுங் குறைவில்லை. ஆதலாலிச் செய்யுளை முன்னோரெலாஞ் சொல்லால் விளங்கும் பொருளுக்குக் குறையிருந்தாலு மதனுல் விளங்கும் வருணிய விவகாரத்திற் குறைவில்லையென்று புலவரில்லிய பரீக்ஷிக்க விஷயமாகக் கூறினார்.

## ௬உ-வது எதிர்மறையணி.

(ஆக்ஷேபாலங்காரம்.)

செய்யுள்.

தானுரைத் திட்டதை யாய்ந்து மறுக்கி லதன்பெயரோ
யான தெதிர்மறை யம்புலி நின்மெ யறிவியன்றேற்
கானமின் ஞள்வத் திரமுள தாமென் றிலககியங்காண்
மானவை வேற்கைச செகவீர ராமக் குமாரொட்டனே.

எங்ஙனம் தானுரைத்ததை யாராய்ந் தொப்பான வேறு பொருளிருபபதைத் தெரிந்து முற்கூறிய பொருள் மறுக்கப்படுகிறதோ அங்ஙனம் எதிர்மறையணி. இதை வடநூலார் ஆக்ஷேபாலங்காரமென்பர். இதற்கு "அம்புலி" யென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் அம்புலியை நோக்கி யுனது மெய்யைக் காணச்செய் யென்றுரைத்துப் பின்பு அல்லாவிடிற் கானமின்ஞள் வத்திரமிருககின்ற தெனககூறி முற்கூறிய பொருளை மறுத்திருக்கின்றது.

செய்யுள்

அவுணரைப் போற்கா வியப்பொருள் கரப்போ
ரமைவதாற் பாடலங் கடலுற
பவமுறு கர்நா மிர்தகாவி யத்தைக்
காப்பிரன் றேவவா வளவும்
எவரெடிக் கினுஞ்சம் மதமதாற் கவிஞாக்
கொருகுறை யிலேமணி களேவிண்
ணவர்பல கொளினு மிரத்தினா கரமே
நளிர்திரை வாரிநா வலரே.

இங்ஙனம் தான்கருதிய காவிய கர்ணமிர்தத்தைக் காக்கவேண்டுமெனக் கூறியதைச் சமுத்திரத்திலிரத்தினக்

குழுக்கள்போல் கற்பனைகள் அளவின்றி யிருப்பதைத் தெரிந்து இல்லாவிடிற் காவியப் பொருள்களைத் திருடு கின்றவர்கள் இதினின்றுங் கற்பனைகளை எடுத்துக்கொள் ளுக வென்று கூறி மறுத்திருக்கின்றது.

செய்யுள்.

மறுத்த லதுதள் ளலுண்டுமேற் றோர்பொருள் வந்திடச்செய்
திறுத்தது மவ்வணி நான்றூதி யன்றவ ளின்மெய்வெப்பம்
ஒறுத்திடு மூழிக் கனற்கொப்ப தென்ப துதாரணந்தேர்
பொறுத்தெவர் பாலுந் தயைசெய் குமாரெட்ட புண்ணியனே.

எங்ஙனம் மறுத்தலுண்மையன்றி யாரோபிக்கப் படுகிறதோ அங்ஙனம் ஆக்ஷேபாலங்கார மென்று அலங்கார ஸர்வஸ்வகாரர் முதலியோர் நினைக்கின்றனர். இதற்கு "நான்றூதியன்றவ" ளென்பது முதலுதார ணம். இங்ஙனம் தூதாகவந்தவளே தன்னைத் தூதியல்ல ளென்று மறுத்தல் பொருந்தாமையால் இம்மறுத்தல் ஆரோபமாகத் தள்ளுண்டு உங்களிருவரைச் சேர்க்கிறதற் காகப் பொய்பேசுகிறது முதலியவை யின்றி உண்மை பேசுகிறேனென்று விசேஷத்தைத் தோற்றுவித்து நீ யிப் போதே விரைவாகவந்து நாயகியைப் பிழைக்கச்செய்ய வேண்டுமென வேறுபொருளை விளக்குகிறது.

செய்யுள்.

நன்றிசைய மன்னவனே நாஙகளொற்ற ரேயல்லம்
என்றுஞ் செகசூடும்பி யென்றிருக்கு—முன்றனகமே
யோாசத் துருவுமிலை யோா.

இங்ஙனம் ஒற்றர் நாங்களொற்ற ரல்லோம் என்ப துசிதமன்று. அவ்விதங் கூறுவதால் ஸந்திகாலத்துக் குரித்தானபடி வஞ்சனையாகச் சொல்வதை நிவிருத்தி செய்து உண்மை சொலவதை விளககுவதினுல் உலகத்

தைக் காக்கின்ற வுமக்கெல்லாரு மூழியக்காரர்களா யிருக்கிறார்களே யல்லது ஒருவரேனுஞ் சத்துருவாகவில்லை என்ற தாற்பரியம் விளங்கச் செய்யலாயிற்று.

செய்யுள்.

உடன்பட லேவெளி யாய்விலக் கேமறை வாயுலவும்
இடமு மவணியென் றாக னேசெல்லை யேற்செலங்கே
கிடமொடு யான்பிறப் பேனென் றிலக்கியஞ் செப்புவர்காண்
தடமதி லண்ட முகட்டினைத் தாங்கிள சைத்துணையே.

மறுப்பு மறைந்தும் உடன்பாடு வெளிப்பட்டு மிருப்பதும் அவ்வணி. இதற்கு "நாயகனே செல்லையே" லென்பதுமுத லுதாரணம். இங்ஙனஞ் செல்வா யென்னு முடன்பாடு வெளிப்பட்டுஞ் செல்லவேண்டா மென்ற மறுத்தல், நீ செல்லுமிடத்தில் யான்பிறப்பே னென்ற சொல்லில அடங்கிய தன் மரணம் தோற்றுதலான் மறைந்தும் இருக்கிறது.

செய்யுள்.

தலைவா நின் செலவையானந் தங்காலை மெய்யே
யலைநாப முண்டுபற்று நைந்தா—செலவேண்டு
மேற்செலவிர்ப் பும்போது மே.

இங்ஙனம் உனது செல்கை எனக்கு அதிககாலந் தாபமுண்டுபண்ணு தென்றமையால் நீ செல்வாயாகில் நான் மாண்டுவிடுவேன். நீ செல்லேலென்ற மறுத்தல் மறைந்திருக்கின்றது.

## ௬௬-வது முரண்மேல் விளைவணி.

(விரோதாபாசாலங்காரம்)

செய்யுள்.

மேலா கமட்டும் விரோத முறன்முரண் மேல்விளைவு
வேலாம் விழியன் முலைமுத்த மேவில னேனுமுத்தரு
சாலாக மேவின னென்ன லுதாரணந் தண்டலையின்
பாலாருந் தேனதி போற்சூழு மெட்ட பதிமன்னனே.

எங்ஙனம் விரோதமுன்பு விளங்கிப் பின்பு உண்மைப்பொருள் விளங்குகின்றதோ அங்ஙனம் முரண்மேல விளைவணி. இதை வடநூலார் விரோதாபாசாலங்கார மென்ப. இதற்கு "வேலாம விழி" யென்பது முதலுதாரணம். இங்ஙனம் முலைமுத்த மேவாமலிருந்தாலும் முத்த மேவியிருக்கிறதென்று முன்புவிரோதமுஞ் சிலேடையாக நாயகனது கொஞ்சுதல மேவியிருக்கின்றதென்ற உண்மையும விளங்குகின்றது.

செய்யுள்.

என்னிமித் தத்தா லினிளவேந்தன்
மின்னு மமித்திர வெற்றிய னேயும்
பற்றுரு பிரதா பத்தினன் மித்திர
வெற்றிய னாச மேவுஞ் சார
விழியின னேயும் விசார விழியின்
அழிவில னாகவு மமாந்திருந் தானே
அந்நிமித் தத்தா லவனிக லோரும்
பன்னுறு பேதம் பரியவிட டநுபோல
விரவும் பலவாம் விரோத
தருமமும் விடடவோ தங்குமோ தந்தையே.

இங்ஙனம் மித்திரனை வெல்லாதவனாக விருந்தும் மித்திரனை வெல்லுகிறவனாக விருக்கின்றான் என்ற விரோத முஞ் சாரனென்ற ஒற்றனை விழியாகக்கொண்டும் சாரனென்ற ஒற்றனை விழியாகக்கொள்ளாமலும் இருக்கிறானென்ற விரோத முன்பாகவும், பின்பு சூரியனை வெல்லுகிறான் விசாரமென்ற விசாரணையை விழியாகக்கொண்டிருக்கிறானென்ற உண்மைப்பொருள் சிலேஷையாகவும் விளங்குகின்றது. முந்திய வுதாரணத்திலும் இதில் விரோதத்தை ஸமாதானஞ்செய்யும் உத்பிரேக்ஷையலங்கார மேலாக விளங்குகிறதென்ற பிரிவுகாண்க.

---

## ௩௪-வது பிறிதாராய்ச்சியணி.

(விபாவனாலங்காரம்)

செய்யுள்.

நேராது காரணங் காரியந் தோன்றி னிகழ்த்துபிறி
தாராய்ச் சியணி யலத்தக மின்றி யமைந்திடினுஞ்
சீரா ரிவளிரு பாதஞ் செவந்தவென் றேயுரைத்தல்
பாரா யுதாரண நல்லெட் டயபுர பாண்டியனே.

காரணமின்றிக் காரியமுண்டாவது பிறிதாராய்ச்சியணி. இதை வடநூலார் விபாவனாலங்கார மென்பர் இதற்கு "அலத்தகமின்றி" யென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் தாளிற் செவப்புக்குக் காரணமாகிய செம்பஞ்சுக குழம்பு இடுதலில்லாமலிருந்தும் அக்காரியமுண்டாயிருககின்றது.

செய்யுள்.

உண்ணா திருந்து மதத்தவன்ன முடைய
தாயெங் கனுந்துடைப்பே
யண்ணா திருந்துங் களங்கமில்விண்
ணதனை யுடைய தாய்த்தெளிவு

பண்ணு திருந்துந் தெளிவமையும் பனிநீ
　　ருடைய தாய்விளக்க
நண்ணு விருநகு முலகமெல்லா
　　நயச்சுந் தரமா யினமாதோ.

இங்ஙனம் அன்னத்தின் மதத்தலுக்கும், ஆகாசத்தின் அமலத்துக்கும், தண்ணீரின் தெளிவிற்கும் கவ்ருண்ணல், துடைத்தல், தெளிவித்தலென்ற காரணங்களில்லாமலிருந்தும் அக்காரியங்க ளுண்டாயிருக்கின்றன.

செய்யுள்.

வனிதை யோதி முடித்ததி னுன்மண
மினிது லாநகத் தேந்தல்கை யான்மலர்
தனையெ டுத்திருந் தாலுங்கொ டிகளின்
முனைய டுத்த சிலீமுக முள்ளவே.

இங்ஙனம் வண்டினங்களின் இருப்புக்குக் காரணமாகிய மலர்களில்லாமலிருந்தும் மடந்தையின் கோதையை முடித்ததினுல் வாசம்பொருந்திய அரசனது நகங்களுடைய ஸம்பந்தமாகிய ஹேதுவால் அக்காரியமுண்டாகின்றது.

செய்யுள்.

ஏதுவின் றங்குணந் தாங்குறைந் துங்காரியமெழுந
லோதிரண் டாமவ் வணிமதன் கூர்மை யொடுவளமை
யாதுமி லாக்கணை யாலே யுலக மடங்கியிட
மோதுவ னென்ப திலக்கிய மெட்டம முன்னவனே.

ஏதுக்களில் தத்தம் குணங்கள் குறைந்திருந்தும் காரியமுண்டாவது இரண்டாம் பிறிதாராய்ச்சியணி. இதற்கு "தன் கூர்மை" யென்பதுமுத லுதாரணம். வெற்றிபெறுவதற்குக் காரணமாகிய பகழிகளில் அவற்றின் முக்கிய

குணங்களாகிய வன்மையுங் கூர்மையும் இல்லாமலிருந்தும் உலகவெற்றி யெனுங்காரிய முண்டாகின்றது.

செய்யுள்.

தென்றலினால் வானுலவு தேமாவின் சண்பகத்தின்
மன்றமுறு தாது வழிப்போக—நின்றிருக்கில்
ஒட்டாதே நீர்வரச்செய் யும்.

இங்ஙனம் கண்களில் தண்ணீருண்டாவதற்குக் காரணமாகிய மா, செண்பகம் இவைகளின் பூந்தாதுகளின் ஸம்பந்தமாகிய குணத்தின் குறைவிருந்தும் அக்காரிய முண்டாயிருக்கின்றது. இங்ஙனம் முதலாவது உதாரணத்தில் மன்மதனுக்கு அதிக மகிமை தோற்றுவதாலும், இரண்டாவது உதாரணத்தில் மா செண்பகம் இவைகளின் தாதுகளுக்கு ரோதனஞ் செய்யத்தக்க மையலே உண்டாகுதலாகிற மகிமைச சிறப்புத்தோற்றுதலாலும் இவ்வணியை விசேஷோக்தி யலங்காரமென்றார் தண்டியாசிரியர். சித்ராந்தத்தில் கூர்மை முதலிய கருவியின் குணங்கள் குறைந்திருப்பமையால இது காரணமில்லாம லக்காரிய முண்டாகும் பிரிதாராய்ச்சியணியின் பாலே கூறலாயிற்று.

செய்யுள்.

இகலே யிருக்கினுங் காரியந் தோன்றி யிடுதலையும்
புகலுவ மேலது மூன்று மவணிநின் புட்கரப்பன்
னகம்பணி யோரைத் தெறுமென் றுதாரண நன்குரைப்பார்
செகவீர ராம குமாரெட்ட பாண்டிய சேகரனே.

இடையூறிருக்கினுங் காரியமுண்டாவது மூன்றும் பிறிதாராய்ச்சியணி. இதற்கு "நின்புட்கரப்பன்னகம்" என்பது முதலுதாரணம். இங்ஙனங் கத்திப் பன்னகத்தின் தீண்டுதலாகிய காரியத்திற்கு விஷத்தை யடக்கு

கின்றவேர் மந்திரம் முதலியவைகளைக் கொண்டிருக்கின்ற பணியோர்களாக இருத்தலாகிய விரோதமிருந்தும் அக் காரியம் பணியோர்களிடம் உண்டாயிருக்கின்றது.

செய்யுள்.

அரச நின்பிர தாப வருக்கனும்
பரவி யேகுடை பற்பல லாணைவிட்
டிரவு றுங்குடை யோடு மமைந்திடு
மருவ லார்குழு வாட்டு மதிசயம்.

இங்ஙனம் பிரதாபமாகிய சூரியனின் ஆதபத்தால் வெப்பங் கொள்வதாகிய காரியத்துக்கு விரோதமாகிய குடையைக் கொண்டிருந்த விருந்தும் அக்காரிய முண் டா யிருக்கின்றது.

செய்யுள்.

காரண மில்லதிற் காரியம் வேறுறக் காணிலதைத்
தாரணி யோரொரு நான்கா மவணியென் றோதுறுங்கும்
வாரண மானதில் யாழொலி யென்ன வரலதற்கு
தாரண மெட்ட புரமக ராசவு தாரமனே.

தனக்குக் காரணமில்லாமல் இருக்கும் ஒரு கருவியில் மற்றொரு காரியமுண்டாவது நாலாவதாகிய அவ்வணி. இதற்கு "வாரணமானது" என்பது முதல் உதாரணம். இங்ஙனம் வாரணமாகிய சங்கம போன்ற நாயகியின் கண்டத்து நின்றும் யாழொலி போன்ற நாதமுண்டா கின்றது என்று தனக்குக் காரணமில்லாமையினின்றும் யாழொலியாகிய காரியமுண்டா கின்றது.

செய்யுள்.

பகையாகு மேதுவிற் காரிய மேயுற் பவிப்பதைந்நாம்
வகைமேவு மவ்வணி சீத மதியின் வளர்கிரணந்
தகையாரிப் பெண்ணினை வாட்டிடு மென்ன லுதாரணமாந்
திசைதோறும் வல்விச யஞ்செய் குமாரெட்ட திண்புயனே.

பகையான கருவியினின்றும் காரியமுண்டாவது ஐந்தாவதாகிய அவ்வணி. இதற்கு "சீதமதியி" னென்பது முத லுதாரணம். இங்ஙனம் சீதத்திற்கும் வாட்டத்திற்கும் நேர்விரோதமாதலால் சீதத்தன்மையுள்ள மதியினது கிரணங்களாகிய பகைக்கருவியினின்றும் வாட்டுகிறதென்ற காரியம் உண்டாயிருக்கின்றது.

செய்யுள்.

மகவெனு மார்த்தாண்ட னுதிபோது குவலயத்
தகவிளங் கிடமன் குலத்தானை யுற்றமைய
இகலரச புத்திர ரொழிற்கரக கமலமவை
மிகவுங் குவிந்தவிவை மிக்கநல வதிசயமே.

இங்ஙனம் குவலயத்தின் விளக்க முதலிய காரியங்களை விலக்கத்தக்க பகலவனுதயமாகிய பகைக்காரணத்தினின்று அக்காரியங்க ளுண்டாயிருக்கின்றன.

செய்யுள்.

மூட மாமுலை மூவுல கத்தையும்
பீடை செய்யப் பெறுஞ்சுரு திக்கணே
கூடு நாட்டம் புருடரைக் கொல்வது
நீடு மாசசரி யஙகனி நேரிழாய்.

இங்ஙனம் புருடரின் கொல்லலாகிய காரியத்தை விலக்கத்தக்கச் சுருதியில் கூடுதலென்ற தன்மையைக் கொண்ட நாட்டமாகிய பகைககாரணத்தினின்று அக்காரிய முண்டாயிருக்கின்றது. முந்திய உதாரணங்களில் காரியகாரணங்களுக்கிருக்கும் பகை இயல்பாக வுள்ளதென்றும், இவ்வுதாரணத்திற் சுருதியிற் பற்றுதலெனும் இடையிலவந்த குணத்தாற் சம்பவித்ததென்றும், பிரிவு காண்க.

செய்யுள்.

காரியத் தேநின்றுங் காரணந் தோன்றிடக் காணிலதை
யாரு மவணியி லாருவ தென்ப ரதிபநின்கைத்
தாருவிற் சீர்த்தி யெனும்பாற் புணரி தழைத்ததென்றல
தேரு முதாரண மெட்ட புரத்துதித் திட்டமன்னே.

காரியத்தினின்றும் காரணமுண்டாவது ஆரும் பிறி தாராய்ச்சியணி. இதற்கு அதிப நின்கை யென்பது முத லுதாரணம். இங்ஙனம் காரியமாகிய கற்பகத்தருவினின் றுங் காரணமாகிய பாற்கடலுண்டா யிருக்கின்றது.

செய்யுள்.

மாதிரத்தி லேகொடியும் வந்துதிக்கு மாநிரமோர்
போதுங் கொடியினிடைப் போயுதியா—தோதுமிநற்
கொன்றுவிப ரீதமுற வேகனகத் தோர்கொடியி
லின்றிருவெற் புண்டா யின.

இங்ஙனம் காரியமாகிய பொற்கொடியில காரணமா கிய இரண்டு வெற்புகள் உண்டாயின காண்க.

---

## கடு-வது காரணவாராய்ச்சியணி.

(விசேஷோக்தியலங்காரம்.)

செய்யுள்.

குறைவறு காரண மேவியுங் காரியங் கொண்டிலதை
யறைவது காரண வாராயச்சி காம விளக்கவிரந்தும்
நிறைபெறு நேயங் குறைவிலை யென்ன நிகழ்த்துதல்காட்
டிறைவரும் போற்று குமரெட்ட பாண்டிய னென்னுமன்னே.

எங்ஙனம் போதுமான காரணமிருந்தும் காரியமுண் டாகாம லிருக்கின்றதோ அது காரணவாராய்சசியணி. இதை வடநூலார் விசேஷோக்தி யலங்காரமென்பா.

இதற்கு "காமவிளக்கவிந்து" மென்பதுமுத லுதாரணம். இங்ஙனங் காமவிளக்கின் பிரகாசமாகிய போதுமான காரணமிருந்தும் நேயத்துக்குக் குறைவாகிற காரியமுண்டாக வில்லை.

செய்யுள்.

சந்தி யிராகியெனச் சாருந் திவாவதற்கு
முந்தி யிருந்திடுதன் மூண்டுமவை—யந்தவித
மேனும் புணர்ப்பையுற விலலைதெய்வத் தின்செயலே
யானதுமிக் காமதிசயம்.

இங்ஙனஞ் சந்தியென்ற பெண் இராகியா யிருத்தல் திவாவென்ற புருஷன் அப்பெண்ணுக்கு முன்னிருத்த லாகிய போதுமான காரணங்க ளிருந்தும் அவ்விருவருக்கும் சேர்க்கை யென்றகாரியம் உண்டாகாமற் போய் விட்டது.

---

## ௬௯-வது கூடாமையணி.

(அஸம்பவாலங்காரம்.)

செய்யுள்.

அரிதாகுங் காரியத் தற்பவ மென்னலகூ டாமையணி
கிரியாயச் சேயெடுப் பானென் றெவனறி கின்றவனென்
றுரைபே சிடுத லுதாரண மாமய ளேடுவந்து
திருமால் பணிகமு காசலன் பாதத் தியானத்தனே.

காரியத்தின் ஸமபவிக்கக கூடாமையை வருணித்தல் கூடாமையணி. இதை வடநூலார் அஸம்பவாலங்கார மென்பர். இதற்குக் "கிரியாயச சேயெடுப்பா" னென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் கையினால் மலையின் எடுத்தல அரிதென்பதை வருணித்திருக்கின்றது. எவனறிகின்றவனென்பது கூடாமையை விளக்குகின்றது.

செய்யுள்.

நளிர்புனற்கொரு விருப்பிட மிரத்தின கரமென்
றளியளக்கரைத் தாகமுற் றடைந்தநா மடைந்தோம்
களிதிமிங்கில முதலயர் வுறகவைபிற் கும்பன்
அளியடககியுண் டானிதை யென்றெவ னறிவான்.

இங்ஙனம ஒருநாளும் வற்றுதல் ஸம்பவிக்கக் கூடிய தில்லை என்றதை ஸம்பவிக்கக் கூடாததாகக் கூறியிருக்கின்றது. இங்ஙனம் எவனறிவானென்பது ஸம்பவிக்கக்கூடாமையை விளக்குகின்றது.

## கஎ - வது தொடர்பின்மையணி.

(அஸங்கதியலங்காரம்.)

செய்யுள்

காரியங் காரணம் வெவ்வே றிடம்பகை யாயுறலே
ஆறுந் தொடர்பின்மை யென்பர் சலதர மாலமுண்ண
ஊருற வழிச்செல்லு வோர்மட வாருய வுருரெனலிங்
கோரு மிலககியந் தேரெட் டயபுர வுத்தமனே.

காரிய காரணங்கள் விரோதந் தோன்றும்படி வெவ் வேறிடத்தில் இருப்பது தொடர்பின்மையணி. இதை வடநூலார் அஸங்கதியலங்கார மென்பர். இதற்கு "ஜலதர மாலமுண்ண" வென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் ஆல முண்டவன் மூர்ச்சை யடைவது உசிதம். அவ்வாறின்றி ஜலதரங்கள் ஆலத்தையுண்ண வழிசெல்வோர் மட வார் மூர்ச்சையடைந்தார்க ளென்று காரியகாரணங் களுக்கு விரோதமாக வெவ்வேறு இடத்திலிருத்தல் விள ங்குகின்றது.

செய்யுள்.

கோளனெனும் வல்லுரகங் கொலலுமுறை யெவ்வாறு
மூளுநிற சோரசன் முன்னனுநி—நீளுமவன்

காதத‌னை யேதீண்டக் காசினியில் மற்றொருவன்
சாதலடை வானிச் சயம்.

இங்ஙனம் கோளானுகிய உரகம் அரசன் செவியில் தீண்ட மற்றொருவன் மாண்டு போகின்றான் உரகத்தின் தீண்டலென்னுங் காரணமும் மாண்டு போகிறதாகிய காரியமும் விரோதமாக வெவ்வேறிடத்திலுண்டாகியிருக்கின்றன.

சில இடத்தில் தொடர்பின்மைக்கு ஸமாதானமிருந்தாலுங் கற்றோரை மகிழ்வித்தலிருப்பமையா லிவ்வணி வருகின்றது.

செய்யுள்.

உயர்ந்த கன்ற உயரநளனெண்ணமா
மியன்ற பற்படி யென்றுமுற் றேறநீ
இயங்கு னெண்ணம தாலுநீ யாயவன்
றியங்கி மிக்குயிர்ப் பாற்றுவன் றேங்குழாய்.

இங்ஙனம் தமயந்தி உயர்ந்தகன்ற படிகளில் ஏற நளன் பெருமூச்சிடுகின்றா னென்ற தொடர்பின்மைக்கு நீயா யென்ற ஸமாதான மிருந்தாலுங் காரியகாரணங்கள் வெவ்வேறு இடத்திலிருப்பதையே பற்றி இவ்வணி யென்றே நிரூபிக்கலாயிறறு.

இலக்கணத்தில் பகையாயுறுதலென்ற அடை கொடுத்திருப்பமையால் காரிய காரணங்கள் வெவ்வேறிடத்தி லிருந்தபோதிலும் விரோதமின்றி யிருக்குமாகில் இவ்வணி யல்ல.

செய்யுள்.

எழின்மு கத்தியெப் போது நுதல்விலக
கழிய வாங்கின ளோவப் பொழுதுகட்
செழிய பாணத்தி னற்சிறி யேன்மனம்
அழிய வேபிளப் பாயின தேயந்தோ.

இங்ஙனம் நுதலாகிய வில்லைக் கழியவாங்குதலாகிய காரணம் நாயகியின் முகத்திலும், மனதின் பிளப்பாகிய காரியம் நாயகனிடத்திலும் இருப்பதால் காரிய காரணங்கள் வெவ்வேறிடத்தி லிருந்தாலும் விரோதமில்லாமலிருப்பதைப்பற்றி இவ்வணி யல்லவெனத் தீர்மானிக்கலாயிற்று.

செய்யுள்.

ஓரிடத் தேசெய்ய வேண்டி யதனைமற் றோரிடத்து
நேரிடச் செய்தலு மொன்று புரிய நிகழ்ந்ததற்குக்
கூறிய மாறு புரிதலு மவ்வணிக் கூறுகளாம்
பாரில் மருவலர் சந்தான மின்மை பணிநினைந்தே.

விண்ணின் மருவலர் சந்தான மின்மை மிகப்புரிந்தாய்
கண்ணவென் றேது வதுங்கோத் திரம்விளக் கற்குவந்தே
பண்ணினை கோத்திரந் தூளாக வென்று பகருவதும்
நண்ணு மிலக்கியந் தேர்வா யிளசை நரேந்திரனே.

ஓரிடத்திற் செய்யவேண்டியதை மற்றோரிடத்திற் செய்வதும் ஒன்றைச் செய்யத்தொடங்கி அதற்கு விரோதத்தைச் செய்வதும் அவ்வணியே. இவற்றுள் முந்தியதற்குப் "பாரில் மருவலர் சந்தானமின்மை பணிநினைந்தே" யென்பதுமுதல் "கண்ணவென்றேதுவதும்" என்பது வரையும், இரண்டாவதற்குக் "கோத்திரம் விளக்கற்" கென்பதுமுதல் "கோத்திரம் தூளாக" வென்பது வரையும் நிரலே யுதாரணங்கள். அவற்றுள் முந்தியதில் பூமியில் மருவலர் சந்தானமின்மையைச் செய்வதற்கு விண்ணில் அதைச் செய்ததாகவும் பிந்தியதில் கோத்திரம் விளக்கத் தொடங்கி அதற்கு விரோதமாக அதைத் தூளாக்கினதாகவும் கூறியிருக்கின்றது. இங்ஙனம் மருவலர்கள் என்ற பகைஞருடைய சந்தானம் மக்களென்ற பொருளுள்ள மருவலர்சந்தானமென்றபதத்திற்கு மருவுள்ள அலர் கொண்ட

சந்தான தருவென்ற பொருளாலும் கோத்ர மென்ற பதத்திற்குப் பூமியென்றும் பருவதமென்றும் இருபொருளாலும் ஸமாதானங் காண்க.

செய்யுள்.

வளர்வுறுவெண் கதிருமிழுன் வாள்தனைப்
போழுண்டோர் மடவா ரெல்லாந்
தெளிவுறவே நிருககதனிற கங்கணமுங்
கவானதிறபத் திரமு மத்தங்
களிலினிய திலகமுமா கியகதிசெ
யாபரணங் கலேயே கொண்டார்
னமங்ப ரேறெனசசொல் வளவநரே
திரவிசய தார்ப்பூ மானே.

இங்ஙனம் கைகளிலிடவேண்டிய கங்கணத்தை நேத்திரங்களிலும் கொங்கைகளிலிடவேண்டிய பத்திரங்களைத் தொடைகளிலும நெற்றியி லிடவேண்டிய திலகத்தைக் கைகளிலு மிட்டதாகக் கூறியிருக்கின்றது. இதில் கங்கண முதலியவைகளைக் கை முதலியவைகளி லிடுதல் பிரசித்தமானதால் அவைகளைச் சொலலாகக் கூறவில்லை.

செய்யுள்.

உலக நாதா மூவுலகத் துளமா னிடரா னவர்மயலே
விலகும் படியாற் றிடற்கிந்த வடிவம விளைநீ யளந்திடுதற்
கிலதாம் வனப்பின் புணரியென விசையில் வடிவங் கொண்டேதான்
பலமா மடவி யருக்குமயற பார மியற்று கின்றுயால்.

இங்ஙனம் மூவுலகத்திலுள்ளவர்களின் மையலை விலக்கும்படியாய் அவதரித்த கண்ணன் அதற்கு விரோதமாகப்பலமாமடவார்களுக்கு மையலே யுண்டுபண்ணியதாகக் கூறியிருக்கின்றது.

## ௩௮-வது தகுதியின்மையணி.

(விஷமாலங்காரம்.)

செய்யுள்.

பொருந்துந் தகுதி யமையாப் பொருடகுப் பொருந்தலம்
இருந்திட வேவரு ணித்தல் தகுதியின் மையணியே.
அருந்தகை வாகை மலர்மென்மெய்ப் பெண்ணெங்க ணங்கியினுல்
வருந்தாப மெங்ஙனெ னிலகியங் காணெட்ட மாமனனே.

பொருந்தத்தகாத பொருள்களிரண்டனுக்குச் சேர்க்கையைச் சொல்வது தகுதியின்மையணி. இதை வடநூலார் விஷமாலங்கார மென்பர். இதற்கு "அருந்தகைவாகை" என்பதுமுதல் உதாரணம். இங்ஙனம் வாகை மலர்போன்ற மென்மையான பெண்ணினது தேகத்தில் கொடிய மன்மத தாபத்தின் ஸம்பந்தம் கொஞ்சமேனும் பொருந்தாததாகையால் அதை அவ்விதமே பொருந்தினதாகக் கூறியிருக்கின்றது.

செய்யுள்.

மானிகாகன் முனமுறுகவான் விருப்புடையயன் மறுத்தொருகால்
நானமளாங் கரிப்புரிந்து நனையுமறுத் துடைந்தமயப்
போனவரு விடைப்பாரி சாதமலர் மணம்புணர்ப்பாய்
ஆனதிலை யெனிற்செயங் கவின்முகமே யருமதியே.

இங்ஙனம் ஸம்பந்தத்தை அடையத்தகாத முகத்திற்கும் சந்திரகாந்திக்கும் ஸம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. முந்திய உதாரணத்தில் சேர்க்கை ஸ்வரூபமாக விருக்கிறதென்றும் இவ்வுதாரணத்தில் சேர்க்கை யுக்தியா லுண்டாகிறதென்றும் பிரிவுகாண்க.

செய்யுள்.

ஏதுவொன் றிற்குணம் வேறாய காரிய மேவுதலும்
ஓதிய வவ்வணி மன்றெனின் காரிய முமாய்

வேதநிறப்புக ழுண்டாக்கு மென்ன விளம்பிடுதல்
ஈதினி லக்கியங் காணெட் டயபுரத் திந்திரனே.

காரணத்தினின்று வேறு குணமுள்ளகாரிய முண்டாவதும் அவ்வணி இதற்கு "மன்னுநின்கா" ரென்பது முதலுதாரணம். இங்ஙனம் கறுப்புநிறமுள்ள கத்தியாகிய காரணத்தினின்றும் வெண்மையான கீர்த்தியாகிய காரியமுண்டாயிருக்கின்றது காரியகாரணங்களில் ஒன்றைஒன்று விலக்குந் தன்மையிருப்பது ஐந்தாவது பிறிதாராய்ச்சியணி யென்றும் பகையான குணமுள்ள காரணத்தினின்றும் பகையான குணமுள்ள காரியமுண்டாவது தகுதியின்மையணி யென்றும் பிரிவுகொண்க.

செய்யுள்.

அநுகூலங் கொள்ளத் தொடங்கி யதுமுடி யாமலுந்தீங்
கினையே யடைவது மவ்வணி பண்டம்வை கின்றதென்று
முனிநாகப் பெட்டியி னைக்கடித் தாகு முனைந்தவர
வினதினை யாமென் றிலக்கியம் விள்வ ரிளசைமன்னே.

அநுகூலத்தைப் பெறத்தொடங்கி அதைப் பெறுமலிருப்பது மன்றிப் பிரதிகூலத்தையும் பெறுவதும் அவ்வணி. இதற்கு "பண்டம்வை கின்றதென்ற" தென்பது முதலுதாரணம். இங்ஙனம் பண்டமிருக்கின்ற எண்ணங்கொண்டு பாம்புப் பெட்டியைக் கடித்த எலி தன்கோரிக்கையைப்பெறுமல் போனதுமன்றி அப்பாம்புக்கு இரையாகவு முடிந்தது.

செய்யுள்.

பண்ணவனே நானதிகப் பாலாசை யோடுநின்னை
எண்ணுறுகோ பாலனென வேநினைந்து—நண்ணினனீ
டாதாவின் பாலேனு மாந்தவொட்டா மற்புரிந்தாய்
நாதாநின் னருளென் றும்.

இங்ஙனம் அதிகப்பாலாகிய பயனின் விருப்பத்தால் கன்னே அணுகி அதைப்பெறுமற் போனதுமன்றி இயல்பாகக் கிடைக்கத்தகக தாய்முலைப்பால் கிடையாமையாகிற பிரதி கூலமுங் கிடைத்திருக்கின்றது.

௧ செய்யுள்.

மண்ணதனிற் கோளரிக்கு மன்னுபயங் கொண்டுமுயல்
விண்ணதனிற் சந்திரனை மேவினது—நண்ணவனுந்
தான்சேர் பொருளினுக்குஞ் சாற்றுமத னுற்பயமே
தான்சேர லானதுகித் தம்.

இஃது கெடுதியை நீக்கிக்கொள்வதாகிற பயனைக் கருதி யத்தனித்து அவ்வாறு முடியாமல் அதிககெடுதியாக முடிவதற்கு உதாரணம். இங்ஙனம் முயல், கோளரியாகிற சிங்கத்திற்குப பயந்து அககெடுதியை நீக்கிக் கொள்ளும் பொருட்டாய் விண்ணில் விளங்கும் மதியினிடத்திற் சென்றும் அவ்விடத்திலுங் கோளாகிய அரியினிடத்தில் மிகுதியான பயத்தையடைந்தது.

செய்யுள்.

மாருதி வாலை யெரிக்கு மவாய்ச்
சேருமி ராவண னரதி லேறிச
சாருற மூளுவித் தாரத னற்மைம
மூருல வுந்தக னத்தினை யுற்றும்.

இஃது பிறருக்குப் பிரதிகூலத்தைச் செய்கிறதாகிய இஷ்டத்தைச் செயயத்தொடங்கி அவ்வாறு முடியாமல் தனக்குப் பிரதிகூலமாவதற்கு உதாரணம். இங்ஙனம் மாருதியின் வாலை யெரிப்பதாகிற இஷ்டத்தைச் செய்யத்தொடங்கியது, அவ்வாறு முடியாமல் தன் னகரத்துக்கே கெடுதியாக முடிந்தது. பிரதிகூலமட்டிலும் கிடைப்பதும் அநுகூலமட்டிலும் கிடையாம லிருப்பது மெனப் பின்னும் இவ்வணி யிருவகைப படும்.

செய்யுள்.

மரையின் பூங்குடை விருப்புறு பேதையே மரையின்
விரையை வாவியில் வித்திட விரும்புகின் றனையோ
உரைசெய் காலமோ கலியுல கோகல மறப்ப
வரைவி லிம்மரை யுன்முக வாவியே யிருக்கும்.

இஃது பிரதிகூலத்தை மட்டிலும் பெறுவதற்கு உதாரணம். இங்ஙனம் மரைப்பூங் குடையின் விருப்பத்தால மரையின் விரையை விரைக்கின்ற பெண்ணுக்கு மரையின் பெறுதலிருக்கின்றது. ஆனால் முககாந்தியை யிழத்தலாகிய பெரிதான பிரதிகூல மிருக்கின்ற தென்று காண்க.

செய்யுள்.

சிறுவநீ சிரம மருவினை யெம்பாற்
சேரவை தாங்குகின் றனமென்
றறையெது குலத்தோர பொறையது பரத்தா
லயர்ந்துகை வளைந்தலாந் திடத்தன்
னுறுகரஞ் சிறிது நழுவிட விடுத்தே
யுடனகைக் கின்றவ னுன
இறைவனே யெவர்க்கு மேன்மையுற் றவனு
விருந்ததை யறிந்தன மம்மா.

இஃது அநுகூலங் கிடையாமைக்கு உதாரணம். ஆயினிங்ஙனம் வெற்புமேல் விழுகிறதாகிய பிரதிகூலத்தின் பெறுதல் இருக்கின்றது. அவ்வாறிருக்கிறுங் கண்ணனின் கரகமல ஸம்பந்தத்தின் மகத்துவத்தால் அது உண்டாகவில்லை என்றும் வெற்பைத் தாங்கள் தாங்க வேண்டுமென்ற இஷ்டமட்டிலும் சித்திககவில்லை என்றுங் காண்க.

செய்யுள்.

இந்தமதி மறுவொருவ னிவ்வுலகத் துன்முகமா
வந்துபிறந் தனனவனுந் திலகமெனுங் கைதவத்தால்

தந்திடுவை மறுவையடுத் தவர்மறுவுற் றவராக
எந்தமடந் தையும்புரிவ ளவர்பொனெழிற் சொண்டொடியே.

இங்ஙனம் சந்திரன் தன்னிடத்திலிருக்குங் களங்க மாகிற பிரதிகூலத்தை நீக்குதலாகிய இஷ்டத்தின் பெருமை யிருக்கின்றது.

செய்யுள்.

அருந்தவபுத் திரனெனும் புயமறிதற் கலைந்துதிரிந்
திருந்தவெனக் கிசசாபங் கருணையொடு மேயிசைந்தி
பருந்தருவி னரிலுறுநீப் பாரதனை சுடினுமுற
வருந்தொழிற்கு வளர்ந்தெழுப யிருந்தேது வாமன்றே.

இங்ஙனம் ஸ்வபாவத்தில் அநிஷ்டமாக விருக்கும் முனியினது சாபம் வீணாகாமலிருக்கும் பொருட்டுப் புத்திரனில்லாமலிருக்குந் தசரதனுக்குப் புத்திரனுண்டாகித் தீருவது நிச்சயமாகையால அவ்வரசனுக்கு இஷ்டமாகவே ஆச்சுது. ஆதலால அன்னியனுக்கு அநிஷ்டத்தை யுண்டுபண்ணுகிறதாகிய இஷ்டத்தின் சித்தித்தல் உண்டாகவில்லை. ஒருவன் தன்னுடைய இஷ்டம் சித்தித்தலின் பொருட்டு ஓரிடத்திற் கொருத்தனை அனுப்ப அவன் தன்னை அனுப்பியவன் இஷ்டத்தை முடியாமல் தனக்கு இஷ்டத்தை முடித்துக்கொள்ளு மிடத்திலும் இஷ்டம் பெருமையிரு லுண்டா மிவ்வணி.

செய்யுள்.

பாங்கி காளென் பதியிடத் தேகவே
நீங்கு தூதி யவன்வசம் நேர்ந்தனள்
ஏங்கு மென்னறி வின்மையோ வீதுதான்
ஓங்கு தெய்வக் குறையோ வுணருவீர்.

இங்ஙனம் நாயகனிடத்துக்கு நாயகியா லனுப்பப் பட்ட தூதி நாயகியின் இஷ்டத்தை முடியாது தன்னு

டைய இஷ்டத்தை முடிக்கின்றுளென்பது தூதி அவன் வசம் சேர்ந்தனள் என்றமையால் விளங்குகிறது.

செய்யுள்.

நெஞ்சை யகன்றிணையா நேர்ந்தேனு னம்பி
வஞ்சியவள் பாலே வருமன்று—தஞ்சமென
அங்கே கலந்துவச மானதுதொல் காப்பியரால்
இங்கேமோ சம்போ யினேன்.

இங்ஙனம் நாயகியிடம் மனதின் பற்றுதலாலுண்டாகிய சுகத்தைத் தானநுபவிக்கிறதாக இருந்தாலும் நெஞ்சத்தையும் தன்னையும் வேருகவைத்து தனக்கு இஷ்டஞ் சித்திக்கவில்லை யென்பது விளக்கி இருக்கின்றது. இவை இஷ்டமே சித்தியாமைக்கு உதாரணங்களாக இருக்கின்றன. ஒருக்கால் இஷ்டம் கிடைத்தும் பின்பு அது கிடையாமற் போவதற்கு உதாரணம் எவ்வாறெனின்.

செய்யுள்.

மாதவநின் பதகிரணத் தழகினையா
தவன் விரும்பி வருமற்ருறு
மேதனவைக் கிரணமதை விடியுவரை
யனற்காய்ச்சி விடிந்த போதொப்
பாதலுறு மென்றெடுத்துக்கடிகைசெலச்
செலவுமச்சே யகல்வ நோக்கி
ஏதுமிலைத் தன்பணியிற் பயனெனசகூ
டிசைவதலா தியற்கை யன்றே.

இங்ஙனம் சூரியனது கிரணங்கள் இரவில் அக்கினியிற் பிரவேசிப்பது வேதத்திற் பிரசித்தமா யிருக்கின்றது. அவன் தனது கிரணங்களுக்கு மாதவனின் பாத

கிரணங்களோடு ஒப்புமைக்கிடைக்கவேண்டுமென அவை களை அக்கினியில் இரவு முழுமையும் காயவைத்து, காய வைத்த நாராசப்பகழிகள்போல் அக்கிரணங்கள் காய்ந்து செம்மை கொண்டதாக நினைத்தெடுத்தும் அவ்விதம் பெரிதான யத்தினத்தினாலும் அவனுக்கு அக்காலத்தில் மட்டிலுமிருக்கின்ற இஷ்டம் சித்தித்ததே யல்லது எப்பொழுது மிருக்கக்கூடியதான இஷ்டம் சித்திக்கவில்லை.

செய்யுள்.

திருமலிரி னகைமுடிப்பை யவிழ்த்தழகாம்
பொருளகவர்மித் திரனே யானேன்
கரபலனு மிம்மதியு வாவதனி
லுன்றிருமு கசிரீ யொப்பு
மருவியது முதனிரலே நேயந்ததனி
யாயமதில் வாய்ந்த செல்வம
விரைவிலழிந் திடுமெனலை யார்க்குமறி
வித்திடுங்கோ விந்த தேவே.

இங்ஙனம் பகவானது முககாந்தியை விரும்புகின்ற சந்திரனுக்குச் சிலேஷையாக விருக்கும் மித்திரன் என்ற சொல்லினாற் கிடைத்த சூரியனிடத்தில அமாவாசையிற் பிரவேசித்தலும் இஷ்டனிடத்தி னின்றும் பகவானுடைய முககாந்திக்கு இருப்பிடமாகிய தாமரை மொட்டென்ற முடிப்பை அவிழ்த்ததினாற் கிடைத்த அழகாகிய பொருளைப் பெறுதலுமாகிய அதிகமான முயற்சியைச செய்தும் பூர்ணிமையில் மட்டிலும் அவ்விதமான காந்தியைப் பெறுதலாகிய இஷ்டம் சித்தித்ததே யல்லது எககாலமு மிருக்கத்தக்க இஷ்டம் சித்திக்கவில்லை. சில இடத்தில் இஷ்டம் கிடையாமற் போனபோதிலும் கிடைத்ததாக ஐயமுண்டாவதும் அவ்வணியே. அஃதாவது.

செய்யுள்.

பல்லாள மன்னவநின் பகைஞ ரூரிற்
பழகுறுவேட் டுவமடந்தை யெவ்ணுசந் திரந்தி
எல்லாரு மிரத்தினத்தைக் கருங்கா லித்தி
யெனவெடுத்தன் னதிலேசந் தனத்தின் காட்டம்
நல்லாளைத் தடிந்திரு விழியு மூடி
னமையுடனுற் றாதியிடும் போதே மூசின்
மல்லாரும் பரிமளத்தால் வந்து லாவு
மகரத்தைப் புகையெனச்சங் கையும்வாய்ந் தாளே.

இங்ஙனம் அக்கினியைப பெறவேண்டுமென்ற முய ற்சியில அது கிடையாவிட்டாலும் அது கிடைக்கு மெ ன்ற ஐயம் புகை யுண்டாகின்றதென்ற ஸந்தேகத்தால் விளங்குகின்றது.

---

## ருக-வது தகுதியணி.

( ஸமாலங்காரம்.)

செய்யுள்

இசையு மிரண்டு பொருளின் வருணித தலேதகுதி
அசைவுறு மார முலையைத் தனக்கிசை வாமெனவே
நசையோ டுருபபிட மாக்கின தென்னனன் காட்டதுவாம்
விசையனே நேருங் குமாரெட்ட பாண்டிய மேன்மையனே.

பொருத்தமான இரு பொருள்களைச் சேர்த்து வரு ணிப்பது தகுதியணி. இதை வடநூலார் ஸமாலங்கார மென்பர். இதற்கு "அசைவுறுமாரமுலையை" யென்பது முதலுதாரணம். இங்ஙனம் அசைவுற்ற ஆரம் முலை என்ற பொருந்திய இரு பொருளுக்குச் சேர்க்கையை வருணித் திருக்கின்றது. இந்து முதலாவது தகுதியின்மையணி க்கு மாருக இருக்கும் தகுதியணி.

செய்யுள்

நரசிங்க பூமன் னவநிலவு நப்சங்
திரனைப்போற் கங்கைபிறைச செருசே—கரனைப்போற்
சாற்றுபுகழ் நின்னைச் சரியா மிருப்பிடமென்
றேற்றகலா துற்றிலங்கு மே.

இங்ஙனம் நரசிங்க அரசனுக்கும் புரூநகும் சரியான பொருத்தங் கூறியிருக்கின்றது.

செய்யுள்

ஆசசரிய மாசசரிய மப்புதமிக கற்புதம்வே
தாசசெழுவேம் பின்கனியை ச சாருமுண—வாசசெய்து
அங்கவையுண் ணககாகத் தைப்படைத்தான் றெயவவரு
ளுங்கொளலா லாக்கவின்மே லோன்.

இங்ஙனம் காக்கைக்கும் வேப்பங்கனியின் உணவிற்கும் பொருத்தங் கூறியிருக்கின்றது முந்திய இரண்டுதாரணங்களிலேயுந் துதியான பொருத்தம் என்றும் இதில் நிந்தையான பொருத்தம் என்றும் பிரிவுகாண்க.

செய்யுள்

காரிய மானதைக் காரணத் தோடொப்புக் காண்புகழ்ச்சி
நேரிறு மவ்வணி தெண்ணீ ருதித்த நினக்கெயகுங்கு
ழாரிட மேயிருப் பானது சீத மரிக்கமைந்த
பாரியென் றோத லிலக்கிய மெட்டம பார்த்திபனே.

காரணத்தோடு காரியத்திற்கு ஒப்புமைகூறுவதும் அவ்வணி. இதற்கு "தெண்ணீருதித்த நினக்" கென்பது முதலுதாரணம். கீழாரிடமே யிருக்குந் தன்மையுள்ள தண்ணீராகிய காரணத்தினின்றும் உதித்த இலக்ஷ்மியாகிற காரியத்திற்கு அத்தன்மையாகிய ஒப்புமை யிருப்பதைக் கூறியிருக்கின்றது. இஃது இரண்டாந் தகுதியின்மை யணிக்கு மாறான தகுதியணி.

செய்யுள்.

காட்டழலிற் றோன்றுபுகை காராகித் தாரையினாற்
காட்டினத்தீ யைகெடுக்கக் காண்பதுமே—நாட்டுசெந்
தானதனுக் கத்தீயுஞ் சாவுறுகாட் டைத்தகன
மானதுசெய் கின்றதல வா.

இங்ஙனமே தான் உற்பத்தியாகிற காட்டையழிக்கின்ற காட்டுத்தீ யெனும் காரணத்தாலாகும் புகையாகிய காரியமதற்கும்அது உற்பத்தியாகு மிடத்தை அழிக்குந் தன்மையாகிற ஒப்புமை யிருக்கின்றது.

செய்யுள்.

ஆதியா லால மெனுநாகனற் கைலா
கவிந்திடப் பெறுமுவா லிபச்செந்
சோதிமுக கண்ணுறு நுதலனா னேயங்
தோன்றியென வனந்திலே ராகு
காதுறு வதனாத தோடுமங் தரங்கம்
கானுறுமிச சந்திரன் கரத்தான்
மோதியிவ் விதமே யெனவருத் துவது
முற்றிலு முசிதமா னதுவே.

முந்திய வுதாரணங்களிற் காரணத்தின் இயல்பான செய்கையின் ஒற்றுமை காரியத்திற்கு இருக்கிறதென்றும் இதில் ஆலாலமுதலியவற்றின் தீய சேர்க்கையா லுண்டான ஒற்றுமை யிருக்கிறதென்றும் பிரிவு காண்க.

செய்யுள்.

இசைகொண் டேமுயற் சித்த பயன்குறை வின்றிமுடி
வைசொல வதுமவ் வணியே துடியடி வாரணத்தை
நச்சிய நிற்குத் துடியடி வாரணம் நண்ணிற்றம்மான்
மெய்ச்சுத வென்ன வுதாரண மெட்டம விற்பனனே.

இஃது மூன்றாவது தகுதியின்மையணிக்கு மாறாக விருக்குந் தகுதியணி. இங்ஙனம் அநிஷ்டத்தைப் பெறாமல் இஷ்டத்தைப பெறுதன் மட்டிலும் இருக்கின்றது. தந்தாவளம் வேண்டுமென்று அரண்மனைக்குட் பிரவேசித்து அவ்விடத்தில் வாயில காக்கின்றவர்களால் தடைபட்டு நிற்கின்றவனைக் குறித்துப் பரிஹாஸமாகப் பேசிய வசனம் அரசனது வாசலில் கணப்பொழுது தடைப்பட்டிருத்தல் ஸம்பவிக்குமென்றுநினைத்தே முயற்சித்திருப்பமையால் நினையாமற்கிடைக்கின்ற அதிகமான அநிஷ்டத்தைக் கொண்டிருக்குந் தகுதியின்மையணியைப்போல் இங்ஙனமுந் தடைபடுதலாகிய அநிஷ்டமிருக்கின்றதென நினைத்து அவ்வணி யென்று கூறலாகாது எங்ஙனம் நினையாமல் கிடைத்த அநிஷ்டமானது சிலவேளையினால் இஷ்டமாகவே வருணிக்கப்படுகின்றதோ அங்ஙனம் இவ்வணியே. வாரணம்-தடுத்தல்

செய்யுள்

உச்ச வும்பலி னடனம்வேட் டுழையடைந் தானேன்
இச்சை யின்படி மன்னவுச் சாடன மீந்தாய
விச்சை சேர்பெரி யோரிட மேவியே யடுத்தல்
நச்ச லாம்பய னண்ணுவ திலதுறு தன்றே.

ஆனாலிங்ஙனம் துதியினால் நிந்தை தோன்றுகின்ற வஞ்சப்புகழ்ச்சியாக வொப்புக்கொள்ளும் விஷயத்தில் தகுதியின்மையணி இருக்கின்றதெனின் அவ்வாறிருக்கினும் உசசமான அடனத்தை விரும்பியவனுக்கு அவ்வண்ணமே உச்சாடனத்தைக கொடுத்தீர் என்ற முதலாவது தோன்றுந்துதியை முககியமாகக்கொண்டு தகுதியணிக்குக் குறைவிலலை என்று இவ்விடத்திலுணரககலாயிற்று. அடனம்-திரிதல்

இஷ்டத்தின் பெறுதலிருக்கினும் இருபொருள்படுஞ் சொல் சாதுரியத்தால் அநிஷ்டமான பொருளின் தோற்ற மிருக்கின்ற விடத்திலும் இவ்வணிக்குத் தடையில்லை. அஃதெப்படியெனின்.

செய்யுள்.

காண்டம் படைப்புரியா யென்று கழறிடவும்
காண்டம் படைப்புரிந்து காதலனும்—வேண்டுபிதா
ஆணைகடந் தானே யல.

இங்ஙனம் ஆணை கடந்தானே யல என்றதினால் விரோதாலங்காரந்தோன்றும் பொருட்டுக காண்டம் படைப்புரியாயென்றதற்குப் பசழியைப் படையாமலிருப்பாய் என்ற பொருள் கொள்ளுதலிருந்தபோதிலும் பகழியைப் படைப்பா யென்ற பொருளைக்கொண்டே தகுதியணியும் இருக்கிறதென்றறிக. இருபொருள்படும்சொல் சாதுரியத்தினால் கிடைத்த அநிஷ்டத்தின் தோற்றுதலாலேயே முன் கூறியபடிக்கு உதாரணமாகிவிட்டது.

செய்யுள்.

பதும நீரிற் பரிதிக் கெதிருற
புதிய நற்கதி சேர்பொருட் டுத்தவ
மதுபு ரிந்தமை யாலுன் பதமெனா
பதிபி றப்பிலஃ துற்றது பாவையே.

இங்ஙனம் நற்கதியடையத் தவஞ் செய்த தாமரைகளுக்கு நற்கதியே கிடைத்தது என்னுமிடத்து சிலேஷையாக நன்னடையென்ற பொருள் கொள்வதாயிருந்தாலும் தான் கோரிய நற்கதியாகிய இஷ்டங் கிடைத்திருப்பதா லிஃது மவ்வணியே.

## சo-வது வியப்பணி.

(விசித்திராலங்காரம்.)

செய்யுள்.

கருதும் பயனுக் கெதிரா முயற்சியைக் கைக்கொடுதான்
புரிதல் வியப்பணி நல்லோர் திரிபுவ னத்தினுமே
யிருமுயா வாக வணங்குவ ரென்ப திலக்கியந்தேர்
அரிதிரு மாலெனுஞ் சாத்நூர ராஜ்ஜகொ ளன்புளனே.

தான் கருதிய பயனுக்கு மாறாகவிருக்கும் முயற்சியைச் செய்வது வியப்பணி. இதை வடநூலார் விசித்திராலங்கார மென்பர். இதற்கு "நல்லோர் திரிபுவனத்தி" லென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் உயர்ச்சியடைதலாகிற பயனைப் பெறுதற்குத் தேகத்தை உயர்த்தவேண்டியது உசிதமாகவிருக்க அவ்வாறின்றி அப்பயனுக்கு விரோதமாகத் தேகத்தின் வணக்கமாகிய யத்தனங்கொண்டதைக் கூறியிருக்கின்றது.

செய்யுள்.

உன்புகழ்பொல் லார்முகத்தி லேகறுப்புண் டாக்கமன்று
மன்புவன மானதில்வெண் மைபுரிவை—நின்பிர
தாபமுமே மித்திரசந் தோடமியற் றற்கியற்றுங்
கோபமது மித்திரனுக் கு.

பொல்லார் முகத்திற் கறுப்பை யுண்டுபண்ணுதலாகிய பயனைக் கருதி அதற்கு அநுகூலமாக எவ்விடத்திலுங் கறுப்பை யுண்டுபண்ணுதலாகிய யத்தனத்தைச் செய்யாமல் அதற்கு விரோதமாக வெளுப்பை யுண்டுபண்ணுகிறசெய்கையைச் செய்ததாகக் கூறியிருக்கின்றது.

## ௪௨-வது சிறுமையணி.

(அற்பாலங்காரம்.)

செய்யுள்.

நுண்ணிய தாகிய வாதேயந் தன்னினுட் பம்முறவே
நண்ணிய தாமொரு வாதாரத் தைப்பன லுஞ்சிறுமை
அண்ணமு தேநின் மணிமாலை யாம்விர லாழிசெபம்
எண்ணுதற் காம்வட மென்னலி லக்கிய மெட்டமனே.

அற்பமான ஆதேயத்தைப் பார்க்கினும் ஆதாரத்தை அற்பமாகக் கூறுவது சிறுமையணி. இதை வடநூலார் அற்பாலங்கார மென்பா. இதற்கு "அண்ணமுதே நின்மணிமாலையாம்" என்பதுமுத லுதாரணம். இங்ஙனம் விரலாழி விரலளவை மட்டுங் கொண்டிருப்பமையால் நுண்ணியதெனக் கிடைத்தது. அதுவுந் தவிர விரகமாதின் கையில் "செபமெண்ணு தற்காம்வட" மென்றதால் ஆதேயமான அச்சூத்திரத்தைப் பார்க்கினும் ஆதாரமாகிய கைகரு விரகத்திளைத்து நுட்பமாக இருக்குந் தன்மை விளங்குகின்றது.

செய்யுள்.

மருங்கி னுஞ்சிறு மையுற
வருங்கு சேசயம் வைகுநூல்
நெருங்குன் மாமுலை நேர்நடுப்
பொருந்து கின்றில பூவையே.

இங்ஙனம் மருங்கினுஞ் சிறுமையாக இருக்கும் தாமரை நூலாகிய ஆதேயம் முலைநடுவில் பொருந்தவில்லை என்றமையால் அவ்வாதாரம் ஆதேயத்தினும் நுண்ணியதென்பது நன்றாய் விளங்குகின்றது.

## ௪௩-வது ஒன்றுக்கொன் றுதவியணி.

(அந்யோந்யாலங்காரம்.)

செய்யுள்.

உதவியொன் றுக்கொன் றுறலைச்சொல் லொன்றினுக் கொன்றுதவி
விதுவி னிராவும் விளங்கு மிராவின் விதுவுவிளங்
குதலுறு மென்ப துதாரண மாந்திறை கொண்டுவந்து
சதமுறு மன்னர் தொழுமென் குமாரெட்ட சற்குணனே.

இருபொருள் ஒன்றுக்கொன் றுதவியாக இருப்பது ஒன்றுக்கொன் றுதவியணி. இதை வடநூலார் அந்யோங் யாலங்கார மென்பர். இதற்கு "விதுவினிராவும் விளங்கு" மென்பதுமுத லுதாரணம். இங்ஙனஞ் சசியி னாலிரவின் விளக்கமு மிரவினால் சசியின்விளக்கமு மிருப்பதால் அவ்விரு பொருளும் ஒன்றுக்கொன்று உதவியைச் செய்கின்றன.

செய்யுள்.

நோக்க மேலுற நோக்கி யிடைவெளி
யாக்க ரங்கொடுண் பான்புன லன்னதாய்
வார்க்குந் தாரைநுண் மையுறப் பெய்குவாள்
ஆசகு நீர்ப்பந்த ரார்ந்திடு மன்னமே.

இங்ஙனம் தன்னிடத்தில ஆசையால் தண்ணீரைக் கொடுக்கிறதென்ற கைதவங்கொண்டு வெகுநேரந் தன் முகத்தைப்பார்க்க விரும்புகின்ற தண்ணீர்ப் பந்தலிலுள்ள பெண்ணுக்கு வழிப்போக்கன் விரலகளின் அகறறுதலால் வெகுநேரம் தண்ணீரை வார்த்துக கொண்டே பார்க்கும்படிக்கு உபகாரத்தைச் செய்தான். அவ்வாறே அப்பெண்ணும் தண்ணீரைக்குடிக்கிற தென்ற கைதவங் கொண்டு வெகுநேரம் தன் முகத்தைப்பார்கக விரும்பிய

வழிப்போக்கனுக்கு நுடபமாகத் தண்ணீர்த் தாரையை விடுப்பதால் வெகுநேரம் தண்ணீரைக் குடித்துக்கொண்டே தன்முகம் பார்க்கும்படிக்கு உபகாரஞ் செய்தாள். இங்ஙனம் இவ்விருவரின் முயற்சியால் அவரவர்களுக்கு உபகார மிருக்கினும் ஒருவருக்கொருவர் செய்யுமுபகாரம் நீங்கவில்லை என்பதினும் இவ்வணிக்குக் குறைவில்லை. கைதவம் - வியாஜம்.

---

## சச-வது சிறப்புநிலையணி.

(விசேஷாலங்காரம்.)

செய்யுள்

ஆயும் பிரசித்தத் தாதார மின்றி யதிலுறுமா
தேய மதைவரு ணிக்கு மதன்பேர் சிறப்புநிலை
சேயவேல் வாரி புகுந்துந் தினகரன் தீபமுற்றக்
காயுமென் றோத லிலகிய மெட்ட நகர்க்கரசே.

எந்த ஆதேயத்துக்கு எந்த ஆதாரம் பிரசித்தமாய் விளங்குகின்றதோ அந்தப்பிரசித்த ஆதாரமின்றி ஆதேயமிருப்பது சிறப்புநிலையணி. இதை வடநூலார் விசேஷாலங்கார மென்பர். இதற்கு "சேயவேல்வாரி புகுந்து" மென்பதுமுத லுதாரணம். சூரிய கிரணங்களுக்கு அசசூரியன் பிரசித்த ஆதாரமாக இருக்க அதை நீங்கி அவை தீபமாகிய ஆதாரத்திலிருந்து கொண்டு இருளை நீக்குகின்றன வென்று வருணித்திருக்கின்றது.

செய்யுள்.

அம்பிலிடத் தம்புயமு மம்புயத்தி லுற்பலமும்
பம்பிவைபொற் பைங்கொடியிற் பற்றுமது—வம்பொறியின்
மேலாகு மீதெவ் விதமாமுற் பாதத்தின்
பாலாம் பரம்பரையப் பா.

இங்ஙனம் கமலத்துக்குங் குவளைக்குந் தண்ணீர் பிரசித்த ஆதாரமாக இருகக அவ்விதங்கூறுமல் தண்ணீரில்லாதவிடத்தில் அம்புயமும் அம்புயத்திற்குவளைமலரும் அவ்விரண்டும் பொற்கொடியிலு மிருக்கின்றனவாக வருணித்திருக்கின்றது.

சில இடத்தில் பிரசித்த ஆதாரங்களை விட்ட பொருள்களுக்கு வேறே ஆதாரம் கூறுமலே வருணிப்பதும் அவ்வணியாம். அதற்குதாரணம்.

செய்யுள்.

பொன்னுலகிற் புக்காராய்ப் போயுமெவர் நற்குணமே
மன்னுசொற்க ளெக்களிப்பு வந்துதவும்—அன்னவர்கள
எவ்விதங்காண் போற்ற லிலார்.

இங்ஙனம் பொன்னுலகைசசென்ற வித்வான்களின் மேன்மையானவாக்குகள் தங்களுக்குப்பிரசித்த ஆதாரமாகிய அப்புலவர்களில்லாமலிருந்தும் வேறே யாதாரத்தை அணுகாமலே ஊழிகாலம்வரை விளங்குகிறனவென்று வருணித்திருக்கிறது.

செய்யுள்.

பலவிடத் தோர்பொரு டன்னை வருணிப் பதுமவணி
புல்லி யகம்புற முன்பினெத் திக்கும் பொலிவுறவின்
சொல்லியை யேகண்ட னென்றுமு தாரணஞ் சொல்வர்மணப்
பல்லிய மென்று மதிரெட்ட மாநகர்ப் பாண்டியனே.

ஒரு பொருளை அனேக இடங்களில் வருணிப்பதும் அவ்வணி. இதற்கு "புல்லியகம்புறமுன்பி"னென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் ஒரே பெண்ணை அகத்தும் புறத்தும் முன்னிலும் பின்னிலும் எத்திக்கிலும் இருக்கின்றவளாக வருணித்திருக்கின்றது.

செய்யுள்.

மதலே ராசவ நீயென் மனத்துநிங்
குதலு ருமெய்ங்கு மங்குராங் கோடியின்
விதயி ருந்தும்வி யினமுற் றுமெனு
மதனே யேயனு மானத்தி னோர்வனுல்.

இங்ஙனம் ஒரே இராகவனை இருதயத்திலும் எத்திக்கிலுங் காணுகிறதாகக் கூறியிருக்கின்றது.

செய்யுள்.

சிறுகா ரியத்து முயற்சியி னும்பெரி தேயெனச்சொல்
மறுகா ரியங்கிடைக் கின்றது மவ்வணி மன்னநிற்பார்க
கிறயான் றருக்கண்ட னென்ன விலக்கியங் கேட்டவர்க்கு
அறநாலெட் டுந்தினஞ் சேரொட்ட மாநக ராள்பவனே.

அற்பவிஷயத்தி னாரம்பத்தால் அரிதான வேறு பொருளின் கிடைத்தலைக் கூறுவதும் அவ்வணி. இதற்கு "மன்னநிற்பார்க்கிற யா"னென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் அரசனைக்காண்கிறதாகிய அற்பமாகிய ஆரம்பத்தைச் செய்தவனுக்குக் கற்பகவிருக்ஷத்தின் காணுதலாகிற மேன்மையான காரியங் கிடைத்தது.

செய்யுள்.

பொற்பின் வடிவதிகம் பொங்குபிர தாபத்தீ
அற்பமுறுக் கல்வியுள நாவிருக்க—நிற்படைவே
தாபுதிய வேளினோமார்த் தாண்டனோவி யாழனோமன்
னுபடைத்தல் செய்தானிந் நாள்.

இங்ஙனம் நல்ல வடிவமும் அதிகப் பிரதாபமுங் குறைவில்லாக் கல்வியும் உள்ள அரசனின் படைத்தலாகிய அல்பகாரியத்தின் ஆரம்பத்தினல் மன்மதன் சூரியன் வியாழன் இவர்களின் படைப்பாகிய மேன்மையான காரியம் உண்டாயிற்று.

## சரு-வது மற்றதற்காக்கலணி.

(வியாகாதாலங்காரம்.)

செய்யுள்.

எதையெதற் கேது வெனப்பூ மியுங்கொண் டிருந்ததை
அதின்பகைக் காரியக் கேதுவு மாககலு மாரொருவன்
விதிகா ரியமொன்றிற் குச்சா தனமென வேபொருத்தி
னதைவே றொருவ னதின்பகைக் காரிய மானதற்கே.

சாதன மாக்கலு மற்றதற் காக்க லுதாரணம்பார்
யாது மகிழ்மல ரான்வே ளவைக்கயர் வாற்றுமென்றும்
மாதிருக் காலெரி வேளினை மாதிருக காலவரச்செய்
கோதையர் மேலரென் றுந்தே ரிளசைக் குமாரெட்டனே.

எந்தப் பொருளை எதின் அநுகூலகாரியத்திற்கு உலகம் ஸாதனமாகக் கொண்டிருக்கிறதோ அப்பொருளை அதின் விரோதகாரியத்திற்கு ஒருவன் ஸாதனமாகக் கொள்வதும் ஒன்றுக்கு ஸாதனமாக ஒருவன் கொண்டதை அவனுக்கு விரோதியாயிருக்கும் மற்றொருவன் அதின் விரோதத்திற்கு ஸாதனமாகக் கொள்வது மற்றதற்காக்கலணி. இதை வடநூலார் வியாகாதாலங்கார மென்பர். அவற்றுள் "யாது மகிழ்" என்பது முதல் முந்திய இலக்கணத்துக்கும் "மாதிருக்காலெரிவேளினை" யென்பது முதல் பிந்திய இலக்கணத்துக்கும் நிரலேயுதாரணங்கள். அவற்றுள் முந்திய உதாரணத்தில் உலகமகிழ்ச்சிக்கு ஸாதனமாகக் கொண்ட மலரென்ற பொருளை மதனன் அதற்கு விரோதமாகிய காரியத்திற்கு ஸாதனமாகக்கொண்டிருக்கிறான் இரண்டாவது உதாரணத்தில் சிவபெருமான் மதனனை எரித்தலாகிய காரியத்திற்கு ஸாதனமாகக் கொண்ட கண்ணென்ற பொருளை பெண்கள் அக்காரியத்திற்கு

விரோதமாக மதனனைப் பிழைப்பித்தலென்ற காரியத் திற்கு ஸாதனமாகக் கொண்டிருக்கிறார்கள்.

செய்யுள்.

ஒருகா ரியத்தை யெளிதா முடிக்கவுட் கொண்டதந்த
வருகா ரியத்தி னிகலுக் குமுட்கொள் வதுமவணி
பெருமான் சிறுவனென் றென்பா லருளப் பெறில்விலக்கற்
குரியனன் றென்ப துதாரண மெட்டம வுத்தமனே.

ஒரு காரியத்தை யெளிதாக முடிக்க ஒருவ னியந் தனை செய்ததை மற்றொருவன் அக்காரியத்திற்கு விரோத மாக முடிப்பிப்பதும் அவ்வணியே. இதற்குப் "பெருமான் சிறுவ" னென்பது முதலுதாரணம். இங்ஙனம் அரசன் போர்க்களத்துக்கு மகனை அழைத்துக்கொண்டு போகக் கூடாமைக்குக் காரணமாக நீ பாலனென்றுரைக்க அவன் அந்தப்பாலனாக விருக்குந் தன்மையே காரணமாகக் கொண்டுதான் தனிமையாக இருக்கக்கூடாதென்றும் கூடவே வரவேண்டுமென்றுங் கூறினான்.

செய்யுள்.

மிடியி னால்வெரு விப்பொருள்
கடியி லுத்தர்கள் கைவிடார்
முடிவி லப்பய மூண்டுமே
படியி லீகுவன் பாரியே.

இங்ஙனம் உலோபி செலவு செய்யாமைக்குக் காரண மாகக் கொண்ட தாரித்திரியபயத்தையே தாதாக்களும் செலவு செய்வதற்குக் காரணமாகக் கொண்டிருக்கின் றார்கள்.

## ௪௯-வது காரணமாலையணி.

(காரணமாலாலங்காரம்.)

செய்யுள்.

தேரமுன் முன்னு வெனினும்பின் பின்னு வெனினுநிகழ்
காரண மேதொடர் பாக வருவது காணிலதன்
பேரது காரண மாலை யறத்திற் பெறும்பொன்னினுல்
ஏருறு மீகையவ் வீகையிற் சீருறு மென்பதுமே.

அள்ளலும் பாவத்தி னுற்பா வமுமிடி யான்மிடியும்
வள்ளன்மை யின்மையி னுலே யடைய வருமென்பதும்
விள்ளு முதாரணந் தேர்மும் முரசெமு வேலையையும்
எள்ளியிட் டார்க்க வளரெட் டமாநகர்க் கிந்திரனே.

பின்பின்னுக வருவனவற்றிற்குக் காரணமாக முன்முன்னுக வருவனவும் முன்முன்னுக வருவனவற்றிற்குக்காரணமாகப் பின்பின்னுக வருவனவுமாக இருக்கின்ற காரணங்களின் தொடர்ச்சி காரணமாலையணி. இதை வடநூலாரும் இப்பேராகவே கூறுவர். இவற்றுள் முந்திய இலக்கணத்துக்கு "அறத்திற் பெறும்பொன்" னென்பது முதலும், பிந்திய இலக்கணத்துக்கு "அள்ளலும்பாவத்தினு"லென்பது முதலும் நிரலே யுதாரணங்கள். இங்ஙனம் முந்தியஉதாரணத்தில் அற முதலிய காரணம் முன்முன்னுக விளங்குகின்றது. பிந்திய வுதாரணத்திற் பாவமுதலிய காரணம் பின்பின்னுக விளங்குகின்றது.

## சஎ-வது ஒற்றைமணிமாலையணி.

(ஏகாவளியலங்காரம்.)

செய்யுள்.

பின்பி னுறுவன வற்றிற்கு முன்முன் பிறங்குவரு
மென்ப விசேடிய மென்றும் விசேடண மென்றும்வர
லின்பெய ரொற்றை மணிமாலை கண்செவி யையதுதோண்
மன்னுமத் தோள்முழங் தாளுறு மாடியவ் வாறெனவே.

கன்றலில் யாதொன் மிடைக்கலப் பாற்றிசை காலமுயிர்
என்றவைக் கொப்ப ததிலெவன் மின்னி யிடுவனவன்
பொன்றிகழ் காந்தி யெவன்பா லமுதம் பொலியுமவன்
அன்றெதின் சங்கத் துதித்தா னெதுவு மவைகளிலே.

பித்தமென் றுகு மெவர்க ளதற்கவிப் பேறருள்வார்
நித்த மெதுவவர் கட்குயி ராகும் நிகழெதின்கு
ணத்தை யதுகொண்ட தோவது முன்ன நகுசிவமூர்த்
தத்தை நினையென் றுதாரண மெட்ட தலைத்துமன்னே.

பின்பின்னாக வருவது முன்முன்னாக வருவதற்கு விசேஷணமாவதும் முன்முன்னாகவருவது பின்பின்னாக வருவதற்கு விசேஷணமாவதும் ஒற்றைமணிமாலையணி. இதை வடநூலார் ஏகாவளியலங்காரமென்பர் இவற்றுள் முந்திய இலக்கணத்துக்குக் "கண்செவியை" யென்பது முதலும் பிந்திய இலகக்ணத்துக்குக் "கன்றலில்" என்றும் "பித்தமென்றுகு" மென்றும் குளகமான இரண்டுபாடல்களும் நிரலே யுதாரணங்கள். அவற்றுள் முந்திய உதாரணத்தில் பின்பின்னாக விளங்கும் செவிமுதலியவைகள் முன்முன்னாக விளங்கும் கண் முதலியவைகளுக்கு விசேஷணமாக விளங்குகின்றன. பிந்திய வுதாரணத்தில் பின்பின்னாக

விளங்கும் சூரியன் முதலியவைகளுக்கு முன்முன்னாக விளங்கும் ஆகாய முதலியவைகள் விசேஷணங்களாக விளங்குகின்றன. "எதுவும் அவைகளிலே பித்தம்" என்பதில் அவைகளில் என்பதற்கு ஜலங்களில் எனவும், பித்தம் என்பதற்கு அச்சலங்களின் பித்தமாகிய அக்னியெனவும், பொருள்கொள்க. அப்பித்தம் என்று தீக்கொரு பெயர் என்பது வடநூல் வழக்கு.

---

## சஅ-வது மாலைவிளக்கணி.

(மாலாதீபகாலங்காரம்.)

செய்யுள்.

காட்டிய வொற்றை மணிமாலையைவிளக் கைப்பொருத்தி
நாட்டுதன் மாலை விளக்கா மதன னவள்மனத்துந்
தீட்டுறு மந்த மனத்தினுன் பாலினுஞ் சேரிருப்புப்
பூட்டிய தென்ப துதாரண மெட்ட புரமன்னனே.

முன்காட்டிய விளக்கணியையும் ஒற்றைமணிமாலையணியையுங் கலந்து கூறுவது மாலை விளக்கணி. இதை வடநூலார் மாலாதீபகாலங்கார மென்பர். இதற்கு "மதன னவள்மனத்துந் தீட்டுறு" மென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் மதனன் அவள் மனதிலென்ற வாக்கியத்திற்கும் அது உன் மனதில் என்ற வாக்கியத்திற்கும் இருப்புப் பூட்டுதலாகிய தருமத்தின் ஒற்றுமை யிருப்பமையால் விளக்கணியும், பின்னாக வருகின்ற அந்த மனத்தின் என்பதற்கு முன்னாகவிருக்கும் அவள் மனம் என்பது விசேஷணமாக இருப்பதால் ஒற்றைமணிமாலையணியும் விளங்குகின்றது.

செய்யுள்.

சதுரங்க தளநீபோர்க் களமருவி
சிலையிடைநாண் டானே பூட்ட

எதுவெதுதா னெனதையெதைச்சேர் வுற்றதவை
கேள்கிலேயோ டேவு மேவோ
டதிர்பகைவர் சிரமுமவை யொடுபுகழு
மப்துடனே யருளார் நீயும்
பதிவுறுகின் றொடுபுகழு மப்தொடுமு
வுலகமுஞ்சம் பந்தந் தானே.'

இங்ஙனம் ஸம்பந்தமென்ற தரும ஒற்றுமை கிலேயொா டுபகழ் பகழியொடு பகைவர்சிரம் என்பது முதலிய வா க்கியங்களில் தனித்தனியாக ஸம்பந்தப்படுவதால் விளக் கணியும் அப்பகழ் முதலியவைகள் பின்பின்னாக வருவன வற்றுக்கு விசேஷணங்களாக ஆவதால் ஒற்றைமணிமாலை யணியும் இருக்கின்றதெனக் காண்க.

---

## சகூ-வது மேன்மேலுயர்ச்சியணி.

(ஸாராலங்காரம்.)

செய்யுள்.

ஒன்றினுக் கேயொன்று மேன்மே லுயர்த லுரைத்திடவே
நின்றது மேன்மே லுயர்ச்சி பிரசம் நிறைமதுரம்
மன்ற வதினுஞ் சுதையதி னுங்கவி வாய்மொழியே
என்ற லுதாரணஞ் செங்கோற் குமாரெட் டிறையவனே.

பலபொருள்களுக்குள் ஒன்றைப்பார்க்கினு மொன் றுக்குக் குணத்தினுன் மேன்மையைக் கூறுவது மேன்மே லுயர்ச்சியணி. இதனை வடநூலார் ஸாராலங்கார மென் பர். இதற்குப் "பிரசம்நிறை மதுர" மென்பதுமுத லுதார ணம். இங்ஙனம் பிரசம் சுதை கவிவாய்மொழி இவை களுக்குள் மதுரமாகிய குணத்தால் ஒன்றைப்பார்க்கிலும் ஒன்றுக்கு மேன்மை கூறலாயிற்று.

செய்யுள்.

நரசிங்க மன்னவநம் மாலுதரத்
துலகுளவன் னவனுஞ் சேடன்
புரமிசைத்துங் குவனவனு மொருபால்வா
ரிதியுறுவன் புகலு மத்தைக்
கரகசர டக்கினரன் னவருமொரு
மின்மினிப்போற் காயந் தோன்று
வரதுவுன்சீர்ப் பெண்செவிக்கு வளைமலரோ
வெனப்பார்க்க வயங்கு மம்மா.

இங்ஙனம் மாலுதர முதலியவைகளுக்கு ளொன்றி னுமொன்றிற்குப் பெருக்கமாகிய குணத்தினன் மேன்மை கூறலாயிற்று. இவ்விரண் டுதாரணங்களிலுங் கொண்டா டத்தக்க குணங்களின் மேன்மை கூறப்பட் டிருக்கின்றது. கொண்டாடத் தகாத குணங்களின் மேன்மையைக் கூறு வதற் குதாரண மியாதெனில்,

செய்யுள்.

சருகி னும்பஞ்சி லேசமப் பஞ்சினு
மிரவு ளோனுமி லேசம வன்றனை
யருகு காலுற் றெடாமையெ தாயினுந்
தருக வென்ப னெனும்பயத் தாலன்றே.

இங்ஙனம் சருகு, பஞ்சு, இரப்போன் இவைகளு ளொன்றிற்கொன்று இலேசமென்ற புன்குணத்தினால் மேன் மை கூறலாயிற்று. இருமைக்குணத்தினு லொன்றி லொ ன்றுக்கு மேன்மைகூறுவ தெவ்வாறென்றால்,

செய்யுள்.

குன்றுபெரி தாமந்தக் குன்றினுஞ்ச முத்திரமே
நன்றுபெரி தச்சமுத்தி ரத்தினும்விண் — ணென்றும்
பெரிதுவிண்ணி னும்பிரம மேபெரித வாவே
யரிதெவற்றி னும்பெரிதம் மா.

இங்ஙனம் பிரமம்வரையினு மொன்றினு மொன்று கருப் பெருக்கமாகிய குணத்தினுன் மேன்மையும் ஆசையாகிய வருணிப்புப் பொருளுக்குப் பிரமம்வரை கூறப் பட்ட பொருளைப்பார்க்கினும் பெருக்கம் வருணித்தமையால் குறைவுங் கூறலாயிற்று.

---

## ரு0-வது நிரல்நிரையணி.

(யதாஸங்கியாலங்காரம்.)

செய்யுள்.

வரிசையிற் கூறும் பொருள்கட்குச் சம்பந்த மாவமுறை
தெரிவுறச் சொல்லல் நிரல்நிரை தெவ்வைச் சிநேகனைத்து
யரைவெற்றி செய்யிர சஞ்செய்பங் கஞ்செய் யரசவென்ப
துரைசெ யுதாரணஞ் சீர்த்திக் குமாரெட்ட வுத்தமனே.

வரிசையாகக் கூறியிருக்கும் பலபொருள்களுக்கு முறை வழுவாது ஸம்பந்தத்தைக் கூறுவது நிரல்நிரையணி. இதை வடநூலார் யதாஸங்கியாலங்கார மென்பர். இதற்குத் "தெவ்வைச்சிநேகனை" யென்பதுமுதலுதாரணம். இங்ஙனந் தெவ்வை, சிநேகனை, துயரை என்ற மூன்று பொருள்களுக்கும் வெற்றிசெய், இரசஞ்செய், பங்கஞ்செய் யென்ற மூன்று பொருள்களுடன் நிரலே ஸம்பந்தங் கூறியிருக்கின்றது.

செய்யுள்

உலோப னைப்பொரு ளுஞ்சர ணுற்றதோ
வலாது கொல்கின்ற தோவவ னன்னதை
யிலாது தள்ளியி டாமலு மாநிலத்
திலேபு சித்திட லின்றியுங் காப்பனால்.

இங்ஙனம் பொருள் சரணமடைதலும் கொல்லுதலுமாகிய இரு பொருள்களும், தள்ளாமை புசியாமை

யென்ற இரு பொருள்களோடு நிரலே ஸம்பந்தப்படுத்திக் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வணியை வாமனாசாரியர் முதலியவர்கள் கிரமாலங்காரமென்று கூறுகிறார்கள்.

---

## ருக-வது முறையிற்படர்ச்சியணி.

(பரியாயாலங்காரம்.)

செய்யுள்.

ஒருபொரு ளுக்கு முறையாப் பலவா யுறுதலைச்சொல்
வருதன் முறையிற் படர்ச்சியிம் மாது வதனவொளி
மருமலர் தன்னை விடுத்து முழுமதி யையடுத்து
மருவிய தென்ப திலக்கிய மெட்ட மகாமன்னனே.

ஒரு பொருளை முறையாகப் பல ஆதாரங்களில் ஸம்பந்தப்படுத்திக் கூறுவது முறையிற் படர்ச்சியணி. இதனை வடநூலார் பரியாயாலங்கார மென்பர். இதற்கு "இம்மாது வதனவொளி" யென்றதுமுத லுதாரணம். இங்ஙனம் மாதுவதனவொளி யென்ற வோர் பொருள் முறையாகத் தாமரைமலர் மதியென்ற பல ஆதாரங்களில் ஸம்பந்தத்தை அடைந்திருக்கின்றது. ஆயிற் பதும மலரில் ஸம்பந்த மடைந்ததைச் சொல்லாற் கூறவில்லை. அவ்வா றிருந்தாலும் மருமலர் தன்னை விடுத்தென்றுரைப்பது முதலில் அதில் ஸம்பந்தப்படாவிடில் பொருந்தாமையால் அவ்விதம் சொல்வது உசிதமில்லையாதலால் அதிற் ஸம்பந்தமுள்ள இவ்வணிக்குக் குறைவில்லை. இவ்வாறு தாற்பரியத்தினால் கிடைத்த ஸம்பந்தத்தின் விளககமுள்ள இடத்தில் இவ்வணி யென்றே காவியப்பிரகாசகிருத்தென்றவரும் உதாரணித்தார். அஃதாவது,

செய்யுள்.

சகனம்விடு மெலிவையிடை சார்ந்ததுகால் விடுசலன
நகுநடையை விழியடைந்த நறுமருமம் விடுவேறு

தருபொருளி னிரண்டின்மை தனைமுகமுற் றதுமினுறுப்
பகவியலின் வேற்றுமையை யேனனஞ்செய் ததுமாதே.

இங்ஙனம் சகனம் விடுமெலிவையிடை சார்ந்தது என்பது முதலிய இடஙகளில் மெலிமவன்னும் பொருளைச் சகனம் விட்டதென்றமையால் அதற்குச சகனத்தின் முதலாவது ஸம்பந்தமும் இரண்டாவது இடையிற் ஸம்பந்தமுமாகிய முறையான பல பொருள் ஸம்பந்தமிருப்பதினால் இவ்வணியே. ஒவ்வொரு பொருளிலுமிருக்கின்ற ஸம்பந்தத்தைச சொல்லாற் கூறியிருக்கின்ற இவ்வணி யெவ்வாறென்றால்,

செய்யுள்

காள கூட மேநீமுன் கடலுற் றிருந்தாய் பின்னரன்றன்
காள மாதி குறுகியதிற் கலந்தா யிதுநாட் கோளமவங்
காள முதலாங் தேயமுறு கடிய கொடியர் வாக்கினிலெக
காள மொடுவாழ் வாய்மேன்மேற் கனமா யிருப்போ தினர்யாரே.

இங்ஙனம் காளகூடமென்ற ஓர் பொருளுக்குக் கடல் பரமசிவனின் கண்டம் கொடியோர்வாக்கு என்ற பல இடங்களிலிருக்கும் ஸம்பந்தத்தைச் சொல்லாகவே கூறியிருக்கின்றது. ஒரு பொருளுக்கு ஆதாரமாக விருக்கும் பல பொருள்களுக்குள் மேன்மேற் குறைவு தோன்றக் கூறுவதும் இவ்வணி. இதனை வடநூலார் ஸங்கோசபரியாய மென்பர். அஃதாவது,

செய்யுள்.

முதலி லேகுளிர் மூண்டு புவிபர
வுதலை மேவிப்பின் னுந்தருச் சாயையுற்
றதுவெ யோனுமுச் சத்தில் வரப்புன
லத்தனு ளேகரந் துற்றத நிலையால்;

இங்ஙனம் குளிரென்ற ஓர் பொருளுக்கு ஆதாரங்களாக இருக்கும் புவி தருச்சாயை புனலின் மத்தியம் என்ற பொருள்களுக்குமேன் மேலாகக் குறைவு விளங்குகின்றது.

ஓர் பொருளுக்கு முந்திய ஆதார ஸம்பந்தத்துடனே மற்றொரு ஆதாரத்திலும் ஸம்பந்தத்தைக கூறுவதும் இவ்வணி. இதனை வடநூலார் விகாஸபரியாயாலங்கார மென்பர். அஃதாவது

செய்யுள்.

கனக மேனிக் கரும்பினைக் கண்ணினாய்
நினது விம்பக கனித்துடி மட்டிலும்
வனவி ராகத்தை வாய்ந்தத நிந்தனம்
மனதி டத்துமிப் போதறி வாமரோ.

இங்ஙனம் இராகமென்ற ஓர் பொருள் அதரமாகிய ஆதாரத்தில் ஸம்பந்தமுள்ளதாகவே மனதாகிய மற்றொரு ஆதாரத்திலும் ஸம்பந்தத்தைக் கொண்டிருக்கிறது.

செய்யுள்.

ஓரிடத் தேபல் பொருண்முறை யாக வுறுமதனைத்
தேரிடச் சொல்வது மவ்வணி யெங்குமுன் றீம்புனன்மீ
தூரிட வுற்றதங் கிந்நாட் புளின முறுமெனுமு
தாரணந் தேர்புக ழோங்கு மிளைசைத் தயாபரனே.

ஒரு ஆதாரத்தின் முறையாக அனேகம் பொருள்களுக்கு ஸம்பந்தத்தைக் கூறுவதும் இவ்வணி. இதற்கு "எங்குமுன்றீம் புனன்மீ" யென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் நதியாகிற ஓர் ஆதாரத்தில் புனலின்பெருக்கு புளினமென்ற பல பொருளுக்கு முறையாக ஸம்பந்தமுறுதலைக் கூறியிருக்கின்றது.

செய்யுள்.

முன்னமை துடல்பிரியா திருந்தனம்பின் மூள்பிரியன்
மன்னியிடு பிரியையென்று யினமிது நாண் மன்னவனே
இன்னதலை வன்றலைவி யாயினம்வே றிதினுமெது
பன்னுதல்வச் சிரவலிய கடுமெனுயிர்ப் பயனிதுவே.

இங்ஙனம் உடல்பிரியாமை பிரியன் பிரியையாக இருத்தல் தலைவன் தலைவியாக இருத்தல் என்ற பல பொருள்களுக்குத் தம்பதிகளாகிய ஓர் ஆதாரத்தின் முறையாக ஸம்பந்தத்தைக் கூறியிருக்கின்றது.

---

## ருஉ-வது மாற்றுநிலையணி.

(பரிவிர்த்தியலங்காரம்.)

செய்யுள்.

குறைவாம் பொருளைக் கொடுத்ததி கப்பொருளைக்கொளலுக்
கறைபே ருமாற்று நிலையணி மன்னொருவம்புதவித்
தெறுநரின் செல்வமொண் டானென் றுதாரணஞ்செப்புவரான்
மறையொலி வாழ்த்தொலி சூழெட்ட மாநகர் மாமன்னனே.

குறைவான பொருளைச் செலவிட்டு அதிகப் பொருளைக் கொள்வது மாற்றுநிலையணி. இதை வடநூலார் பரிவிர்த்தியலங்கார மென்பர். இதற்கு மன்னொருவம் பென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் ஒரு அம்பைச் செலவிட்டுச் சத்துருவின் செல்வத்தை முழுமையும்பெற்றானென்று அற்பச் செலவினால் அதிகலாபத்தின் பெறுதலைக் கூறியிருக்கின்றது.

செய்யுள்.

அதிக வாண்டுளை ளுகிமே லுலகடை சடாயு
முதிய னைக்குறித் தின்னும்வெந் துயரிடை மூழ்கிர்

பொதியு மாசரை யாற்றள ருடலினைப் போக்கி
மதியின் காந்திகொள் புகழுடல் விலைகொடு வதிவான்.

இங்ஙனம் மூப்பென்னும் ஜரையி னுற்றளர்ந்த அற்ப சரீரத்தின் செலவால்மதிபோல் விளக்கமுற்ற அதிகப்புகழின் பெறுதலைக் கூறியிருக்கின்றது.

## ருக-வது ஒழித்துக்காட்டணி.

(பரிஸங்கியாலங்காரம்.)

செய்யுள்.

பொருளொன்றை யோர்கணகற்றிமற் றோர்கட் பொலியுமதென்
றுரைசெய்த லேயொழித் துக்காட்டு நேயத் துறுகுறைவு
தெரிதல் விளக்கிடை யல்லாது நன்னுதற் றேவியர்தம்
இருதயத் தின்றென் றிலக்கியந் தேர்வை யிளசைமன்னே.

ஓர் பொருளை ஓர் இடத்திலில்லை யென்று தள்ளி மற்றோரிடத்தி லிருக்கிறதாகக் கூறுவது ஒழித்துக்காட்டணி. இதை வடநூலார் பரிஸங்கியாலங்கார மென்பர். இதற்கு "நேயத்துறுகுறை" வென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் நேயக்குறைவென்ற ஓர் பொருளைத் தேவியரிருதயத்தி லில்லை யென்று தள்ளி அது விளக்கின்பாலிருக்கின்றதென்று கூறியிருக்கின்றது.

செய்யுள்.

உச்சயினி பட்டணத்தி லுற்பவமின் னார்விழியே
அச்சுருதி மார்க்க மதைக்கடக்கும்—மெச்சுமகா
காள னதுசிரத்திற் காண்பிறையொன் றேகோணல்
ஆளுகையை மேவினதம் மா.

இங்ஙனம் சுருதி மார்க்கத்தைக் கடத்தலாகிய ஓர் பொருள் மின்னார்விழியிலே யிருக்கிறதென்றும் கோணலென்ற ஒரு பொருள் மகாகாளனது முடியில் விளங்

கும் பிறையிலிருக்கிறதென்றும் கூறியிருக்கின்றது. முந்திய வுதாரணத்தில் ஓர் பொருளிலகற்றுதல் சொல்லால விளங்குகிறதென்றும் இவ்வுதாரணத்தில் தாற்பரியத்தினால் கிடைத்திருக்கின்ற தென்றும் பிரிவு காண்க.

---

## ருச-வது உறழ்ச்சியணி.

### (விகல்பாலங்காரம்.)

செய்யுள்.

ஒத்திடு வல்ல விருபொருட் குத்தெவ் வுதிக்கவிகற்
பித்த வுறழ்ச்சி யணியா மெதிர்த்த பெரும்பகையீர்
மத்தக மேனுங் கொடுமர மேனு வணக்குமென்றி
சைத்த வுதாரண மெட்ட புரத்தைந் தருமன்னனே.

ஸம பலமுள்ள இரு பொருள்களுக்கு விரோதம் விளங்கக் கூறுவது உறழ்ச்சியணி. இதனை வடநூலார் விகல்பாலங்கார மென்பர். இதற்கு "எதிர்த்த பெரும் பகையீ" ரென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் ஸமாதானம் போர் என்ற இரு பொருள்களுக்கு ஒரே வேளையில் இருப்பு நேராதாகையால் அவ்விரு பொருள்களை மத்தக மேனும் கொடுமரமேனும் வணக்கு மென்று விகற்பப் படுத்திக் கூறியிருக்கின்றது.

செய்யுள்.

எப்பொழுதும் புய்ல்பொழியுஞ் சிகண்டிகட் மேயியற்று
மிப்பொழுதென் மணவாள ரேனுங்கூற் றுவரேனுந்
தப்பியிடா தென்றனதா குலமுடிவைத் தந்திடுவார்
துப்பினிதழ்ச் சகிமடவீர் கடந்திடுவீர் துயர்க்கடலே.

இங்ஙனம் நாயகனின் வரவிருக்குமாகில் மரணம் நேராது மரணம் நேருமாகில் நாயகனின் சேர்க்கை

யிராது என்று ஒன்றுக்கொன்று விரோதமுற்ற இவ்விரு பொருள்களையும் மணவாளரோனும் கூற்றுவரோனும் ஆகுல முடிவைத் தந்திடுவா ரென்று விகற்பப்படுத்திக் கூறியிருக்கின்றது.

---

## ருரு-வது கூட்டவணி.

(ஸமுச்சயாலங்காரம்.)

செய்யுள்.

ஒருகாலத் தேகுமுக கொள்ளுந் தொழில்க ளுடன்படவே
தருமாறு கூட்ட வணிவேந்த னேநின் றரியலர்கள்
பொருவர் நசிவர் புரங்காட் டுவர்பயம் பூண்பரென
வருமா றுதாரண மெட்ட புரத்துவ ரோதயனே.

ஒரே வேளையிலுண்டாகும் பல தொழில்களின் கூட்டத்தைக் கூறுவது கூட்டவணி. இதை வடநூலார் ஸமுச்சயாலங்கார மென்பர். இதற்கு வேந்தனே நின்றரியலர்களென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் நசிதல் புரங்காட்டுதல் பயமடைதல் என்ற ஒரேவேளையினுண்டாகுஞ் சத்துருக்களின் றொழில்களின் சேர்க்கையைக கூறியிருக்கின்றது.

செய்யுள்.

சற்குணநீ யுதவியபே ரன்பாகும்புத்
தம்மையிரு தயங்கொளும்பெண் செயலைக்கேளா
யற்பகலுஞ் சயனிக்கின் றுள்வறகூழி
யடைகின்றுள் வாடுகின்றுள் புலம்புகின்றுள்
பொற்பழிகின் றுள்சலனிக் கின்றுண்மத்தம்
பொருந்துகின்றுள் புரளுகின்றுள் துவளுகின்றுள்
வற்பழிகின் றுணொளிக்கின் றுள்மூர்ச்சை
வாய்கின்றுள் தாபமிகத் தேய்கின்றுளே.

இங்ஙனம் சயனித்தல் முதலிய ஓரே வேளையிலுண்டான பலதொழில்களின் கூட்டத்தைச் சேர்த்துக்கூறி யிருக்கின்றது. இவற்றுள் சிலதொழில்கள் *அற்பகாலபேதத்தினால் உண்டான போதிலும் அனேக தாமரையிதழ்களைச்சேர்த்து வைத்து ஊசியாற்குத்தினால் ஒவ்வொரு இதழிலும் கொஞ்சங் கொஞ்சங் காலபேதத்தாற் குத்தப்பட்டிருந்தாலும் ஓரேவேளையிற் குத்தப்பட்ட தாகவே கொள்வதுபோல் காலபேதத்தைக் கொள்ளாமல் விரகத்தின் பெருக்கத்தை விளக்குகின்றன.

செய்யுள்.

பலகா ரணங்கள் தனித்தனி முக்கியம் பற்றியொரு
வலகா ரணத்தை முடித்தலு மவ்வணி மாகுலமு
நலகா மரும்வய துங்கல்வி யுஞ்செல் வமுமிவனுக்
கிலகா மகிழ்விக்கு மென்ப துதாரண மெட்டமனே.

ஓர் காரியத்தைப் பலகாரணங்கள் தாந்தாம் முக்கியமாகவிருந்து முடிப்பதுமவ்வணி. இதற்கு "மாகுலமு நலகாமரு" மென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் மகிழ்விப்பாகிய காரியத்தைக் குலம் காமர் வயது கல்வி செல்வம் என்ற பலகாரணங்கள் தாந்தாம் முக்கியமாகக் களத்தில் கபோதப் பறவைகள் போல் சேர்ந்து முடிகின்றன. நலகாமர்-நல்ல அழகு.

செய்யுள்.

தனதுகொடைத் தொழிலையுரை யாமைதன்னிற்
சாரதிக்கி யற்றிடுமன் பகன்றிடாமை
கனகமதாற் கருவமரு வாமைமற்றோர்
காசைநிகழ்த் தாமையவை யிடையேதான்செய்
வனவுதவி களைவெளியி டாமைதன்பான்
மற்றவர்செய் யுதவியினை மறைப்பிலாமை
பனுவலிற்பற் றுடைமைகன்மா னுடர்தம்மேன்மைப்
பாட்டைநனி விளக்குவவாம் பார்க்குங்காலே.

இங்ஙனம் மானிடனின் மேன்மையாகிய காரியத்தைத் தன் கொடைத்தொழிலை யுரையாமை முதலிய காரணங்கள் விளக்குகின்றன.

---

## ருகூ-வது வினைநுதல்விளக்கணி.

(காரகதீபகாலங்காரம்.)

செய்யுள்

உதிரிர லாவொரு வன்செய்கை யீட்ட லுரைத்தல்வினை
நுதல்விளக் காம்வழிப் போவன் வருவன் முயன்றுணர்வ
னெதிரில் வினவுவ னென்ப துதாரண மெட்டபுரத்
ததிபதி யென்னுங் குமாரெட்ட பாண்டிய ராமரசே.

ஒருவனிடத்தில் முறையாக வி ங்குந் தொழில்களைச்சேர்த்துரைப்பது வினைநுதல்விளக்கணி. இதை வடநூலார் காரகதீபகாலங்கார மென்பர். இதற்கு "வழிப் போவன் வருவ" னென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் ஒருவனிடத்திலிருக்கும் வழியில் போகுதல் வருதல் உணர்தல் வினவுதல் என்ற தொழில்களைச் சோதது கூறியிருக்கின்றது.

செய்யுள்.

துயில்புரிந் திடுவா னுனமா டிடுவான்
றுய்த்திடு வானுலர்த் திடுவான்
வியன்சிகை யாற்று வானுளுற் றிடுவான்
விளைசது ரங்கமா டிடுவான்
அயலவர்க் கமைய மிதுபொழு திலைப்பின்
னடைவைபோ போவென்ப வேந்தர்
பயின்மனை வாயி லவர்களு மெளியேற்
பார்விழி யாற்கடற் றிருவே.

இங்ஙனம் ஓரரசனிடத்தி லிருக்கும் துயில்புரிந்திடு தல் முதலிய செய்கைகளைச் சேர்க்கையாக வருணித்திரு க்கின்றது. முதலாவது உதாரணத்தில் வழிச்செல்வோ னுக்குப் போவது வருவது முதலிய தொழில்களில் ஸம் பந்த மிருப்பதாலும் இரண்டாவது உதாரணத்தில் அரச னுக்குத் துயில்புரிந்திடுதல் முதலியவைகளில் ஸம்பந்த மிருப்பதாலும் ஒரு கர்த்தாவுக்கு அனேக வாக்கியங்க ளில் ஸம்பந்த மிருக்கிறதென்பதைப் பற்றி இவ்வணி இப பெயர் பெற்றது. இஃது முதலில் கூறிய கூட்டவணிக்கு மாறாக விருக்கின்றது.

---

## ருஎ - வது எளிதின் முடிவணி.

(ஸமாதியலங்காரம்.)

செய்யுள்.

மற்றொரு வேது வுதவியாற் காரியம் வாயவெளி
துற்று முடித லெளிதின் முடிபணி யோர்தருணி
பற்று மயலடைந் தாள்புக் கனன்கடற் பானுவெனச்
சொற்ற துதாரணந் தேரெட்ட மாநகர்த் தூயவனே.

ஒருவனால் ஆரம்பிக்கப்பட்ட காரியம் மற்றொரு காரணத்தின் உதவியினால் யெளிதாக முடிவது எளிதின் முடிவணி. இதை வடநூலார் ஸமாதியலங்கார மென்பர் இதற்கு "ஓர்தருணி பற்றுமயலடைந்தா" ளென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் நாயகனிடத்தில் சேருவதாகிற கா ரியத்திற்கு மயலையடைதலே காரணமாக இருக்கின்றது. அதனுடன் இரவியின் மறைவாகிற காரணமும் அக்காரி யததை எளிதாக முடித்தது காண்க.

செய்யுள்

மங்கை யூடலை மாற்றிடு வானிரு
செங்கை கூப்பிப் பதம்விழு போதுதெய்

வங்க ளின்செய லாற்புயல் வான்றேனி
பொங்கி யெற்கு முதவி புரிந்ததே.

இங்ஙனம் நாயகியின் ஊடலை நீக்கும் பொருட்டு யத்தனிக்கப்பட்ட பாதத்தில் விழுதலாகிய காரியம் மேகத்தின் கர்ஜனமாகிய காரணத்தினால் எளிதாக முடிந்தது. இரண்டாவது கூட்டவணியில் களத்தில் கபோதப் பறவைகள் போலத் தனித்தனியே முக்கியமாக வந்த பல காரணங்களால் காரியத்தின் முடிவென்றும், இவ்வணியில் காகதாளீயமாகககிடைத்த காரணத்தினுதவியால் காரியத்தின் முடிவென்றும் தீர்மானம் இருப்பதனால் இஃது அவ்வணிக்கு மாறாக இருககின்றது.

## ருஅ-வது விறல்கோளணி.

(பிரத்தியநீகாலங்காரம்.)

செய்யுள்.

வலிய பகைவரைச் சேர்ந்தோ ரிடத்து வயமியற்று
தலின்பே ரதுவிறல் கோளணி வெற்றி கொடாரையுடன்
புலிசெவி கீழுறச் செய்தன வுற்பலப் பூவெனவே
சொலுத லுதாரணந் தேர்மன் குமாரொட்ட சுந்தரனே.

பலந்தங்கிய சத்துருவினிடத்துத்தன் வலியைச் செலுத்த முடியாமையால் அவனைச் சேர்ந்தவர்களிடத்தில் வன்மையைச்செலுத்துவது விறல்கோளணி. இதை வடநூலார் பிரத்தியநீகாலங்கார மென்பர். இதற்கு "வெற்றி கொடாரையுட" னென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் தங்களைஜயித்த கண்களிடத்துத் தங்கள் வன்மையைச் செலுத்த முடியாமையால் அவற்றுடன் ஸம்பந்தமுற்றிருக்கும் செவிகளைக் குவளை மலர்கள் கீழாகச் செய்தன.

செய்யுள்.

மாரனம் மேரொனுஞ்செல் வங்கவர்ந்தோற்சேர்ந்தவனென்
றேருதலுற் றுன்பா லுறுமழுக்கா—ருருதலா

வன்பெறுவு மின்றி யமர்புரிந்து வாட்டுகிறு
னென்பெண் மகவதனை யே.

இங்ஙனம் மதனன் தன் காந்தியை அபகரித்த நாயக னிடம் வலியைச் செலுத்துவதற்கு முடியாமையால் அந் நாயகனைச் சேர்ந்த நாயகியிடம் வன்மையைச் செலுத்து கிறுன். சத்துருவைச் சேர்ந்தவர்களிடத்தில் வன்மை யைச் செலுத்திறுைம் இவ்வணி யென்றுல், சத்துருவி னிடத்தில் வன்மையைச் செலுத்திறல் இவ்வணியென்ப தற்கு யாது கூறவேண்டும்

செய்யுள்.

வண்டாங் குழுத்தனக்கு வாய்மதுவுண் டானமெனுந்
திண்டா மரைகுவியச் செய்வதனு—லுண்டாங்கோ
பங்கொடுடு வேந்தனிடம் பாய்ந்துநடு விற்களங்கந்
தங்குறசசெய் திட்டதுநி சம்.

இங்ஙனம் தங்களுக்கு மதுவைக் கொடுக்கின்ற தாம ரைகள் குவிந்தமையால் கோபமுற்ற வண்டினங்கள் அக்குவிதலுக்குக் காரணமாகிய சந்திர விம்பத்தை அணுகி அவ்விடத்தில் களங்கத்தை யுண்டுபண்ணுதலா கிய தங்கள் வன்மையைச் செலுத்தின.

---

## ருகூ—தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணி.

(காவியார்த்தாபத்தியலங்காரம்.)

செய்யுள்.

ஒருபொருட் கூறி யெனச்சொல வேண்டுமென் றுன்றின்சித்தி
மருவிற் றொடர்நிலைச் செய்யுட் பொருட்பே றணிமடந்தாய்
வருநின் முகத்தின் மதிதோற்ற தென்னின் மரைமலருக்
குரையென்ன வென்ப திலக்கிய மெட்டம வுத்தமனே.

ஓர் பொருளை ஒரு விதங்கூறி அதனால் மற்றொரு பொருளின் முடிவையும் "என்னசொல்ல வேண்டும்" என்பது முதலியவைகளால் விளக்குவது தொடர்நிலைச்செய்யுட் பொருட் பேறணி· இதை வடநூலார் காவியார்த்தாபத்தியலங்கார மென்பர். இதற்கு "மடந்தாய் வருநின் முகத்தி" னென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் தாமரைகளை ஜயஞ்செய்கின்ற மதியை மாதுவதனம் ஜயித்ததாகக் கூறி "மரைமலருக் குறையென்ன" வென்றுரைத்தமையால் அம்மலரையும் ஜயித்ததாகத் தண்டாபூபிகா நியாயத்தினு லறியப்படுகின்றது.

செய்யுள்.

இந்திரைநே ராமடந்தை யின்பெருங்கொங் கையிரண்டும்
பந்துதமைக் கொன்றுசயம் பண்ணினவேல்—இந்தப்
படிமிசைமற் றோருயிரைப் பற்றிவதை செய்து
தடிவதிலென் னுச்சரியந் தான்.

இங்ஙனம் பந்துதமைக் கொன்று என்றதனால் சிலேஷையாக உறவினரைக் கொல்லுதலைச் செய்கின்ற இரண்டு கொங்கைகளுக்கு மற்றவுயிர்களின் வதைசெய்தல் என்ன ஆச்சரியம் என்பது சொல்லினால் நிச்சயிக்கப்பட்டது.

செய்யுள்.

மாது தன்மரு மம்பிளந் தேவெளி
போது கின்ற பெரும்புதுக் கொங்கைகட்
கேது மற்றையர் நெஞ்சினை யீர்வதி
லோது கின்ற தயவுண ரண்ணலே.

தனது நெஞ்சத்தைப் பிளந்து வெளியேறுங் கொங்கைகளுக்கு மற்றவர் நெஞ்சத்தின் பிளப்பைச் செய்தல் "ஓதுகின்ற தயவுணர்" என்றமையால் உறுதிப்படுத்தப் பட்டிருக்கின்றது.

## ௩0-வது தொடர்நிலைச்செய்யுட் குறிப்பணி.

(காவ்யலிங்காலங்காரம்.)

செய்யுள்.

சாதிக்க வேண்டும் பொருளினைச் சாதித்த லுக்கிடுமே
றோதிற் றொடர்நிலைச் செய்யுட் குறிப்பணி யோர்மதனை
நீதிட்ட மாவெலப் பட்டாயென னெஞ்சிடை நின்றனன்முன்
றூதிக் கணமென் றிலக்கியந் தேறினை சைககரசே.

ஸாதிக்கவேண்டிய பொருளை மற்றொரு வாக்கியப் பொருளாலாவது பதப்பொருளாலாவது ஸாதிப்பது தொடர்நிலைச்செய்யுட் குறிப்பணி. இதனை வடநூலார் காவியலிங்காலங்கார மென்பர். இதற்கு "மதனை நீதிட்டமா" வென்பதுமுதல் உதாரணம். இங்ஙனம் மதனைவெற்றி செய்வது அரிதாகையால் அவனை வெற்றி செய்ததாகக் கூறியிருப்பமையால் அஃது அதற்கு ஹேதுவானதொரு ஸமர்த்தித்தலைக் கருதுகின்றது. ஆதலால் இங்ஙனம் அப்பொருளை ஸமர்த்திக்கும்பொருட்டு அம்மதனை ஜயம் செய்த முக்கண்ணன் தன் னெஞ்சின் கண்ணே இருக்கின்றதாகக் கூறியிருக்கின்றது. இந்த வாக்கியப்பொருளால் ஸமர்த்தித்த தொடர்நிலைச் செய்யுட் குறிப்பணி; பதப்பொருளால் ஸமர்த்தித்த இவ்வணி யெவ்வாறென்றால்

செய்யுள்.

பொடியினது பூச்சினங்கா ளுருத்தி ராக்கப்
பொன்வடங்கா ளரன்கோயிற் பொலியும் பந்திப்
படியினங்காள் மங்களமுங் களுக்குண் டாக
வரனெனது பூசைபரிந் தருள்வ தாயும்
கடியுமது பூசையின்ப விரோதி யாயுங்
கருதரிய மோக்கமென்பர் காண்ப தாயும்
நெடிதுளவோர் பெருமைபெறு மயக்கந் தன்னின்
நேர்ந்திடவும் பிரயாண நிகழ்கின் றேனே.

மோக்ஷத்தைப் பெருமபக்கமாகக் கூறுவது பிரசித்த மன்று. அவ்வாறிருந்தும் அதை அவ்விதங் கூறி ஸமர்த்திக்கும்பொருட்டு அம்மோக்ஷத்திற்கு உமது பூஜையின்ப விரோதி யென்ற சிறப்பைக்கூறி அப்பதப்பொருளால் ஸமர்த்தித்திருக்கின்றது. சிலவிடத்தில் பதப்பொருளும் வாக்கியப் பொருளும் ஒன்றுக்கொன்று உதவியாகவே ஸமர்த்தித்தலுக்கு ஹேதுவாக இருக்கின்றன. அந்தாவது.

செய்யுள்.

கற்றதம யந்திபெய்ந்த கார்க் குழலைத் தன்சிரம
திற்றரித்தா ளன்னதையித் தேமதி—யுற்றபர
வாலுமுன்னைக் கப்படா மற்சேர் கவரியுடன்
ஏலுமொப்புச் சொல்வ தெவன்.

இங்ஙனம் கவரி தமயந்தியின் கூந்தலுக்கொப்பாக ஆகவில்லை யென்பதற்கு, "கற்ற தமயந்தி சிரமதில் தரித்தா"ளென்ற வாக்கியப்பொருளும் பரவால் முன்னைக் கப்படாமலென்ற பதப்பொருளும் ஒன்றுக்கொன்று உதவியான ஹேதுக்களாக விருந்து ஸமர்த்திக்கின்றன. ஸமர்த்திக்க வேண்டிய பொருளை ஸமர்த்திக்க வந்த வாக்கியப்பொருளை ஓர் பதப்பொருள் ஸமர்த்தித்தலும் இவ்வணி. அதற்குதாரணம்.

செய்யுள்.

முப்புரத் தகனு விப்பொரு நாக
முற்றதால் முற்பிறப் பினிலே
திப்பிய வணக்கம் புரிந்திலே னினைந்தேன்
றேவநூ மாமுறுந் துணைந்தேன்
இப்பிறப் பினில்வந் தனட்புரிந் ததனு
வினியமேற் பதவியுஞ் சேர்ந்தேன்
ஒப்புட லிலதா யினிவணங் கேனிவ்
வோரிரு குறைபொறுத் தருளே.

இங்ஙனம் இருகுறை யென்றது ஸமர்த்திக்கத்தக்க தாக விருக்கின்றது. அது அநுமானத்தால் கிடைத்த முந்தியபிறப்பில் வந்தனம் செய்யவில்லை இனிமேலும் வந்தனஞ் செய்யேன் என்ற இரண்டு வாக்கியப்பொருள் களால் ஸமர்த்திக்கப்படுகிறது. அவற்றுள் இரண்டாவது வாக்கியத்திலிருக்கும் உடலில்லாததாலென்ற பதப்பொ ருள் ஹேதுவாக இருந்து அவ்வாக்கியப்பொருளை ஸமர்த் திக்கின்றது. அப்பதப் பொருளையும் இப்பிறப்பினில் வந் தனம் புரிந்ததனு லென்ற வாக்கியப்பொருள் ஸமர்த்திக் கின்றது.

ஒன்றுக்கொன்று விரோதங்களும் ஸமர்த்திககத்தக்க வைகளுமாக விருக்கிற இருபொருள்களுக்கு நிரலே இரு பொருள் ஹேதுவாக விருந்து ஸமர்த்திக்குமிடத்திலு மிவ் வணியே.

செய்யுள்.

மலைமகள் தவஞ்செய் போதிலக் கொடிய
மாதவத் தினைச்சகி யாமை
கலைதுதி யவள்சீர்ச் செய்திமுற் றிலுங்கேட்
கவும்வர மீனுத லுளதாற்
றலைமைகொ டனது வஞ்சகப் பிரம
சாரிவே டத்தினை விடுக்கத்
தொலைவுறு விருப்பங் கொடுங்கொளா மலுஞ்சேர்
துகளில்கா மாரியைப் பணிவாம்.

இங்ஙனம் ஒரே வேளையில் சிவபெருமானுக்குண் டான வஞ்சனைப் பிரமசாரிவேஷத்தை நீக்கவேண்டுமென் றும் வைத்துக் கொள்ளவேண்டுமென்றும் இரண்டு எண் ணங்களாகிய விரோதமான இருபொருள்கள் நிரலே உமை யின் கொடிய மாதவத்தினை ஸஹியாமை யென்றும் அவள் சீர்ச்செய்தி முற்றிலும் கேட்கவுமென் றிரண்டு

ஹேதுக்களால் ஸமர்த்திக்கப்பட் டிருக்கின்றன. ஒன்றுக் கொன்று விரோதங்களும் ஸமர்த்திக்கத்தக்கவைகளுமாக விருக்கும் இரண்டு பொருள்களை ஒரேபொருள் ஹேது வாக விருந்து ஸமர்த்தித்தாலு மிவ்வணியே.

செய்யுள்.

புணரி மாதித ழுழுதுணும் போதிலப் புணரி
தணவு றுதுமுன் கடைதுயர் தனைப்பல னுளதாய்
அணுவு மில்லதாத் திருவுளத் திடைநினைந் தருள்வன்
கணச ரோருக பதகரு ணாகரற் பணிவாம்.

இங்ஙனம் கடைதல் புரிந்த துயரத்தைப் பலனுள தாகவும் பலனில்லாதாகவும் நினைந்ததாகக் கூறி யிருக் கின்றது. ஒன்றுக்கொன்று விரோதங்களும் ஸமர்த்திக் கத்தக்கவைகளுமாக விருக்கும் இவ்விரு பொருள்களைப் புணரிமாதிதழுழு துண்ணலாகிய ஒரே ஹேதுஸமர்த்திக் கின்றது. இத்தொடர் நிலைச்செய்யுட் குறிப்பணியை ஹேதுவணியென்று சிலர் கூறினார்கள்.

செய்யுள்.

கோதா வரியே பலநாட்டிற் குலவி யவாவிக் கொளும்வாணி
மாதா னவளை நின்கரைவாய் விடுத்துக் கலிங்க மாவாணன்
போதா நின்று னிவளெவிதம் பொறுப்பா டனிமை வாரிநடு
வேதான் றுயில்மா தவனுந்தி விளங்குமயன்பாற் சேர்க்குகவே.

இங்ஙனம் கலிங்கனென்ற புலவனால தனிமையாக விடப்பட்ட நாமகளை நான்முகனிடம் கோதாவரி நதி சேர்ப்பிப்பது அரிது. அவ்விதம் அரிதான பொருளை வருணித்து அஃது அரிதில்லை யென்பதற்கு ஹேதுவாக அயனுக்கு வாரி நடுவேதான் றுயில்மாதவனுந்தி விளங்கு மென்ற விசேஷணம் கொடுத்திருக்கின்றது. இஃதைப் "பொருந்தாப் பொருளைப் பொருந்த வருணித்தல் சிலே ஷை" யென்ற இலக்கணப்படி சிலேஷை யென்ற பெயரு

ள்ள ஓர் குணமென்றார் ஜயதேவர். உண்மையாக ஆராய்ந்திடில் இங்ஙனமும் பதப்பொருளை ஹேதுவாகக் கொண்ட தொடர்நிலைச் செய்யுட் குறிப்பணியைப் பார்க்கிலும் சிறப்புத்தோன்றாமையால் அவ்வணியே பதரூபமாகவும் வாக்கியரூபமாகவும் இருக்கின்ற விசேஷணங்களில் அநுகூலக் கருத்துள்ள கருத்துடை" யடையணிக்கும் இவ்வணிக்கும பிரிவு யாதெனில், அவ்வணியில் பதப்பொருள் வாக்கியப்பொரு ளிவற்றால விளங்குகின்ற பொருள்கள் வருணிக்கக்கூடிய பொருளுக்கு அதிக ஸாதனமாக விருக்கின்றன வென்றும், இவ்வணியில் பதப்பொருள் வாக்கிய பொருள்களே வருணிக்கப்படுகிற பொருள்களுக்கு ஹேதுக்களாக விருக்கின்றன வென்றும் பிரிவு காண்க. ஆனால் "உமதுபூஜையின்ப விரோதியாயும்" என்றது முதலிய பதப்பொருள் தொடர்நிலைச செய்யுட குறிப்புதாரணத்திலும் "ஒப்புடலிலதாவினி வணங்கே" யென்பது முதலிய வாக்கியப் பொருள் தொடர் நிலைச்செய்யுட குறிப்பணி உதாரணங்களிலும் பதப்பொருள் வாக்கியப் பொருள்களே ஹேதுக்களாக இருக்கினும "பசுவினால் முன்வைக்கப படாமல்" என்ற பதப்பொருள் உதாரணத்திலும் என்னெஞ்சிடை முக்கண்ண னின்றானென்ற வாக்கியப் பொருள் உதாரணத்திலும் ஹேதுவான அப்பொருள்களால் விளங்கிய பொருள்கள் வருணிக்க வேண்டிய கற்றதமயந்தி சிரத்தால் வகித்த கூந்தலுக்கு அவிவேகியாகிய விலங்கினத்தால் முன்வைக்கப்படாம லிருப்பதுடன் ஒப்பிடக கூடாதென்பதற்கு அதிக ஸாதனமாகவும் மன்மதனின் எரித்தலுக்கு முக்கிய காரணமாக விருக்கும் நெற்றிக் கண்ணையுடையவ னென்ற வாக்கியப் பொருள் அவனை வெற்றி செய்கிறதென்ற பொருளுக்கு முக்கிய ஸாதனமாக இருப்பதமையால் இவ்விடங்களில் கருத்துடையடையணியாகக் கூறுவாமெனின் அவ்வாறன்று. அவ்விடங்களி

னும் அவிவேகத்தன்மையுள்ள் விலங்கினத்தால் முன் வைக்கப்படாமல் இருக்கின்ற பதப்பொருளுக்கும் மன்மதனின் எரித்தலுக்குக் காரணமாக இருக்கின்ற மூன்றாவது கண்ணையுடைய சிவபெருமான் என்னெஞ்சத்தில் நின்றானென்ற வாக்கியப்பொருளுக்குமே ஹேதுத்தன்மையைக கற்பிக்கிறபடியால் கீழ்ச் சொல்லிய ஸந்தேஹத்திற்கு இடமில்லை. அஃதன்றியும் "எல்லாவசுத்த விருப்பா" வென்ற பதப்பொருள் கருத்துடையடையணி உதாரணத்தில் எல்லா அசுத்தத்திற்கும் இருப்பிடமென்றது முதலிய அனேக பதப்பொருள்களால் சரீரம் ரக்ஷிக்கத் தக்கதல்ல என்று விளங்குவது போலும் "வன்பிறலோ யாருருமை" யென்ற வாக்கியப்பொருளா கருத்துடையடையணி உதாரணத்தில் பிறிதினவிற்சியின் முறைபோல அந்தந்த வாக்கியப்பொருள்களால் நான் வியாஸன் முதலியவனல்லன் என்ற பொருள் விளங்குவது போலும் உமது பூஜையின்ப விரோதி யென்ற பதப்பொருள் ஹேதுவினாலும் முக்கண்ணன் நெஞ்சினிடை நின்றானென்ற வாகக்கியப்பொருள் ஹேதுவினாலும் ஹேதுத்தன்மையாக விளங்குவதைத் தவிர்த்து மத்தியில் வேறே பொருள் விளக்கமில்லை ஆதலால் பசுவினு லென்ற இடத்திலும் முக்கண்ணனென்ற இடத்திலும் விளங்குகின்ற பதப்பொருள் வாக்கியப்பொருள்களுக்கே ஹேதுத்தன்மையை யுண்டாக்குவதில் ஸாதகமாக விருப்பதனால் எதிர்நிலையணிக்கு உதாரணித்த வாக்கியப்பொருள் தொடர்நிலைச் செய்யுட் குறிப்பணியுள்ள "கனகமலை முலையா" யென்ற செய்யுளில் உன் விழியொப்பான என்றது முதலிய குவளை ஸோமன் அன்னங்களின் விசேஷணங்கள் அவ்வாக்கியப் பொருள்களுக்கு ஹேதுத் தன்மையை யுண்டுபண்ணி வாக்கியப்பொருள் தொடர்நிலைச் செய்யுள் குறிப்பணிக்குப் பதப்பொருள் தொடர்நிலைச் செய்யுள் குறிப்பணி அங்கமாக விருப்பதுபோல் கருத்

துடையடையணியை யங்கமாகக்கொள்ளவேண்டுவதால் அவைகள் தொடர்நிலைச் செய்யுட் குறிப்பணிக்கு உதாரணங்க ளென்பதி லொருதுறையு மின்றாம்.

---

## கூக - வது வேற்றுப்பொருள்வைப்பணி.

(அர்த்தாந்தரநியாஸாலங்காரம்.)

செய்யுள்.

பொதுவாற் சிறப்பைச் சிறப்பாற் பொதுவினைப் பூரித்திட
லதினும மோர்ந்திடில் வேற்றுப் பொருள்வைப் பணியநுமன்
நதிநா யகனைக் கடந்தான் பெரியர்க்கெந் நாளுமரி
தெதுதானென் றோது வதுதானு மொன்றிற் கிலக்கியமே.

நயமாங் குணப்பொரு ளின்சேர்க்கை யானய மில்பொருளும்
உயர்வாம் பெருமலர்ச் சேர்க்கையி னொரு முறுஞ்சிரத்தின்
வயமேயென் றோதலு மொன்றிற் கிலக்கிய மண்டலமோர்
புயமீது கொண்ட குமாரொட்ட பாண்டிய பூபதியே.

பொதுவால் சிறப்பையேனும் சிறப்பால் பொதுவையேனும் முடிகுமிடத்தில் வேற்றுப்பொருள்வைப்பணி. இதனை வடநூலார் அர்த்தாந்தரநியாஸாலங்கார மென்பர் பொதுச்சிறப்புக்களிலொன்று வருணியமாகவும் ஒன்றவருணிய மாகவும் இருப்பனவாம். அவற்றுட் சிறப்பு வருணியமாகவிருக்குமாகில் அஃதுடன் அவருணியமாகிய பொதுவான வேற்றுப்பொருளைச் சேர்ப்பதினாலும், பொது வருணியமாக விருக்குமாகில் அஃதுடன் அவருணியமாகிய சிறப்பான வேற்றுப்பொருளைச் சேர்ப்பதினாலு, மிவ்வணி யிப்பெயர்த்து. இவற்றுட் சிறப்பு வருணியமாகவும் பொது அவருணியமாகவும் இருப்பதற்கு "அநுமான் நதிநாயகனை" யென்பதுமுதலும் பொதுவர்ணியமாகவும், சிறப்பு அவர்ணியமாகவு மிருப்பதற்கு "நயமாங்குணப்பொருள்" என்பதுமுதலும் நிரலே உதா

ரணங்கள். அவற்றுள் முதலாவதுதாரணத்தில் அநு மான் நதிநாயகனைக்கடந்தானென்ற சிறப்பைப் பெரியோ ருக்கரிதேதென்ற பொதுவாலும் இரண்டாவதுதாரணத் தில் உயர்ந்த பொருட் சேர்க்கையினாற் றாழ்ந்த பொ ருளு முயர்ச்சியடையுமென்ற பொதுவை மலர்க்கூட் டத்தால் நாருஞ் சிரத்தின்மேற் சூடப்படுமென்ற* சிறப் பாலும் பூரித்திருப்பது. காண்க. ஆனால் வர்ணியங்க ளாக விருக்கின்ற பொதுச் சிறப்புகளைச் சொல்லால் கூறியிருப்பமையால் வியஞ்சனவிருத்தியால் புனைவில்விப் புகழ்ச்சியணியில் அவர்ணியம் வர்ணியத்தில் ஸம்பந்தப் படுவதுபோல் இங்ஙன மில்லாமையாலும் எங்கெந்த இடத்தில் புகையிருக்கின்றதோ அந்தந்த இடத்தில் அக்கினி இருக்கும் என்றதுபோலுள்ள வியாப்தி முத லியது இல்லாமையினால் வர்ணியத்தின் அறிவுக்குக் கார ணமாக விருக்குந் தன்மையால் அநுமான வணியில் அவர்ணியம் வர்ணியத்தில் ஸம்பந்தப்படுவதுபோல இங் ஙன மில்லாமையாலும்,

செய்யுள்.

கொடியனிட நடிக்கும்விசு வர்சிதனைக்
கொலும்பாவங் கூறும் வீர
மடர்புருட னிடமுனிவை விளைத்தவன்சா
வுக்கேது வாங்கைம் மாவான்
மடமடென முரிபடுதா ருவினொலிமிக்
குறுபலமே வாய்ந்த சிங்கங்
கொடுவதினித் தினைப்பகையாய்த் தன்சாவின்
காரணமா குதல்போ லம்மா.

என்பது முதலிய உதாரணங்களில் பொதுவில் சிறப்பு உவமானத் தன்மையாக ஸம்பந்தப் பட்டாலும் சிறப்பில் பொது அத்தன்மையாக ஸம்பந்தப் படுவது ஓரிடத்திலு மில்லாமையாலும் அவ்வண்ணம் ஸம்பந்

தப்படுவதில் பொருத்த முண்டாக மாட்டாதாகையா லும் எடுத்துக்காட் டுவமையில் வர்ணியத்தில் அவர்ணியம் உவமானத் தன்மைகொண்டு ஸம்பந்தப் படுவதுபோ லிங்ஙனம் இல்லாமையாலும் வர்ணியத்தில் ஸம்பந்தப் படாமலிருக்கும் அவருணியத்தைக் கூறுவது உசிதமில் லாததால் எவ்விதமாவது நிற்காட்டிய இரண்டுதாரணங் களிலும் விளங்குகின்ற பொதுச் சிறப்புகளுக்குள் ஒன் றற் கொன்று ஸம்பந்தத்தைக் கூறவேண்டியது முக்கிய மாதலாலும் வர்ணியத்தை ஸமாத்திப்பிக்கின்ற; தன் மையினாலே அவருணியத்தின் உபயோகத்தைக் கூறவே ண்டுமெனக் கொண்டு இவ்வணியையும் அத்தன்மை யுள் ள வாக்கியப் பொருட் டொடர்நிலைச் செய்யுட் குறிப் பணியாகவே கொள்வா மெனின் அவ்வாறன்று "கன கமலை முலையார்" என்பது முதலிய வாக்கியப் பொருட் டொடர்நிலைச் செய்யுட் குறிப்பணி உதாரணங்களில் ஸமாத்தித்தலைக் கருதுகின்ற பொருளின் ஸமர்த்திக்க விருப்பதுபோல்.

செய்யுள்.

மதியஞ் சரற்கா லப்பெண்ணொடு மருவக் கார்கா லப்பாவை
உதிமி னெனுங்கட் கடைநோக்க மடங்கி யொருவற் றனள்தளிர்ச்சி
யதுசேர் வுறாப யோதரங்க ளமைந்தே யிருக்கு மெவர்களுக்குப்
புதிய வனப்பி னரியகுணம் போகா திருக்கும் பூமானே.

இமயமலை தனதுருகை யினிற்கோட்டான்
போலடங்கு மிருட்கு ழாத்தைச்
சிமயமகா மேருவைச்சூழ் தினகரற்கு
வெருவாமற் றினமுங் காக்குந்
தமையனுறிச் சரணமடைந் தான்புலிய
னெனு மவன்றன் னைத்தங்கட்
கமையுறின மாசகொளுத லறிஞர்களுக்
கமைவதா யபகே யன்றே.

இது முதலிய வேற்றுப்பொருள் வைப்பணி உதாரணங்களில் வருணியப்பொருளை ஸமர்த்திக்கவேண்டிய அவசியமில்லாததனால் கருத்தை வற்புறுத்துவது மாத்திரமே ஸ்மர்த்தித்தலின் பயனாகக்கருதி ஸமர்த்தித்திருக்குமிடம் வேற்றுப்பொருள் வைப்பணி யென்றும் வருணியப்பொருள் ஸமர்த்தித்த லின்றியமையாமையால் ஸமர்த்தித்த லிருக்குமிடம் தொடர்நிலைச்செய்யுட் குறிப்பணியென்றும் சிலர் வேறுபாடு கூறுகின்றார்கள். உண்மையில் இவ்வாறுரைத்ததும் சரியன்று ஏனெனின்

செய்யுள்.

சிறிது வன்மைப் பலபொருட் சேர்கையு
நிறவு மேயொரு காரிய நீணிலத்
துறுது ரும்புக ளாலுள தாயக
யிறுகைம் மாவையுங் கட்டற் கிசையுமே.

இங்ஙனம் "சிறிது வன்மைப் பல பொருட் சேர்க்கையும் நிறவுமே யொருகாரியம்" என்ற பொது "நீணிலத் துறுதுரும்பு களாலுளதாய கயிறுகைம்மாவையுங் கட்டற் கிசையுமே" யென்ற உலகப்பிரசித்தமான சிறப்பின்றிப் புலப்படாதாகையால், இவ்வேற்றுப்பொருள் வைப்பணியில் சிறப்புக்குப் பொதுவினால் ஸமர்த்தித்தலவசியம் இல்லாவிட்டாலும் "சிறப்பின்றிப பொது இருக்கமாட்டா" தென்ற நியாயத்தால பொதுவுக்குச சிறப்பினால் ஸமர்த்தித்த லவசியம். "தளர்ச்சியது சேர் பயோதரங்கள்" என்ற சிறப்பினால் ஸமர்த்திக்கப்படும் பொதுவைப்போலவே யிச்செய்யுளினுள்ள பொதுவும் பிரசித்தமாயிருப்பதாலிதையும் ஸமர்த்திக்கச சிறப்பினவசியமில்லையெனக் கூறுவது சரியல்ல. பொதுவெலாம் உலகத்தில் விளங்கியேயிருக்குமென நியமிககமுடியாமையால் உலகமறிய விளங்காத பொதுக்களைச் சிறப்பினால் விளக்கவேண்டிவருமல்லவா. எங்கெங்கே புகை யிருக்கின்றதோ ஆங்

காங்கு அக்கினியிருக்கும் என்ற வியாப்திரூபமாகிய பொது எல்லாராலும் அறியப்பட்டிருப்பமையால் அதற்கு அடுப்பி லெவ்வாறிருக்கின்றதோவென்ற சிறப்பின் கூறு தலவசியமில்லாவிட்டாலும் பிரசித்தமல்லாத வியாப்திரூபமான பொதுவைச் சொல்லுமிடத்திற் சிறப்பாகிய திருஷ்டாந்தம் கூறுதிருக்கக்கூடாதல்லவா'. இவ்வாறுணாத்தால் பொது சிறப்பை ஸமர்த்திக்கின்ற சில இடத்தில் அப்பொது உலகத்தில் பிரசித்த மல்லாமையால் அஃது புத்தியில் நன்குக விளங்கும் பொருட்டு மற்றொரு சிறப்பைக் கூறவேண்டியது வருமென்றுயோ?·· இவ்வணிக்கு ஸமீபத்தில் விளக்கப்படுகின்ற மலர்ச்சி யணியில் இவ்விஷயத்தை யுரைப்பதால் இஃது நமக்கு இஷ்டந்தான். அல்லாமலும் புனைவில்லிப் பொருளைப் புனைவுளிப் பொருளுக்கொப்பாக ஆகவில்லையென்று நிந்தையாக்கூறுவது கவிகளுக்கு இயல்பான முறையானதால் அம்முறையாகக் கூறிய "கற்ற தமயந்தியெந்தக் கார்குழலை" யென்ற செய்யுளில், ஸமர்த்தித்தலி னவசிய மில்லாமையால் தொடர்நிலைச்செய்யுட் குறிப்பணியிலும் எங்கும் ஸமர்த்தித்தலின் கருதுதல் இருக்கவேண்டுமென்ற நியமமில்லை. ஆதலால்,.

செய்யுள்.

நளன்பதந் தெரிந்த வம்புய நாணமே யுற்ற
தளிரி லேதவன் கைப்பொனின் றுளிசரற் காலத்
துளவு வாமதி யன்னவன் திருமுகத் தினுக்கோ
ரளிகொள் தொண்டின ளுகவுந் தகுதிய தன்றே.

இச்செய்யுளில் "சரத்காலத்துள வுவாமதி" யென்றது முதலிய இடங்களில் ஸமாத்தித்தலைக்காணவுமில்லை.

பாவையனைக காளத்தாற் பாணத்தா லக்கினியாற்
பூவயனுண் டாக்கவிலைப் போந்தவவைக்—கேவையத்து
மாற்று பொருளுண் டவரவனை மன்கொண்டே
தோற்றுவித்தான் சத்தியமி து.

என்பது முதலிய தொடர்நிலைச் செய்யுட் குறிப்பணியில் ஸமர்த்தித்தலைக் கருதாமலிருந்தும் மாற்றுபொருளுண்டென்று ஸமர்த்தித்தலைக் கூறியிருக்கின்றது. பார்வையரின் படைப்புக்கு விஷமுதலியவை காரணமல்ல என்பது உலகப்பிரசித்த மாதலால் அங்ஙனம் ஸமர்த்தித்தலின் கருதுதலின்மை என்பது நன்றாய் விளங்குகின்ற தல்லவா. இவ்வண்ணம் ஸமர்த்தித்தலைக் கருதுமிடத்தில் அஃதில்லாததினாலும் அதைக்கருதாத இடத்து அஃதிருப்பதினாலும் இரண்டு விஷயத்தாலும் குறைவு நேருகின்றது. ஆதலால் ஸமர்த்தித்தலைக் கருதுகின்ற பொருளை ஸமர்த்திப்பது தொடர்நிலைச் செய்யுட் குறிப்பணி யென்றும் ஸமர்த்தித்தலைக் கருதாமலிருக்கின்ற பொருளை ஸமர்த்திப்பது வேற்றுப் பொருள்வைப்பணி யென்றும் தீர்மானிப்பது உசிதமல்ல. வேறே எவ்வாறெனில் ஸமர்த்திக்கத்தக்கதும் ஸமர்த்திக்கின்றதுமாக விருக்கும் பொருள்கள் பொதுச்சிறப்புகளாக வில்லாம லிருக்கும் விஷயத்தில் தொடர்நிலைச் செய்யுட் குறிப்பணி என்றும் பொதுச்சிறப்புகளாக விருக்கும் விஷயத்தில் வேற்றுப் பொருள் வைப்பணி என்றும் தீர்மானிக்க வேண்டுவதே உசிதமென்றறிக. இதுவரை அவருணியத்தினால் வருணியத்தின் ஸமர்த்தித்தல் உதாகரிக்கலாயிற்று. வருணியத்தினால் அவருணியத்தின் ஸமர்த்தித்தல் எவ்வாறென்றாலோ,

செய்யுள்.

பொற்பின் மேனிப் புகழுமை யேயழ
கிற்ப யின்றவற் கின்பவ மேய்ந்திடா
அற்ப மேனுமெய் யவ்விக நின்னடை
கற்பிக் கின்றது காணற வோருக்கே.

இங்ஙனம் நின்னடை கற்பிக்கின்றது காணறவோருக்கே என்ற வருணியமாகிய சிறப்பு, நல்ல வடிவமுள்ளவனுக்குப் பாவத்தொழி லுண்டாகமாட்டா தென்ற அவருணியமாகிய பொதுவை ஸமர்த்திக்கின்றது. பாவம், பவம் எனக் குறுகிற்று.

செய்யுள்

தானமருள்வா னெனினுமகி யலைச் சாருபவனிடம்மே
ருனபுகலுள் ளோனெவனே யமர விரும்பு வான்றடத்து
நானமியற்று கரியதுகன் னத்தி னிருந்து வெளியேறிக்
கானமதுரச் சுரும்பினங்கள காவி லடையப் போந்தனவால்.

இங்ஙனம் வருணியமாக விருக்கும் யானையின் செய்கையாகிய சிறப்பால் அவருணியமாக விருக்கும் அவிவேகியின் செய்கையாகிற பொது ஸமர்த்திக்கப்படுகின்றது.

---

## ௯௨-வது மலர்ச்சியணி.

(விகஸ்வராலங்காரம்.)

செய்யுள்

சிறப்பை நிறுத்தும் பொதுவை நிறுத்தற மோர்சிறப்பை
யுறப்பு கலுதன் மலர்ச்சியிக் கோவையுள் ளார்கள்வெல்லார்
அறப்பெரி யோரை யலைபோல் வெலற்கமை யாதெனிலே
பிறகு முதாரணந் தென்னிள சைக்குப் பெருமரசே.

சிறப்பை ஸமர்த்தின்ற பொதுவை மற்றொரு சிறப்பு உவமானத்தின் முறையாகவேனும் வேற்றுப்பொருள் வைப்பின் முறையாக வேனும் எங்ஙனம் ஸமர்த்திக்கின்றதோ அங்ஙனம் மலர்ச்சியணி. இதை வடநூலார் விகஸ்வராலங்கார மென்பர். இதற்கு "இக்கோவையுள்ளார்க" ளென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் அரசன் ஜயிக்கப் படமாட்டானென்ற சிறப்பை ஸமர்த்திக்கின்ற பெரியோர்கள் ஜயிக்கப்படமாட்டார்களென்ற பொதுவைக் கடலாகிய சிறப்பு உவமையின் முறையாக ஸமர்த்திக்கின்றது.

செய்யுள்.

பலவிரத்தினத் திருப்புறு மிமயவெற் பதற்கே
உலவு வெம்பனி யுங்குறை வலவுயா குணத்தின்

குலம திப்பொருந் தியவொரு துற்குணங் குபேரன்
நிலவி டைக்களங் கமுமென வடங்கிநின் றிடுமே.

இங்ஙனம் பல இரத்தினங்களை யுண்டுபண்ணுகின்ற இமயகிரிக்குப் பனிக்குழு இருப்பது குறைவாக ஆகமாட்டாதென்ற சிறப்பை ஸமர்த்திக்கின்ற நற்குணக் கூட்டங்களில ஒரு துற்குணம் மறைந்து விடுமென்ற பொதுவைக் களங்கம் சந்திர கிரணங்களின் நடுவில் அடங்கிவிடுகின்றது என்ற சிறப்பு உவமானமுறையாக ஸமர்த்திக்கின்றது. குபேரன்-சந்திரன்.

செய்யுள்.

செவிக்கயர்வு புரிகதறு தலைவிடுத்துத் தேன்மலருற்
பவிப்புறுமாச் சேருனைப்பைங் குயிலாப்பற் றுவங்கொடியே
புவிக்கணிடச் சிறப்பாற்சில் பொருளுயர்வாம் நேபாளன்
நவிப்பனிநெற் றியிற்சேற்றை நானமென்றெண் ணுனெவனே.

இங்ஙனம் காக்கையின் வரலாறுகிய சிறப்பை ஸமர்த்திக்கின்ற சில பொருள்கள் தாங்கள் செல்லுமிடத்தின் குணத்தால் மேன்மை பெறும் என்ற பொதுவை நேபாள தேசத்தரசன் நெற்றியில் வீழ்ந்த சேற்றைக் கஸ்தூரியென எவன் நினைக்கமாட்டானென்ற சிறப்பு வேற்றுப் பொருண் முறையாய் ஸமர்த்திக்கின்றது.

செய்யுள்.

வண்டுகளங் கம்பதுமத் தினில்மதியில்
மறுவெனவே வாய்ந்தநின்பாற்
கண்டமுகத் தவைவிழிதி லகமாகி
மேன்மையுற்ற கதிர்த் திரண்டு
கொண்டமறு வோரிடத்தா கிற்குணமா
மியர்மை கூர்ந்த வஞ்சம்
அண்டிதலுற் றிசைப்பவன்சொற் குணமாகத்
தோன்றியிடு மார்கருந் தானே.

இங்ஙனம் தாமரைக்கும் மதிக்கும் மலினமாக விருக்கும் வண்டினமும் களங்கமும் உன் முகத்தில் திலகமாகவும் கண்ணாகவும் விளங்குகின்றன. என்ற சிறப்பை ஸமர்த்திக்கின்ற குறைவாகிய பொருள்களும் சில விடங்களிற் சேர்ந்தால் குணமாக ஆகுமென்ற பொதுவை அறியாமை வஞ்சம் என்ற இரண்டும் நன்மையாகின்றது என்ற சிறப்பு வேற்றுப்பொருள் வைப்பு முறையாய் ஸமர்த்திக்கின்றது.

---

## சுகூ-வது கற்றோர் நவிற்சியணி.

(பிரௌடோக்தியலங்காரம்.)

செய்யுள்.

மிகுதிக்குக் காரண மில்லதைக் காரண மாவிளம்பத்
தகுவது கற்றோர் நவிற்சி யமுனைத் தமாலமரத்
தொகுதி நிகர்கறுப் புற்று விளங்குமித் தோகைமின்னாள்
நகுகுழ லென்ப திலக்கிய மெட்ட நகர்க்கரசே.

எங்ஙனம் காரியத்தின் மேன்மைக்குக் காரண மலலாமலிருக்கும் பொருள் அதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றதோ அங்ஙனம் கற்றோர் நவிற்சியணி. இதை வடநூலார் பிரௌடோக்தியலங்கார மென்பர். இதற்கு "யமுனைத்தமாலமரம்" என்பதுமுத லுதாரணம். தமாலத் தருவின் அதிகக் கறுப்புக்கு யமுனைக்கரையிலுற்பத்தியாவது காரணமல்லாமலிருந்தும் அதற்கு அதைக் காரணமாகக் கூறியிருக்கின்றது.

செய்யுள்.

கற்ப காடவி தேனுசிந் தாமணி கண்ணு
தற்பி ரான்கொள்மந் திரிசங்க நிதிகொழுந்தா லு
நற்ப யங்கிர ணஞ்சுவா சங்கமின் னவையாற்
பொற்பு லாம்புர வலன்புடைப் புற்றன னம்மா.

இங்஝னம் கற்பக விருக்ஷமுதலிய ஒவ்வொரு பொருள்களி னீதலைப் பார்க்கினும் அரசன் ஈதலின் மேன்மைக்குக் கற்பகவிருக்ஷ முதலியவைகளின் பூந்தாது முதலியவைகளால் அவ்வரசனின் படைத்தல் காரணமல்லாதிருந்தும் அதை அதற்குக் காரணமாகக் கூறியிருக்கின்றது.

---

## கூச - வது பேருய்த்துணர்வணி.

(ஸம்பாவனுலங்காரம்.)

செய்யுள்.

ஒருகா ரியமுற்ற விவ்வித மாகிலென் றூகித்திட
வருவதின் பேருய்த் துணர்வு நிருபன் மகிமைமுற்றும்
உரையிட லாம்புகழ் வோன்சேட னேலென் றுதாரணந்தேர்
வரைதக ரப்பொரு வாகன் குமாரொட்ட மன்னவனே.

எங்஝னம் ஒரு காரிய முற்றுப்பெறும் பொருட்டு இஃதிவ்வித மாகுமாகில் என்றூகித்தல் இருக்கின்றதோ அங்஝னம் பேருய்த்துணர்வணி. இதனை வடநூலார் ஸம்பாவனுலங்கார மென்பர். இதற்கு “நிருபன் மகிமை” என்பதுமுத லுதாரணம். இங்஝னம் நிருபனது குணங்களுக்கு மேன்மை விளங்கும் பொருட்டுப் புகழ்வோன் சேஷனே லென்றூகித்த திருக்கின்றது.

செய்யுள்.

நான்முகரா நாவிருக்கி னுவியண்ட மேவுமணந்
தான்முழுது மேயெடுத்துத் தாரணியின்—பான்மருவு
துற்சனனு மீதுபுகுத் தும்.

இங்஝னம் துற்ஜனனது நாவை யறுத்தலுக்கு ஹேதுவாகிய கஸ்தூரி மிருகத்தின் அண்டமேவு மணத்தை துற்ஜனனது நாவில்வைப்பதென்ற காரியஞ் சித்திக்கும் பொருட்டு நான், நான்முகனுக விருப்பேனுகில் என்ற ஊகித்திருக்கின்றது.

---

## ௬௫-வது பொய்த்தற்குறிப்பணி.

(மித்தியாத்தியவஸிதியலங்காரம்.)

செய்யுள்

பொருளொன் றினைப்பொய்மை யாக்கற்கு மற்றொரு பொய்ப்பொருளை
அருகுகற் பித்தல்பொய்த் தற்குறிப் பாம்விண் ணலர்த்தொடையன்
மருவுறப் பூண்டவன் வேசியர் தம்மை வசப்படுத்தற்
குரியனென் றோத லிலகிய மெட்டம வுத்தமனே.

ஓர் பொருளைப்பொய்யென்று உறுதிப்படுத்துவதற்கு மற்றொருபொய்யைக் கூறுவது பொய்த்தற் குறிப்பணி. இதைவடநூலார் மித்தியாத்தியவஸிதி யலங்கார மென்பர். இதற்கு "விண்ணலர்த் தொடையல்" என்பதுமுத லுதாரணம். இங்ஙனம் பொதுமாதை வசப்படுத்துவது மிகவும் நேரக்கூடாதென்று நிர்மாணிக்கும் பொருட்டாய் விண்மலர்மாலையைத் தரிப்பதாகிற வேறொரு பொய்ப் பொருளைக் கூறியிருக்கின்றது.

செய்யுள்.

நிடதமகி பதியவகீர்த் தியுமொருப
    ரார்த்ததொகை நின்று மேலாம்
படுதொகையா லெணப்பிறவி யந்தகர்பார்க்
    கசெவிடர் பரிந்து கேட்கப்
பெடையழுங்கின் பாலுவரிக நரையின்மிசை
    யெட்டெனவே பெருஞ் சுரத்தை
நடைபெறவா லாபனஞ்செ யூமையர்பா
    டத்திகழும் நாவ லோரே.

இங்ஙனம் நிடததேசத்து அரசனுக்கு அவகீர்த்தியே யில்லை என்பதைக் கூறும் பொருட்டா யந்த அவகீர்த்திபரார்த்தத் தொகைக்கு மேற்பட்ட தொகையால்

என்னக் கூடியதாக விருக்கிறதென்பது முதலிய பொய்ப் பொருள்களைக் கூறியிருக்கின்றது. இங்ஙனம், முதலாவது உதாரணத்தில் நிதரிச அலங்காரத்தை யுட்கொண்டிருக்கிற தென்றும் இவ்வுதாரணத்திற் சுத்தமாக விருக்கிற தென்றும் பிரிவு காண்க. பொருந்தாப் பொருளைப் பொருத்திக் கூறுகின்ற ஸம்பந்தாதிசயோக்தி தொடர்புயர்வுநவிற்சி யலங்காரத்தைப் பார்க்கினும் இதில் ஓர் பொய்யை ஸாதிக்கும்பொருட்டு மற்றொரு பொய்யைக் கற்பித்த லென்ற மனமகிழ்வைப் பிறப்பதினால விசேஷப் பிரி விருக்கின்றதெனக்காண்க. அழுங்கு-ஆமை இது அழுங்கு என மெலிந்து நின்றது.

---

## சுகூ-வது வனப்புநிலையணி.

(லலிதாலங்காரம்:)

செய்யுள்.

வருணி யவிசே டியத்தைமட் டேநீரசி யவ்வவலா
றருளு தவின்றி யவருணி யவா லாற்றினைப்பப
கருதல் வனப்பு நிலையா மிவள்கம கன்றிடின்
னொருவனை செய்யு மெனவெட்ட மன்ன வுதாரணமே.

வருணியமாகிய தருமியைச் சொல்லாற் கூறிய யதைச்சேர்ந்த வர்ணிக்கக்கூடிய வாக்கியப் பொருளை வருணியாமல் அந்த தர்மியில்தானே அதற்குப் பிரதிவிம்பமாக விருக்கின்ற ஓர் அவர்ணிய வாக்கியப் பொருளை வருணிப்பது வனப்புநிலையணி. இதனை வடநூலார் லலிதாலங்கார மென்பர். இதற்கு இவள் "கமகன்றிடின்" என்பதுமுத லுதாரணம். இங்ஙனம் அன்பாக வந்தவனும் அவ்வேளையில் ஆதரவு செய்யாமையால் திரும்பி வேறே நாயகி யிடம் ஆவல் கொண்டவனுமாக விருக்கின்ற நாயகனை யழைத்துவரும் பொருட்டுப் பாங்கியை

யேவுதல் செய்ய விருப்பமுற்ற நாயகியைக் குறித்துப் பாங்கிசொல்லிய அந்த விருத்தாந்தத்துக்குப் பிரதிபிம்பமாக விருக்கின்ற தண்ணீர் போனபின்பு ஆணை செய்கிறாளென்ற விருத்தாந்தம் விளங்குகின்றது. இங்ஙனம் வருணியமாகிய தருமியைச் சொல்லாற் கூறி யிருப்பமையால் இஃது புனைவில்லிப் புகழ்ச்சியணி யல்ல. வருணிய விவகாரத்தை வருணித்தவுடன் அடை சொற்களின் ஒற்றுமையாலாவது ஸாதுருசியத்தாலாவது அவர்ணிய விவகாரத்தின் தோற்ற மில்லாமையாலும் அவர்ணிய விவகாரத்தினாலேயே ஸாதுருசியமான வர்ணியவிவகாரத்தின் தோற்ற மிருப்பதினாலுஞ் சுருங்கச் சொல்லலணியுமல்ல. நிதரிச னலங்காரத்திற் சொல்லாற் கூறிய விரண்டு வர்ணியாவர்ணிய விவகாரங்களுக்கு ஒற்றுமை யாரோபித்த திருப்பதுபோ லிவ்வணியி லில்லாமையால் இஃது நிதரிசனலங்காரமு மல்ல. சொல்லாற் கூறி யிருக்கப்பட்ட வருணியா வருணியங்களிருக்கு மிடத்து விளங்கிய அணி வருணியமட்டிலு மிருக்கு மிடத்திலும் வருமென்றுரைத்தால உருவக வணியும் பிரிவிருந்தாலும் பிரிவில்லாததாக வருணிக்கின்ற வுயர்வு நவிற்சியணியின் விஷயத்திலும் வந்து விடும். ஆனால் வருணியமாக விருக்கின்ற நாயகன் முதலியவைகளை மறைத்து அவைகளைச சொல்லாற் கூறி யிருக்கின்ற அவர்ணியமாகிய தண்ணீர் முதலியவைகளில் அபேதமாக வாரோபித்திருப்பதால் இஃதும் அபேதரூபமாக விருககின்ற உயர்வு நவிற்சியணி யென்றே கூறுவோமென்றால் ஸாதுருசியத்தினால் விளங்கும் புனைவில்லிப் புகழ்ச்சி விஷயத்திலும் அவ்வுயர்வு நவிற்சியணி வந்துவிடும். ஆனால் உயர்வு நவிற்சி அவருணியமாகிய தருமியைககொண் டிருக்கிறதென்ற பிரிவைக் கூறுவாரோ? பிரசித்தமான வுயர்வுநவிற்சியுதாரணங்களி லிருப்பதுபோல் புனைவில்லிப் புகழ்ச்சியிலும் வருணியமான தருமியை லக்ஷணையாகக கூறுகின்ற

அவருணியமாகிய தருமியைச் சொல்லுகின்ற பதம் இருக்கவே செய்கின்றது. ஆனால் புனைவில்லிப்புகழ்ச்சியில் ஸாதுருசியமான அவருணிய வாக்கியப் பொருளால் வருணிய வாக்கியப் பொருள் அறியப்படுகிற தென்றும் உயர்வு நவிற்சியில் அந்தந்த உவமானப் பொருள்களைச் சொல்லுகின்ற பதங்களால் உபமேயங்கள் லக்ஷணையாக வறியப்படுகின்றனவென்றுங் கூறுவாயாகி லிவ்வனப்புநிலையணியிலும் வருணியமான தருமியில் ஸம்பந்தப்பட்ட அவர்ணிய விவகார ரூபமான வாக்கியப் பொருளால் வருணியமான தருமியில் ஸம்பந்தப்பட்ட வருணிய விவகார ரூபமான வாக்கியப் பொருள் அறியப்படுகிறதென்று இவ்வணிக்கு உயர்வுநவிற்சியணியிலும் பிரிவெனக்காண்க. உண்மையில்;

செய்யுள்.

புரளும் நாவுசஞ் சலச்செவி மதப்பொழி வினிற்றன்
னுரமுந் தெவ்வுர முந்தெரி யாமையுண் மையிற்பாழ்ங்
கரமுண் டானது கரியென முன்னமே கண்டும்
பிரச மேயதை யுறுவையீ தென்பிடி வாதம்.

இது முதலிய புனைவில்லிப்புகழ்ச்சி யுதாரணத்தில் முதலாவது தோன்றுகின்ற அவர்ணிய வாக்கியப் பொருளால் வர்ணிய வாக்கியப்பொருள் அறியப்படுகிறதென்றது பொருந்தவில்லை. அவர்ணியமாக விருக்கின்ற கஜத்தினிடம் வண்டினம் அணுகாமைக்குக் காதுகளின் அசைவுமட்டிலும் காரணமாக ஆவதாலும் நாப்புரளுதலும் பாழ்ங்கரமுடைமையும் அது அணுகுவதற்கும் அணுகாமைக்கும் காரணமாக ஆகாமையாலும் மதப்பெருக்கு,வண்டினம் அணுகுவதற்குக்காரணமாக விருப்பதாலும் அங்ஙனம் ஹேதுக்களாகக்கூறப்பட்ட நாவு புரளுதல்முதலியவைகள் ஸம்பந்திக்கும் பொருட்டுக் கரியென்ற பதத்திற்குக் கெட்ட அரசன் விஷயமான முடிவேகூறவேண்டியதாக விருக்கின்றதல்லவா? இஃது இவ்வாறுனல் புனைவில்லிப்புகழ்ச்சி

யில் அவருணியமாகிய முன்னிலை யிருப்பதால் கிடைத்த மனமகிழ்ச்சி யிருப்பதைப்பற்றிப் புனைவில்லிப் புகழ்ச்சிக்கு உயர்வு நவிற்சியைப்பார்க்கிலும் பிரிவைக் கூறுவோ மென்றாலோ அவ்வாறே யிவ்வனப்பு நிலையணியிலும் வருணியமான தருமியை யதற்குரிய சொல்லாற் கூறி யதில் அவர்ணிய விவகாரத்தை ஸம்பந்தப்படுத்துவதாகிய மனமகிழ்விப்பு இருப்பதால் உயர்வு நவிற்சியினும் இவ்வணிக்குப் பிரிவு நன்றாய் விளங்குகிறதென்று காண்க. "இருகுவளையினின்றொன்றனை யுதயமுறும்" "அந்தரத்தோர் வாவிவிளங்கிடும்" என்ற இடங்களில் வர்ணியமாகிய ஓர் தருமியை யதற்குரிய சொல்லாற் கூறாமையால் உயர்வு நவிற்சியணியே. இதனால் தண்ணீர் சென்றதின்பிறகு அணைகட்டுதலின் வர்ணனை முதலியவைகளில் இயைபில்லாமலிருப்பதை யியைபுப்படுத்திக் கூறுவதாகிய தொடர்புயர்வு நவிற்சி யென்ற ஸந்தேஹத்துக்கிடமில்லை. அவ்வாறிருக்குமாகில் "ஆம்மைநீயார் யானரும் தேவாற் கேடுண்டு விம்முசாகோடகங் காண்" என்றது முதலிய விடத்திலுந் தொடர்புயர்வு நவிற்சியேயாம். ஸாதுருசியத்தினாற் கிடைத்த வர்ணியமாகிய வாக்கியப்பொருளின் அறிவாகிய மனமகிழ்விப்பு இருப்பதைப்பற்றி வேறு அணியாகக் கூறினாலோ அஃது இவ்வனப்பு நிலையணியிலும் சொல்லக் கூடும். ஆதலால் இவ்வனப்புநிலை யெல்லா வணிகளைப் பார்க்கினும் வேறு பிரிவாகவே விளங்குகின்றது.

செய்யுள்.

பகலவனை முதலேது வாக்கொள்பரம் பரையெவனோ
யிகழ்சிறிய மதியுளயா னெவண்கடவாக் கடலதனை
யகமுற்றி வீண்குறைவி னன்மிதப்பு மரத்தையிப்போ
துகருவி யாக்கடக்கத் துணியுமயர் வணிகினனே.

இங்ஙனமும் காகூஷியணி யென்ற ஸந்தேஹம் கொள்ளத்தக்கதல்ல. அல்ப விஷயமான புத்தியைக் கொண்டு

இரவிவம்சத்தை வர்ணிக்க விரும்புகின்ற நான் என்று வர்ணிய விவகாரத்தை வெளியிட்டுக் கூறுமையாலும் அதற்குப் பிரதிவிம்பமாக விருக்கின்ற மிதப்பு மரத்தினாற் சமுத்திரத்தைக் கடக்க விரும்புகின்றேன் என்ற அவருணிய விவகாரத்தை வருணித்ததாலும் முதலில் தகுதியின்மை முறையைப் "பரம்பரை யெவண்" "யான் எவன்" என்றுரைத்திருப்பமையாலுந் தொகநிற்கின்ற இரவிவம்சத்தின் வர்ணனையாகிய வர்ணிய விவகாரத்தின் விளக்கத்தைப்பற்றி யிவ்வணப்புநிலையணியென்றே கூறலாயிற்று.

செய்யுள்.

எந்த நாட்டினுஞ் சிற்றறைநா ளிறையவ னீவ
சந்த மாருது வசந்தமிடு மவத்தையைத் தந்தாய்
வந்த நின்னையிங் கடைந்ததாற் பெரும்பயன் மாறு
வந்த நாமம்யான் கேட்கவா காததோ வன்றே.

இயமனமும் எத்தேசத்தை நீ விட்டா யென்ற வர்ணியப்பொருளைக் கூறுமலதற்குப் பிரதிவிம்பமாக விருக்கின்ற எந்த நாட்டுக்கு வசந்தருது நீங்கிய வவஸ்தையைக் கொடுத்தா யென்ற அவர்ணியப் பொருளை வாணித்திருப்பமையால் இவ்வணியே.

---

## சுஎ-வது இன்பவணி.

(பிரஹர்ஷணாலங்காரம்.)

செய்யுள்

முயலுகை யின்றி யவாவிய காரிய முற்றுறுதற்
கியலும் பெயரின் பமேயாங் கியானித இருக்குமவன்
வயமவ ளோசந்து சொல்லவந் தாளெனல் வாயுமிலக்
கியமெட்ட மாநகர் வாழுங் குமாரெட்ட கேசவனே.

முயற்சி யின்றித் தான் கருதிய காரியமுற்றுப் பெறுவது இன்பவணி. இதனை வடநூலார் பிரஹர்ஷணாலங்கார மென்பர். இதற்குத் "தியானித்திருக்கும் அவன்" என்பதுமுத லுதாரணம். இங்ஙனம் நாயகன் எவளை நினைந்துகொண்டிருந்தானோ அவள் சேர்க்கையாகிய காரியம் வேறே முயற்சியின்றி முடிந்தது.

இராதா மிருந்துவா னிற்கரிய மேகமா
றுமலு நெருங்கி யுளதா
ரணியமதி லேதமா லப்பெரு மரங்களி
னிரந்தர மடர்ந்த கருமை
யேதா னிலங்குகிற திவ்விர விடைப்பய
மிவன்கொளுவ னாத லானி
யேமானி கைச்சுட னழைத்தேகு
வாயென் றினித்தவரு ணந்த னோது
போதாவ லோடுதா மதமனுவு மின்றிப்
புறப்படுமம் மாமி மாது
புகலரிய வாசைமரு மகனொ கண்ணனும்
போம்வழியி லுள்ள கோடி
யாதார மானபூம பந்தர்தொறு மேகாந்த
மாகவு மிருந்து தங்க
ளாசைக கிசைந்தபடி புரிகலவி மிக்கமே
லானதொரு தன்மை யதுவே.

இங்ஙனம் இராதைக்கும் மாதவனுக்கும் ஒருவர்க் கொருவர் விருப்பமிருப்பது பிரசித்தம் அவர்களுக்கு; விருப்பம் போலவே முயற்சியின்றிச் சேர்க்கை கிடைத்தது.

செய்யுள்

விரும்பி யதிலு மதிகங் கிடைத்தலு மேயவணி
துரும்புகொண் டேவிளக் கைக்காந்தி செய்யத் தொடங்குகையில்
பெரும்ப ரிதியுதித் தானென் றுதாரணம் பெற்றிமைதேர்
கரும்பையும் வென்றசொ லோதுங் குமாரெட்ட சாகுத்தனே.

தான் கருதியதைப் பார்க்கினும் அதிகப் பயன் கிடைப்பது மவ்வணி. இதற்கு "துரும்புகொண்டே" யென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் வெளிச்சத்தை விரும்பித் தீபத்தைப் பிரகாசப்படுத்துவதற்கு யத்தனிக்கும் பொழுதே அவ்வெளிச்சத்திற்கு அதிகமாகிய இரவியினுதய முண்டாயிற்று.

செய்யுள்.

சாத கம்புன லாசையிற் றண்கனத்
தீத லாந்துளி யொன்றிரண் டியாசிக்க
வோது மன்ன துலகை நிரப்பிடு
மாத லாலுயர்ந் தோர்கொடை யற்புதம்.

இங்ஙனம் சாதகப்புள் ஒன்றிரண்டு தண்ணீர்த் திவலைகளை விரும்ப மேகம் உலகத்தை முழுமையும் புனலால் நிரப்புகின்றது என்று தான்கருதியதைப் பார்க்கினும் அதிகப்பயன் விளங்குகின்றது.

செய்யுள்.

கருவி பெறும்பொருட் செய்முயற்சி யின்கட பொருளதுவே
வருவது மவ்வணி நிட்சேபங் கொள்ளற்கு வாய்கருவிப்
பெருவஞ் சனஞ்செய வேர்தொடும் போதுபெற் றுனபுதையற்
றிருவென் றுதாரணஞ் சொல்வா ரிளைசைச் சிகாமணியே.

ஒரு பயனுக்குக் கருவியைப் பெறுவதற்குரிய முயற்சியால் கருவிப்பொருளைப் பெறுவதற்கு முன்னமே முக்கியப் பொருள் கிடைத்தலும் அவ்வணி. இதற்கு "நிட்சேபங் கொள்ளற்" கென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் பூமியிலுள்ள பொருளை யெடுப்பதற்குக் கருவியாகவிருக்கும் அஞ்சனத்தைச் சேர்ப்பதற்குக் காரணமாகிய வேர்களைவெட்டு மிடத்திற் புதையற் பொருளே கிடைத்து விட்டது.

செய்யுள்.

எட்டும்வரை யுண்மலரை யெடுத்ததின்பின் மேற்கோட்டி
லொட்டியபூ வெடுக்கவிருப் புறுமறியம் பகிசேர்ந்து
கட்டியிவர்ந் திடவடியிற் கால்சூட்டி னளதுவு
மட்டிலடங் காதெவனு மலரினையின் றதுமாதோ.

இங்ஙனம் மேற்கொம்பி லிருக்கும் மலர்களைக் கொய்வதற்குத் தருவினடியில் காலைவைத்த விடத்தில் தானே மலர்களுண்டாகிவிட்டன.

---

## ௯௮ - வது துன்பவணி.

(விஷாதநாலங்காரம்.)

செய்யுள்.

இச்சைகொ ளும்பொரு ளொக்குறித் தேசெய்கை யேபுரிய
வசசெயற் குப்பகை யாம்பொருள் சேரு மதுதுன்பமா
மெச்சுறு தீபம் விளங்கிடச் செய்பொழு தேயவிந்த
துச்சமின் னேயென் றுதாரணந் தேரொட்ட லூரரசே.

தான் கருதியதற்குப் பிரதிகூலமான பொருளின் பெறுதல் துன்பவணி. இதை வடநூலார் விஷாதநாலங்கார மென்பர். இதற்கு "மெச்சுறு தீபம்" என்பதுமுத லுதாரணம். இங்ஙனம் தீபம் அதிகமாக விளங்கவேண்டு மெனச்செய்த முயற்சிக்குப் பிரதிகூலமாக அத்தீபம் அவிந்தது.

செய்யுள்.

இரவு நீங்கும் வைகறைவந் திசையு
மிரவி தோன்றுவன்று
மரையும் விரியு மெனநினைந்து மதுக்கண்
டுமிழ்க்கு ளிருக்கையிலே

பரவு மதத்தி னொழுக்கெடுக்கும்
பரிய கரத்து மாதங்கம்
விரைவிற் புகுந்தம் மலரோடை
யழித்த தந்தோ மிகுதுன்பம்.

இங்ஙனம் குவிந்த தாமரைக்கு ளகப்பட்ட தும்பி தனக்கு ஸமீபகாலத்துத் துன்பம் நீங்குமென நினைந்து கொண்டிருந்ததற்குப் பிரதிகூலமாக அத்தாமரை தந்தாவளத்தாற் பறிபட்டழிந்தது.

---

## ௬௬ – வது அகமலர்ச்சியணி.

(உல்லாஸாலங்காரம்.)

செய்யுள்.

ஒன்றின் குணத்தினைக் குற்றத்தை மற்றொன் றினுக்குறாக்க
நின்ற தகமலர்ச் சிப்பேர் கொளுங்கற்பி னேரிழையார்
என்று முழுகித் தனைச்சுத்த மாக்கவன் றென்றுகங்கை
யின்றும் விரும்புவ ளென்ப திலக்கிய மெட்டமனே.

ஒன்றின் குணத்தான் மற்றொன்றின் குணமும் ஒன்றின் குற்றத்தான் மற்றொன்றின் குற்றமும் ஒன்றின் குணத்தான் மற்றொன்றின் குற்றமும் ஒன்றின் குற்றத்தான் மற்றொன்றின் குணமும் வருணிக்கப்படுவது அகமலர்ச்சியணி. இதனை வடநூலார் உல்லாஸாலங்கார மென்பர். இதற்குக் "கற்பினேரிழை" யென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் கற்புள்ள மங்கையரிடத்தி லிருக்கும் பரிசுத்தமாகிய குணத்தைக் கங்கைக்கு விளக்கி யிருக்கின்றது. இஃது ஒன்றின் குணத்தான் மற்றொன்றின் குணத்தைக் கூறுவதற்குதாரணம். ஒன்றின் குற்றத்தான் மற்றொன்றின் குற்றங் கூறுவது எவ்வாறெனில்,

செய்யுள்.

நாதாநின் போர்ப்பிரயா ணத்திலிக லோர்நல்லார்
வேதாவைக் கொங்கைகளின் மேவியிட—வேதான்செய்

வன்மையினைப் பாதத்தின் வாய்படைக்க வேவிரும்பிப்
பன்மைவித மாகநிந்திப் பார்

இங்ஙனம் அரசன் போர்க்களஞ் சென்றவுடன் ஆரணியத்தில் ஓடுகின்றவனது சத்துரு மடந்தைகளுடைய பாதங்களிலிருக்கின்றவோடுதற்கு விரோதியாகிய மென்மையெனுங் குற்றத்தாற் பாதங்களில் வன்மையைப் படையாமல் கொங்கைகளின் வன்மையைப் படைத்த நான்முகனின் குற்றங் கூறலாயிற்று. ஒன்றின் குற்றத்தான் மற்றொன்றின் குணமும் ஒன்றின் குணத்தான் மற்றொன்றின் குற்றமும் கூறுவதற்குதாரணம் எவ்வாறெனில்,

செய்யுள்.

சற்குணமே யுள்ளோரைச் சாராமை மாநிதிய
தற்கிழிவு மன்னவரைச் சந்ததஞ்சூழ்—வற்கு
வதைத்தொழிலுக் குட்பட்டு மாநிலத்தின் மிக்குப்
பதைத்திடுத லின்மையிலா பம்.

இங்ஙனம் ஸாதுக்களின் மேன்மையாகிய குணத்தாற் பொருளுக்கு அவர்களை யணுகாமையாகிற குற்றமும் அரசனின் குரூரத்தன்மையாகிற குற்றத்தாலவனை யணுகி யிருக்கும் ஜனங்களுக்கு வதையில்லாமையாகிற குணமும் வருணிக்கலாயிற்று. இவ்வாறே நிரலே யுதாரணங்கள். வாற்கு-என்பது வற்கு எனக் குறுகிற்று.

செய்யுள்.

தேரினசை வாலவடோள் சேர்ந்தவிந்த வாகொன்றே
தேரி னொனதுறுப்பு ளேசிறப்புச்—சோர்ந்ததுமற்
றங்கமெலாம் பூப்பார மாம்.

இங்ஙனம் நாயகியின் ஸௌந்தரியமாகிய குணத்தால் அவளுடைய தோளில் ஸம்பந்தப்பட்ட தன் தோளுக்குச் சிறப்பாகிய குணம் வருணிக்கப்பட்டிருக்கின்றது.

செய்யுள்.

தேய மதிலா னந்தமியற் றிடுமென் னேயச் சந்தனமே
நீயி வனமு றேல்கடின நிகளா சார வுளங்கொள்கிளே
வாயு மவையொன் ஞேடொன்று மருவிக் கொளுத்திக் கொளுந்தியா
லாயுந் தமது குலத்தைமட்டு மவியா தனைத்தை யுஞ்சுடுமே.

இங்ஙனம் மூங்கில்களி னென்றுக்கொன்று ரஞ்சுத லா லத்தியுண்டாகுங் குற்றத்தினுல் வனத்தின் அழிதலா கிய குற்றம் வாணிக்கலாயிற்று.

செய்யுள்.

தான மேவிரும் பரியினை மதமரு டழைக்கு
மானை நன்கனத் தடியினுல் விலக்குமே லணியின்
ஈன மன்னநின் கனப்பிர வேசமே யினையயு
மான வண்டின மலர்மனைக் காட்டினின் வருமால்

இங்ஙனம் வண்டினங்கள் செய்யு மலங்காரமாகிய குணத்தால் தந்தாவளஞ் செய்யு மவைகளின் விலக்க மாகிய குற்றம் வருணிக்கப்பட்டிருக்கின்றது.

செய்யுள்.

கனப்பதும ராகமணி தனைக்குரங்கு
மோந்துபலாற் கடித்து நக்கி
யினிப்புறுவ தாமெனவும் பார்த்திரச
மின்றெனவே யெறிந்த தென்று
மனத்தனுவும் வருத்தமுற லேயின்னு
முனையுள்ளி ரசம்வாயு மேவென்
றுனிச்சிலைகொண் டேபொடிக்கா தெறிந்ததுவே
பெரும்பேறிங் குனக்குத் தானே.

இங்ஙனம் வானரத்தின் மனச்சாஞ்சலியமாகிய குற் றத்தா லிரத்தினத்தின் பொடிக்கப்படாமையாகிய குணம் வருணிக்கப்பட்டிருக்கின்றது.

## ௭௦-வது இகழ்ச்சியணி.

(அவஞ்ஞாலங்காரம்.)

செய்யுள்.

மற்றொன் றினுக்குமொன் றின்குணங் குற்ற மருவிலதைச்
சொற்ற விகழ்ச்சி யணிநாழி வாரி தொடினுஞ்சிறி
துற்ற புனல்கொளுங் கஞ்சக் குவிவி னுடுபதிக்கென்
குற்றமென் றோத விலக்கியந் தென்னிள சைக்குமனே.

ஒன்றின் குணத்தாலுங் குற்றத்தாலும் மற்றொன்றுக்கவையுண்டாகாம லிருப்பதைக் கூறுவது இகழ்ச்சியணி. இதை வடநூலார் அவஞ்ஞாலங்கார மென்பர். இவைகளுக்குள் ஒன்றின் குணத்தான் மற்றொன்றுக்குக் குணமுண்டாகாமைக்கு "நாழிவாரி தொடினும் சிறிதுற்ற புனல்கொளு" மென்பதும் ஒன்றின் குற்றத்தான் மற்றொன்றுக்குக் குற்ற முண்டாகாமைக்குக் "கஞ்சக்குவிவி னுடுபதிக்கென் குற்றம்" என்பதும் நிரலேயுதாரணங்கள். அவற்றுண் முதலாவ துதாரணத்தில் வாரியினது நிறைதலாகிய குணத்தால் நாழிக்குக்குண முண்டாகாமையும் இரண்டாவதுதாரணத்தில் கஞ்சத்தின் குவிதலாகிய குற்றத்தான் மதிக்குக் குற்ற முண்டாகாமையும் வருணிக்கப்பட் டிருக்கின்றன.

செய்யுள்.

கற்றவர் மனதைத் தெள்ளமு தெனவெக்
களிப்புறச் செய்யுமே லென்சொல்
மற்றவ ரிகழுந் தன்மையா லென்கொல்
வாய்ந்திடும் பேரழ கங்கம்
முற்றிலு முறுவா ளென்னினுங் குமரர்
முழுமயக் குறப்புரி வதுபோற்
பற்றுறு மழலைப் பாலருக் கவ்வா
றியற்றுமோ பாவைநல் லாளே.

இங்ஙனம் கவிதை, சுந்தரி யிவர்களின் குணங்களால் கல்வி யில்லாதவர்கள் பாலர்களிவர்களுக்குக் குணங்களுண்டாகாமை வருணிக்கப் பட்டிருக்கின்றது.

செய்யுள்.

சங்கரா விடைமீ யிவர்ந்ததாற் றிசைமா
தங்கமா னவைக்கெனோ குறைநச்
சங்கதம் பணிக ளாக்கினை யதனு
லெரும்பொழுக கொருகுறை யுளதோ
இங்கனோ முடியிற் றரிந்ததா னுலகின்
றிபமெவன் றாழ்க்கிழி வென்னும்
எங்கணுந் தலைவ னென்றுய் நின்னை
யெய்சொலக கடவனு யனுமே.

இங்ஙனம் சிவபெருமான் கொள்ளாமையாகிற குற்றத்தால் திக்கஜம் முதலிய வைகளுக்கு மேன்மைக் குறைவாகிய குற்றத்தின் உண்டாகாமை வர்ணிக்கப்பட் டிருக்கின்றது.

---

## எக-வது வேண்டலணி.

(அநுஞ்யாலங்காரம்.)

செய்யுள்.

குற்றத்தி லேகுணந் தோன்றி யிடலையுட் கொண்டதனை
முற்றக் கருதுதல் வேண்ட லணிதுயர் மூண்டிடுகாற்
பெற்றப் பரனினை வுண்டாத லாலவை பேதையனுக்
கெற்றைக்கும் வேண்டுமென் றோத விலக்கிய மெட்டமனே.

குற்றத்திற் குணமிருக்கிறதாகக் கண்டு அக்குற்றத்தையே வேண்டுவது வேண்டலணி. இதை வடநூலார் அநுஞ்யாலங்கார மென்பர். இதற்குத் "துயர் மூண்டிடுகா" லென்றதுமுத லுதாரணம். இங்ஙனம் குற்றங்க

ளுண்டாகுங் காலையில் தெய்வபக்தி மிக வுண்டாவதா லெனக்குக் குறைகளே யுண்டாகவேண்டு மெனக் கூறி யிருக்கின்றது.

செய்யுள்.

மாருதியே கைம்மாறு வாய்ந்திடச்செய் மானிடனே
பாருலகிற் கேடுவரப் பண்ணமின்—ஓருதவி
நானும் பதிலுபகா ரந்தைநந் சாதன்றே
யாருமென்னி லேயிருக்க லாம்.

இஃது மாருதியைக் குறித்து ஸ்ரீராகவன் சொல்லும் வசனம். இங்ஙனம் பதிலுபகாரஞ் செய்யாமை குற்றம் அக்குற்றம் எதிரிக்கு விபத்துவரக் கூடாதென்ற வேண்டுதலாகிய குணமிருப்பதைப் பற்றித் தன்னிடத்தில் தானே யிருக்கவேண்டு மெனக் கருதப்பட் டிருக்கின்றது. எதிரிக்கு விபத்துவரக் கூடாதென்ற கருதுதலும் சிறப்பை ஸமர்த்திக்கின்றதா யிருக்கும் பொதுவால் வியதி ரேகமுகமாக விளக்கப்பட் டிருக்கின்றது.

செய்யுள்.

பரமநா யகனே நினதரு ளடியேன்
பணிவிடைக் குறள்வடி வெடுத்து
வரமுற வாழ்வன் வளைமுகத் தடியால்
வதியுமுன் னுலய வாயில்
நிரந்தரஞ் சிதறு மணியவை முடியி
னிடருறு மாதவன் முதலோர்
விரவுற மருவு திருவைபெவ் வாறு
விரும்புவ னிம்மியா யினுமே.

இங்ஙனம் குறள் வடிவத்தில் குறைவிருந்தாலும் அதில் மஹா கைலாஸவாசலில் நந்திகேசுவரன் முதலியவர்களின் கையில் விளங்கும் சிங்கமுகத்தடியி னடியைப் பெருமையாகிய குணமிருப்பதாகத் தெரிந்த அதின் கருதுதலிருக்கின்றது.

## ௭௨-வது இலேசவணி.

(லேசாலங்காரம்.)

செய்யுள்.

கோதைக் குணமென்ன வுங்குண மானதைக் கோதெனவும்
ஓதப் பெறுவதி லேசம்புள் ளெல்லா முலவிடத்துப்
போதப் படிசுக மேநிற்குங் கூட்டிற் புகுதல்சுவை
யீதற் சொலின்பல மென்ன வுதாரண மெட்டமனே.

குற்றத்தைக் குணமாகவுங் குணத்தைக் குற்றமாகவுங் கற்பித்தல இலேசவணி. இதனை வடநூலாரு மிவ்வாறே கூறுவர். இதற்குப் "புள்ளெலாமுலவிட" வென்பதுமுத லுதாரணம். இஃது அரசனுக்குப் பிரியனாக விருக்கின்ற வித்வானாகிய புத்திரன் வெகுகால மரசனிருக்கும் பட்டணத்தைச சென்றிருக்கு மப்புத்திரனைப் பார்க்க விருப்புற்றவனும் வீட்டிலிருக்கின்றவனுமாகிய தந்தையினது புனைவில்லிப்புகழ்ச்சி முறையாகக் கூறிய வசனம். அதின் முதலாவது மற்றப் புட்களிட மிருக்கின்ற பேசத்தெரியாமையாகிற குற்றத்தை தத்தம் போக்குப்படி யுலவுதற கனுகூலமாக விருப்பதைப்பற்றிக் குணமாகக் கூறியிருக்கின்றது. இரண்டாவது செவிக்கினிமையாகப் பேசுதலாகிய குணத்தைக் கூட்டிலடைபடுவதற்குக் காரணமாக வைத்துக குற்றமாகக் கூறி யிருககின்றது. இங்ஙனம் மற்றப்புட்களைத் துதியென்ற கைதவத்தால் நிந்திப்பதினுங் கிள்ளையை நிந்தையென்ற கைதவத்தாற் றுதி செய்வதினுங் கருதுத லில்லாமையாலும் புத்திரனைப்பார்க்க விரும்புகின்ற தந்தை குற்றங் குணங்களைக் குணங் குற்றங்களாகவே கொண்டு சொல்வதாலும் வஞ்சப்புகழ்ச்சியணி யென்ற ஐய மில்லை.

செய்யுள்.

ஆன்றவர்நல் லொழுக்கமுற வேண்டுமெனக்
கவன்றுமனத் தவாப் படிக்கே
யேன்றிடலின் றித்தடுத்து மானுடர்தூற்
றுதற்கஞ்சி யிருந்தே யென்றுந்
தோன்றுறுதுக் கங்கொளுவர் தீங்குநன்கோ
ராமடர்துற் செய்கை யாலும்
மான்றலுறு நற்செய்கை யாலும்வியா
குலமின்றி மகிழ்வ ரம்மா.

இங்ஙனம் ஸாதுக்கள் துக்கப்படுகின்றார்களென்று நினைத்துக் கூறி யிருக்கின்றது. ஈண்டுத் தண்டியாசிரி யர் சொல்லியதாவது,

செய்யுள்

பெண்ணரசே நல்லகுணம் பேரறிவுள் ளோனெனுமிவ்
வண்ணலுனக் குப்பொருந்த மாம்பதிகாண்—எண்ணுமிவன்
மன்மதனி ரீடையினும் வாளமரி னும்பெரிய
வன்மைகொளு மாசையுள்ள வன்.

இங்ஙனம் எப்பொழுதுங் கலவி செய்ய விருப்பமுற்ற நாயகியின் மனதிற் குற்றமாகத் தோன்றவேண்டுமென வெண்ணங்கொண்டவளு மரசனுக்குக் கோபமுண்டாகக் கூடாதென்று கருதுகின்றவளுமாகிய ஸாமர்த்தியசாலியான பாங்கி கலவிக்கு விரோதமாக வெப்பொழுதும் போருக்குச் செல்லுதலாகிய வரசனது குற்றத்தைக் குணமாக வர்ணித்தாள்.

செய்யுள்.

இவன்சு பலகுணத்தா னின்றயவில் லாதான்
இவனு லெனக்காவ தென்னோ—தவறுகளைப்
போக்கிக் கொளும்பொருட்டே பூரணசா மர்த்தியமாம்
வாக்குகள்கற் றுன்சகியம் மா.

இங்ஙனம் பாங்கிகள் சொல்லியபடி கோபத்தைக் காப்பாற்றுவதற்குச் சக்தியற்றவளா யிருந்தும் அப்பாங்கிகளுக்கு முன்பாகச் செய்த பிரதிக்கினையை அவ்விதம் செய்ய வன்மையற்றவ ளெனப் பாங்கிகள் செய்யுங் கேலிகளை நீக்க விருப்பமுற்றவளுமான நாயகியால் நாயகனது ஸாமர்த்திய வாக்குகளாகிய குணமே குற்றமாகக் கூறப்பட்டிருக்கின்றது. அரசனுக்குக் கோபமுதலியவை யுண்டாகாம லிருக்கும் பொருட்டு வேறொருவரா லறியாமலிருக்கும்படி நிந்தையையுந் துதியையும் விளக்குவதாகிய விசேஷம் வஞ்சப்புகழ்ச்சியைப் பார்க்கினு மிதிலிருப்பதால "பெண்ணரசே நல்ல குணமென்ற" செய்யுளில் துதி நிந்தையில் முடிகின்ற தென்று வைத்து அவ்விரண்டு செய்யுட்களிலும் வஞ்சப்புகழ்ச்சி யெனக் கூறுவது சிதமல்ல. உண்மையி லிவ்விரண் டுதாரணங்களிலும் வஞ்சப்புகழ்ச்சி யிருந்தாலும் வஞ்சப்புகழ்ச்சியின் கலவையில்லாம லிருக்கும்படி லேசவணி யுதாரணத்தை முன் னிலக்கணப்பாட்டிற் காண்பித்தபடியால் லேசவணியும் வஞ்சப்புகழ்ச்சியி லடங்கிவிடுவதல்ல. வெவ்வேறு விஷயமா யிருக்கின்ற வஞ்சப்புகழ்ச்சிக் குதாரணங்களாகிய "வானர நீயார்" "தன முடைய" வென்ற செய்யுட்களில் ஒரு பொருளின் குற்றங் குணங்களால் மற்றொரு பொருளின் குற்றங் குணங்கள் விளங்குவதே யல்லது குற்றத்தைக் குணமாகவே கொள்வதுங் குணத்தைக் குற்றமாகவே கொள்வது மில்லாமையால் வஞ்சப்புகழ்ச்சி லேசவணிக்கு ளடங்கிவிடு மென்று கூறுவதுசிதமல்ல.

செய்யுள்.

திங்கட் களங்கஞ் சிவனார் களமரிமெய்
தங்குந் திகைக்கரிம தம்பெய்கபோ—லங்களிவை
யெப்போது மேகருமை யெய்ந்தனநின் கீர்த்தியினே
தப்பா வெளுத்ததறை யாய்.

இங்ஙனம் திங்கட் களங்க முதலியவைகளை வெண்மையாகச் செய்யாமையாகிய குற்றமே குணமாக முடியாமல் ஒழித்துக் காட்டணி முறையாகத் திங்கள் முதலிய பொருள்களைப் பார்க்கினு மற்றும் பொருள்கண் முழுமையும் அரசனது கீர்த்தியால் வெண்மை யடைந்தன என்ற வேறு குணம் விளங்குவதால் ஒரே விஷயமான இவ்வுதாரணத்தில இலேசவணியின் ஸம்பந்தம் லேசமு மில்லை. சில வஞ்சப்புகழ்ச்சி யுதாரணத்திற் குணத்தைக் குற்றமாகக் கூறுவ திருந்தாலும் அக்குணத்துக்கு வேறு விஷயமும் விளங்குகின்றது. அஃதாவது,

செய்யுள்.

நாவலக முழுதொருங்க நானுமெது மேகொடுக்குங்
காவலனென் றுரைக்கின்றோர் கேருத லார்களுக்கே
பூவலயத் தினிற்புறமும் புறமடவார்க் கேமார்பு
மிவதொரு நாளுமிலை யிலங்குமணி முடிவேந்தே.

இங்ஙனம் வெளியாகவும் ஒழித்துக் காட்டணியின் முறையாகவும் விளங்குகின்ற நிந்தையால் சத்துருக்களை ஸம்ஹரிக்கின்றவன் பிறர் தாரத்தை விரும்பாதவனென்ற குணங்களோடு இரப்போருக்கு எல்லா வபீஷ்டங்களையுங் கொடுக்கின்றவனென்ற குணம் விளங்குகின்றது. "மன்னவனே போரின்வலத்தாற் கருவமுனக் கென்ன" என்பது முதலிய எந்த வுதாரணங்களிற் குணங்குற்றங்களைக் குற்றங் குணமாகச் செய்தல் வஞ்சப்புகழ்ச்சி முறையாக விருக்கின்றதோ அவ்விடங்களில் லேசவஞ்சப்புகழ்ச்சிகளுக்குக் கலவை யிருக்கும். இவ்வாறே வஞ்சப்புகழ்ச்சிக்கும் புனைவிலிப் புகழ்ச்சிகளுங் கலவையை முன் வஞ்சப்புகழ்ச்சியில் வர்ணிக்கப்பட் டிருக்கின்றது.

# எக-வது குறிநிலையணி.

## (முத்திராலங்காரம்.

செய்யுள்

புகழும் பொருளைப் புணர்த்து முறையிற் புலப்படுத்துந்
தகுதிப் பொருளினைக் காட்டல் குறிநிலை தண்ணிளசை
யகமலங் காரங் கவித்துறை யின்கவி யாரு மெனப்
பகர விலக்கியங் காண்பாய் குமாரெட்ட பார்த்திவனே.

எங்ஙனம் வர்ணிக்கவேண்டிய பொருளுக்குக் கூறிய அடை சொற்களா லந்தந்த விருத்தமுதலியவைகளின் பேரும் விளங்குகின்றதோ அங்ஙனங் குறிநிலையணி. இதனை வடநூலார் முத்திராலங்கார மென்பர். இதற்குத் "தண்ணிளசை" என்பதுமுத லுதாரணம். இங்ஙனம் வருணிக்கவேண்டிய பொருளுக்கு உசிதமாகக் கூறப்பட்ட பதத்தினால் தானே யிந்த விருத்தத்தின் பேருங் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறே அந்தந்த நக்ஷத்திரங்களின் பேர்களைக் கூறியிருக்கின்ற நக்ஷத்திரமாலை முதலியவைகளிலு மிவ்வணி யெனக் காண்க. நாடகங்களின்மேல் சொல்லப்போகிற பொருளைச் சூசனை செய்யுமிடத்திலு மிவ்வணியே. இச்செய்யுளின் மூன்றுமடியை, இளசை அகம் அலங்கு ஆரம் கவித்து உறை இன் கவி ஆரும் எனப்பிரித்து - இளசை யகம் - இளசையில், கவித்து - புகழ்மேவி, அலங்கு ஆரம் - அசையும் முத்துவடங்களணிந்த, இன்கவிஆரும்-நல்ல புலவர் பொருந்துவர். எனவும், கவிமேலேற்றுங்கால்-இளசையைப் பார்த்திவனொடு கூட்டிப்பார்த்திப, கவித்துறை இன்கவி அகம் அலங்காரம் ஆரும். எனப்பிரித்து - கவித்துறையாகிய இனிய செய்யுள் அலங்காரத்தைப் பெறும். எனப் பொருள் கொள்க.

## ௭௪-வது இரத்தினமாலையணி.

(இரத்நாவளியலங்காரம்.)

செய்யுள்.

புகழும் பொருளை முறைவழு வாது புகலுதற்குப்
பகருறு நாம மிரத்தின மாலைநற் பார்த்திபநான்
முகன்றிரு நாயகன் சங்கர னீயென வேமொழியத்
தகுவ திலக்கியஞ் செந்தமி ழோங்கிள சைத்தலனே.

வர்ணிக்கவேண்டிய பொருள்களை யுலகத்திற் பிரசித்தமாக விருக்கின்ற முறையை வழுவாமற் கூறுவது இரத்தினமாலையணி. இதனை வடநூலார் இரத்திநாவளியலங்காரமென்பர். இதற்கு "நற்பார்த்திபநான்முக"னென்பது முத லுதாரணம். இங்ஙனம் பிரமன் விஷ்ணு உருத்திரன் என்றுலகத்திற் பிரசித்தமான முறையைத் தவறாமற் கூறியிருக்கின்றது.

செய்யுள்.

மார துவசத் தினனுளதாயக் கூர்மஞ் சார்ந்து வராகமதாய்ச்
சாரு மருந்தா ணுதிப்பதுமாய்த் தாங்கு மருங்குறு வாமனமா
யாரும் பரசு ராமமுமாய் வனவா சங்கொட லம்பொருந்திப்
பாரக் கலையேந் திப்பரிமு கங்கொண் டிடும்பெண் பருமுலையே.

இங்ஙனம் மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், இராகவன், பலராமன், கிருஷ்ணன், கல்கி யென்றுலகத்திற் பிரசித்தமான மாதவனது தசாவதாரத்தையும் முறைவழுவாமற் கூறியிருக்கின்றது. மாரதுவசத்துளது - மச்சம், அருந்தாணுதிப்பது - சிங்கம், வனவாசங்கொள்தலம் பொருந்தினவன் - ஸ்ரீராமன், அலம் பொருந்தி-பலராமன், கலையேந்தி (மலைதாங்கி) கண்ணன், பரிமுகம் - கல்கியெனக் கொள்க. இனி முலைமேலேற்றுமிடத்து, பெண்பருமுலை-இவளது பரியமுலைகள், மாரது

வசத்துளதாய்-மன்மதன் கொடியாகிய மச்சத்தைத் தொய்யிலெழுதப்பெற்றதாய், அன்றி (மார்பினிடத்ததாய்) கூர் மஞ்சு ஆர்ந்து - மிகுந்த அணிகளைப்பெற்று, வாராகமதாய் - கச்சையுடைத்தாய், சாரும் அருந்து ஊண் உதிப்பதுமாய் - நிலைத்துண்ணு மமுதம் பிறக்குமிடமாய், தாங்கு மருங்கு உறுவ்ாமனமாய் - இடையாற் றாங்கப்பெற்றுக் குறுகியதாய், யாரும் பரசு ராமமுமாய் - விடரால் விரும்பதக்க அழகுள்ளதாய், வனவாசங்கொள்தலம் பொருந்தி - நீரொடுகலந்த மணமுள்ள பூச்சுகளை யணியப்பெற்ற மார்பிடத்தைப் பொருந்தி, பாரக்கலையேந்தி-உயர்ந்த வஸ்திரங்களைத்தாங்கி, (பருத்த மலைகளையேந்தியதையொத்ததாய்) பரிமுகங்கொண்டிடும் - மேனோகிய முகமுடையதாகும் எனகொள்க. வார் - வா் எனக்குறிகிற்றென்க.

செய்யுள்

அந்தமகள் விழியினுயர் வம்புயகுச
சிட்டுதவிற றரிய கொங்கை
வந்தபெரு வீக்கமிப மத்தகத்தைப
பூர்வபக்க மாசசெய் திட்ட
துந்துபுரு வங்களனங் கன்சிலையின்
விளையாட்டா யுள்ள வெல்லாந்
தந்தனுவ தித்தமுகத் தொளிமதியைச
செய்ததுநிந் தனையுந் தானே.

இங்ஙனம் முதலி லிவ்விடத்திற் பிரஸங்க மென்று பத்திரிகை கொடுக்கின்றது. பின்பு அவ்விடத்தில் பூர்வபக்ஷம் செய்கின்றது. அதனை யநுவதிக்கின்றது. பின்பு அதைத் தூஷித்து ஸமாதானஞ் சொல்கிறது. என்ற பிரஸங்கஞ் செய்கின்ற வித்வான்களின் முறையைக் கூறியிருக்கின்றது. சில இடத்தி லுலகத்திற் பிரசித்தமான முறையைத் தவறிக் கூறினாலு மிவ்வணியேயாம்.

செய்யுள்.

புரவலன்றன் பிரதாபம் பகைவ ரந்தப்
புரமடவார் தமதிதயத் தனலே யாக
விருவிழிக ளிடத்துதக மாக மூச்சி
னிடம்வாயு வாகமெய்யி னிடம்பூ வாக
விரிமனதி னிடத்தினிலா காய மாக
வேயொருங்குற் றிருந்திடவு மிந்த வாற்றல்
வருபஞ்ச பூதவடி வாகத் தான
வரும்விளங்கி யிடுமவரெந்த நாளுந் தானே.

இங்ஙனம் பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாயம் என்றுலகத்திற் பிரசித்தமான முறையுள்ள இவ்வைந் தினையும் முறைமாற்றிக் கூறி யிருக்கினு மிவ்வணியே. இவ்வாறே வருணிப்பப் பொருளில ஸம்பந்தப்படாம லிருக்கின்ற வுலகத்திற் பிரசித்தமான சில பொருள்கள் சிலேஷையாக விளங்கு மிடத்திலும் பிரசித்தமான முறை யுள்ள நவரத்தின முதலிய பொருள்களை யம்முறை தவ றிக் கூறு மிடத்திலு மிவ்வணியே யாம். பூ - பூமி - பொ றுமைபற்றிக் கூறியதென்றும், ஆகாயம் - சூனியம் - களிப் பின்றி யிருந்தனர் எனவும் பொருள்கொள்க.

---

## எரு - வது பிறிதின்குணம்பெறலணி.

(தத்குணாலங்காரம்.)

செய்யுள்

தன்குணம் நீக்குபு மற்றோர் பொருளினைச் சார்குணத்தை
நன்குற வின்பேர் பிறிதின் குணம்பெறல் நாரிக்கைய
பன்கவின் பாவிகை யான்மூக் கணிமுத்த மும்பவள
மென்கனி யுற்றதென் றோத விலக்கிய மெட்டமனே.

எங்ஙனம் தன்னிடத்தி லிருக்கும் குணத்தைவிட்டு மற்றோர் பொருளின் குணத்தைக் கொள்ளுத லிருக்கின்

றதோ அங்ஙனம் பிறிதின்குணம் பெறலணி. இதை வடநூலார் தத்குணாலங்கார மென்பர். இதற்கு "நாசிக்கைய பன்கவின்பாலிகையா" லென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் மூக்கில் விளங்குகின்ற முத்து தனது வெண்மையாகிய குணத்தைத் தள்ளி யதரத்தின் செவ்விய குணத்தைக் கொண்டது. பாலிகை - உ௬௫.

செய்யுள்.

வெற்றியனே நின்பகைஞர் மின்னா ருடுத்துதற்கு
நற்றளிர்கொய் யத்தொடங்கி நன்னகத்திற்—பெற்றவொளி
பாய்ந்து வெளுத்தவந்த பத்திரத்தைக் கொய்திலரே
காய்ந்தவிலை தானெனவே கண்டு.

இங்ஙனம் தளிர்கள் தன்னிடத்தி லிருக்குஞ் செவ்விய குணத்தை விட்டுத் தங்களைக் கொய்யத் தொடங்கிய பகைஞர் மின்னார்களின் நககாந்தியால் வெண்மை நிறங் கொண்டன.

## ௭௬ - வது தொல்லுருப்பெறலணி.

(பூர்வரூபாலங்காரம்.)

செய்யுள்.

ஒன்றுமற் றொன்றின் குணங்கொண்டு மீட்டுமுன் னுள்ளகுணம்
நன்றுற லேதொல் லுருப்பெறன் மன்னவ நாதன்களம்
நின்ற வொளியிற் கருமைகொள் சேடனுன் னீள்புகழ்சேர்ந்
தின்று வெளுத்தன னென்ன லுதாரண மெட்டமனே.

ஓர் பொருள் தன் குணத்தை விட்டு மற்றொன்றின் குணத்தைக் கொண்டு பின்னு மேதேனும் ஒரு ஹேதுவால் தன்குணத்தைக் கொள்வது தொல்லுருப் பெறலணி. இதை வடநூலார் பூர்வரூபாலங்கார மென்பர். இதற்கு "மன்னவநாதன்கள" மென்பதுமுத லுதாரணம்.

இங்ஙனம் வெண்ணிறமுள்ள சேஷன் சிவபெருமானது கண்டத்தின் ஸம்பந்தத்தாற் றன்னிறம் விட்டுக் கருநிறங்கொண்டு பின்னு மரசனது புகழ் வியாபித்தலால் தனது முன்னிறங் கொண்டான்.

செய்யுள்.

அருணன் மெய்யொளி யானிறம் வேறுகொளலவி
யிரத வெம்பரி மாவத கமலையி லிசைதிக
கிரியி னங்குர நிறமுள பசுமணிக கிரணம்
பரவி யெங்கனும் பெருகலாற் றன்னிறம் படைத்த.

இங்ஙனம் பச்சைநிறமுள்ள சூரிய னிரதப்பரிகள் அருணனது செவ்விய நிறத்தாற் செம்மையடைந்து பின்னும் மாவதக பருவதத்தி லிருக்கின்ற மரகதப் பச்சைகளின் நிறங்களால் தமது முன்னிறத்தைக் கொண்டன. சிலர் இதனையே பிறிதின்குணம் பெறலணியென்ப. திகிரி - மூங்கில். இது திககிரியென விரிந்தது. அங்குரம் - முளை.

செய்யுள்.

ஒருபொருள் வேற்றுமை யாயும் பழமைய தேயுறப்ப
கருவது மவ்வணி தீபத்தைப பாற்றியுங் காஞ்சியுறு
பெருமணி யாலதி கப்பிர காசமும் பெற்றதென
வருவதி லக்கிய மெட்ட புரந்து மகபதியே.

ஒரு பொருள் விகாரத்தை யடைந்திருந்தும் முந்திய முறையை விடாமலிருப்பது மவ்வணி. இதற்குத் "தீபத்தைப்பாற்றியு" மென்பதுமுதலுதாரணம். இங்ஙனம் தீபம் விகாரத்தை யடைந்தும் மேகலாபரணத்தில் விளங்கிய இரத்தினங்களின் பிரகாசித்தலாகிற வத்திபத்தின் முறை விளங்குகின்றது.

செய்யுள்.

மன்னவநின் வணங்கலரோர் கோடைந்துங்
கடிகொள்வாய் மன்னை வாற்சூழ்

வென்னும்வெளி யினின்மதங்கொள் கயமுளதாற்
கஞ்சுகியுள் ளிடத்தின் மேவித்
துன்னலினம் பெருமையா மாடவண்மே
வுஞ்சயனந் துலங்க லானு
மின்னமுமம் விளங்கியது போல்விளங்கி
யிருப்பதையா மினிதாய்ந் தோமே.

அரசன் ஆண்டு கொண்டிருக்குங்காலையி லிருந்த கட்டி முதலியவைகளி னிருப்புச் சூனியமாக விருக்கும் இவ்வேளையிலு மிருக்கின்றது. இச்செய்யுளிற் பகைவர் நாடு, காடு கொண்ட காலத்தும் முன்னைய நிலையினிருந்தது; என்னப்பொருள் கொள்ளவேண்டுமிடத்து, கட்டி-வாள்வீரன், ஓர் மிருகம் எனவும், வெளியினின்மதங்கொள்கயமுளதால் - என்பதற்கு தலைவாயலில் மத கஜங்களிருந்தன. எ-ம் காடு கொண்டகாலத்து காட்டானைகள் தங்கின. எ-ம கஞ்சுகி - கஞ்சுகி மாக்கள், பாம்பு, எ-ம், பெருமையாம் ஆடவன் எ-ம் எருமையாம் மாடு அவண், எ-ம் பிரித்துப பொருள்கொள்க.

---

## எஎ-வது பிறிதின்குணப்பேறின்மையணி.

(அதத்குணாலங்காரம்.)

செய்யுள்.

தன்னுடன் சேர்பொரு ளின்குணம் பெற்றில தாயிருக்கப்
பன்னுதற் பேர்பிறி தின்குணப் பேறின்மை பார்த்திவநீ
மன்னுமி ராகியு மாகா யிராகி யெனுமென்மனம்
இன்ன மிருந்துமென் றேத லிலக்கிய மெட்டமனே.

ஓர் பொருள் மற்றோர் பொருளுடன் ஸம்பந்தபடடிருந்தும் அதின் குணத்தைக் கொள்ளாமலிருப்பது பிறிதின் குணப்பேறின்மையணி. இதனை வடநூலார் அதத்குணாலங்கார மென்பர். இதற்குப் "பார்த்திவநீ" யென்பது

முத லுதாரணம். இங்ஙனம் பார்த்திவன் இராகமுள்ள நாயகியின் மனதின் வஸித்தலாகிய ஸம்பந்தங் கொண்டிருந்தும் அந்த இராகமாகிய குணத்தைக் கொள்ளாம லிருக்கின்றான். இராகி - செகப்புடையது.

செய்யுள்.

நரசிம்ம மன்னவநின் கீர்த்திமத
நீர்ப்பெருக்கி னாலே மிககாங்
கரியதிகைக் கரிகளின்கன் னங்களிலும்
விளையாடுங் கருதார் நாரி
யரதுவிழி மலரிடையக் சனந்துடைக்கு
மிவ்விதமுற்றாலுந் திங்கட்
கிரணகுழாங் களிறுமொ னுவதாக
நனிவிளங்கு கின்ற மாதோ.

ஆனால் ஒன்றின் குணத்தினால் மற்றொரிடத்திற் குணமுண்டாவதும் குணமுண்டாகாம லிருப்பதுமாகிய அகமலர்ச்சி யிகழ்ச்சியணிகளைப்பார்க்கினும் பிறிதின் குணம்பெறல் பிறிதின்குணப்பேறின்மை யென்ற வணிகளுக்கு என்ன பிரிவென்றாலோ அகமலர்ச்சியிகழ்ச்சியணிகளின் இலக்கணங்களிலிருக்கின்ற குணமென்ற சொல் குற்றத்திற்கு எதிரிடையாக விருக்கின்றது. அவ்வணிகளில் ஒன்றின் குணத்தினால் மற்றொன்றுக்குக் குணத்தினுற்பத்தியும் உற்பத்தி யில்லாமையுமாக விருக்கின்றதேயல்லாமல் ஓர் பொருளிலிருக்கின்ற குணமே மற்றொரிடத்தி லுண்டாகின்றதாகவில்லை. நல்ல ஆசானது உபதேசத்தால் ஸாதுவான மாணாக்கர்களுக்கும் அஸாதுவான மாணாக்கர்களுக்கும் ஞானம் உற்பத்தியும் உற்பத்தி யில்லாமையு மிருப்பதுபோல் ஒன்றின் குணத்தினால் உண்டெண்ணப்படுகிற வேறு நற்குணத்தின் பெறுதலும் பெறாமையுமாக விருக்கின்றது. பிறிதினகுணம் பெறல் பிறிதின்குணப்பேறின்மை யென்ற வணிகளின் லக்ஷ

ணங்களிலிருக்கின்ற குணமென்ற சொல் ரூபரஸகந்தம் முதலிய குணங்களைச் சொல்லுகின்றது. அவற்றில் மற்றொன்றின் குணத்தைக் கொள்ளுதலுங் கொள்ளாமை யும் வஸ்திரங்களில் சாயமேறுவதுபோல் மற்றொன்றின் குணத்தால் தானே, தானும் அக்குணத்தைக் கொள்ளுத லுங் கொள்ளுதலில்லாமையுமாக விருக்கின்றது. அவ் வாறே உதாரணங்களெல்லாங் காண்பிக்கப்பட்டன. "குறைவருகாரணமேவியுங்காரியம் கொண்டிலதை அறை வது காரணவாராய்ச்சி" யென்ற இலக்கணப்படி இங்ஙன மிருப்பமையால் இகழ்ச்சியணியையும் பிறிதின்குணப்பே றின்மையணியையும் காரணவாராய்ச்சி யணியி லடக்கி யிருக்கின்றதாகவே கூறலாம். அவ்வாறிருக்கினும் அக மலர்ச்சி பிறிதின் குணம்பெறல் என்ற அணிகளுக்கு எதிரிடையாக அக்குணங்களைக் கொள்ளாமையாகிய சிற ப்பு இருப்பதைப்பற்றி இவைகள் வேறணிகளாகவே கூ றப்பட்டிருக்கின்றன.

---

## எஅ-வது தன்குணமிகையணி.

(அநுகுணாலங்காரம்.)

செய்யுள்.

வேறு பொருளின் புணர்ப்பா லியற்குண மேன்மையுறல்
கூறுவ தேதன் குணமிகை யாகுங் குவளைமலர்
மீறுங் கடைக்கணின் பார்வையி னுன்மிக வேகருமை
யேறுமென் றேத லிலகமியந் தென்னிள சைக்கிறையே.

எங்ஙனம் ஒரு பொருளின் சேர்க்கையால் மற்றொரு பொருளின் இயல்பான குணம் அதிகப்படுகின்றதோ அங்ஙனம் தன்குணமிகையணி. இதை வடநூலார் அநு குணாலங்கார மென்பர். இதற்கு "குவளைமலர்" என்ப

துமுத லுதாரணம். இங்ஙனம் இயல்பில் கறுப்பாகவிருக்கின்ற குவளைமலருக்கு கடைக்கண்ணின் பார்வையாலதிகக் கறுப்பு உண்டாயிற்று.

செய்யுள்.

வானரங் கள்ளினை மாந்தியே மதர்ப்
பானது கொளுஞ்சம யத்திற் றேள்கொட்ட
ஈனமாம் பேயுமே பிடித்த தென்னிலம்
மானவா னரக்குறும் புரைக்கு மாறதோ.

இங்ஙனம் இயல்பில் சஞ்சல குணமுள்ள வானரத்துக்கு கள் முதலியவைகளின் ஸம்பந்தத்தால் அதிக சஞ்சலகுண முண்டாயிற்று.

---

## ௭௯-வது மறைவணி.

(மீலிதாலங்காரம்.)

செய்யுள்.

இருபொருளுக்குப் பொதுவா கியகுணத் திற்பிரிவை
தெரிவுற வின்மை மறைவணி யாமியல் பிற்செவப்பா
வருநின் பதத்தி லலத்தகத் தின்செம்மை யுந்தெரியா
தருமாதென் றேத விலக்கியந் தென்னிள சைக்கரமே.

எங்ஙனம் இருபொருளுக்கு குணத்தின் ஒப்புமையால் பிரிவை தெரியாம லிருக்கின்றதோ அங்ஙனம் மறைவணி. இதனை வடநூலார் மீலிதாலங்கார மென்பர். இதற்கு "இயல்பில் செவப்பா வருநின்பதத்தி" லென்பது முத லுதாரணம். இங்ஙனம் இயல்பில் செவப்பாயிருக்கின்ற பாதத்தில் இடப்பட்ட செம்பஞ்சுக் குழம்பின் பிரிவு ஒற்றுமையால் தெரியாமல் போய்விட்டது.

செய்யுள்.

மல்லிகைத் தொடையினை வனைந் துறுப்பெலாம்
மெல்லியற் சந்தனம் பூசி வெண்ணிற

நல்லபட் டிடைகொளுந் தூர்த்தை நாரியர்
அல்லுறு நிலவினி லறிப டார்களே.

இங்ஙனம் நிலவுகரும் மல்லிகை முதலியவைகளைத் தரித்தமையால் வெண்மையாக விருக்கின்ற தூர்த்தை நாரியர்களுக்கும் வெண்மைக் குணத்தின் ஒற்றுமையாற் பிரிவுதோன்றவில்லை.

---

## அ0-வது பொதுமையணி.

(ஸாமானியாலங்காரம்.)

செய்யுள்.

இருபொரு ளுக்கொப் புமையால் விசேட மிராதுரைக்க
வருதல் பொதுமை யணியாகும் பங்கய வாவியுற்ற
அரிவையர் தம்முகம் விழிக்கப் படவில்லை யன்பவெனத்
தெரிவ துதாரணந் தென்னிள சைப்பதித் திண்புயனே.

எங்ஙனம் ஒப்புமையால் இருபொருளுக்குச் சிறப்புத் தோன்றும விருககின்றதோ அங்ஙனம் பொதுமையணி. இதனை வடநூலார் ஸாமானியாலங்காரமென்பர். இதற்குப் "பங்கயவாவியுற்ற" என்பதுமுத லுதாரணம். இங்ஙனம் பங்கயவாவியை யணுகிய மங்கையர் முகத்துக் குச சிறப்புத் தோன்றவில்லை.

செய்யுள்.

அங்கத னிரத்தினத் தூண கங்களிற்
றங்கு பல்பிரதி விம்பங்கள் சூழ்ந்தத
சங்கொளும வத்திரத் தானை யேசபை
யங்கண்மத் தியிலறிந் தானு மன்றரோ.

இங்ஙனம் ரத்தினத் தூண்களில் விளங்குகின்ற பிரதி விம்பங்கள் சூழ்ந்த இலங்கை வேந்தனுக்குச் சிறப்புத்

தோன்றுமலிருக்கின்றது. மறைவணியில் இருபொருள்களுக்குப் பிரிவான ரூபத்தின் விளக்கமேயில்லை என்றும் இப்பொதுமையணியில் இருபொருள்களுக்கு வெவ்வேறான ரூபத்தின் தோற்றமிருந்தும் சிறப்புமட்டிலும் தோன்றவில்லை என்றும் பிரிவு காண்க. மறைவணியுதாரணத்தில் இயல்பான காலின் செவப்புக்குஞ் செம்பஞ்சின் ஸம்பந்தத்தால் கிடைத்த செவப்புக்கும் பொருள் பிரிவு தோன்றுமலும் பொதுமையணி யுதாரணங்களில் பொருள் பிரிவு தெரிந்து இஃது முகம், இஃது தாமரை, இஃது இலங்கை வேந்தன் விம்பம், இஃது அவனது பிரதிவிம்பம், என்ற சிறப்புத் தோன்றுமலும் இருப்பதினால் ஸ்வரூபத்தின் பிரிவே மறைந்திருப்பதைப் பற்றி மறைவணி என்றும், இருபொருள்களுக்குப் பொதுவாகத் தனித்தனி விளக்கமிருந்தும் ஒப்புமையால் பிரிவு தோன்றுமல் விளங்குவதால் பொதுமையணிஎன்றும், இவைகள் காரணப்பேர் பெற்றன. இங்ஙனம் சிலர் லக்ஷணத்தின் ஒற்றுமையுள்ள இருபொருள்களுக்குள் பலந்தங்கிய ஒரு பொருளில் மற்றொரு பொருள் ஸ்வரூபந்தெரியாமல் மறைந்திருப்பது மறைவணி என்றும் ஸ்வரூபத்தின் விளக்க மிருந்தாலுங் குணத்தின் ஒற்றுமையால் பிரிவின் மறைவு இருக்குமிடம் பொதுமையணி என்றும் தீர்மானம் கொண்டு,

செய்யுள்.

கடைநயனத் துடிப்புளதாக் கனிமொழிகள் தளர்ந் துணைக்கும்
தடையறுவக் கிரமுறுவ தாநடைமிக் கெக்க ளிப்புப்
படைமெலிய தாமுகம்பொற் பாவுறுமிவ் வித மன்றி
தொடைமடவா ரிடமிருக்கு மதர்ப்பறியத் தோன்றிலதால்.

இங்ஙனம் கடைநயனத் துடிப்பு முதலியவைகள் மங்கையர்களின் தேகத்தில் இயல்பான தருமமாகையால் அக்குணங்களுள்ள மதஉல்லாஸம் கடைநயனத் துடிப்பு

முதலியவைகளில் ஸ்வரூபவிளக்க மில்லாமல் மறைந்து விட்டது. ஆகையால் மறைவணி என்றும் "மல்லிகைத் தொடையினை வனைந்துறுப்பெலா" மென்ற செய்யுளில் பொதுமையணி என்றும் கூறுகின்றார்கள். அவர்கள் மதத்தில் "பங்கயவாவியுற்ற அரிவையர் தம்முகம் காண ப்படவில்லை" யென்ற வுதாரணத்தில் பிரிவின் தோற்ற மிருந்தாலும் பகுத்தறியக்கூடிய ஹேதுவில்லாமையால் வேறணி யென்றாவது பொதுமையணியின் பிரிவென்றா வது கூறவேண்டும். சொரூபம் மறையாமையால் மிலிதமு மல்ல. பேதம் விளங்குவதால் சாமானியமுமல்ல. முந்திய சந்திராலோக மதத்தில் "கடைநயன"மென்ற செய்யுளில் ஸ்வரூபத்தின் மறைவிருப்பதாலும் அஃதிராமல் சாதிரு சியத்தினால் பேதம் கிரகிக்காமலிருப்பதே மறைவணி யென்று கூறியிருப்பதாலுமிஃது வேறணி யென்றாவது மறைவணியின் பிரிவென்றாவது கூறவேண்டும்.

---

## அக-வது மறையாமையணி.

(உன்மீலிதாலங்காரம்.)

## அஉ-வது சிறப்பணி.

(விசேஷகாலங்காரம்.)

செய்யுள்.

சிலகா ரணத்திற் பிரிவை விசேடத்தைத் தேரவுறி
தலின மழுமறை யாமை சிறப்பெனச் சாற்றிரண்டாம்
நலன்சீர் முழுகிம யங்குளி ரான்மதி நண்ணின்முகம்
சலசந் தெரியு மெனலெட்ட மன்ன வுதாரணமே.

மறைவணியிலுள்ளதுபோல் வேற்றுமை தோற்றாதிருக்கு மிடத்து ஏதோவொரு காரணத்தால் அவ்வேற்றுமைப் பு லப்படுவது மறைவணிக்கெதிர்மறையாயுள்ள மறையாமை

யணியென்றும் பொதுமையணியி லிருப்பதுபோல் சிறப்புத் தோன்றுதிருக்குமிடத்தில் ஏதோ வொரு காரணத்தால்சிறப்புத்தோன்றுவது பொதுமையணிக் கெதிர்மறையாயுள்ள சிறப்பணியென்றுங் கூறுவர். இவற்றை வடநூலார் உன்மீலிதாலங்கார மென்றும் விசேஷகாலங்கார மென்றும் நிரலே கூறுகின்றார்கள். இவைகளுக்குள் மறையாமையணிக்கு "நலன்சீர்முழுகிமயம் குளிரா" லென்பதும் சிறப்பணிக்கு "மதிநண்ணில் முகம் சலசமறிவுறு" மென்பதும் உதாரணங்கள். அவற்றுள் நலஞ்சீர்முழுகிமயம் குளிராலென்னு மிடத்தில் புகழின் வெண்மையால் ஸ்வரூபப் பிரிவே தோன்றுதிருக்கின்ற இமயம் குளிரொன்னுங் காரணத்தாலும் மதிநண்ணிலமுகம் சலசமறிவுறு மென்னுமிடத்தில் ஸ்வரூபப் பிரிவுள்ள கமலத்துக்கும் முகத்துக்கும் விளங்குகின்ற சிறப்பு மதியினுதயமாகிய காரணத்தாலும் அறியப்படுகின்றது. பிறிதின்குணம் பெறலணியின் முறையே வேற்றுமை தோன்றுதிருக்குமிடத்தொருகாரணத்தால் வேற்றுமை தோற்றினு மிவ்வணியே. அதற்குதாரணம்.

செய்யுள்.

நடஞ்செய்பர னகைக்குழுவ னயநினது புகழான்பா
ரிடமனைத்தும் வெளுத்ததஞற் றவளமிசை திருநெடுமால்
படருமுந்திச் செங்கமலப் பரிமளத்தைக் கொண்டிலனேற்
றிடமருவு மவனைமுயற் சியினறியார் விண்ணோரே.

இங்ஙனம் நரசிம்ம அரசனின் கீர்த்தி வெண்மையால் வெளுத்த திருமாலை யறிவதற்கு உந்திக்கமலத்தின் பரிமளம் ஹேதுவாக விருக்கின்றது. இஃது மறையாமையணிக் குதாரணம்.

செய்யுள்.

வாயசமு மேகறுப்பா மாங்குயிலு மேகறுப்பாம்
ஆயவைகட் குப்பிரிவை யாராயி—ுயகவ

சந்தமுறில வாயசம் வாயசந் தானு
கந்த குயில்குயிலே காண்.

இங்ஙனம் பொருட்பிரிவிருந்தும் கருமையாகிற குணவொற்றுமையால் சிறப்பின் தோற்றமில்லாம லிருக்கும் காக்கை குயில்களின் சிறப்பை வஸந்தகாலமாகிய காரணம் விளங்கச்செய்கிறது. இஃது சிறப்பணிக் குதாரணம்.

செய்யுள்.

வார ணுரியின் வாசிய ருக்கர
ணுரி யற்பொது வேனுந் தனஞ்சயன்
தாரு றுத்தனு வின்வடுத் தான்பழஞ்
சீர துள்ள சிவனைத் தெரிக்குமே.

இங்ஙனம் சிவபெருமானுக்கும் அவர் ஸாரூப்பிய முக்திபெற்றவர்களுக்கு மிருக்கின்ற சிறப்பை அர்ச்சுனனது காண்டீவத்தால் உண்டானவடு விளக்குகின்றது.

---

## அ௯-வது இறையணி.

(உத்தராலங்காரம்.)

செய்யுள்.

கருததெரின் றினைமறை வாயுட்கொ ளும்விடை காட்டலிறை
திருத்திகழ் வேதசி வல்லியெ வண்வதி யும்மவனே
பெருத்தவிவ் வாற்றை யெளிதாக் கடக்கப் பெறுவைநடை
யிருத்திய வென்ன விலக்கிய மெட்டம வேற்கையனே.

எங்ஙனம் ஓர் கருத்தை உட்கொண்ட விடை யிருக்கின்றதோ அங்ஙனம் இறையணி. இதனை வடநூலார் உத்தராலங்காரமென்பர். இதற்கு "வேதசிவல்லி" யென்பது முத லுதாரணம். இஃது நதியைக் கடப்பதற்கு வழியைக் கேட்கின்றவனைக் குறித்து அவனிடம் மையல் கொண்ட

மங்கையின் உத்தரம். இஃது வேதசிக்கொண்டிருக்கின்ற பூங்கொடி வீட்டில் ஏகாந்தமாக விருக்கலாமென்ற கருத்தை யுட்கொண்டிருக்கிறது. வேதசி-ஙிர்நொச்சி.

செய்யுள்.

வழிக்கொண் மன்ன சிலைமய மீருமிவ்
வழிச்சிற் றூரிலொ ருவரு மில்லையால்
கழிப்ப யோதர மேன்மையைக் கண்டுதான்
இழுகக வின்றி யிருபபை யெனிவிராய்

இஃது படுகைகை முதலிய விரும்புகின்ற ஒரு வழிப்போக்கனைக்குறித்து மங்கை சொல்லிய வசனம். இதில் பயோதரபத சிலேஷையினால் கலவி செய்ய விரும்புவாயாகில் இவ்விடத்திலிரு. மூடஜனங்களிருக்கின்ற இக்கிராமத்தில் நமது செய்கையை யொருவனு மறிந்துகொள்ள மாட்டானென்ற கருத்து அடங்கியிருக்கின்றது. இவ்விரண்டுதாரணங்களிலும் விடையினால் வினவை யூகிக்க வேண்டியது. வினவிடையிரண்டும், செய்யுளில் சொல்லால விளங்குவதற்குதாரணம் எவ்வாறெனில், பயோதரம்-மழை, கொங்கை.

செய்யுள்.

தலைவிசுக மாசீவித் தன்மருவு கின்றுண
றுலைவிலச்சு கத்தைவினு வுற்றேன்—நிலையுயிரே
குற்றுளென் றேனேய தைப்பினுஞ்சொல் வாய்மூச்சுப்
பற்றையிலெவ் வாறிறப்பென் பன்.

இஃது நாயகியைக் குறித்துப் பாங்கியிடம் நாயகன் வினவ அப்பாங்கியின் விடை. இங்ஙனம் நாயகனது பிரிவாற்றாமையால் நாயகி மிக்க சிரமத்தை யடைகின்றாள் என்ற கருத்து விளங்குகின்றது.

செய்யுள்.

வினவுத லுக்கும் விடைக்கு மபேதம் விளங்குத்தரம்
பனுவது சித்திர மாருடை யாரொன் பதுமிளசை
யினமுறு வேந்தர் மருவார்க் கிடுவ தெதுமறவா
துனுத லெதுவெனிற் செங்கோ லெனலு முதாரணமே.

வினவுதலுக்கும் விடைக்கும் அபேதமான உத்தரமி ருப்பது சித்திரமென்றார்கள் வடநூலார். இதற்கு "ஆருடையார்" என்பதுமுதவுதாரணம். இங்ஙன மாருடையார் என்றதொடரில் ஆர் உடையார் என்ற வினாவிற்கு ஆர்-நிறம்பிய, உடையார், பொருளுடையார், என்பது விடையெனவும், பின்னருள்ள விரண்டு வினாக்களுக்கு விடையான செங்கோல் என்பதற்கு பகைவரையடக்கும் செந்நிறத்த அம்பு எனவும், செங்கோல் (அரசின் முறை) எனவுங் கொள்க.

---

## அசு-வது நுட்பவணி.

(ஸூக்ஷ்மாலங்காரம்.)

செய்யுள்.

பிறன்கருத் தோர்ந்து கருத்தோடு கூடப் பெறுசெய்கையா
லுறுவிடை யீவது நுட்ப மவள்கண் ணுறுமென்முனஞ்
செறிவுறு கூந்தலிற் சூடா மணிமறை செய்வளெனப்
பெறுவ துதாரணந் தென்னிள சைக்குப் பெருமன்னனே

ஒருவனுடைய கருத்தைத் தெரிந்து மற்றொருவன் அக்கருத்துக்கு அநுகூலமான செய்கையைச் செய்வது நுட்பவணி. இதை வடநூலார் ஸூக்ஷ்மாலங்காரமென் பர். இதற்கு "அவள் கண்ணுறுமென்முனம்" என்பதுமுத வுதாரணம். இங்ஙனம் நாம் கூடத்தக்ககாலம் எப்பொழு தென்று தன்னை விரும்பி நோக்குகின்ற நாயகனது கருத் தைத் தெரிந்த நாயகி யிரவி அஸ்தமனத்தை யடைந்த தின்பிறகு என்ற அபிப்பிராயத்தை யுட்கொண்டு கூந்த லில் சூடாமணியை மறைத்தாள்.

செய்யுள்.

சங்கேத காலமதனையறிய வெண்விடனை
யங்கே தெரிந்தபின்னு ளம்பகத்தால்—பொங்குறச்செ
யுங்கருத்தோ டுங்கூட வுற்றுவினீள் யாடுவதோர்
பங்கயத்தை யேகுவித்தாள் பார்.

இங்ஙனம் கூடத்தக்க காலத்தைத் தெரியவிரும்புகி ன்ற நாயகனுக்கு நாயகி யிரவிலென்று தெரிவிக்கக் கையி லுள்ள தாமரையைக் குவித்தாள்.

---

## அ௬-வது கரவுவெளிப்படுப்பணி.

(பிஹிதாலங்காரம்.)

செய்யுள்.

ஒருவன் மறைசெய்கை யோர்ந்து கருத்தோ டுதொழிலால்
விரவு மதைவெளி யாக்கல கரவுவெ ளிப்படுப்பாம்
உரியன் மனைக்கு வரவும் மனைவி யுறவிரித்தாள்
பரவணை யென்ப துதாரண மெட்டம பாண்டியனே.

ஒருவனுடைய மறைவான செய்கையைத் தெரிந்து அதைத் தானறிந்து கொண்டதாகத் தொழிலால காண் பிப்பது கரவு வெளிப்படுப்பணி. இதனை வடநூலார் பிஹிதாலங்கார மென்பர். இதற்கு "உரியன் மனைக்கு வரவு" மென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் இரவில் மற் றொரு மாதுடன் கலவி செய்ததினால் நிரம்பச் சிரமத்தை யடைந்திருக்கிறா னென்பதைப் படுக்கை விரிக்கலாகிய தொழிலால் நாயகி காண்பித்தாள்.

செய்யுள்.

முகத்திடைப் பெருகும் வியர்வையின் றுளிசச
முகமதாற் கரைந்தகுங் குமமே
மிகக்கள மதனி லிருப்பது நோக்கி மின்னனே
ரிடைகொளோர் பாங்கி
நகத்தன மாதின் ஆண்மையின் போகம்
நன்குறத் துலககுவ ளாகித்
திகழ்சசியா லவள்கைத் தலத்துவா ரருக்கொள்
சித்திர மதைக்கீட் டினளே.

இங்ஙனம் வியர்வையால் அநுமிக்கப்பட்ட விபரீதப் புணர்ச்சியை ஆண்பாலுக்குரித்தாயிருக்கின்ற கத்தியை நாயகியின் கையிலெழுதிப் பாங்கி விளக்கினள்.

## அ௬-வது வஞ்சநவிற்சியணி.

(வியாஜோக்தியலங்காரம்.)

செய்யுள்.

மற்றொரு வேது வதனை யுரைத்துண் மைமையமறைத்தற்
குற்றிடு பேரது வஞ்ச நவிற்சி யுயிர்ச்சகியே
பொற்றளிர்க் காமலர்ப் பூந்தா தினுலென் புரம்புழுதி
பற்றுற்ற தென்ப திலக்கிய மெட்டம பாண்டியனே.

எங்ஙனம் மற்றொரு ஹேதுவைக்கூறி யுண்மை மறைக்கப்படுகின்றதோ அங்ஙனம் வஞ்சநவிற்சியணி. இதனை வடநூலார் வியாஜோகதியலங்கார மென்பர். இதற்கு "உயிர்ச்சகியே" என்பதுமுத லுதாரணம்இங்ஙனம். காவாகக்கலவி செய் சங்கேத பூமியில் புரளுதலால் பற்றிய துகள்களைப் பூந்தாதுவாலென்ற வேறே ஹேதுவைக்கூறி மறைத்திருக்கின்றது.

செய்யுள்.

தேங்குழலே யிவ்வதரத் தில்வடுவுண் டாகிருக்கில்
ஓங்குசினம் யாவற் குறுதுமுன்யான்—ஆங்குதனை
செய்யவுங்கே ளாமற் செழும்பிரம ரம்பொருந்தும்
ஐயபங்க யத்தினைமோந் தாய்.

இங்ஙனம் சோர்நாயகனால் அதரம் வடுச் செய்யப்பட்ட நாயகியின் ஸமீபத்துக்கு வருகின்ற நாயகனைப் பாராமலிருப்பவள்போலத் தோற்றப்படுத்துகின்ற பாங்கி அந்நாயகியைக் குறித்து அவளுக்கு அநுகூலத்தை யுபதேசஞ் செய்வதெனுங் கைதவத்தால் அவளது குற்றத்தை நாயகனுக்குத் தெரியாமல் மறைக்கின்றாள்.

வல்லோரொழிப்பணியில் ஒருவன் ஸங்தேகித்ததைத் தெரிந்து தான் சொல்லிய வசனத்தைவேறு விஷயமாகக் கூறி யுண்மையை மறைத்த லென்றும், இவ்வணியில் தன்னிட மிருக்குங் குறிகளைக்கண்டு ஸங்தேகிப்பானென நினைந்து அக்குறிகளுக்கு மற்றொரு ஹேதுவைக் கற்பித்த லென்றும் வேற்றுமை காண்க.

செய்யுள்.

இரத வீதியில் வந்தயா தவனெழில் நோக்கோர்
அரிவை பாங்கிய ரவைமுனம் புளகமுற் றதனால்
பெருகு தன்மயல் வெளிப்படா திருக்கவப் பிரியா
கரனை வந்தனஞ் செய்துதங் கரவியற் றினளே.

இங்ஙனம் இராகத்தினா லுண்டாகிய மயிர்க் கூச்சல் முதலிய குறிகளை, வந்தித்துப் பகதி யென்ற ஹேதுவினா லுண்டானதாக விளக்கி யுண்மையை மறைத்து இருப்பமையால் வஞ்ச நவிற்சியணியே. யாதவன்-கண்ணன்.

செய்யுள்.

சங்கேத முற்ற தலவிடய மாமுனினை
யங்கே தெரிந்தநங்கை யாள்மரக—தங்கூர்தட்
டார்ந்தசிப்பி யோர்பங்க யத்திலேமே லோதிமப்புள்
சேர்ந்திடுமென் றாள்சகிமுன் னே

இது முதலிய இடங்களிலும் நுட்பவணியே. இங்ஙனம் மரகதப்பாத்திரத்திலிருக்குஞ் சிப்பிபோலென்ற உவமையை யோதிமப்புள்ளுக்குக் கூறியிருப்பமையால் அவ்விடம் ஜனக்கூட்ட மில்லாத தென்றும் அது தங்களுக்கு ஸங்கேதஸ்தல மென்றும் காமுகனுக்குச் சூசனை செய்யப்பட்டிருப்பமையால் நமக்கு எது சங்கேதஸ்தலமென்று விரும்பிய காமுகனது எண்ணத்தைத் தெரிந்த நாயகி பாங்கி யிடத்தில் தனது கருத்து வெளிப்படும்படி சொல்

லிய வசனமாக இருப்பதைப்பற்றி யிதுவு மவ்வணி. இங்ஙனம் ஸங்கேதஸ்தல விஷயமாயிருக்கும் வினாவின் விடையை நாயகன் சொல்லாற் கூறி யிருப்பமையால் துவனியல்ல. இவ்வாறே கரவுவெளிப்படுப்பணியிலும் உதாரணிக்கத்தக்கது. இவ்விஷயத்தில் "வேதஸிவல்லி எவண் வதியுமவணே" யென்பது முதலிய மறைவான விடையுள்ள நுட்பம் - கரவுவெளிப்படுப்பு - வஞ்சநவிற்சியணிகளின் உதாரணங்களி லக்கருத்துச் சொல்லால் கூறப்படாமல் அந்தந்தப் பொருள்களின் மேன்மைக் குணத்தாலும் உரைப்போனது அறிவின் விசேஷத்தாலும் தொக்கு விளங்குவதால் அலங்காரம் அல்ல வென்றும் துவனிக்கு இருப்பிடமாக விருக்கின்றதெனவுங் கொண்டு முன்னோர்கள் சொல்லால் கூறியிருக்குமிடத்துமாத்திர மலங்காரம் வருமென் றுதாரிணித்திருப்பமையால் நாமும் அவ்வாறே.

செய்யுள்.

தடங்கொள் விடலா யெங்ஙனம்வே
 தசியுண் டவணே கடந்திடலாம்
இடங்கொ ளிந்த நதியெளிதா
 யென்றே வழிவி னுயவன் பால்
திடங்கொள் வேறோர் தாற்பரியத்
 தினையே யுட்கொண் டிடுவசனம்
வடங்கொள் ளிடம்போ யிடக்கிழித்து
 வளரு முலையா ளுரைத்தனளே.

என்று வேறு பொருளின் கற்பித்தலாற் கருத்தை வெளிப்படுத்தியிருக்கு மிடத்திலும் "ஸங்கேதகால மதனை யறியவெண் விடலை முகத்திடைப் பெருகும் வியர்வைத் துளிச்சமுகமதால் கரைந்த குங்குமமே" "ரதவீதியில் வந்த் யாதவனெழி" லென்ற கருத்தின் வெளியிடுத விருக்கின்ற இவ்வுதாரணங்களிலும் அந்தந்த அணியென்றே கூறுகின்றோம்.

---

## அ௭ - வது குறிப்புநவிற்சியணி.

(கூடோக்தியலங்காரம்.)

செய்யுள்.

ஒருவற் குறித்துரைக் கின்றதை யேமற் றொருவற்குறித்
துரைசெயிற் பேருங் குறிப்பு நவிற்சிமற் றோர்செயில்வாய்
தருசொல் லருந்திடு காளாய் களமர்கள் சார்வரதை
யொருவுவை யென்ப திலக்கியந் தேரெட்ட வூரரசே.

ஒருவனைக் குறித்துச் சொல்ல வேண்டிய செய்தியை மற்றொருவனைக் குறித்துச் சிலேஷையாகச் சொல்வது குறிப்புநவிற்சியணி. இதனை வடநூலார் கூடோக்தியலங்கார மென்பர். இதற்கு "மற்றோர் செயில் வாய் தரு"வென்பதுமுதலுதாரணம். இங்ஙனம் மற்றொருவனது களத்திரத்தை யநுபவித்துக் கொண்டிருக்கின்ற காமுகனைக் குறித்துச் சொல்லவேண்டியதை யொருவன் வயலில் மேய்ந்துகொண்டிருக்கிற காளையை நோக்கிச் சொல்லி யிருக்கின்றது. காரிய காரணமுதலிய ஸம்பந்தத்தின் விளக்க மிங்ஙன மில்லாமையால் இந்து புனைவில் லிப்புகழ்ச்சி யல்ல. அவர்ணியமாக விருக்கும் பொருள் வர்ணியப் பொருளில் ஸம்பந்தப்பட வேண்டு மென்ற தீர்மான மிங்ஙனமில்லாமையாலும் பிறரை வஞ்சனை செய்வதாகிய மனமகிழ்விப் பிருப்பதாலும் இந்து சிலேஷையணியுமல்ல.

செய்யுள்.

கணவனங்கா டியிற்புகுந்தான் சக்களத்தி
கணப்பொழுதும் நினைக்கவிலை மாமிமுன்னும்
கணமுறுவோர் பூத்தவள்யா னென்றுவிட்ட
கத்தடைந்தா ரணையையொரு துணையாக்கொள்வங்
கணமுடையே னிடம்பொழுது போக்கும்பேச்சுக
காரருமின் றின்றுவர வேதந்தானெக்

க்ஷணமுமக லாமலுங்கொண் டாடும்பொன்னை
காவாவிங் கொருதனியே கவல்கின்றேனே.

இஃது பொன்னை காவாவென்ற சோரநாயகனது வரவைக்கருதுகின்ற நாயகி மற்றவரை வஞ்சனை செய்யும் பொருட்டு இந்திரை கணவனைக்குறித்துப் பிரார்த்தனை செய்வதுபோல் பிரகாசப்படுத்திக் கூறுகின்ற வசனம். பொன்னை எ-து இலக்ஷுமிநாயக எனப்பொருள்கொள்க.

---

## அஅ-வது வெளிப்படைநவிற்சியணி.

(விவிருதோக்தியலங்காரம்.)

செய்யுள்.

புகலுஞ் சிலேடையி னாலே மறைத்த பொருளைவல்லோன்
பகலுற வேவெளி செய்வ துவெளிப் படைநவிற்சி
தகவே பிறர்செயி னின்றகல காளையென் றுன்குறிப்பி
னகமேயென் றேத வுதாரண மெட்ட நகர்க்கரசே.

சிலேஷையாக மறைக்கப்பட் டிருப்பதைக் கவிஞன் வெளிப்படுத்துவது வெளிப்படை நவிற்சியணி. இதனை வடநூலார் விவிருதோக்தி யலங்கார மென்பர். இதற்கு "தகவே பிறர் செயினின்றகல்" என்பதுமுத வுதாரணம். இங்ஙனம் செய்யினின்றகல்காளை யென்று மறைவாகக் கூறியதையென்றான் என்ற சொல்லால் கவி வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

செய்யுள்.

அருந்திருவே யணங்கிடரைச் சோவுறேன்மிக்
காம்வேக முறுமுயிர்ப்பை யகற்றல் செய்வாய
வருந்திடுமேற் பாலனடுக் குருவும்வேண்டா
வானுவிப் புநிதன்வில கிடவே செய்வாய்
பொருந்துபய நீக்கலென்வஞ் சனையால்விண்ணும்
புலத்தனையெல் லாமசற்றி மதனத் தாக்கம்

தாந்திகழ்பாற் கடலெவற்குத் திருவையீந்த
தவராடியே யூறனைத்துந் தவிர்க்க மாதோ.

இங்ஙனம் மறைவாகக் கூறியிருக்கின்ற சிவபெருமான் முதலியவர்களின் நீக்குதலைப் பொருந்து பயநீக்கலென் வஞ்சனையா லென்றுரைத்துக் கவி வெளிப்படுத்தி யிருக்கின்றார். இஃது பரவஞ்சனையின் பொருட்டு மறைக்கப்பட்டதை வெளிப்படுத்தியது. அணங்கிடைச்சேர் வுறேல் என்பதற்குப் பார்வதியை யிடங்கொண்ட சிவமூர்த்தியைச் சேராதை எனவும், அணங்கே யிடரடையாதை எ-ம்; மிக்காம் வேகம் உறு வுயிர்ப்பை யகற்றல் செய்வாய் எ-கு மிகுந்த வேகமுற்ற வாயுபகவனை நீக்கு எ-ம், பெருமூச்சு விடாதை எ-ம்; மேற்பாலனடுக்குருவும் வேண்டா எ-கு மேற்றிசைத் தலைவனாகிய வருணனையும் நடுநிலையுள்ள குருவையும் விரும்பாதை எ-ம், அதிகமாக நடுக்கமடையாதை எ-ம்; வானுவிப்புநிதன் விலகிடவே செய்வாய் எ-கு சுவர்க்கத்தார்க்கு உயிரையொத்த இந்திரனை விரும்பாதை எ-ம், பெருங்கொட்டாவிவிடாதை எ-ம் பொருள் கொள்க.

செய்யுள்.

கேசவ கோப ராகமே மூடக் கிளருநான் விழிதெரியாம
லாசுறு தடுமாற் றமுமிக வுடையே னுகினன் கருப்பையம் பாலே
யேசுறத் தவறும் வன்மையி னல்லாற் கிரங்குநீ யேகதி யெனவே
பேசுகோ பியராற் குறிப்பிடப்படுமெம் பிரானமைக் காக்குகவினிதே.

இங்ஙனம் கண்ணனுக்கு முன்பாக மேடுபள்ளங்களில் தவறுதலடைந்ததைச் சொல்லுகின்றவளும் அவரிடம் மையல் கொண்டவளுமாக விருக்கின்ற கோபிகையின் சொல்லில் விளங்குகின்ற மேடுபள்ளங்களில் வீழ்ந்தவனை ரக்ஷிக்கின்றவன் நீ யென்ற பொருளால் மறைக்கப்பட்டிருப்பதைக் கோபியரால் குறிப்பிடப்படுமென் றுரைத்துக் கவி வெளிப்படுத்தி யிருக்கின்றார். இஃது லஜ்ஜையினுல் மறைக்கப்பட்டதை வெளிப்படுத்தியது.

செய்யுள்.

உனதுதரி சனத்தின்போ துள்ளதுவா வன்றியுநாந்
தனியிடமார் தலின்றன்மற் றையர்வேறுன் னுவரகல்வ
னெனவரிது றலைக்குறிப்பி னிசைகோவி யருக்குமகிழ்
வனபுளக முறக்கலந்த மாயனமைப் புரக்குகவே.

இங்ஙனம் அகல்வனெனக் கூறியதால் இதுவரை யுன்னுடன் கலவிசெய்ய இவ்விடத்தில் தாமஸித்தேன். அஃது கிடையாமல் போய்விட்டதென்று தாற்பரியத் தாற் கிடைத்த பொருளை மூன்றுவது பாதமுதல் கவியில் வெளிப்படுத்தி யிருக்கின்றார். இவை கவியால் வெளி ப்படுத்தப்பட்ட கருத்துள்ள வைகளுக்குதாரணங்கள்.

செய்யுள்.

நன்னுதனி சினந்ததிற ஞானணவை வேறரிவைத்
தன்னெடுளை யாடலேச்சந் தனத்தையணி யினைப்புகையை
யின்னம்வெறுத் தாசையுட னிறைஞ்சுமென்பாற் கோபமுறேல்
தென்னருள்செய் நிசமாயெத் திசையுமறி கிலன்மாலால்.

இங்ஙனம் பொறுமையாலும் கோபத்தினாலும் வருத் தமடைந்த நாயகியின் வருத்தத்தை நீக்குதல் விளங்கு கின்றது. இங்ஙனம் தனது அபிப்பிராயத்தை மறைவின் றியே வெளிப்படுத்தி யிருக்கின்றது.

---

## அகூ-வது உத்தியணி.

(யுக்தியலங்காரம்.)

செய்யுள்.

தன்னந் தரங்கந் தனையே மறைககத் தகுதொழிலான்
மன்னும் பெயரைவஞ் சித்திட லுத்தி மகிபதினைக்
கன்னி வரைகையில் மற்றேரைக் கண்டுகை யின்மலர்வில்
லின்னுருத் தீட்டின ளென்ப திலக்கிய மெட்டமனே.

ஒரு தொழிலால் பிறரை வஞ்சித்து தன் அந்தரங்கத் தை மறைப்பது உத்தியணி. இதனை வடநூலாரும் இவ்

வாறே கூறுவர். "இதற்கு மகிபநின்கன்னிவனை" யென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் மலர்வில்லை யெழுதுதலால் மன்மதனை நான் யெழுதினேன் என்று பிறனை மயக்கிக்கணவனை யெழுதிய தன் அந்தரங்கத்தை மறைத்தாள்.

செய்யுள்.

இரவதனிற் கணவனிட மிசைத்திடுதன்
னுரைசெவிகொ ளினியதத்தை
விரவியமா துலன்மனைவி முதலியர்முன்
னவ்வுரைகள் விளம்பக்காலை
யரிவையதைக் கேட்கையிற்றன் செவிப்பதும
ராகமணி யதனை வாங்கித்
திரள்கழுமுள் விளையாவஞ் சித்ததன்வா
யிந்து மௌனஞ் செய்வித் தாளே.

இங்ஙனம் கிள்ளையை மௌனமடையச் செய்து அதின் மூலமாய்த் தனது இரகசியசொற்களைக் கேட்கின்ற மாமி முதலியவர்களை வஞ்சித்தல் விளங்குகின்றது. வஞ்சநவிற்சியில் குறிகளை மறைக்கின்றதும் இவ்வணியில் அதைத்தவிர்த்து மற்றதை மறைக்கின்றதும் பிரிவென்றுவது அல்லது அதில் சொல்லால் மறைவும் இதில் தொழிலால் மறைவும் பிரிவென்றுவ தறிக. இவ்வாறுயின் "இரதவீதியில் வந்தவனெழில்" என்ற செய்யுளிலும் யுகதியணியே. கழுமுள் - மாதுளை.

---

## கூ0-வது உலகவழக்குநவிற்சியணி.

(லோகோக்தியலங்காரம்.)

செய்யுள்.

உலக வழக்கு மொழியை யநுவதித் தேயுரைகிற்
பலரு முலக வழக்கு நவிற்சியென் பார்தலைவா
சிலதினங் கண்களை மூடிப் பொறுத்துத் திரிவையெனச்
சொலுவ துதாரண மெட்ட புரத்தச சுரமன்னனே.

உலக வழக்கமான சொல்லை யநுவதித்துக் கூறுவது உலகவழக்கு நவிற்சியணி. இதனை வடநூலார் லோகோக்தியலங்கார மென்பர். இதற்கு "தலைவா சிலதினம் கண்களை" யென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் கண்களைமூடி யென்பது உலகவழக்குச் சொல்.

செய்யுள்.

வரதநின்பேர் மாத்திரநீ மாகொடைய னென்னுஞ்
சரதமதி லத்தொழிலேற் றுயன்—றுரமாகப்
பற்பலவா நாடுகண்ட பார்ப்பானுக் குப்பூணூ
லற்பமுமே வேண்டியதன் றும்.

இங்ஙனம் பற்பல நாடுகண்ட பார்ப்பானுக்கென்பது முதல் உலகச்சொல்.

---

## ௬௯-வது வல்லோர்நவிற்சியணி.

(சேகோக்தியலங்காரம்.)

செய்யுள்.

கருத்தொன் றினையுல கச்சொலுட் கொண்டிடக் காணுமதற்
கிருத்திய பேரது வல்லோர் நவிற்சி யென்துளங்கூ
ரருத்திய பாம்பு களின்காலைப் பாம்புக ளேயறிதற்
குரித்தென் றுதாரணஞ் சொல்வா ரிளசை வரோதயனே.

எங்ஙனம் உலகச்சொல் வேறு பொருளை யுட்கொண்டிருக்கின்றதோ அங்ஙனம் வல்லோர்நவிற்சியணி. இதனை வடநூலார் சேகோக்தியலங்கார மென்பர். இதற்கு "பாம்புகளின்கால் என்பது"முத லுதாரணம். இங்ஙனம் ஒருவன் மற்றொருவனுடைய செய்தியைக் கேட்டு ஸமீபத்திலுள்ள வேறொருவனிடத்தி லிவனே அவனது செய்தியைத் தெரிகின்முன் என்று சொல்வதற்குப் பதிலாகப் பாம்புகளின் கால் பாம்புகளே யறிதற்குரித்

தென்றவுலக வழக்கச்சொல் கூறியது. இங்ஙனம் பொருளைத் தேடுதல் முதலிய வுலகத்திற் பிரசித்தமான தொழிலில் அவனும் இவனும் கூட்டுள்ளவர்க ளென்று அறிதலே யுலகச்சொல் லுக்குப் பயனாக விருந்தும் அதனுடன் இரகசியமாக நடக்கின்ற விடத்தொழிலில் அவனுக்கு இவன் ஸஹாயமாக விருக்கின்றவ னென்றதும் உள்ளாக விளங்குகின்றது.

செய்யுள்

தென்றலகன்ற தலர்மலிகைச் செழும்பூமணக்கோ டையுநீங்கிற்
றென்றுமகிழ்வுன் றனக்குமிக வுளதேற்கரிய கொண்மூவே
நன்றுபிரிய மகன்றிடுக ணவனேயிவளோ டுறச்செயவன்
துன்றுநிரைமீட் டிடவலிய னவனேதோன்றுந் தனஞ்சயனே.

இங்ஙனம் பொருள் தேடும்பொருட்டு அயலிடங்களிற் சென்றிருக்கின்றவனது நாயகியினுடைய பாங்கி சொல்லிய வசனத்தில் எவன் பசுக்களின் கூட்டத்தைத் திருப்புவதில் வன்மையுள்ளவனோ அவனே தனஞ்சயனென்று தெலுங்கு தேசத்தில் விளங்கிய வுலகச்சொல் லிருக்கின்றது. இந்த அதிக ஸௌந்தரியமுள்ள இப்பெண்ணைவிட்டு அயலிடத்திற் சென்றவன் பசுக்களுக்கு ஸமானமானவனே. அவனைத் திருப்புவதற்குப் பொருளை ஜயம் செய்கின்றவனே வன்மையுள்ளோன் என்ற பொருளை யுட்கொண் டிருக்கின்றது.

---

## கூஉ-வது மடங்குதனவிற்சியணி.

### (வக்கிரோக்தியலங்காரம்.)

செய்யுள்.

விரிவாஞ் சிலேடை யிசைவேற் றுமையொன்றின் வேறுபொருள்
தரவேகற் பித்தன் மடங்கு தனவிற்சி தானிளசை
வரகேளிப் பெண்ணி னிடமா சினந்தி வரல்விடெனில்
அரன்பா லுளதிங் கிலையெனல் காட்டென் றறைகுவரே.

சிலேஷையினுலாவது இசை வேற்றுமையாலாவது ஒருவன் கூறியவசனத்துக்கு வேறு பொருளைக கற்பித்தல் மடங்குதனவிற்சியணி. இதை வடநூலார் வக்கிரோக்தி யலங்காரமென்பர். இதற்கு "இப்பெண்ணினிட" மென்பதுமுத உதாரணம். இங்ஙனம் பெண்ணினிடத்துச் சினமாகிய தீயின்விருதலை விடென்றபொருளுள்ள, பெண்ணினிட மாசினந்திவரல் விடென்ற தொடரில், பெண்ணினிடம், மாசு இல் - குற்றமில்லாத, நந்திவரல் - நந்தியின் வருகையை, விடு என்றபொருள் சிலேஷையாக கற்பிக்கப்படடிருக்கின்றது.

செய்யுள்.

இணங்கு மிவ்வித நல்லுறி வேவனு
லணங்கு தாரத்தி னுக்கின தென்றிடிற்
குணங்கண் மூன்றிற் குயின்றத லாற்புத்தி
வணங்கு தாரத்து வருத்தவா கேட்கிலேம்.

இங்ஙனம் அணங்கே யெவனுவிவ்விதமான புத்தி பயங்கரமாக வுண்டாககப் பட்டது. புத்தி முக்குண முடையதன்றித் தாரத்தாற் செய்யப்பட்டதாகக் கேள்விப்பட வில்லை. இங்ஙனம் அவிகிருத சிலேஷை என்ற செம்மொழிச் சிலேஷையால் வேறு பொருள் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. தாரம்-ஒருவித வுலோஹம், பயம்.

செய்யுள்.

திண்ணம் பரதது முகவாடடரு
சேருமி ராமனி லக்குவன்போக்
கண்ணே சயந முற்றிடுவார்
கவியின் குழுவாம் படையனைத்து
மண்ணி னிலையா மையையடையு மரம்பைந்
தொடையா யெனமூடா
யெண்ணு மடிமூன் றினுமாறு மெழுத்தை
யகற்றிப் படியெனுமே.

இங்ஙனம் விகிருதசிலேஷை என்ற பிரிமொழிச் சிலேஷையினன் மடங்குதலவிற்சி விளங்குகின்றது. இச்செய்யுளில் முதலடியில் ரகாரமு மிரண்டாவதடியில் நகரமும் மூன்ருமடியில் யாவென்றதும் ஆருவதெழுத்தாம். இவற்றை நீக்கி வாசிக்க. இவைகள் சொற் சிலேஷை மூலமாக விளங்கும் மடங்குதலவிற்சிக் குதாரணங்கள். பொருட் சிலேஷை மூலமாக விளங்குவது எவ்வாறெனில்,

செய்யுள்.

இரவுளோன் யெவண்மா வலிமகத் துளன்கூந்
	தெவண்பிருந் தாவனத் துளதா
லரிணமெங் ஙனஞ்சூ கரத்தினைப் பார்த்தே
	னலன்கிழ வெருநுமெங் ஙனமே
சரதகோ பால னுணருவா னெனப்பூ
	தலமகள் மலைமக ளிசைத்த
பாவுவி னேதை விறுவிடை மொழிகள்
	பாலனம் புரிகுக நமையே.

இங்ஙனம் பொருட் சிலேஷை மூலமாக மடங்குதலவிற்சி விளங்குகின்றது.

இன்னிசை வெண்பா.

எண்ணுமற் கோபித் திடனுசித மின்றென்றே
யண்ணலுரைத் திட்டசொலை யாங்குணர்ந்த நாயகிதான்
நண்ணுசித மில்லையென்றந் நாயகனைப் பூவினமை
தண்ணணிகொண் டோங்கியடித் தாள்.

இங்ஙனம் நண்ணுசிதமென்ற இசைவேற்றுமையால் மடங்குதலவிற்சி விளங்குகின்றது.

## கக-வது தன்மைநவிற்சியணி.

(ஸ்வபாவோக்தியலங்காரம்.)

செய்யுள்.

சாதி முதலி யவையி னியற்கைத் தருமமதை
யோதுதல் தன்மை நவிற்சி வெருள்விழி யோடசைவில
காதுள தாகி மறிநோக்கு மென்ப துதாரணங்காண்
தாதுறு முல்லை யணிதோட் குமாரெட்ட தாயகனே.

அதனதன் ஜாதிக்குரித்தான தருமத்தைக் கூறுவது தன்மை நவிற்சியணி. இதனை வடநூலார் ஸ்வபாவோக தியலங்கார மென்பர். இதற்கு "வெருள்விழியோ" டென் பதுமுத லுதாரணம். இங்ஙனம் மறிகளின் இயல்புக் குணமாகிய வெருள்விழியையும் நெறித்த காதையுங் கொண்ட நோக்குதலை வருணித்திருக்கின்றது.

செய்யுள்.

புதியமண நாயகனு மிளம்பூவைத் திருவு மாமிமுன்னே
ரெதிரிலொரு வர்க்கொருவர் முன்னியைந்து வுறுமிகுதி யாம்விழைவு
முதிருமத னூல்விலகி யிடுமுயற்சி தவறி யடிக்கடிதம்
வதனமொரு வகைதிருப்பி யடர்வார்கட் கடையாற் சிறிதுளவே.

இங்ஙனம் புதிதான தம்பதிகளுக்கு இயல்பாக மாமி முதலியவர்களின் முன்பிலுண்டாகும் லஜ்ஜையைக் கூறி யிருக்கின்றது.

---

## கச-வது நிகழ்வினவிற்சியணி.

(பாவிகாலங்காரம்.)

செய்யுள்.

நடந்ததை யேனு நடப்பதை யேனுந்தன் முன்னினடக்
கிடுகின்ற தென்னல் நிகழ்வி னவிற்சியித் தேத்தவிண்ணோ
ருடன வுணர்புரி கின்று ரமரின்றென் னேர்கிறன்யான்
மடமுற வென்ன விலக்கிய மெட்ட தயாநிதியே.

முன்னடந்ததை யாவது இனிநடக்கப் போவதை யாவது இப்பொழுது முன்பாக நடக்கின்றதெனக் கூறுவது நிகழ்வினவிற்சியணி. இதை வடநூலார் பாவிகாலங்காரமென்பர். இதற்கு "விண்ணோருடனவுண" ரென்பது முதலுதாரணம். இங்ஙனம் அவ்விடத்தில் அவ்வாறு பயந்தோன்றும் பொருட்டாக இம்முறையாகக் கூறப்பட்டிருக்கின்றது.

செய்யுள்.

கொங்கைத் தடத்து நின்றுமுன்வீழ்
கோலக் கலையைப் பின்றுமெடுத்
தங்கட் புனையத் தொடங்கரிவை
யரியேன் கண்கண் ணெனப்புகலப்
பொங்கும் வசனத் தினைக்கேட்டுப
புலியச் சிரித்தா ளஃதின்னுந்
தங்கு மெனது விழிகளுக்குத்
தானே யெதிராய்த் தோன்றிடுமே.

இங்ஙனம் முன்னாயகி செய்த சிரித்தலை யிப்பொழுது தன் முன்பிலிருக்கிறதாகக் கூறியிருக்கின்றது.

## சரு - வது வீறுகோளணி.

(உதாத்தாலங்காரம்.)

செய்யுள்.

தங்கும் நிறைவின் வரலாற்றை மேற்சரி தம்புகழ்தற்
கங்க முறலைச் சொலல்வீறு கோளணி யாகுமெந்தப்
பொங்க ரடியில் விசயனுந் தேவும் பொருததந்தத்
துங்கவெற் பீதே னிலக்கியந் தேரிள சைத்துனாயே.

நிறைவின் வரலாற்றைக் கூறுவதும் மேன்மையான சரித்திரத்தை மற்றொன்றுக்கு அங்கமாகக் கூறுவதும்

வீறுகோளணி. இதனை வடநூலார் உதாத்தாலங்கார மென்பர். இவற்றுள் மேன்மையான சரித்திர மற்றொன்றுக்கு அங்கமாக இருப்பதற்கு "எந்தப் பொங்கரடி" யென்பதுமுதலுதாரணம். இங்ஙனம் விஜயனுக்குஞ் சிவபெருமானுக்கும் நடந்த போராகிய மேன்மையான சரித்திரம் பருவதத்தின் தாழ்வரையின் வர்ணனைக்கு அங்கமாக விருக்கின்றது.

செய்யுள்.

மதியி னொண்சிலை கொடுபுரிந் திட்டவாய் மதியின்
புதிய காந்தியிற் புனற்பெருக் குள்ளவாய்ப் பொலிந்து
வதி மரங்களின் பாத்தியிற் புனலிடா மையைச்சேர்ந்
ததம யந்திகாக் கண்டனந் தம்பமுற் றதுவே.

இங்ஙனம் நிறைவின் வரலாறு விளங்குகின்றது. மதியினொண்சிலை - சந்திரகாந்தக்கல். அன்னம் - அனமெனத் தொக்கு நின்றது.

செய்யுள்.

மாமணித்தூண் காந்தியினுல் வாய்பிரதி விம்பங்க
ளாமவைசூழ் தென்னிலங்கை யாதிபனைத்—தாமநுமான்
மிக்க பிரயாச மேவலுற்று மேயவையின்
முக்கியமா கத்தெரிந்தான் முன்.

இவ்விடத்திலு மவ்வாறே நிறைவின் வரலாறு விளங்குகின்றது.

---

## சுசு - வது மிகுதிநவிற்சியணி.

(அத்தியுக்தியலங்காரம்.)

செய்யுள்.

அதிசயம் பொய்ம்மை யுறுங்கொடை வன்மை யிவைமுதலா
துதிசெய் திடுதன் மிகுதி நவிற்சியித் தோன்றல்கொடை
யதிலுயர் வுற்றதி னுலிர வோர்தரு வாயினரென்
பதுதா னிலக்கியந் தென்னிள சைப்பதிப் பார்த்திவனே.

எங்ஙனம் அதிசயமாகவும் பொய்மையாகவுமிருக்கின்ற கொடை வன்மை முதலியவை வருணிக்கப்பட்டிருக்கின்றனவோ அங்ஙனம் மிகுதி நவிற்சியணி. இதை வடநூலார் அத்தியுக்தியலங்காரமென்பர். இதற்கு "இத்தோன்றல் கொடை" யென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் இரவோர் தருவாயின ரென்றமையால் அரசனது கொடையின் மேன்மை விளங்குகின்றது.

செய்யுள்.

மன்னுமேழ் வாரியுமுன் மாபிரதா பக்கனலான்
முந்நீர் வறந்துன் முரணோர்தம்—பன்னியர்கண்
ணின்றும் பெருகிவந்த நீரா னிரம்புதலை
நன்றடைந்த தாகுமிந்த நாள்.

இங்ஙனம் முன், பிரதாபாக்கினியினால் வற்றுதலையடைந்த எழுகடல் பின் சத்துருமடந்தையரின் கண்ணீரால் பெருகுதலை யடைந்தது. என்றமையால் அரசனது வன்மையின் மேன்மை கூறலாயிற்று. சிலர் செல்வத்தின் மேன்மையைக் கூறுமிடத்து வீறுகோளணி யென்றும் வன்மையின் மேன்மை கூறுமிடத்து மிகுதிநவிற்சியணியென்றுங் கூறுகின்றார்கள்.

செய்யுள்.

கூர்விருத்தியுங் கொண்டிணை
யார்சுவர்க்க மலைக்குநின்
மார்பிடத்திடம் வாய்ந்திடா
தேர்விளங்குறுப் பேய்ந்துளாய்.

மீறு நின்முலை வீக்கமிவ்
வாறு நேருமெ னுதுளாக்
கூறும் வேதியன் கோலைமிக்
கேறு மற்ப மியற்றினான்.

இது முதலிய இடங்களிலிருக்கும் உயர்வுநவிற்சிக்கும் மிகுதி நவிற்சிக்கும் பிரிவியாதெனில் அவ்வணியில் ஸம்பந்தா ஸம்பந்தங்களுக்கு ஸாதாரணத் தோற்றமென்றும் இவ்வணியில் அவைகளுக்கு வியப்பான விசேஷத்தின் தோற்றமென்றும் பிரிவுகாண்க. சுவர்க்கம் - தனம்.

## கஎ-வது பிரிநிலைநவிற்சியணி

(நிருக்தியலங்காரம்.)

செய்யுள்.

ஒருபொருட் சொற்கொரு காரணம் பற்றிமற் றோர்பொருளைத்
தருமது தான்பி ரிநிலை நவிற்சி சசியுனையிச்
சரித மதுகொண் டநத்தனென் றேதெரிந் தாமெனவே
யுரைசெய் திடுவ திலக்கிய மெட்டம வுத்தமனே.

இடுகுறியாகவிருக்கின்ற வோர்சொல்லுக்குக் காரணத்தை விளக்கி வேறுபொருளைக் கற்பித்தல் பிரிநிலை நவிற்சியணி. இதனை வடநூலார் நிருக்தியலங்கார மென்பர். இதற்கு "சசியுனை" யென்பதுமுதலுதாரணம். இங்ஙனம் அல்-இரவினை நத்தன்-வளர்ப்பவன் எனும் பொருளுள்ள அநத்தனென்ற சொல்லுக்கு அநத்தன் - கெடுதியைச செய்பவனென்ற பொருளால் வேறுபொருள் கற்பிக்கப் பட்டிருக்கிறது.

செய்யுள்.

முனங்கவிஞர் தமையெண்ணுங்கால் முற்கநிட்டை விரலாலே
கனம்பெறவே யெண்ணுங்காளி தாசனையொப் பாங்கவிஞர்
இனங்காண வின்மையினு லிரண்டங்நா மிகைவிரல்தான்
தினந்தொறுமெய்ப் பொருணமத் தினையடைந்த தாயினதே.

இங்ஙனம் இடுகுறிப்பெயராக விருக்கும் அநாமிகை யென்ற சொல்லுக்கு நாமத்தைக் கொள்ளாம லிருக்கின்றதெனக் காரணப்பொருள் கற்பித்திருக்கின்றது.

## ௯அ-வது விலக்கணி.

(பிரதிஷேதாலங்காரம்.)

செய்யுள்.

பிரசித்த மான மறுப்பினை யோர்கருத் தேபிறங்கி
வரவைத்த வின்பேர் விலக்கணி யீது வலாடலன்று
கரவுற்ற வாயகழி யாடடென் கனைத்த வுதாரணங்காண்
பரவுற்ற கீர்த்தி யிளசைக் குமாரெட்ட பாண்டியனே.

பிரசித்தமான மறுத்தலை வேறு பொருளை துலங்க வருவதிப்பது விலக்கணி. இதனை வடநூலார் பிரதிஷேதாலங்கார மென்பர். இதற்கு "ஈதுவலாடலன்று" என்பதுமுதல் உதாரணம். இஃது போரில் எதிரியிடமிருக்கின்ற சகுனியை நோக்கிச் சொல்லிய வசனம். இங்ஙனம் சொக்கட்டான் விளையாட்டல்ல வென்று தெரிந்திருந்தும் அதனை அஃதல்லவெனக் கூறுவது சொக்கட்டான் விளையாட்டில்தான் நீ ஸாமர்த்திய முள்ளவனேயல்லது போரில் ஸாமர்த்தியமில்லாதவனென்ற கேலியையுட்கொண் டிருக்கின்றது. இஃதும் தூர்த்தா வென்றதினால் வெளியிடலாச்சுது. கேலி - நிந்தைச்சொல்.

மாற்றரிய கொடுமைசெறி மடநல்லார் மேதினியிற்
றேற்றரிய விடத்தானுந் தெரிதருவாட் படையானுஞ்
சீற்றமிகு மனலானுஞ் செம்மைபெறு கூற்றானும்
ஏற்றமெனப் படைத்திலர்க ளிவரிவராற் படைப்புற்றார்.

இங்ஙனம் மங்கையர்களை விஷம் முதலியவைகளாற் படைக்கவில்லை யென்பது பிரசித்தமாகவிருந்து மதையுரைத்தல் விஷம் முதலியவைகளைப் பார்க்கினும் அவர்கள் கொடியவர்க ளென்பதைவிளக்குகின்றது. அஃதும் மாற்றரியகொடுமை யென்பதால் வெளியிடலாயிற்று.

## கூகூ-வது விதியணி.

(விதியலங்காரம்.)

செய்யுள்.

சித்தித் திருக்கு மதைையோர் கருத்துந் திகழவரு
ணித்தல் விதியணி பஞ்சம மென்ன நிகழ்சுரமி
குத்திட லுக்குரித் தாம்வசந் தத்திற் குயில்குயிலாந்
தத்தைமின் னென்ன லுதாரண மெட்ட தயாபரனே.

சித்தித்திருப்பதையே யோர் பொருள் விளங்கும் பொருட்டு விதிப்பது விதியணி. இதனை வடநூலாரும் இவ்வாறே கூறுப. இதற்கு "பஞ்சம மென்னநிக" மென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் கோகிலத்தைக் கோகிலமென்று புதிதாக விதிக்கவேண்டுவதில்லை. அவ்விதம் உரைத்தது ஐந்தாவது ஸ்வரத்தைக் கூவி ஜனங்களின் மனதை யின்பப்படுத்துகின்றதென்பதை யுட்கொண்டிருக்கின்றது. அஃதும் வஸந்தருதுவில் என்றமையால் வெளியிடலாயிற்று.

செய்யுள்.

வலக்கரமே யிறந்திருந்த மறைக்குழவி யுய்ந்திடுவான்
றுலக்குறுசூத் திரமுனிபாற் கூர்புரிவா ளினைப்போடு
பலக்கும்வயாக் கொடுவருத்தப் படுசீதை வனமடைய
விலக்கில்ரகு ராமனுறுப் பாமுனக்கே தருள்விதமே.

இங்ஙனம் ஸ்ரீராகவன் தன் கையை யிராமனுறுப்பா மென்று கூறவேண்டுவதில்லாமலிருந்தும் அவ்விதங் கூறியது தனக்குக் கிஞ்சித்தேனுங் கருணை யில்லையென்ற கருத்தைக் கொண்டிருக்கின்றது. அஃது வயாக்கொடு வருத்தப்படும் ஸீதையென்றமையால் விளரிக்கப்பட்டிருக்கின்

றது. இவ்விதி விலக்கணி யுதாரணங்களில் வேறே பொருள் தொகையாக விளங்கினும் கவியினு லதற்குரிய சொற்களைக் கூறி வெளிப்படுத்தப்பட்டிருப்பமையால் துவனியென்ற எண்ணங் கொள்ளக்கூடாது. தொகையாக விளங்குந் தாத்பரியத்தைக் கவி வெளிப்படுத்து மிடத்தில் அலங்கார மென்றே புனைவுள்ளிவிளைவணியில் கூறியிருக்கின்றது. முன் விதி விலக்குகளுக்குத் தடையுள்ள விடத்து ஆக்ஷேபாலங்காரத்தின் பேதமாகக் கூறியிருக்கின்றதென்றும் இங்ஙனம் பிரசித்தமானவற்றின் விதி விலக்குகள் வேறு பொருள்தோன்றக் கூறப்படுகின்றனவென்றும் பிரிவு காண்க.

---

## ௧௦௦ - வது ஹேதுவணி.

(ஹேதுஅலங்காரம்.)

செய்யுள்.

காரண மான தொடுகா ரியத்தைக் கழறுமதின்
பேரது மேது வணியாமிம் மாமதி பேதையர்பாற்
சாருறு கோப மகற்றிடு வானுதித் தானெனலே
யோரு மிலககியந் தென்னிள சைப்பதி யுத்தமனே.

காரணத்தைக் காரியத்தோடு வருணிப்பது ஹேதுவணி. இதனை வடநூலாரும் இவ்வாறே கூறுகின்றார்கள். இதற்கு "இம்மாமதி பேதையர் பால்" என்பதுமுதலுதாரணம். இங்ஙனம் மதியினுதயமாகிய காரணத்தைப் பேதையர் கோபமகற்றுத லென்ற காரியத்தோடு வருணித்திருக்கின்றது.

செய்யுள்.

வித்துருமச் சாயையினை மேவுனிதழ் பாலையைப்போ
லித்தனையி லேவ ரிதயமதை—நித்தம்பா

நம்புரியு மாவ னுறுகியதாய்ச் செய்யவில்லை
யம்புரிமைப் பின்விழி யாய்.

இங்ஙனம் வித்துருமச்சாயை யென்ற காரணம் பாநம் புரியுமாவல்லென்ற காரியத்தோடு வருணிக்கப்பட்டிருக்கின்றது. வித்துரு மச்சாயை யென்பதற்குப் பவழநிறமெனவும், துருமம்-விருக்ஷத்தின், சாயை-நிழலை, வி-கொள்ளாதது எனவும் பொருள் கொள்க.

செய்யுள்.

விருப்பே மானம் பொறுமைசூயா
நின மேன்மை மிடலிவைக
ளிருப்பே புலவா விலகியுளை
யிசைநா னெனது அங்கிரிகள்
தரற்கே தரமில் லாதவனுந்
தன்கா லினையான் றொடவேனுங்
கரப்பே புரிந்து சம்மதியாக்
கனயா மிதனைப் பெற்றேனே.

இங்ஙனம் விருப்பே யென்ற காரணம் தன்னினு மிழிவானவனிடத்துந் தனக்கு மதிப்பின்மையாகிய காரியத்தோடு வருணிக்கப்பட் டிருக்கின்றது.

செய்யுள்.

காரியங் காரண மென்பவைக் கொற்றுமை காட்டுதலுந்
தேரிய விவ்வணி வேங்கட நாதர் திருவருளே
சாரிய நாவலர் சீர்ச்செல்வ மென்ப துதாரணமாஞ்
சீரிய லெட்ட புரம்வாழ் குமாரெட்ட னின்புயனே.

காரியத்துக்குங் காரணத்துக்கு மொற்றுமையைக் கூறுவது மிவ்வணி. "இதற்கு வேங்கடநாதர் திருவருளே" யென்பதுமுத லுதாரணம். இங்ஙனம் வேங்கடநாதன்

திருவருளாகிய காரணத்திற்கும் நாவலர் சீரச்செல்வமாகிய காரியத்திற்கு மொற்றுமையை வருணித்திருக்கின்றது. இங்ஙனம் காரியத்தின் முக்கியமான இருப்பும் அதின் விரைவுந் தோன்றும் பொருட்டுக் காரிய காரணங்களுக்கு அபேத வியவஹார மிருக்கின்றது. உருவகவணியில் ஸாதிருசியத்தா லபேத வியவஹார மென்று மிதில்காரிய காரணபாவத்தா லபேத வியவஹார மென்றும் பிரிவு காண்க.

செய்யுள்.

பெருகலிங்க வேந்துகொடைத் திருவி ழாவின்
பேராயு ளாயும்வந்திப் பினையே செய்து
வருங்கனக முடிமன ர்நம் பிக்கை யோத்தி
மாறாயு மடவியாகண் மணப்பே றாயு
மரும்புகழி னொளியாயுங் கவிஞ ராசே
ரானந்த வடிவாயு மமர்செய் வீரம்
விரும்புதிரு மாதினுயி ராயுந் தன்மம்
விளையுமிருப் பாயுநனி விளங்கு மன்னே.

இங்ஙனம் காரணமாகிய கலிங்க வேந்தனுக்குங் காரியமாகிய கொடைத் திருவிழாவின் பேராயுள் முதலியவைகளுக்கு மொற்றுமை வியவஹாரம் விளங்குகின்றது.

# சுவையணிமுதலியன.

செய்யுட்கள்.

வடிவங்கண் ணோக்கு வெறுப்புமுன் னனவை யாலுமுண்டா
யிடும் விருப்பே முதலாஞ் சுவையங்க மென்னவரப்
படுமது வேசுவை யென்பார் § வடிவுகட் பார்வைமுன் னு
வுடையவை யாற்புல வீறு முதலிய வைகளுமே.

பரன்முத லோரிடம் பற்றலு மாகப் பகர்கருத்தை
யிரவங்க மாக்கி னதுகருத் தென்பர் § விருப்பமில்லான்
மருவுஞ் சுவைகருத் தங்கமென் றுவது வன்மையென்பர் §
கருதங்க மாதல் கருத்தின டக்கஞ்சேர்க் கையென்பரே. §

மேவுங் கருத்து தயமங்க மாக விளங்குமது
பாவகத் தோற்றமென் பா § ரொன்றுக் கொன்று பகைகொளிரண்
டாவ கருத்தங்க மானது பாவகச் சேர்க்கையென
வேவகுப் பார் § கருத் துப்பல மென்மேல் விளைவதற்கே.

பெயர்பா வகக்கல வையென்பர் § கண்ணெனப் பெற்றதுமுன்
னயவைம் புலனி னுணர்வி டயத்தை நவின்றிடவு
தயமுறல் காட்சிப் பிரமாண மேயென்பர் § சாதிக்கவேண்
டியதையு மன்னதி னேதுவை யுஞ்சொல் விடிலதற்கே.

பேரநு மானப் பிரமாண மேயெனப் பேசுவ § ரோப்
பாரும் பொருளை யறைந்துமற் றோர்பொரு ளைவிளக்க
நேருவ தொப்புப் பிரமாண மென்பர் § நிகமமுன்னுஞ்
சீரிய வேதப் பிரமாணத் தாற்கிடைத் திட்டதையே.

காண வெடுத்திடல் சொற்பிர மாணமென் பார்க § ளொன்றின்
பூணிருப் பான்மற் றொருபொரு ளின்னிருப் புக்கிடைப்புப்
பேணுவ தின்பெய ரானது தான்பொருட் பேற்றுப்பிர
மாணமென் பாரக § ளனுபவத் திற்கு வராததையே.

ஈட்ட னுகர்ச்சியின் மைப்பிர மாணமென் பா § ரிசைவ
தூட்டல் பிறப்புப் பிரமாண மென்ப § ருலகமதிற்
பூட்டு வழக்கப் பழங்கா தையைச்செப் புதலெடுத்துக்
காட்டுப் பிரமா ணமுந்தானென் பார § தெய்வக் கவியரே.

## கoக-வது சுவையணி.

(ரஸவதலங்காரம்.)

இக்கவிகளுக்குள் "வடிவங் கண்ணோக்கு" என்பது முதல் "சுவை யென்பார்" என்பது வரை சுவையணிக்கு இலக்கணம். இதில் முன்னுனையால் என்னுஞ்சொல்லை வடிவம் கண்ணோக்கு வெறுப்பு என்ற மூன்று இடங்களிலும் ஸம்பந்தப்படுத்தவேண்டும். அவற்றுள் வடிவ முன்னுனையாவது வடிவம், யௌவனம், யௌவனத்தி லுண்டாகிய ஆவபாவங்கள், சிலம்பு முதலிய ஆபரண மணிதல், தென்றல், சந்திரன் முதலியவைகளாம். இவ் வடிவ முதலியவற்றை வடநூலார் விபாவமெனக் கூறுகின்றார். கண்ணோக்கு முன்னுனையாவது கண்ணோக்கம், மயிர்க்கூச்சல், புருவம் வளைத்தல், முதலியகாரியங்களாம். இக்கண்ணோக்கமுதலியவற்றை வடநூலார் அநுபாவமெனக் கூறுகின்றார்கள். வெறுப்பு முன்னுனையாவது வெறுப்பு (க) பலக்குறைவு (உ) கெடுதியையு வரவை யூகித்தல் (ங) பிறரின் மேன்மையைப் பொறாமை (ச) மதுமுதலியவைகளின் உண்ணலால் உண்டாம் மயக்கம் (ரு) கலவி முதலானவைகளா லுண்டாஞ் சோர்வு (சு) செய்யவேண்டுந் தொழில்களின் முயற்றின்மை (எ) பலக்குறைவா லுண்டாம் வணக்கம் (அ) இஷ்டங் கிடையாமையா லுண்டாங் கருதுதல் (கூ) பயமுதலியவைகளா லுண்டா மதி மயக்கம் (க0) முன்னனுபவித்ததை நினைத்தல் (கக) இஷ்டங் கிடைத்தல் முதலியவைகளா லுண்டாம் மகிழ்ச்சி (கஉ) மனக்குவிவு (கங) ஆசை முதலியவைகளா லுண்டாம் நிலையின்மை (கச) நாயகன் வரவு முதலியவைகளா லுண்டா மதிவிளக்கம் (கரு) இஷ்டம் இஷ்டக்குறை இவ்விரண்டினு லுண்டா [illegible]தின்

பரபரப்பு (௧௬) இஷ்டம் அநிஷ்டங்களி லிவ்விதம் செய்ய வேண்டுமென்ற அறிவின்மை (௧௭) பலம் முதலியவைகளால் பிறனை அவமானப்படுத்தித் தான் மேன்மையாக விருந்தல் (௧௮) உபாயந் தோன்றாமையா லுண்டாம் மனமுறிவு (௧௯) காலவிளம்பத்தைப் பொறாமை (௨0) எதுவும் தோன்றாமை (௨௧) துக்க முதலியவைகளா லுண்டா மாவேசம் (௨௨) அதி நித்திரை (௨௩) விழித்தல் (௨௪) குற்றமுள்ளவர்களிடங் குரூரமான செய்கை (௨௫) ஸந்தோஷ முதலியவைகளை மறைத்தல் (௨௬) குற்றத்தைக்கண்டு மிகக்கோபித்தல (௨௭) உண்மையைத் தெரிந்து பொருளைத் நிர்மானித்தல் (௨௮) அவமான முதலியவைகளாலுண்டா மனவருத்தம (௨௯) அஃறிணையிலும் உயர்திணையினும் ஒரேவிதமான எண்ணங்கோடல் (௩0) ஈரிசி நீங்குதற்குச செய்யுந் தொழில் (௩௧) காரணமின்றி நேரிடுகின்ற பயத்தாலுண்டா மனக்கலக்கம் (௩௨) ஐயத்தினாற் பலவிதமூகித்தல் (௩௩) என முப்பத்து மூன்றுபிரிவினதாம். இவைகளை வடநூலார் வியபிசாரி பாவமென் றுரைக்கின்றார்கள். இந்த வடிவ முன்றனவையாலுங் கண்ணோக்க முன்றனவையாலும் வெறுப்பு முன்றனவையாலும் உண்டாகின்ற விருப்ப முதலிய மனசசெய்கை சுவையாம். இஃது அங்கமாக விளங்குமிடம் சுவையணி. இதனை வடநூலார் ரஸவதலங்காரமென்பர். விருப்பம் முதலியவாவன ஸம்போக விஷயமான விருப்பம் (௧) விகாரவடிவத்தைக் காண்பதுமுதலியதினு லுண்டா மனவிகாரம் (௨) இஷ்டஜனப் பிரிவாற்றாமையா லுண்டாந் துக்கம் (௩) சத்துருவினாற் செய்யப்படுங் குற்றத்தினாலுண்டா மனவெப்பம் (௪) மேன்மையான காரியங்களி லுறுதியானமுயற்சி (௫) குரூரமானவைகளைப் பார்ப்பது முதலியவைகளா லுண்டாங் கெடுதியி னூகித்தல் (௬) குற்றமான பொருள்களின் பார்வை முதலியவைகளா

லுண்டா மனக்குவிதல் (எ) முன்காணாத பொருளைக்கண்டதினா லுண்டா மனப்பெருக்கு (அ) வைராக்கியத்தினாற் சித்தம் விகாரமடையாம லிருத்தல் (௯) என்றொன்பது வகைப்படும். இவை நிரலே சிருங்கார முதலிய ஒன்பது சுவைகளாகின்றன. அவையாவன: சிருங்காரம், ஹாஸ்யம், கருணம், ரௌத்திரம், வீரம், பயாநகம், பீபத்ஸம், அற்புதம், சாந்தம்.

---

## ௧0௨-வது கருத்தணி.

(ப்ரேயோலங்காரம்)

"வடிவுகட்பார்வை" யென்பதுமுதல் "கருத்" தென்பதுவரை கருத்தணிக்கு இலக்கணம். முன்கூறிய வடிவ முன்னனவையாலுங் கண்ணோக்க முன்னனவையாலு முண்டாகின்ற வெறுப்பு முதலிய முப்பத்துமூன்று பிரிவுகளுந் தெய்வம் ஆசான் மாணாக்கன் விப்பிரன் புத்திரன் முதலியவர்களிட முண்டாகும் பற்றுதலுங் கருத்தாம். இவைந்து அங்கமாக விளங்குமிடங் கருத்தணி. இதனை வடநூலார் பிரேயோலங்கார மென்றும் பாவாலங்கார மெனவுங் கூறுப. இவ்விரண்டு அணிகளுக்குள் சுவையணிக்குதாரணம் எவ்வாறெனின்,

செய்யுள்.

எவனுளங்கை யிற்றெய்வத் தின்வடிவா மச்சந்
திவள்கமடங் கண்டவனோ சீரார்—தவயோக
முற்றவருக் குட்சிறப்பா முத்தமவக கும்பமுனி
நற்றரமே மிக்கோங்கி னன்.

இங்ஙனம் கும்பமுனி விஷயமான கவியின்பற்றுதலாகிய கருத்துக்கு உள்ளங்கையில் தெய்வ வடிவமாகிய மச்சமுங் கமடமும் விளங்கிற்று என்றமையால் விளங்குகின்ற அற்புதரஸம் அங்கமாக விருக்கின்றது.

செய்யுள்.

ஈது மேகலா பரணமீர்க் கின்றதா லெழுந்து
மோது கொங்கையை மர்த்தன முயல்வதா நிதம்பஞ்
சீத நாவிக வானிவை தொடுவதா சேலை
மீது லாமுடிப் பவிழ்ப்பதா மேவுறு கரமே.

இஃது போர்க்களத்திற் றெறிபட்டு வீழ்ந்திருக்கும் நாயகனது கையை நோக்கி அவனது நாயகிகள் கூறிய வசனம். இங்ஙனம் அவனது பிரிவாற்றுமையா லுண்டா குஞ சோகமாகிய கருணரஸத்துக்கு மேகலாபரண மீர்க் கின்றது கொங்கையை மர்த்தனஞ் செய்கின்றது என் பது முதலியவைகளால் விளங்குஞ சிருங்காரரஸம் அங் கமாக விருக்கின்றது.

இனிக் கருத்தணி யுதாரணம் எவ்வாறெனில்,

செய்யுள்.

காசி யமர்ந நிக்கரைசேர்க் கையுமுற் றொருகோ வணந்தரித்து
மாசிலக்க ரங்கூப்பிர சிரத்து வைத்தே கவுரி நாயகனே
வீசனே முபபுர தகனனே முக்கண் மூர்த்தியே விழித்துப்
பேசும் பலநாளிமைப்பொழுதாய்ப்பேர வெந்நாட் கடத்துவனே.

இங்ஙனம் வைராக்கியத்தினாற் சித்தம் விகாரமடை யாமலிருப்பதாகிய சாந்தரஸத்திற்கு எந்நாள் என்ற சொ லலாற ருசனை செய்விககப்பட்ட, இஷ்டங் கிடையா மையாலுண்டாகுங் கருதுதல் (கூ) என்ற கருத்து அங்க மாகவிருக்கின்றது.

செய்யுள்.

மிகவுயர்ந்த வரைகளொடு தடங்கடலுஞ்
சூழிடத்தும் விளங்கு கின்ற
தகவுறுமன் னவைதரித்த மேதினியே
நீசிறிதுந் தானே துன்ப

மகமடையா யெனவியப்புற் றடிக்கடிபா
　　ரினைப்புகழும் போதே யந்தச்
சகமதைத்தாங் குன்புயத்தை நினைந்துமென்வாய்
　　மௌனமடைந் ததுபூ மானே.

இங்ஙனம் அரசன் விஷயமான கவியின்பற்றுதலாகிய கருத்துக்குப் பூமி விஷயமான அக்கவியின் பற்றுதலாகிய கருத்து அங்கமாக விருக்கின்றது,

---

## கoஎ-வது வன்மையணி.

(ஊர்ஜஸ்வித்அலங்காரம்.)

"விருப்பமில்லாமல்" என்பதுமுதல் "வன்மை" யென்பதுவரை வன்மையணிக் கிலக்கணம். விருப்பமில்லாமலிருக்குமிடத்தில் முன்காட்டிய சுவையுங் கருத்து முண்டாவது வன்மையணி. இதனை வடநூலார் ஊர்ஜஸ்வித் அலங்கார மென்பர். இதற்குதாரணம்,

செய்யுள்.

வீரதரா தரவெருவி யோடுநின
　　திகலார் மடவார் தம்பாலே
சோரமியற் றிடவனத்தில் வேடரதி
　　வேகமொடு தொடர்வுற் றேயன்
னோரதுச லனமுறுகொங் கையினாலும்
　　விழிக்கடையி னோக்கத் தாலும்
பாரபுள காங்கிதராய்த் தனித்தயர்ந்தா
　　ராய்த் தம்பம் பற்றினாரே.

இங்ஙனம் அரசன் விஷயமான கவியின் பற்றுதலாகிய கருத்துககுத் தங்களை விரும்பாம லிருக்கின்ற சத்துரு ராஜ மடந்தைகளிடம் வேடர்களுக்குண்டான சிருங்காரரஸம் அங்கமாக விளங்குகின்றது.

செய்யுள்.

மன்னரசிங் காரீபார் வைக்குணர்ச்சி யானவுட
னென்னதுசன் மம்பயனை யெய்ந்ததன்றே—நின்னமரா
ராங்கூட்டம் போர்க்களத்தி லாதரவா யென்றனக்கே
வோங்கவறி விக்கின்ற தோர்.

இங்ஙனம் அரசன் விஷயமான கவியின் பற்றுதலாகிய கருத்துக்கு அவ்வரசன் விஷயத்தில் சத்துரு ராஜாக்களின் பற்றுதலாகிய கருத்து அங்கமாக விளங்குகின்றது.

---

## ௧௦௪-வது சேர்க்கையணி.

(ஸமாஹிதாலங்காரம்.)

"கருதங்கமாதல்" என்றது முதல் அச்சீர்வரை, சேர்க்கை யணிக் கிலக்கணம். கருத்தினடக்கம் அங்கமாக விளங்குமிடஞ் சேர்க்கையணி. இதனை வடநூலார் ஸமாஹிதாலங்காரமென்பர் உதாரணம்.

செய்யுள்.

நாமுறையா டாதிருப்போ மெனிலிம் மானென்
    ஞம்புரிவ ளறிவமென மௌனங் கொண்டுற்
றேமவளிவ் வஞ்சகனே னம்பாற் பேச
    வில்லையெனச சினந்தனளிவ் வண்ண மாகத்
தாமொருவர்க் கொருவர்மறுத் தேதி ரும்புந்
    தாரையினேக் குள்ளோமா யுறுகால் வஞ்ச
மேமருவி நகைபுரிந்தே னவள்கண் ணீரை
    மிகப்பெருக்கி ஞள்வலிமை மெலியத் தானே.

இங்ஙனம் நாயக நாயகிகளுக் குண்டாகின்ற ஸம்போக விச்சையாகிய சிருங்கார ரஸத்திற்குத் துக்கம் முதலியவைகளா லுண்டாகு மாவேசம் (உஉ) என்ற கருத்தினது அடக்க மங்கமாக விளங்குகின்றது.

---

## ௧0௫-வது பாவகத்தோற்றவணி.

(பாவோதயாலங்காரம்.)

"மேவுங்கருத்து" என்பதுமுதல் "பாவகத் தோற்றம் என்பர்" என்பதுவரை, பாவகத்தோற்ற வணிக்கு இலக்கணம். கருத்துதய மங்கமாக விளங்குவது பாவகத்தோற்றவணி. இதனை வடநூலார் பாவோதயாலங்காரமென்பர் உதாரணம்.

செய்யுள்.

தயவா கரநின் னுருவைபொப்ப
தாக வெனதன் னேயனைய
நயவோ திமங்கால் கொடுவரைந்து
நான்பார்த் திடகாட் டியதுன்னை
யயலே காண்கின் றவளாகி
யமர்ந்தித் தினத்தை யகற்றும்விருப்
புயர்வே னதனு விப்போதிங்
குறவே தயவு புரிகுகவே.

இங்ஙனம் சிருங்கார ரஸத்திற்கு நாயகன் வரவு முதலியவைகளா லுண்டாகும் மதிவிளக்கம் (௧௫) என்ற நளன்விஷயமான தமயந்தியினது கருத்தினுதய மங்கமாக விளங்குகின்றது.

---

## ௧0௬-வது பாவகச்சேர்க்கையணி.

(பாவஸந்தியலங்காரம்.)

"ஒன்றுக் கொன்று" என்பதுமுதல "பாவகச் சேர்க்கையெனவே வகுப்பர்" என்பதுவரை பாவகச் சேர்க்கையணிக் கிலக்கணம். ஒன்றுக்கொன்று விரோதமாக விருக்கின்ற விரண்டு கருத்துக்களை யங்கமாகக் கொண்டது பாவகச் சேர்க்கையணி. இதனை வடநூலார் பாவஸந்தியலங்கார மென்பர் உதாரணம்.

செய்யுள்.

ஒருகணமுண் டாம்விரகத் துயர்சகியாத்
தலைவியைக்கண் டேனுமேலாம்
பொருதலினு டம்பரத்தைக் கேட்டேனு
மாகுநின்பாற் புளகத்தாலே
தெரிகணைசேர் மதன்றூணி போல
மலிந் திடுநல் வெற்றி
பரிவுறுமங் கலப்பாலி கைபோன்மின்
னிடுமொருக போலந்தானே.

இங்ஙனம் அரசன் விஷயமான கவியின் பற்றுதலாகிய கருத்துக்கு அரசனது ஒன்றுக்கொன்று விரோதமாகவிருக்கின்ற நாயகியின் விஷயமான பற்றுதலாகிய கருத்தும் போர் விஷயமான, கால விளம்பத்தைப் பொறுமை (உ0) யாகிய கருத்தும் அங்கமாக விளங்குகின்றன.

---

## க0எ-வது பாவகக்கலவையணி.

(பாவசபளாலங்காரம்.)

"கருத்துப்பல" வென்பதுமுதல் "பாவகக்கலவையென்பர்" என்பதுவரை, பாவகக் கலவைக் கிலக்கணம். பல கருத்துகள் மேன்மேலாக வுண்டாவது பாவகக்கலவையணி. இதனை வடநூலார் பாவசபளாலங்கார மென்பர். உதாரணம்,

செய்யுள்.

செயத்தகைமை யில்லாத வீதெங் கேசந்
திரகுல மெங்கேயினுநா மிவட்காண் போமோ
வயத்துமற மணுகாமைக் கலவா நூறோர்
வாஞ்சினத்து மவள்முகமோ மருவு மேகன்
னயத்தினிலை மதியறத்தோர் நமையென் சொல்வார்
நாடுமவள் சொற்பனத்து மரியா ளேயி

தயத்துணையே தயிரியங்கொள் வாய்நீ யெந்தத்
    தருணனவ ளிதழ்பருகச் சார்கு வானே.

இங்ஙனம் பிரிவானகாலையி லுண்டாகின்ற கலவி விஷயமான விச்சையாகிய சிருங்கார ரஸத்திற்கு ஐயத்தினல் பலவித மூகித்தல் (௩௩), கால விளம்பத்தைப் பொறுமை (௨0), உண்மையைத் தெரிந்து பொருளைத் தீர்மானித்தல் (௨அ), முன்னநுபவித்ததைத் நினைத்தல் (கக), கெடுதியின் வரவை யூகித்தல் (௩), பலக்குறைவாலுண்டாகும் வணக்கம் (அ), இஷ்டங் கிடைத்தல் முதலியவைகளாலுண்டாம் மகிழ்ச்சி (க௨), இஷ்டங் கிடையாமையாலுண்டாங் கருதுதல் (௬), என்ற பல, இக்கருத்துகளின் கலவை யங்கமாக விளங்குகின்றன.

---

## க0அ-வது காக்ஷிப்பிரமாணவணி.

(ப்ரதியக்ஷப்ரமாணாலங்காரம்.)

"கண்ணெனப்பெற்ற" தென்பது முதல் "காட்சிப் பிரமாணமே" யென்பதுவரை, காக்ஷிப் பிரமாண வணிக்கிலக்கணம். கண் முதலிய ஐம்புலன்களாலறியப்படும் விஷயங்களைக் கூறுவது காக்ஷிப்பிரமாணவணி. இதனை வடநூலார் பிரத்தியக்ஷப்பிரமாணாலங்கார மென்பர். உதாரணம்,

செய்யுள்.

இந்தியத்தின் குழுவனைத்து மேபிரதி விம்பமுறு
தந்தலைவன் முகத்ததுதே மாமரத்தின் றளிர்மணத்த
துந்துருசி யதுசுரும்ப ரொலிப்புளது சீதளநி
வந்ததெனக் களிமதுவால் வளரின்ப மடைந்ததுவே.

இதில் கண் (க), நாசி (௨), நாவு (௩), செவி (௪), துவக்கு (௫), என்ற ஐம்புலன்களுக்குப் பிரதியக்ஷமான ரூபம் (க), கந்தம் (௨), சுவை (௩), ஒலி (௪), சீதளம் (௫), என்ற இவ்வைந்துவிஷயங்களையுங்கூறியிருக்கின்றது.

செய்யுள்.

அருகிலிலஞ் சியிற்றெரியீ தம்புயப்பூ வாவலது
தருணிமுக மாவெனவோர் கணமயிர்த்து மேதவளக்
குருகுறுபங் கயத்தமையாச் சிங்காரக் குறும்புகளா
லொருகுமர னங்ஙனமே யுறுமுறுதி புரிந்தனனால்.

இங்ஙனம் நயனேந்திரியத்துக்குப் பிரத்தியக்ஷமான ரூபத்தின் விளக்கத்தைக் கூறி யிருக்கின்றது. முந்திய வுதாரணத்திற் சுத்தமான பிரத்தியக்ஷ மென்று மிதில் ஐயம் நீங்கிய பின்புண்டான பிரத்தியக்ஷ மென்றும் பிரிவு காண்க.

---

## கoகூ - வது அநுமானப்பிரமாணவணி.

(அநுமாநப்ரமாணாலங்காரம்.)

"சாதிக்க வேண்டியதை" யென்பதுமுதல் "அநுமானப்பிரமாண மெனப்பேசுவர்" என்பதுவரை, அநுமானப் பிரமாண வணிக்கிலக்கணம். சாதிக்கவேண்டியதையும் அதின் ஹேதுவையுங் கூறுமிடத்தில் அநுமானப்பிரமாணவணி. இதற்கு வடநூலாரு மிப்பெயரையே கூறுவர். உதாரணம்,

செய்யுள்.

சலிக்கின்ற புயற்புகைவா னிடையை யெவ்வி
தங்கரக்கு கின்றதுமின் மினிகள் தீயிற்
கலிக்கின்ற புலிங்கவடி வெவிதம் பூணக்
கனலுகின்ற வெண்டிகையு மின்னற் காந்தி
சொலிக்கின்ற தாற்பொனிற மெவித மின்னித்
தோன்றுமவ்வா றதரினிடைச் செலுவோ ரென்னப்
பலிக்கின்ற தருக்குழுவின் மார தாவம்
பற்றுகின்ற தென்றுநினைக் கின்றே னம்மா.

இங்ஙனம் வழிப்போக்காகளாகிய தருக்கூட்டங்களிற் சாதிக்கத்தக்கதான மன்தாக்கினியின் பற்றுதலை யச்சாதித்தலுக்கு ஹேதுக்களாக விருக்கின்ற புயல்புகை வியாபித்தன் முதலியவைகளாற் சாதித்துக் கூறியிருக்கின்றது.

செய்யுள்.

புனலினிறை வனையசலைப் புறுகண்மாதர்
புருவம்வியா பித்தல்கொளும் புருடன் பாலே
கனமருமம் பிளந்திடுமிக் கணைகள் வீழுங்
காரணத்தான் மண்டலமே யாக வாங்குந்
தனுவினிலை யம்புகளாற் சலிக்கும் பாணி
சார்ந்திடுமன் மதனிந்தத் தையலார்க்கு
முனமருவி யாக்கினையின் படிநடாத்தன்
மூண்டவனு கித்திரிவான் முறையிற் றனே.

இங்ஙனம் மங்கையர்களின் ஆக்கினையை வகித்து அவர்களுக்கு முன் மதனனின் உலாவுதலை யவர்களின் புருவத்தின் வியாபித்தலைக் கொண்ட புருஷனிடம் மதனன் மலர்க்கணைகளைத் தாக்குகின்றா னென்ற ஹேதுவாற் சாதித்திருப்பதைக கூறி யிருக்கின்றது. முந்திய வுதாரணத்தி லுருவகங் கலந்த வநுமான மென்று மிதிலுயர் வுநவிற்சி கலந்த அநுமான மென்றும் பிரிவு காண்க. சுத்தாநுமானம் எவ்வாறெனில்,

செய்யுள்.

கூட்டி லேநுழை புட்களி ளூற்குவால்
வேட்ட வாரிசத் தால்விரி மல்லிகைக்
காட்டி னூற்செங் கதிர்கட லிற்குளிப்
பாட்டி னுன்பரி யென்றறி யபபடும்.

இங்ஙனம் பறவைகள் கூட்டிலடைவது முதலிய ஹேதுக்களால் இரவியின் மறைவை சாதித்திருக்கின்றது.

செய்யுள்.

இலக்குவனே கொடுங்கிரணத் திரவியதி
கரிப்பன்மரத் திலைசசேர் வெய்யோ
னலத்துறைபி ராமவிரா வரலேது
மதிமிகுத்தா னவிலும் பாலா
புலப்படலீ தெவ்விதமான் றரித்தனனன்
ஞேமிருகம் போலு நாட்டங்
குலத்துமதி போன்முகநுசே ரெனதருமைச்
சாநகியெங் கோவுற் றுயோ.

இங்ஙனம் இரவென்ற ஹேதுவால் இரவியாக விலலாமலிருப்பதையும் மான்தரித்திருந்தனனென்ற ஹேதுவால் சந்திர னென்பதையுஞ் சாதித்திருக்கின்றது.

---

## ககo-வது ஒப்புப்பிரமாணவணி.

(உபமாநப்ரமாணாலங்காரம்.)

"ஒப்பாரும் பொருளை" யென்பதுமுதல் "ஒப்புப்பிரமாண மென்பர்" என்பது வரை யொப்புப்பிரமாண வணிக்கிலக்கணம். ஒப்பான பொருளைக்கூறி மற்றோர் பொருளை விளக்குவதொப்புப்பிரமாண வணி. இதனை வடநூலார் உபமானப்பிரமாணாலங்காரமென்பா. உதாரணம்,

செய்யுள்.

மச்சவிழி யாயுடுவின் மண்டலத்தி லேதினிருப்
புச்சகடா காரமெனப் போந்திருந்த தோவதையு
ரோகணிநா ளென்றறிவு று.

இங்ஙனம் சகடாகாரமெனப் போந்திருந்ததோ வென்ற வொப்பான வாக்கியப்பொருளின் விளக்கத்தால் ரோஹிணி நக்ஷத்திரமாகிய பொருளின் விளக்க முண்டாகின்றது.

செய்யுள்.

வேங்கட பதியா மரசனே மார
 வேட்குநே ரதிவனப் புளனு
வாங்கட னிறத்தோற் கொப்புறு மதிக
 மாகிய வெற்றியுள் ளவனு
பாங்கட ரிமவானுக்குநே ரதிகப்
 பான்மைசேர் தயிரிய முளனு
மோங்கடங் காத நினைப்புறு கின்றே
 னுத்தம முத்தமி ழோரே.

இங்ஙனம் மன்மதன் முதலிய வொப்புப்பொருள்க ளோக்கூறி வேங்கடபதியென்றவரசனின் விளக்கத்தை வருணித்திருக்கின்றது. முந்திய வுதாரணத்திலதை ரோஹிணியாக வறியென்ற வொப்புப்பொருளின் விளக்கமுள்ள வாக்கியமும் இங்ஙனம் வாகியப்பொருள்களாற் கிடைத்த ஒப்புள்ள பிரத்தியக்ஷரூபமான பொருளுக் கழகு முதலிய பயனுடன் கூட விளக்கமு மிருக்கின்றதெனப் பிரிவு காண்க.

---

## ௧௧௧-வது சொற்பிரமாணவணி.

(சப்தப்ரமாணாலங்காரம்.)

"நிகம முன்னு" என்பது முதல் "சொற் பிரமாண மென்பார்க" ளென்பது வரை சொற் பிரமாண வணிக் கிலக்கணம். வேதம் ஸ்மிருதி முதலிய பிரமாணத்தாற் கிடைத்ததை யெடுத்துரைப்பது சொற் பிரமாண வணி. இதனை வடநூலார் சப்தப்பிரமா ணாலங்காரமென்பர். உதாரணம்,

செய்யுள்.

தவளைவிவ கரிப்பவனு சலனகரண மும்முளனு
யவனொருநீ யரனொருவ னென்றுநன்று யுரைத்தியயன்

பவவேது வாவெவனைப் பழமறைசொற் றிடுமெவன்கா
ணுவதாமுற் பத்தியைமன் னுவனென்ப தெவ்விதமே.

இங்ஙனம் வேதப்பிரமாணத்தினாற் கிடைத்த நான்முகனுடைய வுற்பத்திக்குஞ் சிவபெருமான்காரணமென்ற சொற்பிரமாணத்தைக் கூறி யிருக்கின்றது. இவ்வாறே ஸ்மிருதி புராணம் ஆகமம் உலகவாக்கிய முதலிய சொற்பிரமாணங்களுமுதாரணிக்கக்கூடும். அவற்றுள்

ஸ்மிருதிச்சொற் பிரமாணமாவது,

செய்யுள்.

மானிடர்காள் வன்மையிற்பா வம்புரிகு விரைந்து
தானியற்று மைபோலுங கட்காமே—ஞானமனுச
செய்யா ததுபோலச் சேருமென்றார் வன்மையதாச
செய்யும் பொருளான தே.

இங்ஙனம் மனு ருஷியினாற் கூறப்பட்ட ஸ்மிருதியிலுள்ள சொற்பிரமாணத்தைக் கூறியிருக்கின்றது. முன்னுதாரணத்தில் வேண்டியதைச் சாதிக்க வேதப்பிரமாண முரைத்தலும் இவ்வுதாரணத்தில் வேண்டாததைத் தூஷிக்க நாஸ்திகன் தூஷணையாக ஸ்மிருதிப்பிரமாண முரைத்தலும் விசேஷமெனககாண்க. சிஷ்டாநுஷ்டானம் ஆத்ம ஸந்தோஷமென்ற மீமாம்ஸகரால் சொல்லப்படுந் தர்மப் பிரமாணஙகளும் வேதச்சொற்களையே யநுமிக்கச் செய்வதா லவைகளுஞ் சொற்பிரமாணங்களாகவே கூறப்படுகின்றன. அவற்றுள்

சிஷ்டாநுஷ்டானப் பிரமாணமாவது

செய்யுள்.

ஆன்றோர் தத்த நாமமுறை யார்க ளீது பெரியோருக்
கேன்ற பரம்ப ரையின்வழக்க மாத லாலே பெயரிசைக்க
வூன்றும் விருப்புற் றேநிலைநல் லொழுக்க நடைநீங் குற்றவனைத்
தோன்ற லுறுமா னிடர்கள்தினந் தோறு நிந்தித் திடுவாரே.

இங்ஙனம் வேதப்பொருளைத் தெரிந்த பெரியோர்களநுஷ்டித்துவந்த தன்பெயரைத் தானுரைக்கக் கூடாதென்ற முறைமையைக் கூறியிருக்கின்றது.

ஆத்மஸந்தோஷப்பிரமாணமாவது,

செய்யுள்.

மேலா மெனது நெஞ்சமே
  மிளிரு மிந்தச் சகுந்தலைபான்
மாலா வுறுகின் றமையாலிவ்
  வளுஞ்சத் திரியன் கொளற்குரிமைப்
பாலார்ந் தவளான் றவர்க்கையப்
  பாடாம் பொருளி லந்தரங்கத்
தாலாஞ் செல்கை யானதுவே
  யறியும் பிரமா ணந்தானே.

இங்ஙனம் மேன்மையான மனம் ஐயப்படக்கூடிய பொருள்களைக் கருதமாட்டாதென்ற ஆத்ம ஸந்தோஷம் பிரமாணத்தினால் சகுந்தலையைக்கொள்வது வேதப்பொருளாற் சித்தித்த தருமமெனத் தீர்மானித்துக் கொள்ளலாயிற்று. இவ்விதமே மீமாம்ஸையிற் சொல்லப்படுஞ் சுருதிலிங்கமென்ற பிரமாணங்களையு மிச்சொற்பிரமாணமாகவே கூறவேண்டும்.

அவற்றுட் சுருதிப்பிரமாணமாவது,

செய்யுள்.

பெயரின் மாத்திரம் பேசும் வரதரா
வியலு விரத் தொழிலிசைந் தீரிலை
யுயரு மோர்குறி யுங்கரு தாகளா
நியம றைப்பிர சித்தப் பொருளிலே.

இங்ஙனம் வரங்களைக் கொடுக்கின்றவரென்ற பிரசித்தமான பொருளுள்ள வரதரென்ற பெயரை மட்டிலும் வகிக்கின்றீரெனச் சுருதிப்பிரமாணங் கூறலாயிற்று. சுருதியென்பது சொல்.

லிங்கமென்ற குறிப் பெவ்வாறெனில்,

செய்யுள்.

சாற்றுபிர விர்த்தியொன்றுன் றன்விடய மின்றுனக்கென்
றேற்றநின்னெண் மூர்த்திகளா லேயறிந்தேன்—நாற்றிசையுங்
காணற் கரிதாமேகா.

இங்ஙனம் சிவபெருமானெவ்வுலகத்துக்கும் உபகாரப்படும் பொருட்டு வேதப்பிரசித்தமான பூமி முதலிய அஷ்டமூர்த்தங்களைக் கொண்டிருக்குங் குறிப்பாலவரது முயற்சி முழுமையும் உலகத்துக்கநுகூலமாக விருக்கின்றதென வறியலாயிற்று. இக்குறிப்பினால் வேதத்தினனுமானங் கிடைத்தமையா லிஃதுஞ் சொற்பிரமாணத்துக்குள்ளாயிற்று. இவ்வாறே வுலகத்தில் விளங்குங் குறிப்புகளாலு மூலகச்சொற்கள் விளங்குமாதலா லிஃது மிவ்வணிக்குள் ளடங்கும் அஃதாவது,

செய்யுள்.

மற்றொருத்தி பாலிருந்து வருவா யென்று
மடந்தைசலித் திடுநுதலாற் றேற்றவன்பன்
சற்றுமிலை யென்றிடக்க மாட்டினனத்
தையல்குறிப் பார்க்கையிலவ் வண்ணமொழா
துற்றுமறைந் தானவளிச் சினஞ்சேப்பாங்க
போலமுறு கையில்விழிநோக் காற்றுள் வீழ்ந்தான்
முற்றுவித மிவர்மாமி முன்னோர் முன்கா
லக்குசித மாஞ்செய்கை விடவு மின்றே.

இங்ஙனம் புருவத்தினசைதன் முதலிய வுலகவழக்கக் குறிப்பு விளங்குகின்றது. இதுமுதலியவைகளைத் தொழில் ரூபமான வேறே பிரமாணமென்று நினைக்கலாகாது. சிலவிடத்திலுவைப்போனது குறிப்பினாலுண்டாகுஞ்சொற் பிரமாணத்தாலும் மனமகிழ்ச்சி யுண்டாம் அஃதாவது, (க மாட்டினன் - என்பதைக் கம் ஆட்டினன் - எனப்பிரித்து தலையசைததலா லில்லை யென்றனன். எனப்பொருள் கொள்க.)

செய்யுள்.

அரிய கனமூ டாமதியே யாவி யகன்று தமயந்தி
பெரிய மனநம் மிடத்துவரப் பெறுமென் றிருப்பா யோமரணத்
துரிய மனஞ்சந் திரனிடத்தி லுறுமென் மறையை நளமுகசந்
திரனுக் காக்கி மதப்புலவன் றெளிவா யெனக்குத் தெரிக்கின்றான்.

இங்ஙனம் மரணத்தை யடைகின்றவர்களது மனம் சந்திரனிடஞ் செல்லுமென்ற வேதப் பிரசித்தமான விஷயத்தைக் கவி நளமுகசந்திரன் விஷயமாகக் கற்பித்து அதற்குமதப் புலவன் சொல்லைப்பிரமாணமாகவுங் கூறியிருக்கின்றார்.

---

## ௧௧௨-வது பொருட்பேற்றுப்பிரமாணவணி.

(அர்த்தாபத்தியுலங்காரம்.)

"ஒன்றின் பூணிருப்பால்" என்பதுமுதல் "பொருட்பேற்றுப்பிரமாணமென்பார்கள்" என்பது வரை பொருட்பேற்றுப்பிரமாண வணிக் கிலக்கணம். ஒரு பொருளினிருப்பினுன் மற்றொரு பொருளினிருப்புக் கிடைக்குமிடம் பொருட் பேற்றுப்பிரமாண வணி. இதனை வடநூலார் அர்த்தாபத்தியலங்காரமென்பர். உதாரணம்,

செய்யுள்.

கனத்திடசை கனமுடையாய் கமழுனிடை யிருக்குமென
மனத்துறுதி படுத்துவது மன்னுசித மேயவிதம்
வனத்தொடிலா விடினில மாபாரத் தினதிருப்பெத்
தினத்திலுமெவ் விதமேலாத் திகழ்ந்திருக்கப் பெற்றிடுமே.

இங்ஙனம் பெரிதான கொங்கையினது இருப்பினு லிடையின திருப்புஞ் சித்திக்கின்றது.

செய்யுள்.

ஆய்ந்து தேரி லக்கங்கை யதன்செல் கையினு லம்புதியை
யேய்ந்த பூரிப் புறச்செயவே யின்று மவ்வா றில்லையெனில்

வாய்ந்த கங்கை யின்பெருக்கால் வாரிப் புனல்வே றுகியரன்
வேய்ந்த களத்துக் கொத்தவணம் விளங்கு வதுமெவ் விதந்தானே.

இங்ஙனம் சமுத்திரத்தண்ணீரிற் கருமை நிறத்தி னிருப்பினுல் அதிற் கங்கா நதியின் ஸம்பந்த மில்லாமை சித்திக்கின்றது.

---

## ககஈ-வது நுகர்ச்சியின்மையணி.

(அநுபலப்தியலங்காரம்.)

"அநுபவத்திறகு என்பது முதல்" "நுகர்ச்சியின்மைப்பிரமாண மென்பார" என்பது வரை நுகர்ச்சியின்மைப் பிரமாண வணிக் கிலக்கணம். ஒரு பொருளின் அநுபவத்துக்கு வராமையை அதனின்மைக்கு ஆதாரமாகக் கூறுவது நுகர்ச்சியின்மையணி. இதனை வடநூலார் அநுபலப்தியலங்கார மென்பர். உதாரணம்,

செய்யுள்.

மதியூ கிகளா யிருப்பருமுன் மருங்கைப் பாரா திலையென்றே
யதிக பலமாய்த் தீர்மானித் தாரேன் முலையி னிருவரைகள்
பதியா தார மின்றியிருப் பமையா விதும கரத்துவசன்
விதியிற் திரசா லத்தொழிலா மிகநிச சயிக்கின் றுமம்மா.

இஙஙனம் நுண்ணிய விடை மஹாயூகிகளாக விருக்கின்றவர்களுக்கும் அநுபவத்துக்கு வராமலிருக்கின்றது. என்பது இடையில்லாமைக்கு ஆதாரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

---

## ககச-வது பிறப்புப்பிரமாணவணி.

(ஸம்பவாலங்காரம்.)

"இசைவதூட்டல் பிறப்புப்பிரமாண மென்பர்" என்பது பிறப்புப்பிரமாண வணிக் கிலக்கணம். நேரக்கூடி

யதைச்சொல்வது பிறப்புப்பிரமாணவணி. இதனை வட நூலார் ஸம்பவாலங்காரமென்பர். உதாரணம்,

செய்யுள்.

பரனே பதகற் கிதுவனையுண்
டாகாத் துயர மினியென்றே
வரனேர்ந் திடுவ தத்தனையும்
பொறுத்தேன் மாறாத் துயரெனுட
னுரமா யுதித்த தானாலு
முன்பாற் சரண மடைந்தவற்குத்
திரமா மிழிவு வந்துபொருந்
திடித னினக்குப் பெருமையன்றே.

இங்ஙனம் இதுவனை யுண்டாகாத்துயர மினியென் றேவென்றதனால் தனக்குத் துயரமுண்டாவது ஸஹஜ மென்றதாக நேரக்கூடிய பொருளை விளக்கியிருக்கின்றது.

செய்யுள்.

எவர்நமையிக் கவியாலே யிகழ்ந்திடுவ ரவரிறையோர்ந்
தவரவர்க ளின்பொருட்டன் றுமிந்த முயற்சியென்போற்
கவிசெய்தர மோடெவனு மினுமொருவன் கலந்துதிப்பன்
புவிவிரிவாக் காலமள விலவாகப் புரிந்திடுமே.

இங்ஙனம் இப்பிரபந்தத்தைச் செய்த கவிஞனுக் கொப்பான கவிஞனது உற்பத்தி நேரக்கூடுமென்பதைப் புவிவிரிவாக்காலமளவிலவாகப் புரிந்திடு மென்பதனால் விளக்கி யிருக்கின்றது. இறை-சிறிது

செய்யுள்.

அதரிடைசெல் லண்ணுநீ யெவனுற் றேயிங்
கனுகுதல்பட் டணத்திருந்தாறு செய்தியுண்டா
புதுமையதா வுண்டுசொனி யிடுவாய் தக்க
புருடனொரு தருணியைக்கா காலநீங்கி
நிதமுயிரி னொடுமிருக்கின் றனிருக்கின் றனென்னன்
நிசமா சொல் நிசமென்றார்.கேள்வியுற்றே
னெதுவெதுநே ராதுபுவி யகலமாகி
யெண்ணருமா னிடர்பலவா யிருக்குங்காலே.

இங்ஙனம் மேதினிவிரிவாகவும் ஜனங்கள் பலவிதமாகவு மிருப்பமையா னேரக்கூடுமென்பதைக் கூறியிருக்கின்றது.

இவற்றுள் முதலாவ துதாரணத்தி னேரக்கூடிய தென்பது "இதுவரை யுண்டாகாத துயர்* மினியென்றோ" வென்றமையால் கிடைத்திருக்கின்றது. இரண்டாவதுதாரணத்திற் "புவிவிரிவா காலமளவிலவாகப் புரிந்திடுமென்" றுரைத்தமையால் விளக்கப்பட்டிருக்கின்றது. மூன்றாவ துதாரணத்தில் "எதுவெது நேரா"தென்று சொல்லாலேயே கூறப்பட்டிருக்கின்றது.

---

## ௧௧௫-வது எடுத்துக்காட்டுப்பிரமாணவணி.

(ஐதிஹ்யாலங்காரம்.)

"உலகமதிற்பூட்டு" என்பதுமுதல் அச்செய்யுண் முடிவுவரை யெடுத்துக்காட்டுப் பிரமாணவணிக் கிலக்கணம். மூலபுருஷன் குறிப்பின்றி யுலகவழக்கமான புராதனக்கதையைக் கூறுவது எடுத்துக்காட்டுப் பிரமாணவணி. இதனை வடநூலார் ஐதிஹ்யாலங்காரமென்பர். உதாரணம்.

செய்யுள்.

சாகா திருக்கு மனிதனிடந் தனிலே பலவாண் டகன்றேனும்
வாகா மகிழ்ச்சி யானதுவந் தடையு மெனவே மாநிலத்தி
லேகா ணிந்தக் காதைமிக மேன்மை மிசைந்த தாகவுமே
யாகா யமதிற் றெரிந்திடுகல் லகம்போ லறிய வருமெனக்கே.

இங்ஙனம் சாகாதிருக்கும் விஷயத்திற் பலவாண் டகன்றேனும் மகிழ்ச்சி யுண்டாகுமென்ற வுலகவழக்கமான இப்புராதனக்கதை யுரைக்கப்பட் டிருக்கின்றது.

---

## ககசு-வது சேர்வையணி.

(ஸம்ஸ்ருஷ்டியலங்காரம்.)

உலகத்திற் றனித்தனியாக வொவ்வொரு ஆபரணந் தை யணிவதைப்பார்க்கினு மொரோவேளையிற் பல ஆபர ணங்களை யணிவதி லதிக அழகுண்டாவதுபோற் றனித் தனியாக வொவ்வோரணியிருக்குமிட முண்டாகின்ற மனமகிழ்ச்சியைப் பார்க்கினும் பல வணிகளோ ரிடத்திற் கூடுமாகி லதிக மனமகிழ்ச்சி யுண்டாகு மாதலாலவ்வணிகளின் கூடுதலை நரசிங்க நியாயமாக வே றே யணியென்று கூறவேண்டுமென நினைத்து இங்ஙன மதின் தீர்மானஞ் செய்யப்படுகின்றது. அதாவது எள் ளு மரிசியுங் கலந்தாற்போற் பலவணிகள் பேதம் புலப்படக் கூடி விளங்குமிடத்திற் சேர்வையணி யென் றுந் தண்ணீரும் பாலுங் கூடினாற்போற் கூடியும் பிரிவு தெரியாமலும் விளங்குமிடத்திற் கலவையணி யென்றுங் கூறப்படுகின்றது. இவைகளைவடநூலார் நிரலே ஸம் ஸ்ருஷ்டி யென்றும் ஸங்கரமென்றுங் கூறுகின்றார்கள். அவற்று ளேதேனு மிரண்டணிகளிலொன்று அங்கமாகவு மற்றொன்று அங்கியாகவு மிருப்பதினானும், இரண்டுமுக்கி மாக விருப்பதினானும், ஐயத்தினானும், இரண்டும் ஒரே சொல்லை யணுகி விளங்குவதானும், கலவையணி நான்கு வகைப்படும். இவைகளை வடநூலார் வரிசையாக அங்கா ங்கி பாவஸங்கரமென்றும், ஸமப்பிராதான்ய ஸங்கரமென் றும், ஸந்தேஹஸங்கரமென்றும், ஏகவாசகாநுப் பிரவேச ஸங்கர மென்றும், கூறுகின்றனர். இவ்வண்ணம் நரசிங்க வடிவம்போற் பலவணிகளின் சேர்க்கை ஐவகைப்பட்டு விளங்குகின்றது. அவற்றுட் சேர்வையணியாவது.

**செய்யுள்.**

வத்திரவா சத்துவிருப் பத்துறுதேன் கத்து சம்ப்ர
மத்தி னுன்மே

வத்திரமா னத்தொளியு தித்தவள்ச ரித்தவள்தா
மத்தைம் பால்வீழ்
வத்திரநாட் டத்தினளா மத்தகத்த னத்தியினி
மைத்தொ ளிப்பார்
வத்திரகாஞ் சித்தலத்து றச்சலை லத்தொனிமே
வத்தந் தாளே.

இங்ஙனம் சொல்லணிகளாக விளங்குகின்ற பிராசத்துக்கும் யமகத்துக்குஞ் சேர்வை யிருக்கின்றது.

செய்யுள்.

இருளங்கத் தைப்பூசு கின்றதுபோ லேவிண்
பெருமையைப் பெய்கின் றதேபோன்—மருவுறுங்கண்
சாதுவிலா ரின்சேவித் தல்போற் பயன்பெறுத
லேதுமின்றி வாய்கின்ற தே.

இங்ஙனம் பொருளணிகளாகிய "இருளங்கத்தைப் பூசுகின்றதுபோல்" "விண்பெருமையைப் பெய்கின்றதேபோ"லென்ற விடங்களி லிருககின்ற தற்குறிப்பணிகளுக்கும் "மருவுறுங்கண் சாதுவிலாரின்" என்றவிடத்திலிருக்கின்ற வுவமையணிக்குஞ் சேர்வை யிருக்கின்றது.

செய்யுள்

பெருமித மூண்டு பெருகுமன் பீண்டு
பெருமையா கண்டலன் காண்டு
தருபணி பூண்டு வலமுற நீண்டு
தகுமகி டன்முடி யாண்டு
வருபொனூ புரமே தொனியொலி திரமே
வாய்தலான் மிகுந்தசுந் தரமே
மருவுமை வரமே வலரடி தரமே
வரத்தரு மங்களா கரமே.

இங்ஙனம் அநுப்பிராஸமாகிய சொல்லணிக்கும் அலரடி யென்னுமிடத்தி லிருக்கின்ற வுவமையாகிய பொருளணிக்குஞ் சேர்வை யிருக்கின்றது.

## ௧௧௭-வது உறுப்புறுப்பிக்கலவையணி.

(அங்காங்கிபாவஸங்கராலங்காரம்.)

ஒன்று அங்கமாகவும் ஒன்று அங்கியாகவும் விளங்குகின்ற கலவையணிக் குதாரணமெவ்வாறெனில்,

செய்யுள்.

காற்றி னுலசை தருக்களின் சாயைதண மதிய
வேற்று மாபுலி யாற்றுணித் திடுதலை யேற்றுத்
தோற்று வல்லிருள் யானையி னுடற்றுணி போற்பார்
மேற்று லங்குற வசைவுறு மின்னிடைத் திருவே.

இங்ஙனம் "தண்மதிய வேற்றுமாபுலி" "வல்லிருள் யானை" யென்னுமிடங்களில் விளங்குகின்ற வுருவகவணிகள் தற்குறிப்பணிக்கங்கமாக விருக்கின்றன. ஆனால் தண் மதியே யேற்றுமாபுலி, வல்லிருளே யானை, யென்றுருவகவணியாகக் கொள்வதுபோலேற்றுமாபுலி போன்ற தண்மதி யென்றும், யானை போன்ற வல்லிருளென்றும், கொண்டு உவமையணியாகவே கூறுவாமெனின் அவ்வாறுவமையணியாகக் கூறும் விஷயத்தில் யானையும் மாபுலியும் முக்கியமாகாமல் சந்திரனும் இருளும் முக்கியமாக விருக்குமாதலாற் றுணித்திடுதலை யேற்றலாகிய அடைமொழி, "அடைமொழி அடைமொழியோடு ஸம்பந்தப்படமாட்டாது முக்கியத்தோடு ஸம்பந்தப்படு" மென்ற நியாயத்தைப்பற்றி யானை யென்ற அடைமொழியோடு ஸம்பந்தப்படமாட்டாது. உருவகமாகச் சொல்லும் விஷயத்தில் மாபுலியும் யானையும் முக்கியமாக விருக்குமாதலால் யானையாகிய முக்கியப் பொருளோடு ஸம்பந்தப்படும். ஆதலாலுருவகமே தற்குறிப்பணிக்கு அங்கமாக விருக்கின்றது. இவ்வாறில்லாவிடின் அசைவுறுதலாகிய வொற்றுமையாற் றருவின் சாயைகள் துணி

க்கப்பட்ட தேஜஸுங்கள்போற் றுடித்தனவென் றுவமை யணியே யேற்படும். அசைவு முதலிய தர்ம வொற்று மையால் சாயையைத் துணிபட்ட சரீரத் துண்டுகளாக வூ கித்தலாகிய தற்குறிப்பு ஆகமாட்டாது. ஆனாற் சந்திர னையு மிருளையும் முக்கியமாகக் கூறுகின்றபக்ஷத்திலு மபேதமாக வூகிப்பதற் குபயோகமாகத் "துணித்திடு தலையேற்று", என்ற அடைகொடுத்திருப்பமையாற் றருக் களின் சாயையைச் சந்திரனாற் றுணிக்கப்படுமிருளின் து ண்டங்களென்று ஸ்வரூபோத்பிரேக்ஷயாகவே கூறலா மென்றாலோ வவ்வாறு கூறும்விஷயத்திற் சந்திரனிடத் திலு மிருளினிடத்திலு முயர்திணைக்குரித்தான துணிக் கின்றவன் தன்மையும் துணிககப்படுகிறவன் தன்மையு மாகியவொற்றுமை வியவஹாரத்தின தாரோபாபேக்ஷை இருப்பதாற் சுருங்கச்சொல்லலணியு மிருக்கிறதெனக் கூறக்கூடும். ஆதலாலிங்ஙனந் தண்மதியவேற்றுமாபுலி யென்னு மிடத்திலும் வல்லிருள்யானை யென்னுமிடத் திலும் உவமையணியாக வொப்புக்கொள்ளும் விஷயத் திற் சந்திரனு மிருளும் முக்கியமாக விருப்பதாலும் அ வைகளினுயர்திணை வியவஹாரத்தையாரோபிக்கவேண்டி யதிருப்பதாலுஞ் சுருங்கச்சொல்லலணியுந் தற்குறிப்பணி யுமுவமையணியும் உறுப்புறுப்பித்தன்மையை யடைந்தி ருக்கின்றனவென்று மவைகளை யுருவகமாக வங்கீகரிக்கும் விஷயத்தில் யானையும் மாபுலியும் முக்கியமாக விருப்ப மையாலுமுயர்திணை வியவஹாரத்தி னாரோபித்தலைக் கரு தாமையாலுந் தற்குறிப்பணியு முருவகவணியுமுயர்வுநவி ற்சியணியும் உறுப்புறுப்பித்தன்மையாக விருக்கின்றன வென்றும் பிரிவுகாண்க.

## ககஅ-வது இரண்டு முக்கியமாகவிளங்குங் கலவையணி.

(ஸமப்ராதாந்யஸங்கராலங்காரம்.)

இரண்டு முக்கியமாக விளங்குகின்ற கலவையணிக் குதாரண மெவ்வாறெனில்,

செய்யுள்.

உயர்ந்தபயோ தரங்களிலே யுற்றுநடு வினிலமைத்த
வியங்கருண நாயகமுள் ளதுமாய்விண் ணிலக்குமியின்
வயங்குமர கதப்பணிபோ லிலங்குகின்ற மார்த்தாண்ட
னயங்கொள்பரி களின்பந்தி நமையினிது காக்குகவே.

இங்ஙனம் உறுப்பாகவும் பயோதரமுதலிய சொற் சிலேஷை மூலமாகவு மிருக்கின்ற வுயர்வுநவிற்சியால் விளக்கப்பட்ட மார்த்தாண்டபரிகளின் பந்தி விண்ணிலக் குமியின் வயங்கு மரகதம்போலென்ற தற்குறிப்பணியா னது விண்ணிலக்குமியிடத் தொரு நாயகியினது விய வஹாரத்தினுரோப ரூபமாயிருக்கின்ற சுருங்கச்சொல்ல லணியை யுட்கொண்டதாகவே விளங்குகின்றது. பயோதர முதலிய சொற் சிலேஷையானது சுருங்கசசொல்லலணிக் குந் தற்குறிப்பணிக்கு முதவியாக விருப்பமையா லவ் விரண்டுக்கு மொரே வேளையில் விளக்கமும் ஒன்றுக்கொ றுதவியாக விருப்பமையா லிரண்டுக்கும் முக்கியத்தன் மையு மிருக்கின்றதெனக்காண்க.

செய்யுள்.

விரலி னுற்குழற் கற்றையு மேபிடித் தாற்போற்
கரங்க ளானிசி யினேயிம கரன்பிடித் தடக்கித்
திரமு றகுவிந் திடுசெழும் பங்கயத் திருட்டி
மருவு மாலையின் முகத்தினை மோந்திடு வானும்.

## இரண்டு முக்கியமாகவிளங்கும் உவகை கலவையணி.

இங்ஙனம் அங்கமாகவிளங்கும் "விரலினாற் குழற் கற்றை" யென்ற தொடரினாற் கூறப்பட்ட வுவமை யாலும் பங்கயதிருஷ்டி யென்னுமிடத்திலிருக்கு முவ மையாலும் விளக்கப்பட்ட விமகரன்மாலையின் முகத் தினை மோந்திடுவானென்ற தற்குறிப்பணி சந்திரன் மாலை யிவைகளில் நாயக நாயகி வியவஹாரத்தி னாரோபித்தல் ரூபமாகிய சுருங்கச்சொல்லலணியை யுட்கொண்டதாக வே விளங்குகின்றது. இரண்டுவமையணியுந், தற்குறி ப்பணிக்குஞ் சுருங்கச்சொல்லலணிக்கு முதவியாக விரு ப்பமையாலுஞ் சுருங்கச்சொல்லலை யுட்கொள்ளாவிடின் முகம் முகருதலை யுத்பிரேக்ஷிப்பதற்கு முக்கியவாதார மில் லாமையாலு மென்க. ஆகையா லோரேகாலத்தில் விளக் கமுள்ள தற்குறிப்புச் சுருங்கச்சொல்லணிகளுக்கு முக்கி யத்தன்மை யிருக்கின்றது. ஆனால் தற்குறிப்பணியில் வருணியாவருணியங்களுக்குப் பொதுவாகிய குணந்தொ ழிலாகிய ஹேதுக்களி னபேக்ஷித்த விருப்பதாலுஞ் சுருங்கச்சொல்லலணியி லடைசொல்லின தொற்றுமை யின் கருதுத விருப்பதாலு மவ்விரண் டணிகளிலும் பொதுத்தன்மையின் கருதுத லவசியமாக விருக்கின்றது. இவ்விடத்தி லங்கமாக விளங்குகின்ற விரண் டுவமையணி களுமோ சந்திரன் மாலை யிவைகளின் தருமத்தைமட்டிலும் விளக்குகின்றதே யல்லது சந்திரனுக்கும் நாயகனுக்கும், மாலைக்கும் நாயகிக்கு மிருக்கின்ற பொதுத்தன்மையை விளக்கவிலையே, யென்றாலோ விரலினாலென்று தொ டங்கிய வாக்கியத்தினாற், றோன்றுகின்ற வுவமையிற் கரங் களை யுவமானமாகவும் விரல்களை யுவமேயமாகவும் பங்கய திருஷ்டியென்னுஞ் சொல்லுவமையிற் பங்கயத்தை யுவ மானமாகவுந் திருஷ்டியை யுவமேயமாகவுங் கொண்டு வரு ணியாவருணி யங்களுககுப் பொதுத்தன்மையை யந்தந்த விஷயமான விரண்டு பொருள்களாற் றீர்மானித்து அவ்வி ரண்டுவமைகளுஞ் சுருங்கச்சொல்லலணிகளுந் தற்குறிப்

பணிக்கும் அங்கங்களாகவே யிருக்கின்றன வெனக்காண்க. இவ்வண்ணம் சொல்லுவமையில் திருஷ்டியையும் வாக்கிய வுவமையில் விரல்களையு முவமேயமாகக் கொண்டு அவ்விரண் டுவமையணிகளுஞ் சுருங்கச்சொல்லலணிக்குந் தற்குறிப்பணிக்கு மங்கங்களாக விருக்கின்றன வெனக் கூறுவிட்டாலும் அவருணியமாக விருக்கும் விரல், குழற்கற்றை, திருஷ்டி, யிவைகளும், வருணியமாக விருக்குங் கிரணங்கள், இருள், தாமரை, யிவைகளுந் தனித்தனியே வெவ்வேறாக விருக்கினும் விரல்களுக்குங் கிரணங்களுக்கு மிருக்கும் மெலிதாகவும் நிகளமாகவு மிருக்குந் தன்மைகளாலும் இருளுக்குங் குழற்கற்றைக்குமிருக்கும் வியாபித்தல் கருமையென்ற தன்மைகளாலுந் தாமரைகளுக்கும் நயனங்களுக்கு மிருக்கும் காந்தி முதலிய தன்மைகளாலும் அபேதமாகக் கொள்வதினாலும் பேதம் அபேதம் இருமை யென்ற மூன்றினையும் முகசிய மாயுடையது உவமையணி யென்ற அலங்கார நூலாரின் சித்தாந்தத்தினாலு மிங்ஙனம் மேற்சொல்லியபடி யபேதமாக விருப்பதைக்கொண் டொப்புமையிருப்பதாகத் நிர்மானித்து முகசியமாக விருக்குந் தற்குறிப்புச் சுருங்கச் சொல்லலணிகளுக் கவ்விரண் டுவமையணிகளு மங்கங்களாகவே யிருக்கின்றன வெனக்காண்க. பேதம் அபேத மென்ற விரண்டு பிரிவுகளுக்குட் பேதமாகிய பிரிவை யுபயோகப் படுத்தாமையாற் றற்குறிப்பணி முதலியவற்றுக் குபயோகமாகும்படி யுவமையின் அபேதாம்சத்தை மாத்திர மெடுத்துக்கொள்ளவேண்டும். பிரகாசம் குளிர்ச்சியைப் போக்குதலென்ற விரண்டு தன்மையுள்ள விரவியின் தேஜஸு குளிர்ச்சி நீக்குதன்மாத்திரத்தினாற் குளிர்ச்சி கொண்டவர்களுக் குபயோகப்படா தென்பதில்லை யல்லவா? இவ்வண்ணந் தனித்தனியே பேதமாக விருக்கினு மொப்பானபொதுத் தன்மையா லபேதமாகக் கொள்ளப்படலா மிவ்வாறு கொள்ளாவிடில்

## இரண்டு முக்கியமாகவிளங்கும் உருக கலவையணி.

செய்யுள்.

திண்புயத்திற் றுழந்திலங்கு திருத்தரள வடமுளன்கா
ணண்புறுசெஞ் சாந்தணிதென் னட்டரச னும்வழுதி
யெண்பறிய வருவிநிறை வுற்றிரவி யொளியாற்சேப்
பண்புறுதாள் கொளுமிமய பருப்பதம்போ லிலங்குவனே.

இங்ஙனம் உபமானமாகிய விமயகிரிக்கு அருவிநிறை இரவியொளி யென்றும், உபமேயமாகிய அரசனுக்கு முத்தாரமுஞ் செஞ்சாந்து மணிதலென்றுந் தர்மங்களின் பேதமிருப்பதா லுவமான வுவமேயங்களுச்குப் பொதுவாகிய தருமங் கூறப்படவில்லை யென்று உவமையணியையுங்கூறுதற் கிடமில்லாமற் போயவிடும். ஆதலாலொப்பான இரவியொளி அருவிநிறைகளுக்குஞ் செஞ்சாந்து முந்தாரங்களுக்கு மபேதமாகிய தன்மையைக் கொண்டே யுவமையணியை ஸாதிக்கவேண்டு மெனக் காண்க.

செய்யுள்.

வாரி வெண்டிரை முகங்களால் வருநுரை யென்னும்
வாரி யைந்தசந் துமைத்திடு வளமையே போலும்
வாரி யங்கதைத் திசைகளா மாதரைக் கரத்தால்
வாரி சத்தினை வாட்டுவோன் வளைவதே மாறும்.

இங்ஙன மிரண்டு தற்குறிப்புகளுக்குங் காலபேத மிருக்கினு முக்கியத்தன்மை யிருக்கின்றது. ஒன்றுக்கொன்று கருத்தில்லாமலிருக்கு மிருவாகியங்களால் விளக்கப்படுவதாலும் அதை யென்ற சொல்லா னுரைச்சந்தனமென்ற வுருவகத்தைமட்டிலுங் கருதி முந்திய தற்குறிப்பைக் கருதாமையாலு மெனக்காண்க. இருளங்கத்தைப் பூசுகின்றதுபோலே யென்னு மிடத்தி லிரண்டு தற்குறிப்பணிகள் சேர்வையாக விருப்பதுபோல்

இங்ஙனமும் அவ்வாறிருக்கின்றன வெனநினைத்துச் சேர்வையணி யெனக்கூறலாகாது. அணைத்தல் பூசுதல இவைகளின் முன்பின்னாக வரு முலகவழக்கமான முறையை யனுஸரித்து இங்ஙனமு மம்முறையாக விளங்குதலாகிய மனமகிழ்ச்சியிருப்பதைப்பற்றிச் சேர்வையணியைப் பார்க்கினும் பேதமிருப்பதாலெனக்காண்க. அமாவாசையிலும் பௌர்ணமையிலுஞ் செய்யப்படுகின்ற யாகங்களுக்குக் காலபேதமிருக்கினுஞ் சுவர்க்கத்தைக் கொடுத்தலாகிய பயனினொற்றுமையிருப்பதுபோ லிங்ஙனங் காலபேதமுள்ள தற்குறிப்பணிகளுக்கு முக்கியமாக விளங்குதலு மனமகிழ்ச்சியி னொற்றுமையு மிருக்கின்றது.

---

## ககசு-வது ஐயக்கலவையணி.

(ஸந்தேஹஸங்கராலங்காரம்.)

ஐயத்தினால் விளங்குங் கலவையணிக் குதாரண மெவ்வாறெனின்,

செய்யுள்.

இந்துமதி யெனுமிவண்மே கத்தினின்று
மிகுமதியை யடைந்தநில வமைதி யான
சிந்துவினைச் சேர்ந்திருக்குங் கங்கையென்று
மிருமொற்றுமையான குணமுள் ளோரின்
வந்திநிசம் பந்தமதாற் பிரியமான
மாநகரத் தார்பூழுது மிமைவேந்த
ரந்தமுறு செவிகளுக்கு வன்மைவாக்கி
யந்தைவிளங் குமவிரித்துச் சொன்னா மன்றே.

இங்ஙனம் இந்துமதியாகிய விவளென்ற சொல்லால் அஜமஹாராஜனை மணம்புரிந்த இந்துமதியென்றபெண் மேகத்தினின்றும் நீங்கிய மதியையடைந்த நிலவு, அமைதியான சிந்துவினைச் சேர்ந்திருக்குங் கங்கையெனக் கொள்ள

ளப்படுமாகில் விம்பப்பிரதிவிம்பபாவத்தையடைந்த தர்ம
முள்ள விருவாக்கியங்களுக் கொற்றுமையாரோபித்தவிரு
பபதைப்பற்றிக் காக்ஷியணியாகக் கூறலாமா. அல்லது அ
ஜமஹாராஜனை மணம்புரிந்த இந்துமதியென்பது வளை
யர்த்தங் கொள்ளாமற் சொல்லால் விளங்கு மிந்துமதியெ
ன்பதைமட்டிலுங் கொண்டு அவளது தர்மம் "சீருறு
மொற்றுமையான குணமுள்ளோரின் வந்திடு சம்பந்தம
தாற் பிரியமான போகசுகந்தார் முழுது" மென்றமையான்
விளங்குகின்ற தெனவுங் கொண்டு வருணியமாகிய தருமி
சொல்லாற் கூறப்பட்டு அந்தர்மியின் வர்ணிய வியவஹா
ரத்தைக் கூறுது அதற்குப் பிரதிவிம்பமான அவர்ணிய
வியவஹாரத்தைக் கூறி வர்ணியத்தி லாரோபித்திருப்ப
மையால் வனபநிலையணியாகக் கூறலாமா வென்ற வைய
மிருக்கின்றது.

செய்யுள்.

மதியொரு வாறு கெடுதியுற் றழுந்த
வாவியா யதிலுள களங்கம்
பொதிவுறு தலருங் குவளைவிட் டமர்ந்தா
பொலியுமே லதினிடை யழுந்தி
மதிவிளை யாட்டால விளைகுளி யொரு
முறைப்புக முடையவ னுநிக்
கொடுமத வேட னெரிதுய ரதனைக்
கூடுநொருக் காலகற் றுவனே.

இங்ஙனம் இவ்விதமான ஸஹாயம் நேருமாயிற் று
பம் நீங்குமென்ற கருத்தைக்கொண்டு கவிசொல்லியிருப்
பாராகில் இவ்விதமாகுமென்ற ஊகமிருப்பதினாற் பேரு
த்துணர்வணி யென்றும் இவ்விதம் ஸஹாயம் நேரவுமா
ட்டாது தாபத்தின் நீங்குதலும் விண்மலர்போலவே
யென்ற கருத்தைக்கொண்டு கவி சொல்லியிருப்பாராகில்
ஒரு பொய் சித்திக்கும்பொருட்டு மற்றொரு பொய்யைச்

சொல்லுதலாகிய பொய்த்தற்குறிப்பணியென்றும் சொல்லக்கூடுமாதலால் ஐயமுண்டாகின்றது.

செய்யுள்.

படிகக் கும்ப மதனிலிருப்
பதினால் வெண்மை நிறங்கொண்ட
வடிவப் புனல்பாய்ந் திடலாலே
வயங்கு தரள மானதிலோ
கொடியுற் றெழுந்து வாருமெனற்
கூறு மதனின் பூவோடு
நெடிதுற் றெழுநின் புகழுறழ்ச்சி
நேரு மகுடம புனைவேந்தே.

இங்ஙனம் படிகக்கும்ப நீரின்பாய்தலான் முத்தினின்றுங் கொடிவீசி அந்து புஷ்பிக்குமாகி லுனது புகழுக் கொப்பாமென்ற கருத்தைக்கொண்டு கவி சொல்லியிருப்பாராகிற் பேருய்த்துணர்வணி. என்று மிவ்வித புஷ்பமுமுண்டாகமாட்டாது. உனது புகழுக்கு ஒப்புப் பொருளுங் கிடைக்கமாட்டாது. என்ற கருத்துங்கொண்டு சொல்லியிருப்பாராகிற பொய்த்தற்குறிப்பணி யென்றும் சொல்லலாமென்ற ஐயமிருக்கின்றது.

செய்யுள்.

விடத்தை முந்நத்தின்று மேவார்க்கான ரோதா
விடத்திலர வுறிருந்த மென்னி—லடாதசியுறு
நிங்கனிமி ருறபெருமை சேருந் தருவாலே
யாங்குபய னென்னுகு மால்.

இங்ஙனம் அரவினது விகாரத்தை வாணியமாக வைத்து அதனு லரசனது ஸமீபத்திலிருக்கு மோர் துர்ஜநனுடைய வவாணியவிகாரந் தோன்றுகின்றது என்ற விஷயத்திற் சுருங்கச்சொல்லலணி யென்றும் வருணியமாகிய துர்ஜநவிகாரந் தோன்றும்பொருட்டு அவர்ணி

யமான வரவின் விவகாரங் கூறப்பட்டிருக்கின்ற தெனச் சொல்லும் விஷயத்திற் புனைவிலிப் புகழ்ச்சியணி யென்றும் வருணியமான வரவின் விவகாரத்தால் ஸமீபத்திலிருக்கு மோர் துர்ஜநனுடைய வருணிய விவகாரமே தோன்றுகின்றதெனக் கூறும்விஷயத்திற் புனைவுள்ளிவிளேவணி யென்றும் ஐயமிருக்கின்றது.

---

## கஉ0-வது ஓரேசொல்லேயணுகிவிளங்குங் கலவையணி.

(ஏகவாசகாநுப்ரவேசஸங்கராலங்காரம்.)

ஓரே சொல்லே யணுகி விளங்குங் கலவையணிக்கு தாரண மெவ்வாறெனின்,

செய்யுள்.

நன்று விளங்கு கின்றகதி
　　ரொன்ற தாத னந்தமுறு
மென்று வடிவா கின்றபொருட்
　　டொன்றி நெருங்கு மெண்டிசையின்
மன்ற வருமல் வண்டினவை
　　யுண்டா வதுமாத் துன்றியிடு
மின்று பகலா நின்றமனை
　　யிங்குற் றதுவே சங்கோசம்.

இஃது, ஓரே சொல்லே யணுகிவிளங்குங் கலவை சொற்பொரு ளணிகளுக்கே யென்று தாரணிக்குங் காவியப்பிரகாச காரருடைய கருத்தை யநுஸரித்தவுதாரணம். இங்ஙனம் பிராஸமாகிய சொல்லணியு முருவகமாகிய பொருளணியுங் "கதிரொன்றதாதினந்தம்" என்பது முதலிய ஓரே சொல்லே யணுகி விளங்குகின்றன. ஓரே செய்யுளில் வெவ்வேறு சொற்களிற் சொல்லணியும்

பொருளணியும் விளங்கினால் சேர்வையணி யென்று மொரோ சொல்லி லவை விளங்கினால் கலவையணி யென்றும் அவருடைய கருத்து. அலங்கார ஸர்வஸ்வகாரர் ஒரோ சொல்லி லிரண்டு பொருளணி விளங்குமிடத்திலு மொரோ சொல்லை யனுஸரித்தே விளங்குங் கலவையணி யென்றார்.
உதாரணம்,

செய்யுள்.

நிதமுமங்கா வியமலர்வாய் நீடரங்கத் தலமுளதா
யதிகமுழக் குறுமிருதங் கத்தொனிய தாயமையுஞ்
சதிநடன சாலையிற்காத் தடநீரி லாடல்புரி
வதுபோல மான்விழியா மகிழ்ந்தாட லியற்றினரால்.

இங்ஙனம் நடனசாலை, வாவியின் தண்ணீர் இவைகளுக் கிருக்கும் "நிதமுங்காவிய மலர்வாய் நீளரங்கத் தலமுளதா" யென்ற அடைசொலலொற்றுமையிற் சிலேஷையும் "அதிக முழக்குறு மிருதங்கத் தொனியதாயமையு" மென்ற வடைசொல்லிற் பொருளொற்றுமையினா லுவமையணியு மிருக்கின்றன. அவ்விரண்டும் போல வென்ற சொல்லையனுஸரித் திருக்கின்றதெனக் கூறுகிறார். இதுவு முசிதமலல நிதமுங்காவியமலர் என்ற அடைசொலலின் சிலேஷைமூலமா யிருக்கு முயர்வுநவிற்சியாற் கிடைத்த தர்மத்தி னொற்றுமையையே, போலென்ற சொல்விளக்குகிறதே யல்லது சொல்லொற்றுமையை விளக்கவில்லை யெனக்காண்க. இவ்வண்ணஞ் சிலேஷை மூலமாக வபேதத்தை யாரோபித்ததா லுண்டாகுந் தர்மத்தினொற்றுமையை யங்கீகாரஞ் செய்யாவிடில்.

நிதமுமங் காவியமலர்வாய் நீடரங்கத் தலமுளதா யென்பது சிலேஷை. இது வாவியை நோக்குமிடத்து நிதமும் அங்காவியமலர்வாய் நாடோறுங்குவளைப்புட்பங்கள் நீரில் மலர்தலை யுடையதாய், நீள்தரங்கத்தலம் உளதாய்-

## ஒரேசொல்லை யணுகிவிளங்கும் உருவக கலவையணி.

நீண்ட அலைகளைத் தன்னிடத்திற் பெற்றுளதாய் எனவும், இதனைத் திருவரங்கத்திற்குக் கூறுமிடத்து, நிதமும் அம் காவியும் அலர்வாய்-நாடோறும் நடந்துக்குரிய காவியங் களோதப்பெற்றதாய், நீடு அரங்கத்தலம் உளதாய்-ஊழி காலத்து மழியாத் திருவரங்கமென்னுந் திருநாமத்தைப் பெற்றதாய் எனவுங் கொள்க.

குறள் வெண்பா.

மாலைபிராகம்முடைய தாத்தானே யம்பரத்தைச்
சாலவிடு கின்றதுவே தான்.

என்பது முதலிய சிலேஷையான அடைசொல்லு ள்ள சுருங்கசொல்லணி யுதாரணங்களி லடை சொல்லி னொற்றுமையிலாமையால சுருங்கச்சொல்ல லணி யென்று கூறுவதற் கிடமில்லாமற் போய்விடும். அல்லாமலும் போலென்றசொல சொலலொற்றுமையை விளக்குகின்ற தென்றாலு மொப்புமையையே விளக்கு மே யலலது சிலேஷையை விளக்குகின்றதாகமாட் டாதென்றுஞ் சொல்லொற்றுமை பொருளொற்றுமை யென்ற வெவ்விஷயத்திலு முவமை யணியாகவே யாகிவி டுமென்றுங் காண்க. இவ்வாறில்லாவிடில்,

செய்யுள்.

உலகதனை மாமகிழ்ச்சி யுறுத்துவதாற சந்திரனு
மிலகுபிர தாபமதாற் றபனனும்போ லேயிந்த
நலமுறவி ராசனுஞ்ச னத்தைபிரஞ் சனைசெயலாற்
பலருமறி காரணப்பேர் பரித்திருக்கின் றனம்மா.

என்ற விடத்தி லுவமையணி வரமாட்டாது. இங் ஙனங் காரணப்பெயராகிய சொல்லொற்றுமையின்றி வே றொருபொருளையுங் கவி கருதவில்லை யல்லவா? ஆதலா லெங்ஙன மோர்பொருளின் விளக்கமுண்டானவிடத் திரண்

டணிகளி னிலக்கணச் சேர்க்கையா லிரண்டணிகள் விள ங்குகின்றனவோ அங்ஙன மவ்விரண்டணிகளுக்கு மொ ரோ சொல்லே யனுகி விளங்குங் கலவையாகக் கூறவேண் டும்.

செய்யுள்.

மதியி னெஞ்சிலே கொடுபுரிந் திட்டவாய் மதியின்
புதிய காந்தியிற் புனற்பெருக் குள்ளவாய்ப் பொலிந்து
வதிம ரங்களின் பாத்தியிற் புனலிடா மையைச்சேர்ந்
ததம யந்திகாக் கண்டனந் தம்பமுற் றதுவே.

இங்ஙனம் விளக்கப்படும்பொருள் "தங்கு நிறைவின் வரலாற்றை" யென்ற லக்ஷணப்படி வீறுகோளணியாகவும் பொருத்த மில்லாமையைப் பொருத்திச் சொல்லுத லாகிய வுயர்வு நவிற்சியணியாகவு மிருக்கின்றது. ஆ யினு மெவ்விடத்திலும் வீறுகோளணி பொருத்தமில் லாமையைப் பொருத்திச்சொல்கின்றதாகவே யிருப்ப மையால் வெவ்வேறாக விருக்கின்ற விரண்டணிகளி னிலக்கணச் சேர்க்கையில்லை யெனக்கூறலாகாது. பொன் னுலகத்தின் செல்வப்பெருக்கைக் கூறுவது முதலியவை களிலுயர்வு நவிற்சியணியின் ஸம்பந்த மில்லாமலிருக் கும் வீறுகோளணியும் வன்மை புன்மை முதலியவைகளி னதிகமான வர்ணனையில் வீறுகோளணியினது ஸம்பந் தமில்லாமலிருக்கு முயர்வுநவிற்சியணியுந் தனித்தனி யாக விளங்கிப் பயன்பெற்றிருப்பமையா லெனக்காண்க. இக்கலவை பொருளாற் கிடைதத சேர்க்கையுள்ள வுயர்வு நவிற்சியணிக்கும் வீறுகோளணிக்கு மொன்றங்கமாகவு மொன் றங்கியாகவு மிருக்கின்ற கலவையல்ல. ஒன் றினுலொன்றுக்கு விளக்கமில்லாமலும் இஃது ஸ்வாதீன மாகவும் இஃது ஸ்வாதீனத்தவருகவுமிருக்கின்றதென்ற பிரிவைக் காணக்கூடாமலு மிருப்பதாலெனக் காண்க. இரண்டு முக்கியமாகவிளங்குங் கலவையுமல்ல. எச்

சொற்களால் ஸம்பந்தமான பொருள் விளங்குகின்றதோ வச்சொற்களாலேயே பொருத்தமில்லாதவப் பொருளுக்குப்பொருத்தம் விளக்கப்படுவதால் வேறுபொருளை விளக்குகின்ற சொல்லினுற் றீர்மானிக்கப்படுந் தாற்பரியத்தின் வேறுபாடில்லாமையாலெனக்காண்க. ஐயக்கலவையுமல்ல வொருவணியைக் கூறின் மற்றொரு வணியின் முறைக்கு விரோத மில்லாமையா லெனக்காண்க. ஆதலா லிங்ஙனம் வீறுகோளணியு முயர்வு நவிற்சியணியுமொரோ சொல்லையணுகி விளங்கும் கலவையாக விருக்கின்றனவென்றறிந்து கொள்க.

சில விடத்திற் கலவைக்குங் கலவை விளங்குகின்றது. அஃதெவ்வாறெனின்,

செய்யுள்.

எப்போச வரசனது வின்புலவோ ரிடங்கடொறு
மிளமடவார் விளையாட்டி னீர்த்த முத்த
மொப்போத லரியகூத் திரநின்று வொழுகியுநல்
லுயர்துடைப்பத் தாலொதுக்கப் பட்டுக்காலைச
செப்பேறு புயசசிறியர் சிறடிச்செம் பஞ்சதனுற்
செம்மையுறு சிறுமுத்தைச் செங்காற் கிள்ளை
துப்பேறு மாதுளையின் றூவிதையென் றையுற்றுத்
தூரத்தி லீர்ப்பதுவே தொடலையீகை

இங்ஙனம் புலவோர்செல்வ நிறைவின் வருணித்தவில் வீறுகோளணி யிருக்கின்றது. "சிறியர் சிறடிச் செம்பஞ்சதனுற் செம்மையுறு" மென்றதில் அச்செல்வ மூலமாய்சசித்தித்த பிறிதின் குணம்பெறலணியும் அதிலேயே மேலே கூறப்படும் மயக்கத்தைச் சாதிக்கின்றதாக விருக்கும் பதப்பொருட் டொடர்நிலைச்செய்யுட் குறிப்பணியுமிருப்பதா லவ்விரண்டணிகளுக்கு மொரோ சொல்லையணுகி விளங்குங் கலவையணி யிருக்கின்றது. "ஐயமுற" வென்ற விடத்தில் அதின் மூலமாய் விளங்கும் மயக்க

வணி. இக்கலவை மயக்க வணிகளான் முன்னர்க்கூறிய வீறுகோளணி சிறப்புறுவதுபற்றி யிவ்விரண்டுமெங்கமென்றும் வீறுகோளணி யங்கியென்றுங்கொண்டு ஒன்று அங்கமாகவு மொன்று அங்கியாகவுமிருக்கு முறுப்புறுப்பிக் கலவையணி.

இவ்வாறு புலவர்களின் செல்வநிறைவாகிய காரியத்திற்கு மரசனி னீகையாகிய காரணத்திற்கு மபேதங் கூறுவதுபற்றி ஹேதுவணி. அஃது மரசனுடைய வீகையின் மேன்மையை விளங்கச்செய்கின்றது. இம்மட்டிற் கவிஞனின் கருத்தானுன் முற்கூறிய வீறுகோளணியை விளக்குகின்ற ஹேதுவணியே: புகழக்கூடிய வரசனது செல்வமெவ்விதமென்ற வினவுதலுக்கு விடையாக வதிகச் செல்வத்தின் கொடுத்தலான புனைவில்லியாக விருக்குங் காரியமுகமா யவ்வரசனது செல்வச்செருக்கின் வர்ணனையிற் கவியின் கருத்தானுற் காரிய நிபந்தனையான புனைவில்லிப் புகழ்ச்சியே காரியமும் வருணிக்கத் தக்கதாய்ப்ரஸ்துதமாகக் கருதப்பட்டிருந்தால் புனைவுள்ளி வினைவணியே. இவ்விடத்திற் புனைவில்லிப் புகழ்ச்சியணி. அல்லது, புனைவுள்ளிவினைவணியென்ற தீர்மானமில்லாததாலையக்கலவையணி.

அன்றியும் புலவர்களின் செல்வத்தை வர்ணித்தலாகிய இயைபில்லதை யியைபுப்படுத்திக் கூறுந் தொடர்புநவிற்சியணிக்கும் முன்கூறிய வீறுகோளணிக்குமோரே சொல்லையனுகி விளங்குங் கலவையணி.

அதிக ஈகையின் மேன்மையைக் கூறுவதில் முக்கிய வபிப்பிராயத்தைக் கொண்ட ஹேதுவணிக்கும் அதிசயமாகவும் பொய்யாகவு மிருக்கின்ற கொடையை வர்ணித்தலாகிய மிகுதிநவிற்சியணிக்கு மோரே சொல்லையனுகி விளங்குங் கலவையணி.

அம்மூலமாக விளங்கும் புனைவில்லிப் புகழ்ச்சியணிக்குமல்லது புனைவுள்ளிவிளைவணிக்கும் அரசனது செல்வ நிறைவின் வர்ணனையாகிய முற்கூறிய வீறுகோளணிக்குமொரே சொல்லை யனுகி விளங்குங் கலவையணி.

இம்மூன்று ஒரே சொல்லை யனுகி விளங்குங் கலவையணிகளும் பிரதானங்களாக விளங்குவதா லிரண்டும் முக்கியமாக விளங்குங் கலவையணி.

ஹேதுவணி முதலியவற்றை விளங்கச்செய்யும் வீறுகோளணி முதலியவை யுயர்வுநவிற்சிக்கலவைக் கங்கமாகக்கருதாமையான் முற்கூறிய கலவைகளொன்றுக்கொன்று வேறிடத்தி லங்கமாகவில்லை. இவ்வாறு இச்செய்யுளினான்கு கலவைகளுந் தக்கபடியாக விளங்குகின்றன. இவ்வாறு மற்றவிடங்களிலு முதாரணங்க ளுதாரிணக்கத்தக்கவைகள்.

## குவலயாநந்தம்

முற்றுப்பெற்றது.

சுபமஸ்து.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| ௪௫ | ௪0 | சேர்ந்துசிவன | சேர்ந்திவரன் |
| ௪௬ | ௧௪ | சேர்ந்திச்சிவன | சேர்ந்திவரன |
| ௨௨ | ௨௭ | சிலுஷ்ட | சிலிஷ்ட |
| ௨௫ | ௬ | சைமலே | சைம்மலே |
| ௨௬ | ௯ | நீண்டுறுமெல்லி | நீண்டுறுமெல்ச |
| ,, | ௪0 | செவந்து | சிவந்து |
| ,, | ௪௬ | சிவேஷை | சிலேஷை |
| ௩௨ | ௪௯ | பனியபோடு | பனிப்பொடு |
| ௩௬ | ௨0 | ஏநறவெனன | எய்நறவெனன |
| ௩௭ | ௨௩ | செவநத | சிவந்த |
| ௩௯ | ௬0 | செவந்த | சிவந்த |
| ,, | ௬௧ | செவபபு | சிவப்பு |
| ௪0 | ௨௮ | செவநத | சிவந்த |
| ௪௩ | ௯ | செவப்பு | சிவபபு |
| ,, | ௧௨ | செவப்பு | சிவப்பு |
| ௪௪ | ௨௭ | தேரிளைச | தேரிளைசை |
| ௪௭ | ௨௯ | பிராநதி | பிராநதி |
| ௪௮ | ௧௪ | செயப்பா | சிவபபா |
| ,, | ௨௬ | செவபபா | சிவப்பா |
| ௪௯ | ௨0 | வெட்டயவவனறன் | வெட்டயயவவன |
| ௫௩ | ௪௪ | வுற்றமன | வுறறும்பாநதிமன |
| ௫௪ | ௧௫ | வளைநத | விளைந்த |
| ,, | ௨0 | செவந்த | சிவந்த |
| ௫௫ | ௫ | செரிதத | செறித்த |
| ௫௯ | ௨ | செய | செய |
| ௫௭ | ௪௫ | செவப் | சிவப் |
| ௫௮ | ௧௭ | வணமுறசெய் | உணமுறச்செய் |
| ௬௨ | ௨0 | நிறை | நிரை |
| ,, | ௨௨ | நிறை | நிரை |
| ௬௬ | ௧௮ | பிரையாண | பிரயாண |
| ௬௫ | ௮ | மிருகக | மிருககத் |
| ,, | ௨௫ | சிரமும் | சிரமமும் |
| ௬௭ | ௫ | முறலேவெடுத்துக | முறலெடுத்துக் |
| ,, | ௧௧ | டாந்தல | டாநதால |
| ,, | ௨௬ | மநதிர | மந்தர |
| ௬௮ | ௬-௪-௫ | மந்திர | மநதர |
| ,, | ௧௫ | மனனி | மனனி |

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| ௬௬ | ௮ | இய | இயப் |
| ,, | ௨௨ | யாரோப்பிக்க | யாரோபிக்க |
| ,, | ௨௫ | பதர்த்த | பதார்த்த |
| ௭௰ | ௮ | ரோப்பிக்க | ரோபிக்க |
| ௭௪ | ௪௬ | நாடா | நடா |
| ௭௬ | ௪௪ | புத்தி | புத்தி |
| ,, | ௪௬ | சிரதிறை | சிரதிற் |
| ௭௭ | ௪௨ | கன்னணி | கனணி |
| ,, | ௪௭ | மேன்மை | மென்மை |
| ,, | ௪௮ | தொகஇரு | தொக்இருக் |
| ,, | ௨௫ | சிலி | சிலீ |
| ,, | ௨௫ | சம்மா | சமமா |
| ௭௮ | ௨௬ | எனபர் | எனபர் |
| ௮௩ | ௨௫ | வகணி | வகவணி |
| ,, | ௩௩ | ப்யமோ | பயமொ |
| ௮௪ | ௪௪ | ளில்வருணி | ளில்அவருணி |
| ,, | ௪௩ | தில்வருணி | தில்அவருணி |
| ,, | ௨௩ | யுளில்வருணி | யளில்அவருணி |
| ௮௫ | ௨௭ | புணைவழி | புணைவளி |
| ,, | ,, | அடைச்சொல | அடைசொல் |
| ,, | ,, | பிற் | யிற் |
| ௮௬ | ௪௩ | அககாமுகன் | அக்காமுகன் |
| ,, | ௨௮ | குதலை | குதலைக் |
| ,, | ௩௰ | தோன்கி | தோன்றுகி |
| ௮௭ | ௧, ௭, | துடையணி | துடையடையணி |
| ,, | ௧௪ | ஞமும் | ஞமம் |
| ,, | ௪௬ | துடையணி | துடையடையணி |
| ௮௯ | ௪ | துடையணி | துடயடையணி |
| ,, | ௪௫ | எனன் | எனன |
| ,, | ௧௭ | திரணை | திருணை |
| ௯௧ | ௬ | டுறிலது | டுறுதல் |
| ,, | ௮ | விலக்கிய | விலக்கிய |
| ௯௮ | ௧௧ | மாசதோ | மாசத்தோ |
| ௧௦௦ | ௬ | தாலு | தாலும் |
| ௧௦௪ | ௪ | சந்திரன் | சந்திரர் |
| ௧௦௫ | ௨௭ | மேன்மை | மென்மை |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| ௧௦௪ | ௮ | நோக்குதலுண்டாகும் | நோக்குதலாலுண்டாகும் |
| ,, | ௨௧ | செண்ட | சண்ட |
| ,, | ௨௬ | செண்டு | சண்டு |
| ௧௦௫ | ௧௦ | நருமந்தயுநான் | யானருமந்தை |
| ,, | ௨௦ | மே | மேற் |
| ௧௧௦ | ௪ | வுதபிரேக்ஷித்து | வுத்பிரேக்ஷித்து |
| ,, | ௧௨ | சுவாசு | சுவாச |
| ,, | ௧௪ | பொரு | பொறு |
| ,, | ௧௫ | வணி | வணு |
| ,, | ,, | திடு | தில்டு |
| ௧௨௨ | ௨௧ | றேவவா | றேலவா |
| ,, | ௨௨ | ரெடிக் | ரெடுக் |
| ௧௨௫ | ௪௮ | விணினள | விந்நள |
| ௧௨௬ | ௧௭ | செவந்த | சிவந்த |
| ,, | ௨௨ | செவப் | சிவப் |
| ௧௨௭ | ௨௭ | தன்கூர்மை | மதன்கூர்மை |
| ௧௨௮ | ௨௪ | பணியோளை | பணியாளை |
| ௧௩௦ | ௨௨ | தக்கச்சுருதி | தகசசுருதி |
| ௧௪௦ | ௩௪ | னவனுந் | னவற்குன் |
| ௧௪௩ | ௧௦ | திருமலி | திருமல |
| ௧௪௪ | ௪ | சிதறி | சிந்தி |
| ௧௪௬ | ௨௬ | சொல்வது | செல்வது |
| ௧௪௮ | ௧௯ | செதிருற | செதிருறப் |
| ௧௫௪ | ௧௪ | முற்றக் | முற்றுக் |
| ,, | ,, | சேயவேல | சேயவெல் |
| ௧௫௫ | ௧௭ | விளங்குகிறன | விளங்குகின்றன |
| ,, | ௨௦ | பலவிட | பல்விட |
| ௧௫௬ | ௬ | யேயனு | நோயநு |
| ௧௫௯ | ௭, ௪௮ | பொறும் | பொனும் |
| ௧௬௦ | ௮ | ஆடியவ்வாறெனலே | ஆங்கதுவாடிடேனே |
| ௧௬௬ | ௩ | யேளனம் | யௌவனம் |
| ௧௭௩ | ௨௧ | உலர் | உலா |
| ௧௭௫ | ௨௯ | தவனென் | தவளென் |
| ,, | ௨௪ | பொருட் | பொருள் |
| ௧௮௬ | ௨௧ | தளிர்ச்சி | தளர்ச்சி |
| ௧௯௦ | ௧௭ | ஸமர்த்தின்ற | ஸமர்த்திக்கின |
| ௧௯௩ | ௧, ௭, | பேருய்த்து | உய்த்து |

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| ௧௯௫ | ௧௬ | பேருய்த்து | உய்த்து |
| ௧௯௬ | ௫ | கவினி | களிவி |
| ௨00 | ௧௭ | மாறு | மாறும் |
| ௨0௧ | ௧௫ | திலே | திவலே |
| ,, | ௧௮ | பொருட்செய் | பொருட்குச்செய் |
| ,, | ,, | யிறகட்பொருளாவே | க்கணப்பொருளே |
| ௨0௫ | ௧௩ | பிவேசம | பிரதேசம் |
| ,, | ௧௯ | தனே | யுனே |
| ,, | ௨௨ | யெரிந்த | யெறிந்த |
| ௨0௮ | ௨௪ | மாதவன் | வாசகன் |
| ௨0௯ | ௬ | தப் | தம் |
| ,, | ௧௪ | இருச்குமப்புத்திரனே | இருக்கஅப்புத்திரனே |
| ௨௧0 | ௧௭ | ரினும் | ரினிற் |
| ௨௧௫ | ௧ | த்ர | ரத் |
| ,, | ௧௬ | குறி | குறு |
| ௨௧௭ | ௧௨ | வந்தப | வந்தப்ப |
| ௨௧௮ | ௬௨ | செவ | சிவ |
| ௨௨0 | ௫ | செக | சிவ |
| ௨௨௨ | ௧௭ | செவ | சிவ |
| ,, | ௨௩ | செவ | சிவ |
| ௨௨௩ | ௧௩ | விழிக்ப | காணப் |
| ௨௨௪ | ௭, ௮ | செவ | சிவ |
| ,, | ௨௭ | மனறி | மன்றித் |
| ௨௨௫ | ௧0 | மிலிதம | மிலிதம் |
| ,, | ௨௭ | வேற்றுமைப்பு | வேற்றுமைபு |
| ௨௨௬ | ௧௩ | நண்ணில | நண்ணில |
| ,, | ௨௨ | ததனு | ததனு· |
| ௨௨௭ | ௨௩ | யிருத்திய | விருத்திய |
| ,, | ,, | குற்று | முற்று |
| ௨௨௯ | ௨௭ | காலம | காலந் |
| ௨௩௩ | ௧௫ | தாரிணி | தாரணி |
| ௨௩௬ | ௨௪ | பியரால் | பிசையால் |
| ௨௩௭ | ௫ | வரிது | வறிது |
| ,, | ,, | கோபியரு | கோபிகை |
| ௨௩௮ | ௨ | நின்கன் | நினைக்கள |
| ,, | ௨௮ | தலைவா | சமியே |
| ௨௩௯ | ௪ | தலைவா | சமியே |

# பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| ௨௩௯ | ௮ | திரநீ | திரமே |
| ௨௪௨ | ௧௨ | லரிண | மிருக |
| ௨௪௫ | ௧௧ | புளப் | புணற் |
| ௨௪௭ | ௧௨ | டநத்தன் | டணத்தன் |
| ,, | ௧௯ | அநத்தன் | அனத்தன் |
| ௨௪௮ | ௧௮ | தூர்த்தா | கரவா |
| ௨௫௦ | ௧௬ | மாணதொடு | மாணைதக் |
| ,, | ,, | தைக் | தோடு |
| ௨௬௪ | ௩ | மந்தா | மன்மதா |
| ,, | ௨௯ | வை சா | வைச்சா |
| ௨௬௬ | ௨௮ | தவளை | தவறை |
| ௨௬௮ | ௧௬ | ஸந்தோஷம்பிர | ஸந்தோஷப்பிர |
| ௨௬௯ | ௧௩ | வுல | யுல |
| ௨௭௪ | ௧௯ | கனில் | களில் |
| ,, | ௨௦ | முக்இ | முக்கிய |
| ௨௭௭ | ௮ | கொடி | கொடு |
| ௨௮௩ | ௨௭ | ஞறபேரு | ஞல்உ |
| ௨௮௪ | ௧௬ | பேருய்த்து | உய்த்து |
| ௨௮௫ | ௨௭ | தினந்தம் | தனந்தம் |
| ௨௮௯ | ௧௫ | எப்போ | இப்போ |

ஒழிப்பணியினுட பிரிவுகளில் ௧௨-வது, ௧௩-வது, ௧௪-வது, என எண்கொடுத்ததும், வஞ்சப்புகழ்ச்சி, வஞ்சப்பழிப்பு அணிகளில் முறையே ௩௦-வது, ௩௧-வது, என எண் கொடாமையும், அலங்காரப் பெயர்க்குறிப்பில், உய்த்துணர்வணி யென்பதற்குப் பேருய்த்துணர்வணி யென்றதும், கருத்துடையடையணி யென்பதற்குக் கருத்துடையணி யென்றதும் தவறும்.